
# கடவுளின் நிலம்



இளைய அப்துல்லாஹ்

# கடவுளின் நிலம்

## இளைய அப்துல்லாஹ்


விஸ்வசேது இலக்கியப் பாலம்

நினைவு நல்லது வேண்டும்

இலங்கை Jeevakumaran5@gmail.com இந்தியா

| கடவுளின் நிலம் | கட்டுரைகள் |
| ஆசிரியர்: இளைய அப்துல்லாஹ் | முதல் பதிப்பு: டிசம்பர் 2010 |
| மொத்த பக்கங்கள்: 176 | வடிவமைப்பு: இவள் பாரதி |
தொடர்புக்கு: visvasethu@gmail.com | ✆: 0045 22303134 |

---

| Kadavulin Nilam | Essays | Ilaiya abdulla |
| First Edition : December 2010 | Total Pages: 176 |
| Designed By: Ival Bharathi |
| visvasethu@gmail.com | ✆: 0045 22303134 |

# இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு
# பெற்ற எழுத்தாளர்
# இளைய அப்துல்லாஹ் (1968)

1985-ஆம் ஆண்டில் இருந்து சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் கவிதைகள் மூலம் எழுத்துலகில் பிரவேசித்தவர் இளைய அப்துல்லாஹ். இலங்கையில் இருந்து வெளிவரும் முன்னணி தமிழ்ப் பத்திரிகைகளில் தொடர்ந்து கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் எழுதி பிரபல எழுத்தாளரானார்.

1950-களில் இருந்து 'புலம்பெயர்' தமிழ் சஞ்சிகைகளுடன் தனது தொடர்பை ஏற்படுத்தி அதனை ஸ்திரப்படுத்திக் கொண்டார். 28 புலம் பெயர் சஞ்சிகைகள் பத்திரிகைகளில் இவரின் கவிதை, சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றன. 1996-97-களில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் 'விடியலை நோக்கி' எனும் சமாதானத் தொனிப் பொருளில் சஞ்சிகை நிகழ்ச்சியை தொகுத்து இரண்டும் தரம் ஜெர்மனியில் வழங்கினார்.

1998-இல் ஜெர்மனியில் நடைபெற்ற இலக்கிய சந்திப்பில் கலந்து கொண்டார். 2000-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் லண்டன் தீபம் தொலைக்காட்சியில் இணைந்து செய்தி வாசிப்பாளர், அறிவிப்பாளர், நிகழ்ச்சி விவரணத் தயாரிப்பாளராக, ஒருங்கிணைப்பாளராக பணிபுரிந்து ஐரோப்பியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரித்தானியா, மத்திய கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பேரபிமானத்தைப் பெற்றார். சளைக்காது தொடர்ந்து விவரணக் கட்டுரைகளை மிகச் சுவைபட எழுதி வரும் இளைய அப்துல்லாஹ்வின் எழுத்துக்கள் பிரபல்யமானவை.

அவரது அனுபவங்கள் கூறும் உண்மைச் சம்பவங்களை பதிவதில் திறமையானவர். பாடசாலைக் காலங்களில் இருந்தே அறிவிப்புத் துறையில் ஆர்வங்கொண்ட இளைய அப்துல்லாஹ் இப்பொழுதும் தீபம் தொலைக்காட்சியின் செய்தி வாசிப்பாளராகவும், விவரணத் தயாரிப்பாளராகவும் பணிபுரிகிறார்.

இளைய அப்துல்லாஹ்வின் மூன்று தொகுப்புகள் வெளியாகி இருக்கின்றன. ஒன்று சிறுகதைத் தொகுப்பு 'துப்பாக்கிகளின் காலம்' இரண்டாவது கவிதை நூல் 'பிணம் செய்யும் தேசம்'. 'உயிர்மை' வெளி-யீடாக வெளிவந்த 'பிணம் செய்யும் தேசம்' கவிதை நூலுக்கு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்திருக்கிறது.

மூன்றாவது நூல் "அண்ணை நான் தற்கொலை செய்யப் போகிறேன்" கட்டுரைத் தொகுப்பு. இது உயிர்மை வெளியீடு.

மூன்று நூல்களின் தலைப்புகளும் வித்தியாசமானவை. தலைப்புக்களே சர்ச்சைக்குரியனவாக இருந்தன. ''எங்கள் தாயகமும் வடக்கே'' என்ற கவிதை ஒலிநாடா வடக்கில் இருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் வடுவை சொல்லும் முழுமையான தொகுப்பு. வடக்கு

முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பால் வெளியிடப்பட்டது. இப்பொழுது லண்டனில் வாழ்ந்து வருகிறார்.

**மின்னஞ்சல் :**
anasnawas@yahoo.com
anasnawas@gmail.com

இணையதளம்:
www.mnmanas.blogspot.com.
www.mnmanaswordpress.com.

# இந்நூல்......

இந்த புத்தகத்தில் சுடரொளி ஞாயிறு ஆசிரியர் பத்மசீலனைப் பற்றிச் சொல்ல வேண்டும். அப்பொழுது சுடரொளிக்கு நான் எழுதத் தொடங்கவில்லை. நான் லண்டனில் இருந்து 2004-இல் சிலோனுக்குப் போய் தினக்குரலில்தான் தொடர்ந்து எழுதினேன். ஒவ்வொரு வாரமும் தினக்குரல் எனது கட்டுரையைப் பிரசுரித்தது. சுடரொளிக்கு எனது சிறுகதை 'கொம்பு சீப்பு' அனுப்பினேன். அதனைப் பார்த்துவிட்டு என்னைத் தொடராக ஏதாவது எழுது எழுது என்று எழுத வைத்தவர் பத்மசீலன். ஒவ்வொரு நாளும் கைத் தொலைபேசி எடுத்து எழுதச் சொல்வார். பிறகுதான் சுவடுகள் பத்தி தொடராக வந்தது. சுவடுகள் பத்தியை கொடுக்க நான் சுடரொளி அலுவலகத்துக்கு போனபோதுதான் 29 ஆகஸ்ட் 2005 எனக்கருகில் கைக்குண்டு வெடித்தது. உண்மையில் இன்னும் நான் உயிருக்கு பயந்து போயிருக்கிறேன். அதற்கு பிறகு சுடரொளிக்கு எழுத வேண்டாம் என்று மனைவி அடம் பிடித்தது. பின்னர் சுடரொளிக்கு எழுதவேயில்லை நான். தொடர்ந்தும் பத்மசீலன் எழுது எழுது என்று தொந்தரவு பண்ணிக் கொண்டேயிருந்தார். அவரின் கைத்தொலைபேசி அழைப்புகளை எவ்வளவு நிராகரித்தாலும் எந்த சலிப்புமில்லாமல் தொடர்ந்தும் எனக்கு அழைப்பை எடுப்பார். உண்மையில் என் எழுத்துக்களை மிக அதிகமாக விரும்பிய பலருள் பத்மசீலன் மிக முக்கியமானவர். இதற்கு முன்பு எனக்கு பத்மசீலனை தெரியாது. இப்பொழுதும் அவர் எந்த ஊர் என்றும் தெரியாது.

அடுத்தது அன்புக்குரிய ஜீவா. இந்த வயதிலும் மல்லிகைக்காக தன்னை அர்ப்பணித்து கிடப்பவர். சிறீ கதிரேசன் ரோட்டில் இருக்கின்ற ஆபீஸில் இருக்கும் ஈஸி சேரில் படுத்துக் கொண்டு மல்லிகையை கொண்டு வருகின்ற ஒரு போராளி. என்னை அட்டைப் படத்தில் போட்டு அழகுபார்த்த அன்பான ஜீவா. அவர் எழுத்தாளர்களை உருவாக்கும் விதம்தான் நாங்கள் படிக்க வேண்டிய பாடம் என்று மனதில் என்றும் நினைத்திருப்பேன். இளைய அப்துல்லாஹ் என்ற பெயர் மிக நல்லாயிருக்கு அந்த பெயரை மாத்தாதே என்று சொன்னவர். அந்த பெயரிலேயே தொடர்ந்தும் எழுத சொன்னவர்.

பத்மசீலனுக்கும், டொமினிக் ஜீவாவுக்கும் எனது இந்த நூலை மனதார சமர்ப்பிக்கிறேன்.

- இளைய அப்துல்லாஹ்

## அனஸ் எனும் இளைய அப்துல்லாஹ்வின்

## இந்த படைப்பு பற்றி..

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாக சிறுகதைகள், கவிதைகள், இலக்கியக் கட்டுரைகள், விபரணத் தொகுப்புகள், பத்தி எழுத்துக்களுக்கு சொந்தக்காரரான இவரை 'அனஸ்' என இலண்டன் தமிழ் தொலைக்காட்சி தீபத்தின் அறிவிப்பாளராகத்தான் நான் முதலில் கண்டு கொண்டேன். தீபம் தொலைக்காட்சியில் இவரின் பதிவுகள், அரசியல் கண்ணோட்டங்கள், பற்றிய விபரத் தொகுப்புகள் மற்றும் சந்திப்பு நிகழ்ச்சிகள் மிகவும் கணதியானவையாக இருக்கும்.

இலங்கை, தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் மற்றைய புலம் பெயர் நாடுகளில் இருந்து வரும் முக்கிய அதிதிகள், இலக்கியவாதிகள், கலைஞர்கள், அரசியல்வாதிகள் லண்டனுக்கு விஜயம் செய்யும்பொழுது அனைவரையும் தீபத்தின் சந்திப்பு நிகழ்ச்சிக்காக இவர் பேட்டி காண்பது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும். ஒரு நேர்காணல் நிகழ்ச்சியின் பொழுது பதில் வழங்குவது எவ்வளவு முக்கியமோ அவ்வாறே ஜீவன்மிக்க கேள்விகளைத் தொடுப்பதுவும் மிக முக்கியம். அரசியலைப் பொறுத்தவரை சரி... இலக்கியத்தைப் பொறுத்தவரை சரி... யாராவது உண்மைக்குப் புறம்பாக அல்லது சமாளித்துப் பதில் கூற முயற்சித்தால் அந்தக் கணமே, ஏன் எப்படி என அவர்களை திண்டாட வைத்து விடுவார். அதே போல நேயர்கள் கேள்விகேட்கும் பொழுது எந்தவித சம்மந்தமில்லாது தளத்தை விட்டு வெளியே நின்று கேட்கப்படும் கேள்விகளைச் சரியான நேரத்தில் நிறுத்தி மிகுதிக் கலந்துரையாடலை நன்கு கொண்டு சென்று முடிப்பார்.

2003ம் ஆண்டு ஐ.ஆர்.ஓ. (இலண்டன்) இங்கிலாந்தின் சிறந்த தமிழ் அறிவிப்பாளருக்கான விருதை அவருக்கு வழங்கிக் கௌரவித்தது. அதற்கு காரணம் அவரது பிசிறில்லாத குரல்வளமும், உச்சரிப்புச் சுத்தமும், பாடசாலைக் காலங்களில் இருந்தே அவருடன் கை கோர்த்து வரும் மேடைப் பேச்சு அனுபவங்களுமே.

தீபத்தின் நேரடி ஒலிபரப்பான சந்திப்பு நிகழ்ச்சிகளில் இரு தடவை இவரை நான் சந்தித்து இருக்கின்றேன். ஆளும் கட்சியும் எதிர் கட்சியும் எதிரெதிரே இருந்து விவாதித்து விட்டு கை குலக்கி விட்டுப் போன அனுபவமாய் அது எனக்கு இருந்தது. புலம் பெயர் தமிழர் வாழ்வின் மறக்க முடியாத அனுபவங்களாக எனது அந்த பேட்டி அமைந்திருந்தது.

அத்துடன் இவரின் கட்டுரைகளும் அவரது எதிர்வு கூறல்களும் அதிர்ச்சி ஊட்டக்கூடியனவாய் இருக்கும். 2009இன் ஆரம்பத்தில் போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த பொழுது இலண்டன் வீதிகளில் ஊர்வலங்கள் சென்று கொண்டிருந்த பொழுது அவரின் நேரடி ஒலிபரப்புகளும், விபரணத் தொகுப்புகளும், எழுதிய கட்டுரைகளும் பலரையும் கூர்ந்து கவனிக்க வைத்தது.

மேலாக "துப்பாக்கிகளின் காலம்" என்ற சிறுகதைத் தொகுதியில்

மிருகத்தனமான யுத்தம் ஏற்படுத்திய பேரழிவுகளையும், இடம் பெயர்வுகளினால் மக்கள் அனுபவித்த வேதனைகள், கொடுமைகள் என்பவற்றையும் ஒரு நாட்டுக்குள் இடம் பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்தப்பூமிக்கு திரும்பிச் சென்று வாழ முடியாது தவிக்கும் தவிப்புகளையும் சிறப்பாகக் காட்டியிருந்தார்.

இதே இடம்பெயர்வுகளின் வேதனைகளைக் கருப்பொருளாகக் கொண்டு 2004ம் ஆண்டு இவர் எழுதிய "பிணம் செய்யும் தேசம்" என்ற கவிதைத் தொகுதி 2005ம் ஆண்டில் இலங்கை சாகித்திய மண்டல விருதால் கௌரவப்படுத்தப்பட்டது.

அதற்குப் பின் அவரது பல கட்டுரைகளை அவரது இணையத்தளத்திலும், தினக்குரல் வாரமலரிலும் வாசித்து வந்திருக்கின்றேன். இவரது கட்டுரைகள் பற்றி இந்த நூலின் பதிப்பாசிரியர் என்ற முறையில் ஒரே வார்த்தையில் சொல்வதானால் "இவரது கட்டுரைகள் இன்றைய சகாப்தத்தின் ஒரு குறுக்குவெட்டுத் தோற்றத்தை காட்டுகிறது" எனக் குறிப்பிடலாம். அது ஐரோப்பிய, குறிப்பாக இலண்டன் தமிழரைப் பற்றியதாக இருந்தாலும் சரி, இலண்டனில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழரைப் பற்றியதாக இருந்தாலும் சரி இவரது பார்வையில் ஒரு நியாயம் இருக்கும்.

இவரது இந்தக் கட்டுரையின் வெற்றிக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன எனக் கருதுகின்றேன். முதலாவது இவரின் இளமைக்கால வாழ்வில் இவர் ஒரு நாடோடி போலத் திரிந்து பெற்ற வாழ்வனுபவங்கள். இவர் புளியங்குள கிராமத்துடன் ஒன்றி வாழ்ந்திருக்கின்றார். என்றுமே நான் நேரில் சென்றிராத புளியங்குளம் புவியியல் அமைப்பை என்னால் இப்பொழுது படம் போட்டு காட்டக்கூடியதாக இருக்கின்றது. கொழும்புப் பத்திரிகைத் துறையுடன் மிக நெருக்கம் பேணியிருக்கின்றார். இலக்கியக்காரர் அனைவருடனும் நட்புப் பாராட்டியிருக்கின்றார். மல்லிகை அவரின் அட்டைப் படத்தை பிரசுரித்து இவரைக் கௌரவப்படுத்தி இருக்கின்றது.

மேலாக அனலைத்தீவில் மீன் பிடிப்பவராயும் இருந்திருக்கின்றார். இவை அனைத்திலும் மக்களுக்கு மிக அருகே நின்று அவர்களது வாழ்வின் ஏற்ற இறக்கங்களைப் பார்த்த அனுபவம் அவருக்கு இன்று மிகவும் கை கொடுப்பதை நன்கு கவனிக்கக் கூடியதாக இருந்தது.

இவரின் மொழி நடை. எந்த வர்ணங்களும் பூசப்படாத மிக இயல்பான மொழி நடை. இந்த தொகுப்பில் ஒரு கட்டுரையின் தலைப்பு, "இலண்டனில் பெண்களின் குண்டியில் தட்டினால் குற்றம்" பொதுவாக பல ஆசிரியர்கள் பின்புறத்தில் தட்டினால் குற்றம் அல்லது பிண்டத்தில் தட்டினால் குற்றம் என்றே எழுதுவார்கள். இன்னொரு கட்டுரையின் பெயர், "சனிட்டறி" நுளம்பு மருந்து அடிக்க கட்டளையிடுபவரை - பாடசாலையில் அழ அழ ஊசி போடுபவரை சுகாதார அதிகாரி எனச் சொல்வதை இன்றும் மனம் ஒத்துக் கொள்ள மறுக்கின்றது. "சனிட்டறி" என்னும் பொழுது அவரின் உருவம் ஊருக்கு ஊர் தெரியும். இடக்கை மூட்டில் இருக்கும் தழும்பை வலக்கை ஒரு முறை தொட்டுப்பார்த்துக் கொள்ளும்.

மேலாக இவரின் வசன அமைப்புகளில் எழுவாய், பயனிலை, செயல்படுபொருட்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளும். தோன்றா எழுவாய் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் அவரது தோன்றும் எழுவாய்கள் வசனத்தின் இறுதியில் பயனிலைக்குப் பக்கத்தில் இவருடன் சேர்ந்து சிரித்துக் கொண்டு இருக்கும். இது இவருக்கும் வாசகனுக்கும் உள்ள இடைவெளியை முற்றாக நீக்கியிருக்கின்றது என்பதை இந்த நூலினூடு பயணப்படுகையில் நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

உதாரணத்திற்கு "எங்கள் ஆஸ்பத்திரியில் அரசாங்க மருந்துகள் இருக்கும்... அடிப்படை மருந்துகள் மட்டும். வருத்தம் கூட என்றால் ஒரு இருபத்தைந்து ரூபாய் கொடுத்தால் பிறைவேற்றாக டொக்டர் வீட்டில் வைத்து மருந்து தருவார். அந்த மருந்துக்கு அனேகமாக காய்ச்சல் நிற்கும். வேறு நோய்களுக்கும் மருந்து தருவார் டொக்டர் வீட்டில்."

ம(றை)றந்து போன எங்கள் வாழ்வு இவரின் இப்படியான வசன அமைப்புகளினூடு எழுந்து வருவது சுகமான அனுபவமே. இவ்வாறு மிக இயல்பாக இந்தக் கட்டுரை முழுக்க எங்களுடன் பேசுகின்றார்... பேசிக் கொண்டே இருக்கின்றார்..

அவரது குரல் காதில் இனிமையாக ஒலிக்கின்றது.

விஸ்வசேது இலக்கியப் பாலத்தின் மூன்றாவது வெளியீடாக இந்த நூல் வெளிவருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கையின் தாராள இறக்குமதிக் கொள்கையால் முடமாக்கப்பட்ட எம் இலக்கிய உலகம் இவ்வாறான காத்திரமான படைப்புகளின் மூலமே மீண்டும் ஒரு பொற்காலத்தை உருவாக்க முடியும்.

அன்புடன்

வி. ஜீவகுமாரன்,
-நினைவு நல்லது வேண்டும்-
jeevakumaran5@gmail.com

Hojvangsparken 7
4300 Holbaek
Denmark

0045 - 59464547
0045 - 22303134

# பொருளடக்கம்

1. மரணத்துக்கு அண்மித்து...29 ஆகஸ்ட் 2005

2. மறதி எனும் சத்திராதி

3. செலவு மிகுந்த மரணம்

4. லண்டன் மாப்பிள்ளை

5. இறந்தவர்களுடன் உரையாடல்

6. கலியாணம் என்னும் பெரும் செலவு

7. லண்டனில் பெற்றோல் ஸ்டேஸன்

8. பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்ட அருமை ஜெயந்தி

9. அடியாத மாடு படியாது

10. புளியங்குளம்

11. சனிட்டறி

12. செயற்கை விந்துகள் துள்ளும் உலகம்

13. பயணங்கள் அற்புதமானவை

14. நோர்வே கடவுளின் நிலம்

15. வேலிகள் எப்பொழுதும் எங்களை பிரிக்கின்றனவா?

16. கன்னிச் சவ்வும் செக்ஸ் சிகிச்சையும்

17. அலைந்துழலும் தமிழினம்

18. எங்கள் ஊரும் வீடும் எங்கே?

19. 'சச் கா சாம்னா' உண்மையை உரித்தல்

20. கோபக்காரர்கள்

21. மனைவியின் மரணம்

22. ஆண் விபச்சாரகர்கள்

23. ஐரோப்பாவில் முஸ்லிம்கள் மீதான வன்முறை

24. தமிழன் லண்டனிலும் அகதி வவுனியாவிலும் அகதி

25. தங்கத்தைவிட பெறுமதி பொயின்ட்ஸ்

26. பேச்சு மனிசனுக்குத் துணை

27. செக்ஸ் தொடர்பான அறிவு அருவருப்பானதா?

28. விபச்சாரத்தின் நிறம் சிவப்பு

29.காமம் - சர்ச்சைக்குரியதா?

30. சிலோன்காரரின் லண்டன் வாழ்வு

31. சம்பிக்க ரணவக்க - இரண்டு முகம்

32. லண்டனில் குண்டியில் தட்டினால் குற்றம்

33. லண்டன் - கள்வர்களின் நகரம்

34. மெலிந்த உடல் என்னும் மோகம்

35. வட்டுக்கோட்டை தீர்மானமும் வன்னித் தமிழரும்

36. அச்சம் மிகுந்த விமானப் பயணம்

37. கொட்டும் பண மழை

38. யாரிடமும் சொல்லக்கூடாத ஒன்பது விடயங்கள்

39. சித்திரவதை உண்மையை உரைக்குமா?

40. புகைப்படம் - மனதின் விம்பம்

41. பயம் என்னும் கொடிய நோய்

42. லண்டனில் தலைமுடி வெட்டிய நான்

## மரணத்துக்கு அண்மித்து...
## 29 ஆகஸ்ட் 2005

**வா**சல் கேற் அரைவாசி திறந்திருந்தது. அந்தப் பெரிய கேற்றுக்கு முன்னால் இன்னும் சில வினாடிகளில் இரண்டு குண்டுகள் வெடிக்கப் போகிறது என்பது தெரிந்திருக்கவில்லை.

வழமையாக செக்கியூரிட்டி என்னை தன்னருகில் அமர வைத்து எடிட்டரிடம் தொலைபேசியில் அனுமதி எடுத்துத்தான் உள்ளே அனுப்புவார். இன்று அப்படி நடக்காதது தான் எனது வாழ்வுக்கான மீதி.

எனது முகம் பழக்கமான காரணத்தினால் "உள்ளே எடிட்டரை சந்திக்க வேண்டும்" என்றேன். "போங்கள்" என்றார்.

அந்த சைகையுடன் கூடிய போங்கள் என்ற வார்த்தை தான் செக்கியூரிட்டி டேவிட் செல்வரத்தினம் சொன்ன கடைசி வார்த்தை. கடைசி சைகை.

மூளையில் அடித்தாற்போல் இருக்கிறது இன்னும் எனக்கு. குண்டு கொண்டு வந்த வாலிபனோடு ஏதோ பேசிக்கொண்டிருந்தார் அவர். அந்த குண்டுத் தாக்குதல் தாரி கொஞ்சம் தடித்தவனாக இருந்தார்.

பதினைந்து செக்கன் அளவில் சென்றிருக்கும். குண்டு மனிதன் செக்கியூரிட்டியோடு தர்க்கித்துவிட்டு பிரதான கேட் அண்டை போனான். ஒன்றையுமே ஊகிக்க அவகாசம் தராமல் என் காலடியில் குண்டு ஒன்றை உருட்டி விட்டான்.

சிறிய புகை, முழுதாய் ஒரு குண்டு, அதனை நான் ஊகிக்கவே ஐந்து செக்கன்கள் அளவில் போயிருக்கும்.

மூளை உறுத்தவே முன்பக்கமாகவே ஓடினேன். இன்னும் மூன்று செக்கன்களிருக்கும் குண்டு பாரிய சத்தத்தோடு வெடித்தது. பின்னர் கேற்றுக்கு வெளியில் போய் இன்னுமொரு குண்டை வீசினான் அந்த இளைஞன். இரண்டு பாரிய சத்தங்களுக்கு மிக அண்மையில் நான். மூளை அதிர்ந்து போய்விட்டது. இரண்டு குண்டுகளுக்கும் மிக அண்மையில் நின்றிருந்த டேவிட் செல்வரத்தினம் (52) நெஞ்சு பிளந்து இரத்தம் ஒழுக செத்துப் போனார். என் கண்ணுக்கு முன்னால்.

ஒரு பத்திரிகை காரியாலயத்திற்கு பாதுகாவலர் வேலைக்கு வந்ததைத் தவிர வேறெந்த பாவமும் அறியாதவர் அவர்.

எனக்கும் இன்னும் இருவருக்கும் காயங்கள். இன்னும் கொஞ்சம் முன்னாலோ அல்லது அரை நிமிடம் தாமதமாக நான் வந்திருந்தாலோ இந்தத் தகவலை எனக்கான அஞ்சலியாகவே வேறு யாரும் எழுதியிருப்பர்.

இப்பொழுது மனதுக்கு மிகவும் அச்சமாகவே இருக்கிறது. எப்பொழுதும் போலல்லாது இரவில் சிறு சத்தங்களுக்கும் விழிப்பும் வருகிறது.

எனக்கருகில் குண்டுகள் கொண்டு வந்து கொட்டப்படுவது போலவும் அவை சிதறடிப்பது போலவும் நினைவுகள் வருகின்றன.

எமது வீட்டின் கேற்றை சரியாக மூடியிருக்கிறதா என்று மனைவியிடம் அடிக்கடி கேட்கிறேன்.

ஊடகவியல் தொழிலே வேண்டாமென்று அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும், அறிந்தவர்களும், அறியாதவர்களும் சொல்கிறார்கள் நேரிலும், தொலைபேசியிலுமாக... தமிழ் ஊடகவியலாளர்களும் அவற்றுடன் தொடர்புடையவர்களும் கொல்லப்படுவதுமிகவும் சாதாரணமாகவே வந்துவிட்டது இலங்கையில். தமிழ் தேசியம் தொடர்பாக எழுதுவது ஏனையோருக்கு மிகவும் வெறுப்பைக் கொடுக்கிறது.

ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ஸ பகிரங்கமாகவே தமிழ் ஊடகவியலாளர்கள் மீது குற்றஞ்சாட்டுகிறார். அவர்கள் புலிகள் என்கிறார்.

கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற ஒரு ஜே.வி.பி.யின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை படம் பிடிக்கச் சென்ற 'சுடரொளி' பத்திரிகையின் படப் பிடிப்பாளர் யதுர்சன் ஜே.வி.பி.யினரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார் 'புலி' என்று. பொலிஸும் அவரை முதலில் 'புலி' என்றே சொன்னது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருக்கும் போது 'புலி' என்று சொன்னால் போதும். அவரின் மரணத்தை இராணுவமும் பொலிஸும் தமது கையில் எடுத்துவிடும், விட்டது.

யாராக இருந்தாலும் அதுதான் விதி. சுடரொளி பத்திரிகை காரியாலயம் மீது யார் இந்த குண்டு வீச்சை நடத்தினார்கள் என்ற கேள்விக்கு இன்னும் விடை இல்லை.

ஜே.வி.பி. கட்சிதான் கூலிக்கு ஆளமர்த்தி இதனை செய்திருக்கிறது என்றே எல்லோரும் சொல்கிறார்கள்.

ஜே.வி.பி. தமிழ் தேசியத்துக்கு எதிராக இருந்ததனால் அக்கட்சியை பகிரங்கமாகவும் பலமாகவும் விமர்சித்து வந்தது சுடரொளி. எனவே அவர்கள் தான் குண்டு வீசி அழிக்கப் பார்க்கிறார்கள் என்கின்றனர். சுடரொளியுடன் தொடர் புடையவர்கள். அரசியல் நெருக்கடி காலம் ஆகையால் ஜே.வி.பி. யினரே குண்டு வீசினார்கள் என்று தமிழ் எம்.பி.க்களும் நாடாளுமன்றத்தில் வைத்து குரல் எழுப்பினார்கள்.

"இந்தத் தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரியை கண்டுபிடித்து விடுவோம். மூன்று கட்ட விசாரணைகளை செய்து கொண்டிருக்கிறோம்" என்கிறார் குண்டுத் தாக்குதல் தொடர்பாக தீவிர விசாரணை செய்து கொண்டிருக்கும் கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு.ஜெயசிங்க.

ஆனாலும் விசாரணைகளுக்கு என்னையும் அழைத்துப் போனார்கள் குண்டு வீசியவரை அண்மையில் இருந்து கண்டவன் என்ற வகையில்.

கொழும்பு குற்றத் தடுப்பு பொலிஸ் தலைமையகத்தில் இரண்டாயிரம் புகைப்படங்கள் காட்டினார்கள் அடையாளம் தெரிகிறதா என்று. அந்தப் புகைப்படத்தில் அவர் இல்லை. ஓடி ஓடி விசாரணை செய்கிறது பொலிஸ். முடிவு, இனம் புரியாதவர்களின் செயல் என்று வழமையான ஒரு வார்த்தை இருக்கிறதே பைலை மூடுவதற்கு.

# மறதி எனும் சத்திராதி

எல்லாம் மறந்து போய் விட்டது. அம்மாவை அலட்டி அலட்டி அவாவின் முலையில் பால் குடித்தது. ஐயாவின் அப்பா வெற்றிலை வாய் சிவந்திருக்க நல்ல தூக்கத்திலிருக்க, அவரின் பெரிய மூக்கை கடித்து சிவப்பாக்கியது. ஐயாவின் தோளில் இருந்து கொண்டு முள்ளியவளை முழுக்க புதினம் பார்த்தது.

வாத்தி அக்காவிடம் 'அ' படித்தது. குமரேசு வாத்தியாரை மின்னலடித்து கருக்கியது. தில்லையம்பலம் வாத்தியாரின் கன்னத்தைப் பொத்தின அடி. பெரியம்மாவின் தொண்டைக் கழலை. அம்மம்மாவின் பாலுண்ணி. புளியங்குளம் வான் பாய்ந்தது. முதலைப் பால மதகில் வெள்ளம் ஓடியது.

மானுருவியில் சைக்கிளில் போனது, உடுப்பிட்டியில் தச்சு வேலை பழகினது, சிவஞானம் அப்பா, நீர்வேலி பெரியம்மா, கலா, மோகனவதனி எல்லாம் மறந்து போய்விட்டது.

அம்மய்யா, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், போஸ்ட் ஓபிஸ், தபால்காரன், முல்லைத்தீவுக்கடல், வற்றாப்பளை கண்ணகையம்மன் கோவில், திருவிழாக்கள், காத்தவராயன் கூத்து, அந்த மக்கள் எல்லாம் மறந்து போய் விட்டது.

வாழ்வு மறதிக்கானதா? அதனை யார் எங்களுக்கு ஞாபகப் படுத்தப் போகின்றனர். காதலிகள், கொஞ்சிக் குலாவிய பெண்கள், மனதை விட்டகலாது என்று நினைத்த பல சுவையான நினைவுகள் எல்லாமே மறதிக்குரியவை தானா?

மே மாதம் 18 ஆம் திகதியை எதனையும் மறக்கக் கூடாதென்று நினைத்தவை எல்லாம் மறந்து தொலைந்து விட்டது.

இப்பொழுது அவற்றை மீளவும் டிவியில் காட்டுவோம் என்றால், 'ஏன் செத்த வீடுகளை திரும்பத் திரும்பக் காட்டுகிறீர்கள்' என்று ஜெர்மனியிலிருந்து ஒரு நேயர் தொலைக்காட்சி நிலையத்துக்கு எடுத்து ஏசுகிறார்.

திரும்பவும் கால் பிய்ந்து போன, உடல் சிதறிய, குண்டு பாய்ந்த எமது மக்களை ஞாபகப் படுத்த வேண்டாம் என்று அதட்டுகிறார்கள். எல்லாம் மறந்து போவோம்.

ஏனெனில் அவை மறந்து போன விடயங்கள்.

இரண்டு மாதத்துக்குள் எல்லா மரணங்களையும் மறந்து விட்டு சாப்பிடுதல், குடித்தல், சுவைத்தல், புணர்தல் என்று மிகவும் சாதாரண மனிதர்களாக மாறிவிட்டோம். இனி அந்த சிதைந்து போன கருகிய உடல்களை, கடைசி முள்ளிவாய்க்கால் பகுதியை, புலிகளின் தலைவர்கள் செத்துப் போனதை பார்ப்பதற்கு தயாராக இல்லை மக்கள். தமிழ் மக்கள் எல்லாவற்றையும் மறந்துவிட்டார்கள்.

வவுனியா முகாமிலிருந்து எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. என்னோடு படித்தவள். எனது சினேகிதி. கடைசி யுத்தத்தில் முள்ளி வாய்க்காலில் இருந்து அல்லோல கல்லோலப்பட்டு வந்தவள். அவள் அழுதது கக்கூசுக்குப் போக

முடியவில்லையென்று, பசியோடு இருத்தல் ஒருவகைக் கஷ்டம், ஆனால் கக்கூசுக்குப் போகமுடியாமல் படும் அவஸ்தை என்பது பெரும் வேதனை. சுகாதார சீர்கேட்டினால் மக்கள் நொந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

எங்களுக்கு நிம்மதியாக காலையில் மலம் போகக் கிடைக்கிறதே பெரும் வரப்பிரசாதம். காலையில் ஒரு சொட்டு தண்ணீரோடு 500 பேர் மட்டில் வரிசையில் நின்று மலம் கழிக்க வேண்டிய பெரும் துன்பம். அதுவும் வயிற்றோட்டம் போனால் என்ன செய்வார்கள்? துன்பம் என்ன ரூபத்தில் எல்லாம் வருகிறது எம் மக்களுக்கு...

மலையக மக்களை கள்ளத்தோணி என்றோம். தலித்துகளை கீழ்சாதி என்று அவர்களை ஒதுக்கி விரட்டினோம். இன்று எல்லாம் பறிபோய்விட்டதே. இதுதான் ஊழ்வினை என்பதோ? என்றும் அவர் கேட்டார். இனி என்ன நடக்கப் போகிறது? எங்களுக்குத் தமிழ் நாடும் வேண்டாம். தனி நாடும் வேண்டாம். மாகாண சபையும் வேண்டாம். 13 வது திருத்தமும் வேண்டாம்.

நெல்லும் மிளகாயும்,கச்சானும் உழுந்தும் பயிர் செய்து கொண்டு வாழைக் குலையை வித்து எமது மக்களோடும், ஆடுகளோடும் வாழ விடுங்கள் என்று கேட்டால் கூட விடமாட்டார்கள் போல் இருக்கிறது.

கண்ணீரும் கம்பலையும் இன்னும் எத்தனை நாட்களுக்கு என்ற ஒரு எல்லையும் இல்லை.

நலன்புரி நிலையங்களில் கொண்டு போய் வைத்தவர்களை இனியும் சும்மா இருக்கப் போகின்றார்களா?

தமிழரின் தொகை இனிமேல் பாராளுமன்றத்திற்குப் போகாமலிருக்க விகிதாசார மாற்றம் இடம்பெறப் போகிறது. அதற்கான வேலை வெட்டிகள் இப்பொழுதே ஆரம்பமாகிவிட்டன.

திருகோணமலையில் இரவிரவாக புத்தர் சிலைகள் வந்தது போல முல்லைத் தீவு, கிளிநொச்சியிலும் இனிமேல் பாரிய புத்தர் உருவங்கள் வரும். முல்லைத்தீவு சந்தியில் உள்ள அரசமரத்தில் இனி 'பிரித்' ஒலி-பெருக்கி கட்டப்படும். எந்தச் சந்தேகமும் இல்லை. சிவன் கோவில், முருகன் கோவில் எல்லாம் இனி சிறிதாகி கதிர்காமம் போல புத்தர் பெரிதாகுவார்.

5 ஏக்கர், 10 ஏக்கர் காணி வைத்திருந்தவர்கள் எல்லோரும் இனி மார் தட்ட முடியாது. அவை பிரித்து சிங்களவர்களுக்கும் கொடுக்கப்படும்.

எங்கள் காணி உறுதிகள், எல்லைக் கற்கள் எல்லாம் மாற்றமடையும். அங்கு அடிக்கடி இனக்கலவரம் இனி நடக்கும். ஆமியும் பொலீசும் பார்த்துக் கொண்டிருக்க எல்லாம் நடக்கும்.

எங்கள் வீடுகள் சுருங்கிப் போய்விடும். கொஞ்சப் பேர் அகதி முகாம்களிலும், கொஞ்சப் பேர் சிறைச்சாலைகளிலும் இருப்பர்.

யாழ்தேவியில் அரைவாசிப்பேர், இனி சிங்களப் பயணிகள் இருப்பார்கள். முஸ்லிம்களும் தமிழர்களும் இனி வாய்பொத்தி மௌனமாக வேண்டியதுதான்.

தமிழ்ப் பெடியன்கள் சிங்களப் பெட்டைகளையும், சிங்களப்

பெடியன்கள் தமிழ்ப் பெட்டைகளையும் காதலிக்கத் தொடங்குவார்கள். அதிலும் தமிழர்களின் விகிதாசாரம் குறைக்கும் முயற்சி நடக்கும்.

எல்லாவற்றையும் மறந்து போய் முழு மறதிக்காரராக அடுத்த சந்ததி மகாவம்சத்தைக் கையில் பிடித்துக் கொண்டு மொட்டையோடு அலையும்.

மறதி மட்டுமே கோலோச்சும்.

## செலவு மிகுந்த மரணம்

லண்டனுக்கு வந்ததன் பின்பு நிறைய நாளாக மையத்துத் தொழுகைக்குப் போக எனக்கு நேரம் கிடைக்கவில்லை. நோன்பு நேரத்தில் பகல் வேளையில் பள்ளி வாசலுக்குப் போனபோது ஒரு மரணத் தொழுகைக்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

நானும் மகனும் மையத்துக்குப் பின்னால் அடக்கஸ்தலத்துக்குப் போனோம். முதன் முதலாக அன்றுதான் அடக்கஸ்தலத்துக்குப் போகிறேன் லண்டனில்.

கொழும்பு, கண்டியைப் போல அல்லது எங்களது கிராமங்களில் உள்ள பள்ளிவாசல்களைப் போல அருகிலே மையத்தை அடக்கும் இடம் இல்லை. பெட்டியில் மையத்தை வைத்துக் காரில் கொண்டு போக வேண்டும்.

ஊரில் மாதிரி சந்தூக்கில் வைத்து தூக்கிக் கொண்டு செல்லும் மரண ஊர்வலங்கள் போல லண்டனில் செல்ல முடியாது. எல்லாம் காரில் கொண்டுதான் போக வேண்டும்.

நீண்ட தூரம் காரில் கொண்டு போய் நிறுத்திய இடத்தைப் பார்த்து முதலில் அதிர்ச்சியாக இருந்தது எனக்கு.

ஏனெனில் அது ஒரு சேமக்காலை. கிறிஸ்தவர்களின் இறந்த உடலைப் புதைக்கும் இடம். கொஞ்ச தூரம்போக முஸ்லீம்களை அடக்கம் செய்யும் இடம் வந்தது. பரந்து விரிந்த சேமக்காலையில் ஒரு சிறிய பகுதியை முஸ்லிம்களுக்கும் அடக்கம் செய்யக் கொடுத்திருக்கிறது கவுன்ஸில் (நகரசபை).

இங்கு லண்டனில் இருக்கும் பூமி முழுவதும் அரசாங்கத்துக்குச் சொந்தம். அதில் ஒவ்வொரு பகுதி கவுன்ஸிலுக்கும் அதன் எல்லைக்குட்பட்ட நிலம் பரிபாலனத்துக்கு உரியது.

வீட்டு வரி, கடை வரி, நில வரி என்று கவுன்ஸில் அறவிட்டு அந்தப் பணத்தை கவுன்ஸில் தனது எல்லைக்குட்பட்ட பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்தும்.

ஆகவே மையத்துப் பிட்டி நிலமும் கவுன்ஸிலுக்குச் சொந்தமானது. நாங்கள் கொண்டு போன மையத்துக்கு

அடக்கவென்று ஆறு அடி நிலம் சரியாக இஸ்லாமிய விதிப்படி ஆழ அகலமாக வெட்டி வைக்கப்பட்டிருந்தது. மையத்தை அந்தக் குழிக்குள் அப்படியே பெட்டியோடு வைத்தார்கள். எங்கள் ஊர்களில் பெட்டியோடு மையத்தை அடக்கம் செய்வதில்லை. மையத்தைத் தரையில் வைத்துவிட்டு குழிக்கு மேலால் பலகையைப் போட்டு அதற்கு மேலால்தான் மண்ணைப் போட்டு மூடுவோம்.

ஆனால் லண்டனில் அப்படிச் செய்ய கவுன்ஸிலும் சுகாதாரத் துறையும் விட மாட்டார்கள். சுகாதார மாசு ஏற்பட்டுவிடும் என்கிறார்கள். பெட்டியோடுதான் அடக்கம் செய்ய வேண்டும். பேர்மிங்ஹாம் போன்ற இடங்களில் சில பகுதிகளில் சிலோனில் போல மையத்தை அடக்க முடியும் என்று அதில் ஒருவரோடு கதைத்துக் கொண்டிருக்கும் போது சொன்னார்.

பெட்டியோடு அடக்குதல், பெட்டியில்லாமல் அடக்குதல் என்ற விடயத்தை ஏன் நான் இங்கு குறிப்பிடவேண்டும் என்றால், இஸ்லாமிய மத நம்பிக்கையின்படி மரணித்த ஒருவருக்கான கேள்வி கணக்குகள் மரணக் குழியில் இருந்தே ஆரம்பிக்கின்றன என்பதாகும்.

அவரை மையத்தை எழுப்பி உட்கார வைத்தே கேள்விக் கணக்குகள் நன்மை தீமை தொடர்பாக ஆரம்பிக்கப்படும் என்பதே இஸ்லாமிய மார்க்கம் சொல்லுகின்ற விடயம்.

ஆகவே இது முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் பெரிய விடயம்தான்.

விடயம் என்னவெனில் பள்ளிவாசலில் இருந்து மையத்து காரை ஓட்டுகின்றவரைப் பிடித்து விசாரித்தேன். ஒரு மரணத்துக்கு எவ்வளவு செலவு ஆகுமென்று. ஏனெனில் நாங்களும் லண்டனில் தானே இருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டு.

இரண்டாயிரம் பவுண்ட் என்றாரே அவர். எனக்கு தூக்கிவாரிப் போட்டது. தற்செயலாக இப்பொழுது நானோ அல்லது எனது வீட்டில் யாராவதோ அடக்கம் செய்ய அவ்வளவு பணம் இல்லை என் கையில், யாராவது அனாதைகளை அடக்கம் செய்வதைப் போலத்தான் எங்களை அடக்கம் செய்ய வேண்டும். ஏனெனில் மைய வாடிக்கு பிணத்தை எடுத்துக் கொண்டு போவதற்கே இரண்டாயிரம் பவுன் பணம் வேண்டும்.

அவரிடம் கேட்டேன். ஏன் அவ்வளவு பணம் செலவாகிறது என்று அவர் சொன்னார்.

"மைய வாடியில் ஆறு அடி நிலத்துக்கு கவுன்ஸில் கேட்கும் தொகை ஆயிரத்து ஐநூறு பவுன்கள். அது கட்டாயம் கொடுக்க வேண்டும். கொடுக்காவிட்டால் நிலம் தரமாட்டார்கள். கார், பெட்டி, மையத்தை அடக்கும் இடத்துக்குக் கொண்டு வருவது, குழி தோண்டுவது, மூடுவது என்று பள்ளிவாசலுக்கு ஐநூறு பவுண்ட் கொடுக்க வேண்டும். இரண்டு செலவுகளுமாகச் சேர்த்து இரண்டாயிரம் பவுன்ட். ஒரு மையத்தை அடக்கம் செய்ய இந்தச் செலவு. தற்செயலாக இரண்டு பேர் ஒரு வீட்டில் மௌத்தாகினால் நாலாயிரம் பவுண்ட் வேண்டும்."

எங்கு போவது இவ்வளவு காசுக்கு. இலங்கைக் காசுக்கு இரண்டாயிரம் பவுண்ட் சமம் நாலு லட்சம் ரூபா(ந்ஷீஞு). ஆண்டவனே இப்படி ஒரு மரணம் நிகழ்ந்து விடக்கூடாதே என்று அந்த மையவாடியில் வைத்து பிரார்த்தனை செய்தேன்.

அடக்கம் செய்கின்ற செலவை எண்ணி லண்டனில் மரண- மாகக் கூடாது. சிலோனில்தான் போய் மரணமாக வேண்டும் என்று நினைக்கும் அளவுக்கு மரணம்கூட பெரும் எக்ஸ்பென்சிவ் ஆக இருக்கிறது லண்டனில்.

லண்டனில் எல்லாமே இப்பொழுது பெரும் செலவானதாக மாறிக் கொண்டு வருகிறது தினமும். வேலையில் இருந்து கம்பெனிகள் ஆட்களைக் குறைத்துக் குறைத்து இப்பொழுது பல சொப்ட்வெயார் கொம்பனிகள் ஆட்களை நிறுத்திவிட்டார்கள். அதனால் இந்தியாவில் இருந்து இங்கு வந்த பலர் வேலை இல்லாமல்

அலைந்து திரிகின்றனர்.

வேலை கேட்டு எந்த கடைகளுக்கும் போகமுடியாமல் இருக்கிறது. முந்தி என்றால் தமிழர்களின் பெற்றோல் ஸ்டேசன்கள் எப்பொழுதும் எங்களுக்காகத் திறந்தே இருக்கும். வேலைக்குப் பஞ்சமில்லாமல் இருந்தது அப்பொழுது. 90களில் நாங்கள் இங்கு வந்தபொழுது அகதிகளுக்கும் சரி, சாதாரணமாக இங்கு வந்து வேலை செய்பவர்களுக்கும் சரி வேலைவாய்ப்பு இருந்தது. மொழி ஒரு பிரச்சினையாகவே இருக்கவில்லை.

மொழி தெரியாதவர் கூட தமிழர்களின் கடைகளில் வேலை செய்யக் கூடியதாக இருந்தது. ஆனால் இப்பொழுது இன்சூரன்ஸ் நம்பர் இல்லாமல் வேலை செய்வது என்பதை எண்ணிப் பார்க்கவே முடியாது.

ஒவ்வொரு கடைகள், அலுவலகங்கள் என்ற இமிக்கிறேசன் ஓஃபிஸர்மார் ஓடித்தான் திரிகிறார்கள். திடீர் திடீர் என்று செக் பண்ண வருகின்றனர். கையில்எப்பொழுதும்சரியான ஆவணங்களை எல்லோரும் வைத்திருக்க வேண்டும் அல்லது வேலை கொடுப்போர், வேலை செய்வோர் எல்லோரும் பெரும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இன்சூரன்ஸ் நம்பர்தான் மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. வரி கட்டாமல் யாரும் வேலை செய்ய முடியாது லண்டனில்.

வேக் பேமிற்றில் வருகிறவர்களுக்கும் பெரும் நெருக்கடி வந்துவிட்டது. இப்பொழுது முதல் போல அதாவது மூன்று வருடத்துக்கு முன்பு போல 5 வருடம் வேக் பேமிற் விசா கொடுக்கிறார்களில்லை. 2 வருடம் மாத்திரமே விசா கொடுக்கிறார்கள். அதுவும் ஒரு கொம்பனி வேக் பேமிற்றில் ஒருவரை இலங்கையில் இருந்து எடுப்பதனால் முதலில் கொம்பனி, ஹோம் ஓஃபிஸில் றிஜிஸ்டர் பண்ண வேண்டும். அதற்குப் பிறகு யாருக்கு விசா கொடுக்க வேண்டும் என்று கொம்பனி கேட்கிறதோ அவரின் எல்லா விபரங்களையும் அந்த நிறுவனமே சரி பார்க்க வேண்டும். முழுப் பொறுப்பும் நிறுவனத்துக்குரியது.

இதில் மயிர்போல சிறு பிழை நடந்தாலும் நிறுவனத்தின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அப்படி வேக் பேமிற் விசாவில் வந்தவர் அதே நிறுவனத்தில் வேலை செய்ய வேண்டும். 10 நாள் அவர் வேலைக்கு வராமல் விட்டால் ஹோம் ஓஃபிஸுக்கு அறிவிக்க வேண்டும்.

முதல் என்றால் வேக் பேமிற்றில் 5 வருடம் இருந்தால் பெர்மனன்ட் றெசிடன்ட் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு பிரிட்டிஷ் சிட்டிசன் எடுக்கலாம். இப்ப அப்படி இல்லை. ஸ்டூடன்ட் விசாவும் பெரும் சிக்கல்.

இதனை நான் சொல்லும்பொழுது இடியப்பச் சிக்கல் மாதிரி உங்களுக்குத் தெரியுதல்லவா. ஆனால் அதைவிட சிக்கல் லண்டனில் இருக்கிறது.

லண்டனில் வாழ்வதும் எக்ஸ்பன்ஸிவ். மரணிப்பதும் எக்ஸ்பன்ஸிவ். ஆனால் லண்டன் ஆசை யாரைத்தான் விட்டது?

# லண்டன் மாப்பிள்ளை

**தி**ருமணம் என்பது இப்பொழுது பணம், அந்தஸ்து, தொடர்பானதாக மாறி அன்புக்கும் அர்ப்பணிப்புக்கும் அப்பாற்பட்டதாகி விட்டதோ என்று யோசிக்கத் தோன்றுகிறது. நேரடியாக இரண்டு பேருடைய வாழ்வு சிதைந்து கொண்டிருக்கிறது எனது கண் முன்னால். ஒருவர் இங்கு லண்டனில் நல்ல கொம்பனி ஒன்றில் கொம்பியூட்டர் வேலை செய்கிறார், படித்தவர். இரண்டாமவர் இங்கு லண்டனில் பி.எச்.டி. முடித்தவர். இளைஞர்கள் இருவரும் அவரவர் பெற்றோர் பார்த்து பேசிய மணமகள்களை தமிழ்நாட்டிற்குப் போய் திருமணம் முடித்து வந்திருக்கிறார்கள்.

ஒருவருடைய மணப்பெண் டில்லியிலேயே வாழ்ந்தவள். அங்கு வேலை செய்தவள் தமிழ்ப் பெண். மற்றப் பெண் சிங்கப்பூரில் வாழ்ந்தவள். அங்கு வேலை செய்த தமிழ்ப் பெண். ஆனால் டில்லியில் வளர்ந்த தமிழ்ப் பெண்ணுக்கு ஏற்கனவே லண்டன் போக வேண்டும் என்ற கனவும் இருந்திருக்கிறது. இங்கு ஆசைக் கனவுகள், பெரிய வீடு, பெரிய தரமான கார் என்று பாங்கில் காசும் இருக்கும் மாப்பிள்ளைக்கு என்று நினைத்து வந்தவளுக்கு முதல் அடி மாப்பிள்ளை ஒரு வீட்டில் ஒரு ரூமில் வாடகைக்கு தங்கியிருந்தார். கிடைக்கும் ஆயிரம் பவுன் சம்பாத்தியத்தில் அவருக்கு அவ்வளவுதான் இயலும். ரூமுக்கு 400 பவுன் வாடகை ஒருத்தருக்கு. மாதம் இரண்டு பேர் என்றால் 550 பவுன்.

வங்கி பாலன்ஸ் கிடக்கட்டும். வங்கியில் பெருங்கடனாளியாக இருக்கிறார் மாப்பிள்ளை. இதனை ஏன் சொல்லவில்லை. நான் லண்டன் வர முதல் என்று ஆரம்பித்த சிறிய சண்டை, இப்பொழுது மாப்பிள்ளையை நிம்மதி இல்லாதவனாக ஆக்கிவிட்டது. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் மனைவியின் ஆக்கினைக்காக கார் ஓடத் தெரியாதவர் ஒரு காரை வாங்கி நண்பரைக் கொண்டு ஓட வைத்து வீட்டுக்கு முன் நிப்பாட்டி வைத்திருக்கிறார்.

இங்கே லண்டனில் கார் வாங்கினால் லைசன்ஸ் வாங்க வேண்டும், இன்சூரன்ஸ் வாங்க வேண்டும். எம்.ஓ.ரி. செய்ய வேண்டும். எல்லாம் செலவு.

ஆகவே ஓடாத காரை பெண் சாதியின் ஆக்கினைக்காக வாங்கி வைத்திருக்கிறார் நண்பர். கார் இருந்தாலும் யாரும் கவனிக்கப் போறதில்லை.

இல்லையெண்டாலும் யாரும் கவனிக்க மாட்டார்கள். ஆனாலும் சில மனைவிமாருக்கு கார் சும்மாவாகிலும் வீட்டில் முற்றத்தில் இருக்க வேண்டும்.

ஏற்கனவே கடன் சுமையோடை இருந்தவர் இப்பொழுது இரட்டை சுமையை ஏத்தி வைத்திருக்கிறார். மனைவி சொல்லி விட்டார். நல்லதாக இருண்டு பெட்ரூம் வீடு வேண்டும். அப்பொழுதுதான் மாமா மாமியை லண்டனுக்குக் கூப்பிட்டு வீட்டில் ஒரு கிழமைக்கேனும் வைத்திருப்பேன் என்று.

மாப்பிள்ளையின் அப்பா அம்மா தமிழகத்தில் நல்லபடி

காசோடு வாழுகிறார்கள். அவர்கள் மூத்த மகனை போய் அமெரிக்காவில் பார்க்கிற வழியில் லண்டனில் இறங்கி இரண்டாவது மகன் வீட்டில் தங்கலாம் என்று நினைத்தார்கள். ஆனால் நாள் ஒன்றுக்கு 35 பவுண் கொடுத்து ஏழு நாளும் ஒரு மலிவான ஹோட்டலில் தங்குவது ஒன்றும் அவர்களுக்குப் பிரச்சனை இல்லை. ஆனால் மருமகள் மாமியை கவனிக்க வேணும் என்று அடம்பிடித்து ஒரு இரண்டு பெட்ரூம் வீடு வாடகைக்கு வாங்கி அதற்கு முன்னால் காரை நிற்பாட்டி வைத்திருக்கிறார்.

வீடு வாடகை 850 பவுண், கவுன்ஸில் ரக்ஸ் 100 பவுண், சாப்பாடு, குடிப்பு, ரெலிபோன் பில், கிறடிட் கார்ட் பில் என்று ஆயிரம் பவுண் சம்பளம் எடுக்கும் மகன் கடனாளியாக பெரும் சுமையாகி அலைகிறான்.

இது மனைவிக்கு லண்டன் மாப்பிள்ளை என்று பெருமை பேசியதால் வந்த வினை.

இரண்டாமவன், சிங்கப்பூரில் வசதியாக வாழ்ந்த பொண்ணு ஒன்றை கட்டி விட்டு வந்து மனம் குழம்பிப் போய் இருக்கிறார்கள். முதலா-மவனின் மனைவி சொல்கிறாள். தன்னை தனது புருசன் ஏமாத்திப் போட்டார் என்று. உண்மையில் இரண்டு பேரிடமும் தவறு இருக்கிறது. தான் ஊருக்குப் போகப் போகிறாளாம்.

லண்டன் மாப்பிள்ளை என்று வாயைப் பிளக்கும் எமது ஊர் பெற்றோரும் கொஞ்சம் அவதானிக்க வேண்டும். அதோடு பெண் பிள்ளைகளும் மிகவும் அவதானிக்க வேண்டும்.

பெரிய பெரிய கனவுகளோடு லண்டன் மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டக் கூடாது. ஊரில் உள்ள ஒருவரைப் போல மிகச் சாதாரணமான ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு போகிறேன் என்று மட்டுமே நினைத்து கலியாணம் செய்யுங்கள். கனவுகளை மட்டும் சுமந்து கொண்டு வந்தீர்களென்றால் இந்த விறை குளிரில் எல்லாம் கரைந்து போய்விடும். இரண்டாமவளுக்கு சமைக்க தெரியாது. அவளது உடுப்பைக் கூட வேலைக்காரர்தான் சிங்கப்பூரில் அயன் பண்ணிக் கொடுப்பாராம். ஆனால் இங்கு கடுமையாக உழைத்தால்தான் பணம் கிடைக்கும். எவ்வளவு பணம் கிடைத்தாலும் நாங்கள் இங்கு ஏழைதான். சிக்கனமாக இல்லாவிட்டால் கடன் வட்டிபோட்டு குட்டி போட்டு ஆளை விழுங்கிவிடும். இப்ப இருக்கிற கிறடிட் கிறஞ்சில் யானை விலை குதிரை விலை மரக்கறியும் உணவுப் பொருட்களும் பெருங்கஷ்டம்.

சிங்கப்பூர் பொண்ணு வெளிப்படையாகவே சொல்கிறது. கல்யாணம் செய்தது தப்பாக்கிப் போச்சுதோ என்று. அந்தளவுக்கு இளம் சமூகம் ஒரு திருப்தி காணாமல் வாழ்வை நெருக்கிக் கொண்டிருக்கின்றனர். அளவான கற்பனையும் திருப்தியான வாழ்வும், போதுமென்ற மனமும் இல்லாத மனைவிமார்கள் கிடைக்கப் பெற்ற கணவன்கள் உண்மையிலேயே சபிக்கப்பட்டவர்கள். அதேமாதிரி மனைவியர்க்கும் கணவன்கள் நல்லவர்களாக, சிக்கனவான்களாக, குடி சூது இல்லாதவர்களாக கிடைத்தால்தான் இங்கே லண்டனில் வாழ்வு. இல்லாவிடில் கண்ணீரும் கம்பலையும்தான் லண்டனில்.

தெரிந்து கொள்ளுங்கள்!

# இறந்தவர்களுடன் உரையாடல்

இங்கு நான் வேலை செய்யும் ஓஃபிஸில் வேலை செய்கின்ற ஒரு 35 வயது பெண்ணின் கணவர் இறந்து விட்டார். அவருக்கு கல்யாணம் முடிக்கும் பொழுதே உடம்பு முழுக்க நோய். நல்ல மனிதர் வீட்டுக்குப் போகும்பொழுதெல்லாம் மிகவும் நன்றாக உபசரிப்பார். கை நிறைய குளிசைகளோடுதான் எங்களையும் வரவேற்பார். வீட்டுக்குப் போனால் ஏதேனும் வருத்தத்தோடுதான் எல்லோரும் வருகிறார்கள் என்று அவர் நினைப்பார். எங்களுக்கும் வருத்தத்திற்கு மருந்து சொல்லுவார்.

அவருக்கு நோய் இருக்கிறது என்று சொல்லித்தான் கல்யாணமே முடிந்தது. அதில் எந்தப் பிசகும் நடக்கவில்லை. கல்யாணம் முடித்தவர், ஒரு ஏழை பெண்மணி. லண்டன் மாப்பிள்ளை என்று கல்யாணம் செய்தார். அவரும் ராசாத்தி மாதிரி அவளை வைத்திருந்தார். ஒரு பெண் குழந்தை இருக்கிறது. அவர் அண்மையில் இறந்து விட்டார்.

யாரோ ஒரு தெலுங்குக்காரர் சொல்லியிருக்கிறார். பெங்களூருக்குப் போனால் இறந்து போன கணவரோடு பேசலாம். அங்கு பேச வைக்கிற யாரோ இருக்கிறாராம் என்று ஆனால் கணவனை நினைத்து அவருடன் எப்படியாவது பேசி விட வேண்டும் என்று மிகவும் முனைப்போடு இருக்கிறாள் அவள். சாப்பிடாமல் எலும்பும் தோலுமாக ஆகிவிட்டாள். கணவரோடு பேசு மட்டும் தான் இப்படித்தான் இருப்பேன் என்கிறாள். உண்மையில் இறந்த பிறகு ஆவிகளோடு உரையாடுதல் என்ற விடயத்தை யாரோ அவளின் மூளைக்குள் செலுத்திவிட்டார்கள். ஒரே அதே நினைப்பில் அவள் இருக்கிறாள். அவளை மாற்ற முடியாமல் இருக்கிறது.

ஜின் என்ற படைப்புக்கள் பற்றி குர் ஆன் சொல்கிறது. ஜின் என்பதை கண்ணுக்கு தெரியாத ஆத்மாக்கள் என்று வைத்தால் அவை ஆவிகளுக்கு சமமாகுமா என்ற கேள்வியும் எழுகிறது.

இது கொஞ்சம் கனதியான விடயம் ஆழமாகப் போக வேண்டும். இப்பொழுது நேரமில்லை, ஜின்களையும் மனிதனையும் தன்னை வணங்குவதற்காகத்தான் படைத்ததாக குர்ஆன் சொல்கிறது.

ஆனால் மனிதன் இறந்தவுடன் எங்கே போகிறான். கட்டை வேகுகிறது. ஆத்மா போகிறது என்று ஒவ்வொரு மதங்களும் ஒவ்வொரு விதமாக சொல்லிக் கொண்டிருக்க இறந்தவர்களோடு உரையாடுதல் என்பது பொய் என்று டாக்டர் கோவூர், கவிஞர் கண்ணதாசன் போன்றவர்கள் சொல்கின்றார்கள். ஆவிகளை அழைத்தல் என்பது சும்மா கட்டுக்கதை. ஏனெனில் பல தடவைகள் பலரிடம் ஏமாந்திருக்கிறேன் என்று சத்குரு வாசுதேவ் சொல்கிறார்.

பெங்களூருக்கு அவள் போனாள். அங்கு போனால் ஆவிகளுடன் பேசுகின்ற முறையாம். ஏதோ கிளாஸுகள் ஆடினதாம். பேசவைக்கிறவர் என்று சொல்லப்படுபவர்தான் சொன்னாராம் கணவர் பேசுகிறார் என்று. ஆனால் எதுவும் தெளிவில்லாமல் இருக்கிறதாக அந்தப் பெண். சொல்கிறா லண்டனுக்கு வந்ததன் பின்பு.

ஆனால் ஒன்றுமில்லாத ஆவிகளோடு பேசப்போகிறோம் என்று அடம் பிடிப்பவர்களுக்கு எம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

# கலியாணம் என்னும் பெரும் செலவு

உண்மையில் கலியாணம் என்பது செலவுக்கானதா என்று எனது இரண்டு கூட்டாளிகள் தலை குழம்பிப் போய் இருக்கிறார்கள். ஒருவர் லண்டனில் இருந்து இந்தியாவுக்குப் போய் பொம்பிளையை ஸ்ரீலங்காவில் இருந்து கூப்பிட்டு தாலி கட்டி விட்டு அங்கு தமிழகத்தில் சம்பிரதாயங்கள் எல்லாம் முடித்து விட்டு பிறகு ஸ்ரீலங்காவிற்கு பொம்பிளையை அனுப்பி வைத்து விட்டு இங்கே லண்டன் வந்ததன் பிறகு மனிசியை ஸ்பொன்ஸர் பண்ணி கூப்பிடவேணும்.

இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு கூட்டம் குடும்பம் எல்லாம் கலியாணம் பார்க்க வரப் போகிறோம். நீ டிக்கட் எடுத்துத் தா! என்று இவருக்கு நச்சரிக்க இவர் தலையில் கை வைத்துக் கொண்டிருக்கிறார். எல்லோருக்கும் டிக்கட் காசுக்கு எங்கே போறது.

எல்லோரும் லண்டனிலை மரத்திலை பவுண் காசு காய்த்து தொங்குகிறது என்று நினைத்திருக்கிறார்கள்.

தாலி, கூறை, நகை நட்டு, போக்குவரத்து, கலியாண செலவு என்று ஒரு பத்தாயிரம் பவுணாவது வேண்டுமென்று ஆலாய் பறக்கிறார் அவர், ஏற்கனவே அவருக்கு வங்கியில் கடன் 12 ஆயிரம் பவுண்ட். இரண்டாமவர் அம்மாவையும் அப்பாவையும் தமிழ்நாட்டில் இருந்து இங்கே கூப்பிட்டுவிட்டு இங்கு ஏதாவது ஒரு அம்மன் கோவிலில் கலியாணம் முடிக்கலாம் என்று யோசிக்கிறார். அதற்கு அம்மா அப்பாவை லண்டனுக்கு கூப்பிடுவது ஒன்றும் சாதாரண விடயமேயில்லை.

இப்பொழுதெல்லாம் இங்கே லண்டனில் சாமத்திய வீடுகளே பெரும் பெரும் செலவில் தான் நடக்கிறது. அட சாமத்திய வீடு என்ன சாமத்திய வீடு அரங்கேற்றங்களே பெரும் பொருட் செலவில் தான் நடக்கின்றன.

உண்மையில் திருமணங்கள் என்பவை செலவு மிக்கவையா என்ற கேள்வி எழுகின்றது எனக்கு. நான் கலியாணம் செய்யும் பொழுது என்னிடம் இருந்தது வெறும் இரண்டாயிரம் ரூபாய் தான். உண்மையிலேயே இது ஆச்சரியப்பட வேண்டிய ஒன்றாக இன்னும் எனது மனதுக்குத் தெரியவில்லை.

நான் மனதார நிறைவாகவே இருக்கிறேன். இரண்டு தடித்த ஹாட்போட் பெட்டிகளில் ஒன்றில் புத்தகங்கள் மற்றதில் உடுப்பு, மனிசிக்கு ஒரு எழுபத்தைந்து ரூபா சூட்கேஸ். எனக்கும் அதே போல ஒன்று அதற்குள் தான் உடுப்புகளை வைத்துக் கொண்டு திருகோணமலைக்கு போனோம். பின்னர் அக்குறணையில் ஒரு வீட்டில் இலவசமாக இருந்தோம். இரண்டு ரூம் கொண்ட அரதப்பழசான மண் வீடு மேலே இருந்து தூசு கொட்டும் மழைத் தண்ணீர் விழாமல் இருக்க பொலித்தீன் பையை கட்டியிருந்தோம். பக்கத்து றூமில் ஆடுகளைக் கட்டி வைத்திருந்தார் வீட்டுக்காரர். அங்குதான் மூத்தவளை வளர்த்தோம். மனிசியோ நானோ அதனைப் பற்றி கொஞ்சம் கூட கவலைப்படவில்லை.

எல்லாம் போதுமென்ற மனதும் மேலதிகமான அவாவும்

இல்லாமல் இருந்திருந்தால் எல்லாம் சாத்தியம் என்று கலியாணம் கட்டி பதினேழு வருடங்களின் பின்பும் யோசிக்கும் பொழுதும் மனதுக்கு நிறைவைத் தருகிறது.

இஸ்லாமிய திருமணங்கள் மிகவும் இலகுதான். நபிகளார் சொன்னார்கள் இளைஞர்களே! உங்களில் தாம்பத்தியம் நடத்த சக்தி பெற்றவர் மணந்து கொள்ளட்டும்! இயலாதோர் நோன்பு நோற்றுக் கொள்ளட்டும். ஏனெனில் நோன்பு ஆசையைக் கட்டுப்படுத்தக் கூடியதாகும்.

உங்களால் இயலுமானதை மஹராகக் கொடுத்து ஒரு பெண்ணை திருமணம் முடித்துக் கொள்ள இஸ்லாம் அனுமதி வழங்குகிறது. சீதனம் என்ற கொடுமையை எதிர்த்து இஸ்லாம் சொல்கிறது. ஆண் மகன் பெண்ணுக்கு ஏதாவது கொடுத்துத்தான் திருமணம் முடிக்க வேண்டும். அதிலும் யாருக்கும் சிரமம் வைக்காமல் பெண் விரும்பினால் ஒரு பேரிச்சம்பழம் அல்லது ஒரு குர்ஆன் வசனத்தைக் கூட கொடுப்பனவாக கொடுத்து பெண்ணை ஆண் மணம் புரிந்து கொள்ளலாம்.

இவ்வுலகம் இன்பகரமானது. உலக இன்பங்களில் மிகவும் சிறப்பானது நல்ல மனைவியை அடைவதாகும் என்று நபிகளார் சொல்லியிருக்கிறார்.

நல்ல மனைவியை பொறுமைசாலியான கணவனை அடைந்தவர்கள். எப்பொழுதும் பாக்கியசாலிகள். அண்மையில் எனது நண்பன் ஒருவன் தனது மனைவியை விட்டு பிரிந்து விட்டான். மனைவி சந்தேகப்படுகிறாள். அதனால் சண்டை என்கிறான்.

இத்தனைக்கும் காதலித்து தேவாலயத்தில் கலியாணம் முடித்தவர்கள் இவர்கள். தீராத சந்தேகம் பெண்ணோடு தொடர்பு என்பதுதான் ஆண்கள் மீது பெண்கள் போடும் பெரும் குற்றச்சாட்டு.

இதனை அழகான அந்த மனைவியும் கணவனும் உட்கார்ந்து பேசி விட்டுக் கொடுத்து வாழத் தெரியாமல் பிரிந்து விட்டார்கள். இனி வெறுப்பு, இரண்டு குழந்தை இருக்கிறது. குழந்தைகளின் எதிர்காலம் என்றெல்லாம் எத்தனை பிரச்சினை வரப்போகிறது. விட்டுக் கொடுக்கத் தெரியாத நீங்கள் ஏன் கல்யாணம் முடிக்கிறீர்கள். இருந்து பேசுங்கள். பிரச்சினை தீர இதுதான் வழி என்று சொல்லத் தோன்றுகிறது எனக்கு.

எப்பொழுது ஒரு கணவனை அவனது மனைவி சிறந்தவன் என்று சொல்கிறாளோ உண்மையிலேயே அவன்தான் சிறந்த மனிதன் என்று நபிகளார் சொன்னார்கள். ஒவ்வொரு ஆண்களும் உங்கள் மனைவியிடம் கேளுங்கள்.

இப்பொழுதெல்லாம் முஸ்லிம்களின் கலியாணங்கள் கூட பெரும் ஆடம்பரமான செலவுகளுக்குப் போய் விடுகின்றன. எல்லாம் பணக்காரரை முன்வைத்துத்தான் விருந்துகள் நடத்தப்படுகின்றன.

எந்த (திருமண) விருந்துக்கு செல்வந்தர்கள் அழைக்கப்பட்டு ஏழைகள் மறுக்கப்படுகிறார்களோ அவர் இறைவனுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்தவராவர் என்று நபி பெருமானார் சொல்கின்றார்.

இப்பொழுது படாடோப செலவுகள் தொடர்பாக யாரும்

அலட்டிக் கொள்வதில்லை. எத்தனை நபிமொழிகள் எத்தனை குர்-ஆன் வசனங்கள் இருக்கின்றன. முஸ்லிம்கள் அதனை உதாசீனம் செய்து விட்டு வாழுகின்றனர்.

மற்றவர்களுக்காக வாழ வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்பவர்களின் வாழ்வு அழிந்து போனதுக்கு ஆயிரம் உதாரணங்கள் இருக்கின்றன எமது கண்முன்னால்...

# லண்டனில் பெற்றோல் ஸ்டேஸன்

லண்டன் சிற்றியில் இருந்து 25ம் நம்பர் பஸ்ஸில் மனோ பார்க்கில் உள்ள வீட்டுக்குப் போக வேண்டும் என்ற ஆசை இன்று நிறைவேறுகிறது. மனதில் சந்தோஷம். இரட்டைத் தட்டு பஸ் புதியது. அழகாக இருந்தது. மேலே ஏறி ஆக முன்னால் இருக்கும் ஸீட்டில் இருந்து கொண்டேன். இந்த பஸ் டூரிஸ்ட் பஸ்ஸிலும் பார்க்க நேர்த்தியாக இருந்தது. பஸ் மேலே திறந்திருக்கும். முக்கிய டூரிஸ்ட் இடங்களைக் கொண்டு போய்க் காட்டுவார்கள். 25 ஸ்ரேலிங் பவுன்ஸ் கொடுத்தால் சிற்றியில் உள்ள முக்கிய இடங்களின் முன்னால் நிற்பாட்டுவார்கள். இறங்கி அந்த இடத்தைப் பார்த்துவிட்டு அடுத்து வரும் அதே கொம்பனி பஸ்ஸில் ஏறி அடுத்த இடத்துக்குப் போகலாம்.

இப்படி மூன்று நான்கு டூரிஸ்ட் கொம்பனி பஸ்கள் ஓடுகின்றன. நல்ல வசதிதான். அந்த டிக்கட் 24 மணித்தியாலம் செல்லுபடியாகும். ஒரே பயணத்தில் மாபிள் ஆச், ரஸ்ல்ஸ்குயார், பிக்கட்லி சேர்கஸ், லைஸ்டர் ஸ்குயார், சவுத் கென்ஸிங்டன் மியூசியம், மெழுகுப் பொம்மைக்கூடம், பக்கிங்ஹாம் மாளிகை, விக்டோரியா, ஹைபார்க் என்று பல இடங்கள் இந்த 25 ஸ்ரேலிங் பவுண் டிக்கட்டில் பார்க்கலாம்.

25ம் இலக்க பஸ் ஸ்ரட் போட்டிலிருந்து மாபிள் ஆச் வரை போகும் நீண்ட தூரம் ஒரு பவுண்தான் டிக்கட் கட்டணம். இது முக்கியமான ரூரிஸ்ட் இடங்களுக்குப் போகாவிட்டாலும் மாபிள் ஆர்ச் இல் இருந்து ஒக்ஸ்போட் வீதி வழியாகச் செல்லும் போது அழகான சிற்றியை தரிசிக்கலாம் ஒரு ஸ்ரேலிங் பவுண்தானே. லண்டனில் பஸ்களை மிகவும் அழகாக கழுவி சுத்தமாக வைத்திருப்பார்கள். அனேகமாக புதிய பஸ்கள் ஓடும். கனதூரம் போக வேண்டிய தேவை குறைவு. நீண்ட நெருக்கடி இல்லை. ஆனால் சில நேரம் சனி-ஞாயிறு தினங்களில் சுரங்க ரயில் ஸ்டேசன்களின் திருத்த வேலைகளுக்காக ரயில் றீபிளேஸ்மன்ட் பஸ்களைப் போடுவார்கள். எங்கையிருந்து தான் கொண்டு வருவார்களோ தெரியாது ஒரே சக்கு மணமாக இருக்கும்.

பஸ் ஒக்ஸ்போட் வீதியில் ஒரு ஹோல்டில் நிற்கிறது. ஆட்கள் ஏறுகிறார்கள். ஒருவர் இறங்கினார்.

ஒருவர் வந்து எனக்கருகில் இருக்கின்றார். இவ்வளவு இடம் இருக்கிறது. ஆனால் எனக்கருகில் வந்து உட்கார்ந்திருக்கிறாரே.

தனிய சிற்றியை ரசித்துப் பார்க்க வேண்டும் என்று தான் இந்த பஸ் பயணத்தை செய்தேன். ஏன் என்னருகில் வந்திருக்கிறார்.

"நீங்கள் தமிழோ" அவர் கேட்டார்.

"ஓம்" அவருக்கு மகிழ்ச்சி.

"எங்கை போறியள்"

எனக்குப் பிடிக்கவில்லை.

"சிலோனிலை எங்கை"

"உடுப்பிட்டி"

"நான் நெல்லியடி"

"உடுப்பிட்டி எண்டால் கோயில் சந்தையடியோ இல்லாட்டி பீடாக்கடைக்கு இங்காலை இமையாணன் பக்கமோ?"

அவர் என்னத்துக்கு வாறார் என்று துல்லியமாக எனக்கு விளங்கியது. அவர் நான் யார் என்ன சாதி என்பதைத் தெரிந்து கொள்ள வாறார். "தங்கராசப்பத்தரைத் தெரியுமோ?" கேட்டார். எனது பிடி கொடுக்காத பதிலில் அவருக்கு கொஞ்சம் ஏமாற்றம்தான். உடுப்பிட்டி கோவில் சந்தைக்கு வலது பக்கமாக நகைப்பத்தர்கள் இருக்கிறார்கள். இடது புறமாக தச்சுவேலை செய்பவர்கள் - அங்காலை கொல்லர்கள் இமையாணன் பக்கம் சீவல் தொழிலாளர்கள். அவருக்கு என்னை யார் என்று அறிந்து கொள்ள வேண்டும். என்ன சாதி என்று தெரிய வேண்டும்.

லண்டனிலும் பல மணமகன் மணமகள் பத்திரிகை விளம்பரங்களில் உயர்குல சைவ வேளாளர் என்று தான் விளம்பரங்கள் வருகின்றன. அங்கு போயும் சாதி தேடும் மனிதர்களில் அவரும் ஒருவர்.

எனக்கு இது மூன்றாவது பெற்றோல் ஸ்டேஸன் லண்டனில். தமிழர்களுக்கு உதவுவது பெற்றோல் ஸ்டேசன்கள் தான். சில்லறைக் கடைகளைவிட பெற்றோல் ஸ்டேஸன்கள் தான் வேலை செய்வதற்கு இலேசு. அகதிகளாய் வரும் தமிழர்களுக்கு லண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களில் இருக்கும் தமிழர்களால் நடத்தப்படும் பெற்றோல் ஸ்டேஸன்களில் வேலை எடுப்பது சுலபம்.

தேவன் அண்ணை நல்லவர். அவர்தான் என்னை வேலையில் சேர்த்தார். அவரும் லண்டனுக்கு அகதியாய் வந்து தான் இப்போ 2 பெற்றோல் ஸ்டேஸன்களுக்கு மனேஜராக இருக்கிறார். "நல்ல உசாரா வேலை செய்ய வேணும்" இதுதான் தேவன் அண்ணை என்னை வேலைக்கெடுத்த நேரம் சொன்னது. சிரிச்சு சிரிச்சு பேசும் நல்ல மனிசன்.

பல நெளிவு சுளிவுகளை எனக்குச் சொல்லித் தந்த இரண்டாவது பெற்றோல் ஸ்டேசனில் வேலை செய்த கெம்பாவை என்னால் மறக்க முடியாது. அவர் ஆப்ரிக்கர். அவருக்கு நிறைய கேள் பிரண்ட் இருக்கு. ஒவ்வொரு நாளும் ஒரு கேள் பிரண்ட் உடன் பப்புக்குப் போய் குடிப்பார். சந்தோசிப்பார். கதை கதையாய் சொல்வார். எப்படிப் பெண்களைப் பிடிப்பது என்று சொல்வார். எல்லோருக்கும் அந்தக் கலை வாய்ப்பதில்லை. கெம்பா வலு கெட்டிக்காரர் உந்த விசயத்தில். ஆனால் கெம்பா கொன்னையாகத்தான் பேசுவார்.

கெம்பா சொல்வார், "கவனம் கள்ள காட்டுகள் கொண்டு வருவினம்" கள்ள கிறடிட் காட்டுகளைப் பிடித்தால் 50 ஸ்ரேலிங் பவுண்ஸ் பாங்கில் இல் இருந்து எடுக்கலாம். கள்ள கிறடிட் காட்டுகளுக்கு உகந்த இடம் பெற்றோல் ஸ்டேஸன்தான். கிறடிட்காட்டை தமிழர்களே கொம்பியூட்டரில் போட்டு செய்து கொண்டு வருவினம். எனக்கு உந்த விசயமே தெரியாது. நான் வேலைக்குச் சேர்ந்து 7 மாதம். இப்போது தான் கைகள் நன்றாக காஸ் மெசினை கையாளத் தெரிந்து கொண்டு

வருகிறது. காலையில் சிகரட் பைக்கட்டுகள் எண்ண வேண்டும். ஒயில் கான்கள், போத்தல்கள் எண்ண வேண்டும். கணக்கு முடித்து அடுத்த கசியரிடம் ஸிப்ட்டை ஒப்படைக்க வேண்டும்.

அகதியாய்ப் போன ஆறு மாசத்துக்கு ஸ்சூரன்ஸ் நம்பர் தர மாட்டார்கள். அகதிக்காசு தருவார்கள். வேலை செய்ய முடியாது. ஆறுமாதம் முடிந்த பின்பு நம்பர் வந்த பின்புதான் வேலை செய்ய முடியும். ஆனால் நம்பர் இல்லாமல் குறைந்த சம்பளத்தில் வேலை செய்யும் இடம் தான் பெற்றோல் ஸ்டேஸன். லண்டன் தவிர்ந்த ஏனைய நாடுகள் இன்சூரன்ஸ் நம்பர் விடயத்தில் மிகவும் கடினம். லண்டனில் பொலிஸ் செக் பண்ணுவதில்லை. குறைவு எனவே நம்பர் இல்லாமல் இல்லாவிடில் வேறை யாருடைய கள்ள நம்பரிலாவது வேலை செய்ய முடியும். எல்லாம் எம்மவர்கள்தானே. நானும் கள்ள நம்பரில் தான்வேலை செய்தேன்.

இரவு 12 மணி இருக்கும் நைட் ஷிப்டில் இருக்கிறேன். புதிதாக வேலை செய்பவர்களுக்கு நைட் ஷிப்ட் தான் கொடுப்பார்கள்.

காரில் நான்கு பேர் வந்தார்கள். கை நிறைய ஸ்ரேலிங் பவுண்ஸுடன் ஒருவர் மற்றவரின் கை நிறைய கிறடிட் காட்டுகள்.

"அண்ணை நீங்கள் புதுசோ?"

தமிழ் என்பது தான் முகத்தில் இருக்கிறதே...

"ஓம்"

"காட் போடுவமோ?" ஏதோ சாமான் போடுவது போல் கேட்கிறார்கள்.

"எனக்குத் தெரியாது உதெல்லாம்" கமரா 24 மணித்தியாலமும் இயங்கி படம் பிடித்துக் கொண்டு இருக்கிறது. எனக்குப் பயம். வந்தவரில் ஒருவர் கள்ளமாக மெசினில் எப்படி கிறடிட் காட்டைப் போட வேண்டும். எப்படி பெற்றோல் கணக்கை ஹோல்ட் பண்ணி வைக்க வேண்டும் என்று விலாவாரியாக சொல்லி விளங்கப்படுத்துகிறார். ஒரு விசா காட்டை என்னிடம் தந்து விட்டார்.

கிறடிட் காட் மோசடி கிரிமினல் குற்றம் பிடித்தால் கம்பி எண்ண வேண்டும் என்று கெம்பா சொன்னது நினைவில் வந்தது.

இண்டைக்கு புதுசுதானே நிறையச் செய்ய வேண்டாம். ஒரு 60 பவுண்ஸ்க்கு செய்யுங்கோ. 30 பவுண்ஸ் உங்களுக்கு 30 பவுண்ஸ் எங்களுக்கு வாழைப்பழத்தை தீத்துமாப் போல் அழகாகச் சொன்னார் வந்தவர்களில் ஒருவர்.

முதல் கிழமை தான் கள்ளக்காட் போட்டுக் கொடுக்காத பெற்றோல் ஸ்டேஸன் கஸியர் ஒருவரை மண்டையிலை பிளந்து போட்டான்கள். பயமாகவும் இருந்தது. எல்லாம் தமிழர்கள்.

இன்று வேலைக்கு வரும்போதே ஒரு தண்டம். 101 பஸ்ஸில் வரும் பொழுது மனோ பார்க்கில் இருந்து ஆமி அன்ட் நேவி துணிக்கடை தாண்டி வந்தவுடன் ஒரு தாயும் மகளும் பஸ்ஸில் ஏறினார்கள். தாய் கண்ணாடி போட்டிருந்தாள். மகள் எனது சீட்டுக்கு முன் சீட்டில் சிரித்து விட்டு உட்கார்ந்தாள். தாய் எனக்கு அருகில் உட்கார்ந்தார். ஈஸ்ட் ஹம் ஸ்டேஸன் பஸ் ஹோல்டில் நான் இறங்கும் பொழுது தாயின் மூக்குக்

கண்ணாடி எனது கைகளால் தட்டுப்பட்டு கீழே விழுந்து விட்டது.

நான் 'சொறி' சொன்னேன். மகள் சன்னதம் ஆடினாள். கண்ணாடி வாங்கித் தா என்றாள்.

பொலிஸைக் கூப்பிடுவேன் என்றாள். இப்படி இழுபறிப்பட்டு எனது பேர்ஸில் இருந்து 40 ஸ்ரேலிங் பவுண்ஸ்களைப் பிடுங்கி விட்டாள். அது மட்டும் தான் பொக்கட்டில் இருந்த பணம்.

கிறடிட் காட்டை எப்படி லாவகமாக செய்கிறார்கள். ஒரு கள்ளமாக கிறடிட் காட் செய்பவர்களிடம் இருபது முப்பது காட் இருக்கும். ஒரு இரவில் இருபது பெற்றோல் ஸ்டேஸன்களாவது கவர் பண்ணுவார்கள். தமிழர்கள் வேலை செய்யும் ஸ்டேஸன்களாகப் பார்த்து அவர்களுக்கு அதைப் பற்றி விளங்கப்படுத்தி ஆசையூட்டி கள்ள வியா-பாரம் செய்கிறார்கள். செய்ய வேண்டியது இவ்வளவுதான். ஐம்பது அறுபது பவுண்ஸ்களுக்கு யாராவது டீசல் காசுக்கு அடித்தால் காசை வாங்கி கல்லாவில் போட்டு விட்டு மெசினில் ஹோல்ட் பண்ணி வைத்து விட்டு பின்னர் ஆட்கள் இல்லாத நேரம், அதனை காசு மெசினுக்கு எடுத்து கிறடிட் காட்டை இழுக்க வேண்டியது தான். காட்டில் இருந்து காசு மெசினுக்கு பணம் பதிவாகிவிடும். ஏற்கனவே வாங்கிப் போட்ட காசை எடுத்து விட வேண்டியது தான். கள்ளக்காட்டில் இருந்து கணக்குச் சரியாகி விடும். காசு அரைவாசி அவருக்கு. அரைவாசி கசியருக்கு.

குளிர் தாங்க முடியவில்லை. மைனஸ் பயங்கரக்குளிர். வெள்ளைக்காரர்களுக்கு கிறிஸ்மஸுக்கு பனிப்பெய்வது வலு புளுகம். அதனை 'வைற்கிறிஸ்மஸ்' என்று அழைத்து குதூகலிப்பார்கள். தாங்க முடியாத குளிருக்கு சிகரட்தான் தஞ்சம். சிறியவர் பெரியவர் என்று சிகரட்டில் மூழ்கி இருப்பர். இரவில் பெற்றோல் ஸ்டேஸன் கதவு மூடித்தான் இருக்கும். சாமான் கொடுக்க எடுக்க ஒரு ஓட்டை இருக்கும். அப்படித்தான் ஒரு நாள் ஒருவர் வந்து சிகரட் கேட்டார். 50 பென்ஸ் குறைவு ஒரு பெட்டிக்கு. தரமுடியாது என்று விட்டேன். அவர் கையில் இருந்த பியர் கானிலுள்ள பியர் முழுவதையும் அந்த ஓட்டையில் ஊற்றிவிட்டார். பிறகு ஒரு ஜொக்கினால் அள்ளி வெளியில் ஊற்றி துடைப்பதற்கு மிகவும் சிரமப்பட்டேன்.

கிராமப் பக்கங்களில் பெற்றோல் ஸ்டேஸன்களில் வேலை செய்வது கொஞ்சம் கஸ்டம். பிளட் வீடுகளில் இருக்கும் காவாலி கடப்பிளிகள் வந்து ஒரே கரைச்சல் தரும். காசு இல்லாமல் சிகரட், சொக்லட் கேட்பார்கள். கொடுக்காவிட்டால் கண்ணாடியில் துப்பி விடுவார்கள். பிறகு அதனைத் துடைக்க வேண்டும்.

ஒரு பெண் வந்து கஸியர் ஓட்டைக்குப் பக்கத்தில் வந்து நிற்கிறாள். "என்ன?" என்று கேட்டேன்.

"பென்ஸன் சிகரட் 10 தா" கொடுத்தேன். தீப்பெட்டி ஒன்று கொடுத்தேன். சிரித்தாள். "இதில் வைத்துப் பத்தாதே இது பெற்றோல் ஸ்டேஸன்."

"எனக்குத் தெரியும்"

"குளிருது இன்று சரியான குளிர் கதவைத் திறக்கிறியா?" அவள் மார்புகளை நசித்துக் காட்டுகிறாள். கொஞ்சம் போதையாக இருப்பாள்

போலத் தெரிகிறது.

"உள்ளே வரவா"

"கதவைத் திறப்பதற்கு எனக்கு அனுமதி இல்லை" லேசாக வெண்மையான அவளது மார்பகத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறாள். கண்ணடிக்கிறாள். வலது கை ஆட்காட்டி விரலை தனது வாயில் வைத்து சூப்பிக் காட்டுகிறாள். குளிர் பேய்க் குளிர்.

இந்த நேரத்தில் இவள் யார்? சில வேளை யாராவது செற் பண்ணிக் கதவைத் திறக்கச் செய்து கொள்ளையடிக்க வருகிறார்களோ.

நாவால் அவளது சிவந்த உதடுகளை ஈரப்படுத்துகிறாள் என்னைப் பார்த்தபடியே. மனமும் உடலும் காமத்தை விரும்புகின்றன.

ஒரு பெற்றோல் ஸ்டேஸனில் இரண்டு பேர் வந்து அவசரமாக ''மலகூடம் போக வேண்டும். கதவைத் திற'' என்று கசியரைக் கேட்டிருக்கிறார்கள். ஒரு பெண். மற்றது ஆண். பாவப்பட்டு இரவு நேரம் என்று கசியர் திறந்தவுடன் ஒருவர் கதவைப் பிடித்துக் கொண்டு நிற்க, மற்றவர் பிஸ்டலைக் காட்டி பயமுறுத்தி அன்றைய கலக்சன் பன்னிரண்டாயிரம் பவுண்ஸ்களை அள்ளிக் கொண்டு போய்விட்டனர். பயமாய் இருந்தது இரவு நேரம் அவளைப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டேன்.

குளிரிலும் உடம்பு சுட்டது. அவர்கள் தந்து விட்டுப்போன கிறடிட் காட் பொக்கட்டில் கிடக்கிறது. அனேகமான தமிழ் ஆக்கள் பெற்றோல் ஸ்டேஸனால் தான் உழைத்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அதன் முழு சூக்குமமும் எனக்குத் தெரியாது.

பென்ஸ் கார் வீட்டுச் சாமான், எலக்ரோனிக் பொருட்கள், வசதியான வாழ்க்கை என்ற பலருக்கு கிறடிட் காட்டுகள் வசதி வாய்ப்பை வழங்கியிருக்கின்றதாம். ஆனால் பாவி போன இடம் பள்ளமும் திட்டியும் தானே. எனக்கு உது வாலாயப்படவில்லை.

ஒரு முறை முதலாவது பெற்றோல் ஸ்டேஸனில் வேலை செய்யும் பொழுது ஒரு ஆப்பிரிக்க பெண்மணி ஹுாட் உயர்ந்த லொறி ஒன்றை ஓட்டி வந்தாள். பம்பைத் தூக்கி பெற்றோலை 'ஓன்' பண்ணு என்று அடம் பிடித்தாள். இரவில் காசு வாங்கி விட்டுத்தான் பெற்றோல் கொடுக்கும் வழமையைச் சொன்னேன்.

ஆப்பிரிக்கக்காரி என்னைக் கறுப்பன் என்று திட்டினாள். பின்னர் 'பாக்கி' என்றுதிட்டினாள். பாக்கி என்பதுஐரோப்பியர் திட்டுவதற்கென்றே பாவிக்கும் சொல். பொதுவாக இந்தியர், பாகிஸ்தானியர், இலங்கையர் இப்படிச் சொல்லித் திட்டுவார்கள்.

நான் உறுதியாகச் சொன்னேன். பம்பை ஓன் செய்ய மாட்டேன். லிவரைத் தூக்கி பம்பில் ஓங்கி அடித்தாள். நான் எதிர்பார்க்கவில்லை. அந்த உயர்ந்த லொறியில் கொண்டு வந்து கசியர் கூரையை இடித்தாள். நான் எலாமை அழுத்தினேன். பொலிஸ் வந்தது.

கெம்பா ஒரு முறை இரவுநேரம் வேலை செய்யும் போது தனது காதலியையும் கூட்டி வந்திருக்கிறார். காதலியோடு இரவில் வேலை செய்து பார். வலு சோக்காக இருக்கும் என்று கெம்பா சொன்னார்.

அந்தப் பெண் வெளியில் நின்றபடி என்னிடம் கேட்டாள்.

"உன்னோடு செக்ஸ் செய்ய எனக்கு விருப்பமாக இருக்கிறது. உனக்கு என்னோடு செக்ஸ் செய்ய விருப்பமா?"

இல்லை... இல்லவே இல்லை. எனக்கு அந்த மூட் இப்பொழுது இல்லை. அதற்கான வசதியான இடமும் இது இல்லை.

அவள் ஒரு ஏமாற்றத்தோடும், வெறுப்போடும் தோளைக் குலுக்கிவிட்டு வலது பக்கமாக நடந்து போகிறாள். நேரம் இரவு 12.35.

பெற்றோல் ஸ்டேசனுக்கு அருகில் உள் பிளட்டில் இருந்து ஒரு கென்யா நாட்டவர். அவர் எப்பொழுதும் ஒரு பென்ஸ், இரண்டு பென்ஸ், ஐந்து பென்ஸ், பத்து பென்ஸ் சில்லறைகள் தான் கொண்டு வருவார். பிச்சை எடுப்பவர் போல...

பொலு பொலுவென்று கசியர் கவுண்டரில் ஓட்டைக்குள்ளால் சில்லறையைக் கொட்டுகிறார். சில நேரம் எரிச்சல் வரும். ஒவ்வொன்றையும் வேறாக்கி எண்ண வேண்டும். சந்தடி சாக்கில் இருபத்தைந்து பென்ஸ் ஐம்பது பென்ஸ் குறைத்து விடுவார்கள். ஒவ்வொரு பென்ஸும் பெறுமதி. ஒரு பென்ஸ் அதாவது ஒரு சதம் இலங்கையில் 2 ரூபா பெறுமதி.

முதல் முதல் பெற்றோல் ஸ்டேசனுக்கு வேலைக்குப் போகிற பொடியன்களுக்கு எதைக் கண்டாலும் அவா. பெற்றோல் ஸ்டேஸனிலை தின்பண்டங்கள் எல்லாம் இருக்கும். மாஸ், ஸ்னிக்கர், டுவிக்ஸ் போல பல வகை சொக்லேட்டுகள், எல்லா குளிர்பானங்கள், பிஸ்கட் வகைகள் என்று ஒரு மினி சுப்பர் மார்க்கட்டே இருக்கும். அங்கு போய் பார்த்தவுடன் எல்லாவற்றையும் தின்னத்தான் ஆசையாக இருக்கும். இரவு ஸிப்ட் காரருக்கு நல்ல வேட்டை. நல்லா சாப்பிடலாம். நான் இரவு நேர ஸிப்டில் எல்லா சொக்லட்டு வகைகளையும் சாப்பிட்டு, எல்லா பிஸ்கட் வகைகளையும் சாப்பிட்டு அலுத்து விட்டது. இப்பொழுது கூட மாஸ் சொக்லெட்டைப் பார்ப்பதோடு சரி. அவா இல்லாமல் போய் பத்து வருடங்கள் ஆகிவிட்டன. பிறகு இரவு நேர ஸிப்டில் குளிர்பானத்தில் ரெட்புல் மட்டும் விருப்பமாக குடிப்பேன் இப்பொழுதும்.

பெற்றோல் ஸ்டேஸனில் கசியர் வேலை வலு கவனமாகவும் உசாராகவும் இருக்க வேண்டுமென்றே ஏமாற்றுபவர்கள் வருவார்கள்.

கறுப்பு நிறத்தவர்கள் வந்தாலே பயம்தான். ஓ... ஆ... என்று கத்துவார்கள். காலையில் வேலைக்குப் போகும் போது பெற்றோல் அடித்துக் கொண்டு போக வரிசையாக அலுவலர்கள் நிற்பார்கள். பெரிய கியூ வரிசையாக இருக்கும். திடீரென்று ஒரு ஆப்ரிக்கனோ, கென்யனோ சில்லறையைக் கொண்டு வந்து கொட்டிவிட்டு சிகரட், சொக்லட் கேட்டுக் கொண்டிருப்பான். தாங்கமுடியாமல் கோபம் வரும். எரிச்சலை வெளியில் காட்டிக் கொள்ள முடியாது. அவனைச் சமாளிக்க வேண்டும்.

என்னிடம் கிறடிட் காட் தந்தவர்கள் வருகிறார்கள். அவர்கள் தமிழர்கள். ஒவ்வொருவரும் கள்வர்கள். காரை பத்தாம் நம்பர் பம்புக்கு அருகில் நிப்பாட்டி விட்டு லிவரை ஒருவன் தூக்கினான் பெற்றோல் அடிப்பதற்கு. சிவிலில் வந்த பொலிஸ் காரொன்று அவர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டது.

# பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்ட அருமை ஜெயந்தி

அருமை ஜெயந்தி ரிச்சட் பிரித்தானியாவில் இருந்து அகதி அந்தஸ்த்து நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார். வலிப்பு வியாதியுள்ளது அவருக்கு.

அத்தோடு நான்கு மாதக் கர்ப்பிணி, குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் மோசமாகத் தாக்கப்பட்டு எந்தத் தயவு தாட்சண்யமுமின்றி பலவந்தமாக விமானத்தில் ஏற்றி இலங்கைக்கு அனுப்பப்பட்ட அவருடன் இலங்கை குடிவரவு குடியகல்வு அதிகாரிகளும் கடுமையாக நடந்து கொண்டனர்.

(2004-இல் எடுத்த பேட்டி)

"எனக்கு நான்கு மாதம் வயிற்றில் குழந்தை. கணவர் ரிச்சட். லண்டனில் இருக்கிறார். அவருடைய அகதி விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டு விட்டது.

இலங்கை இனப்பிரச்சனையின் காரணமாக லண்டனுக்கு இடம் பெயர்ந்தோம். ரிச்சட்டுக்கு எட்டு வருடமாகியும் சமாதானத்தைக் காரணம் காட்டி அகதி விண்ணப்பத்தை நிராகரித்து விட்டார்கள். நான் அப்பா இறந்த அதிர்ச்சியோடு மயக்கமாகிவிட்டேன். அந்த நாள் தொட்டு வலிப்பு வியாதி இருக்கிறது. திடீர் திடீரென்று வலிப்பு உடனே சத்தியும் வரும். இது கனகாலமாக இருக்கிறது.

அண்மையில் தான் எனது விண்ணப்பத்தை பரிசீலனைக்கு எடுத்தார்கள். எடுத்த உடனேயே நிராகரித்து விட்டார்கள். தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் ஈட்டன் ஹவுசுக்கு இற்கு வந்து கையெழுத்துப் போடும்படி கடிதம் வந்தது. நான் போய் கையெழுத்துப் போட்டேன். மூன்று மாதம் கழிந்து விட்டது. அதற்குப் பிறகு வாரா வாரம் வந்து கையெழுத்துப் போடச் சொன்னார்கள். வாரா வாரம் கையெழுத்துப் போடப் போனேன்.

நவம்பர் மாதம் 15ம் திகதி கையெழுத்துப் போடப்போன எனது கணவர் ரிச்சட்டும் என்னோடு ஈட்டன் ஹவுசுக்கு வந்திருந்தார்.

அன்று ஆட்கள் இல்லாததனால் அவரையும் உள்ளே அனுமதித்தார்கள். அவர் வந்து கையெழுத்துக் கவுண்டருக்கு முன்னால் அமர்ந்திருந்தார்.

நான் பத்திரத்தைக் கொண்டு போய் கவுண்டரில் கொடுக்க, கொம்பியூட்டரைத் தட்டிப் பார்த்த பெண் சொன்னார் கொஞ்சம் இருங்கோ.

அங்கு கவுண்டருக்கு போகும் நேரமெல்லாம் ஒரே பயக்கெடுதிதான். எப்போது என்ன செய்வார்களோ தெரியாது.

கொஞ்ச நேரம் செல்ல ஒரு அலுவலர் வந்தார். உங்களை ரூமுக்கு வரச் சொல்லி ஒரு அலுவலர் அழைக்கிறார் என்றார். நான் அவரின் பின்னால் போனேன். லண்டனில் ஈட்டன் ஹவுஸ் என்பது

அகதிகள் விடயத்தில் ஒரு அச்சமூட்டும் இடம். அனேகமான அகதிகள் அதிலிருந்து தான் நாடு கடத்தப்படுகிறார்கள்.

இடது பக்கமாகவுள்ள பல ரூம்களில் ஒன்றில் வைத்து விசாரிக்கப்பட்டேன்.

"பெயர் என்ன?" சரி பார்த்தார். இன்னொரு படிவத்தில் அந்த அலுவலர்.

"ஊர் என்ன?"

"பிறந்த திகதி"

"நாடு? எல்லாம் சரி"

"இன்னொரு ரூமில் இருங்கோ, கூப்பிடுகிறோம்" இருந்தேன். அதற்கிடையில் கணவனை வெளியில் அனுப்பிவிட்டார்கள். கணவனுக்கும் எனக்குமான தொடர்பு பறிக்கப்பட்டது.

"அண்ணா என்ன இது? ஏன் என்னை ரூமில் வைத்திருக்கிறார்கள் என்று அதிலே நின்ற செக்கியூரிட்டி ஓஃபிஸரைக் கேட்டேன்?"

"தங்கச்சி உங்களுக்குச் சொல்ல வேண்டாம் என்று சொன்னவை உங்களை நாட்டுக்கு அனுப்பப் போகினம்."

அதற்குப் பிறகுதான் எனக்கு சமுசியம் வெளிச்சது. நான் அழ ஆரம்பித்துவிட்டேன். சுவரில் தலையை அடித்து அழுதேன். விம்மி விம்மி அழுதேன். என்னால் துக்கம் தாழ முடியவில்லை.

கேவி கேவி அழுதேன். யாருமே கண்டு கொள்ளவில்லை. யாருமே இரக்கப்படவில்லை.

அலுவலர்கள் இறுக்கமாகவே இருந்தார்கள். எனக்கு வலிப்புக்கு நொவம்பர் 19ம் திகதி டொக்டர் அப்பொயின்ட்மன்ட் என்று சொன்னேன். எதனையும் அவர்கள் கேட்பதாயில்லை.

எனது சட்டத்தரணியோடு கதைக்க தொலைபேசி கேட்டேன். தர மறுத்துவிட்டார்கள். எனது கணவனுக்கு இது விடயமாக மாலை 6.30 இற்குத்தான் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். அவர் உடனடியாக சட்டத்தரணியோடு தொடர்பு கொண்டிருக்கிறார். எனது கேஸ் வேக்கர் யோகரத்தினம் உடனடியாக இயங்கியிருக்கிறார். எனது மெடிக்கல் சேர்டிபிகட் மற்றும் எனது அப்பொயின்ட்மன்ட் லெட்டர் எல்லாம் பக்ஸ் செய்தும் அவர்கள் எந்த மறு மொழியும் செய்யவில்லை.

என்னை அன்று மாலை வட்போட் அகதிகள் தடுப்பு முகாமுக்குக் கொண்டு போனார்கள். அங்கு என்னைப் போல இன்னும் எத்தனையோ பெண்கள் கர்ப்பிணிகளாக இருக்கிறார்கள். திருப்பி அனுப்பப்படுவதற்கு அத்தோடு கனடாவுக்கு போன போது பிடிபட்டு ஒரு தமிழ்ப் பெண்ணை தடுத்து வைத்திருக்கிறார்கள். அவாவும் இன்றோ நாளையோ இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படலாம். பெண்கள் கர்ப்பிணிகள், நோயாளிகள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அன்று காலையில் இருந்து சாப்பிடாமல் இருந்ததனால் எனக்கு திடீரென்று வலிப்பு வந்து விட்டது. நான் ஒரு செக்கியூரிட்டி மேல் விழுந்தது. அவர் மேல் வாந்தி எடுத்தது எதுவுமே எனக்குத் தெரியாது.

நீண்ட நேரத்தின் பின்பு விழித்துப் பார்த்தேன். ஆடையெல்லாம்

சத்தி. ஆனால் மாற்றுவதற்குத் துணி கூட இல்லை. கவனிக்கவே இல்லை வட்போட் தடுப்பு முகாமில். அதில் அகதிகளை ஏதோ கிரிமினல்கள் போல நடத்துகிறார்கள்.

வியாழக்கிழமை 18ம் திகதி காலை வரை அங்கே தான் வைத்திருந்தார்கள். எனக்கு சரியான வருத்தம். அன்று காலை 9 மணிக்கு ஸ்ரீலங்கள் ஏயா வேய்ஸ் இல் என்னை ஏற்றுவதாக இருந்தது. நான் அழுது குழறியதால் அந்த விமானத்தின் கப்டன் என்னை விமானத்தில் ஏற்றவில்லை.

இதற்கிடையில் இன்னுமொரு விசயத்தைச் சொல்ல வேண்டும். என்னை இடையில் சைன் பண்ணப் போன போது சொன்னார்கள்.

போய் இலங்கை தூதுவராலயத்தில் பாஸ்போட் எடுக்கச் சொல்லி... நான் என்னத்துக்கு எதற்கென்று தெரியாமல் பாஸ்போட் எடுத்தேன்.

அது எமர்ஜன்ஸி பாஸ்போட். அதனை தூதுவராலயம் ஈட்டன் ஹவுசுக்கு அனுப்பி விட்டது. அவர்கள் அதனை வைத்திருந்து என்னைத் திருப்பி அனுப்புவதற்க தயாராகி விட்டார்கள்.

வட்போட் இல் இமிகிறேசன் அதிகாரிகளோடு பொலிஸாரும் இணைந்துதான் அகதிகள் திருப்பி அனுப்பும் விடயத்தில் செயல்படுகிறார்கள்.

நான் கணவர் இங்கு இருக்கிறார். என்னால் போக முடியாது என்று சொல்லி அழ, அவர்கள் எதனையும் சட்டை செய்யாமல் எனக்குச் சொன்னார்கள், அடம்பிடித்தால் கைவிலங்கு போட்டு விமானத்தில் அனுப்புவோம் என்று.

நான் கொஞ்சம் அடம் பிடித்தேன். எனது கைகளை திருகி என்னை அடித்தார்கள். பொலிஸில் ஒரு பெண் என்னிடம் மிக மோசமாக நடந்து கொண்டார். என்னைப் பிடித்து தள்ளினார். வியாழன் மாலை பிரிட்டிஸ் எயார் வேய்ஸில் என்னை அழைத்துச் செல்வதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்தார்கள். நான் விமானத்தில் ஏறமுடியாது என்றேன். மனித உரிமைகளை மதிக்கின்ற நாடு இங்கிலாந்து என்று சொல்வார்கள். ஒரு நோயாளியான என் உணர்வுகள் மதிக்கப்படவில்லை.

எனது கணவரோடு மட்டும் மூன்று முறை பேசுவதற்கு அனுமதித்தார்கள். நான் அழுதது மட்டும் தான் - பேசவே இல்லை. இவ்வளவு சிரமங்களுக்கும் வருத்தத்திற்கும் மத்தியில் வியாழக்கிழமை இரவு என்னை சிங்கப்பூர் வரும் விமானத்தில் ஏற்றி சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு கொண்டு வந்தார்கள். இலங்கை குடிவரவு அதிகாரிகள் என்னிடம் மனம் நோகும்படி நடந்து கொண்டார்கள். என்னை சிறையில் அடைக்கப் போவதாகவும் மிரட்டினார்கள். விடுதலைப் புலிகளோடு தொடர்பிருக்கிறதா என்றும் கேட்டார்கள். சுமார் ஆறு மணித்தியாலங்கள் கட்டு நாயக்க விமான நிலையத்தில் இருத்தி வைத்திருந்தார்கள். எனது உறவினர்கள் யாராவது வந்து வெளியில் என்னைக் கூட்டிப் போவதற்கு வந்திருக்கிறார்களா என்று என்னைப் பார்க்கவும் விட வில்லை. சில வேளை காசுக்காகத்தான் என்னைத் தடுத்து வைத்தார்களோ தெரியாது. முதல் ஒரு முறை இலங்கைக்கு திருப்பிய அனுப்பிய ஒருவரிடமிருந்து 100 பவுண்ஸ்கள் பிரித்தானியக் காசு வாங்கிய பின்புதான் விட்டார்களாம் கேள்விப்பட்ட நான், எனவே

என்னிடமிருந்த 35 ஸ்ரேலிங் பவுண் மட்டுமேதான்.

அவ்வளவு பணத்தோடுதான் திரும்பி வந்தேன். அதனை எடுத்து கையில் வைத்திருந்தேன். காசு கேட்டால் குடுப்போம் என்று. ஆனால் ஒரு உயரதிகாரி வந்து ஆறு மணித் தியாலங்களின் பின்னர் போகச் சொன்னார்.

எமர்ஜன்ஸி பாஸ்போட்தாளில் சீல் பண்ணி என்னை வெளியில் அனுப்பினார்கள்.

இப்பொழுது நான் இங்கு வந்துவிட்டேன். கணவர் அங்கே லண்டனில். கணவர் என்னை எடுப்பதற்கு பதினைந்து லட்சம் கட்டி ஏஜன்சிக்குள்ளால் எடுத்தவர். இப்ப என்ன செய்யுறது? எப்படிக் கடனை அடைப்பது? (அழுதார் விம்மி விம்மி) என்னோடு சேர்ந்து கனடாவில் இருந்தும் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் இரண்டு பேர் வந்திருந்தார்கள்.

(பேட்டி முடிவுற்றது)

இலங்கையில் சமாதானம் தொடர்பான தோற்றப்பாடு ஒன்று இருக்கிறதே தவிர இன்னும் சமாதானம் வந்து விடவில்லை. இலங்கையில் இருப்பது யுத்த ஓய்வே தவிர சமாதானமல்ல. இந்த யுத்த ஓய்வை காரணமாக்கி கனடா, இங்கிலாந்து, ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள். நோர்வே (நோர்வேயில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட இரண்டு பேரை யாழ்ப்பாணம் பாசையூரில் சந்தித்தேன்) உள்ளிட்ட ஸ்கண்டிநேவிய நாடுகள் அரசியல் அகதி அந்தஸ்த்து கோரிய இலங்கை அகதிகளின் விண்ணப்பங்களை நிராகரித்து திருப்பி அனுப்பி வருவது அதிகரித்திருக்கிறது. திரும்பி வரும் அகதிகளுக்கான நிவாரண அமைப்புகள் எதுவுமே செயற்படுவதில்லை.

அண்மையில் ஜெர்மனியில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட குடும்பங்களின் சந்திப்பு ஒன்று கொழும்பில் நடைபெற்றது. 14 வயதுடைய பெண்பிள்ளை சொன்னார், "எனக்கு வவுனியாவில் பாடசாலைக்குப் போக முடியவில்லை. டச் மட்டும் தான் எனக்குத் தெரியும். அதுதான் நான் படித்தது. இங்குள்ள மாணவர்கள் என்னைச் சேர்க்கிறார்களில்லை. எனக்குத் தமிழ் தெரியாது. என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. விரக்தியாக இருக்கிறது."

# அடியாத மாடு படியாது

வத்தளையில் ஒரு நண்பரின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். முஸ்லிம் நண்பர், தூரத்து உறவினரும் கூட. அவருக்கு மூன்று பெண்கள், நான்கு ஆண்கள். ஏழு பிள்ளைகள். கருத்தடை மீது வெறுப்புக் கொண்ட அவர் இஸ்லாம் மார்க்க விடயங்களில் அதீத பற்றுக் கொண்டவர்.

ஏழு பிள்ளைகளில் மூத்தவள் பெண்பிள்ளை. அவளுக்கு வயது பதினாறு. கடைசி பையன் அவனுக்கு வயது மூன்று. மூத்த பெண்பிள்ளை நன்றாகப் படிப்பாள். ஓ.எல். பரீட்சையில் நல்ல மார்க் வாங்கி, இப்போது ஏ.எல். செய்கிறாள். சயன்ஸ் படிக்க முடியும். ஆனால் பயந்து போகப்போக பாடங்கள் கஸ்டமாகுமோ எனும் அச்சத்தில் ஆர்ட்ஸ் படிக்கிறாள்.

நான் சென்றது காலை வேளை. அவளது அம்மா வாய் ஓயாமல் அவளைத் திட்டிக் கொண்டிருப்பதைனைக் கண்டு மிகவும் சங்கடமாக இருந்தது. வளர்ந்த பிள்ளையைத் திட்டுவது ஒன்று. அடுத்தது அந்தப் பிள்ளை பாடசாலைக்கு வெளிக்கிட்டுக் கொண்டிருக்கிறது. வீட்டில் அப்பா படிக்கச் சொல்லி அன்பாக இருக்கிறார். ஆனால் அம்மா, இப்ப என்னத்துக்கு பள்ளிக்கூடம் போறாய். நீ என்ன படிச்சு செய்யப் போறாய். வீட்டில் எத்தினை வேலை கிடக்கு. சயன்ஸ் படிச்சாலும் பரவாயில்லை. ஆர்ட்ஸ் படிக்கிறா. என்ன செய்யப் போறாய். அப்பா தொடர்ந்து படிக்கவும் விடுவாரே. ஆராவது ஒருத்தனைக் கட்டிக் கொண்டு வீட்டிலே இருக்கப் போறாய். இப்ப என்ன அவசரம் ஸ்கூலுக்கு? வீட்டு வேலையைச் செய் என்று நச்சரித்தா. கண்கலங்கியபடி பிள்ளை பாடசாலைக்குச் சென்றது.

இலங்கையில்பிள்ளைகள் சிறுவர்கள் தொடர்பான அக்கறையின்மை பற்றி செய்திகள் அடிக்கடி வந்த வண்ணமுள்ளன. பிள்ளைகளை அடிப்பது துன்புறுத்துவது, அவர்கள் மீது அதிகமான சுமைகளைச் சுமத்துவது, வேலைக்கமர்த்தி அதிகமான வேலை கொள்ளல் என்று பிள்ளைகள் மீதான அதீத அழுத்தங்கள் கொடுக்கப்படுகிறன.

வீட்டில் அதிகமான பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் தமது மூத்த பிள்ளைகளிடம் சக்திக்கு மீறிய வேலை வாங்குகின்றனர்.

அது இலங்கையில் ஒரு பெரிய பிரச்சனையாகும். தினம் பெற்றோர் திட்டும் அடிக்கும் பிள்ளைகள் ஏராளம்.

அவர்களின் மனோநிலை குழம்பி எதற்கெடுத்தாலும் பயம் கொள்ளும் ஒரு மனோ உணர்வைத்தான் அவர்களால் வெளிப்படுத்த முடிகிறது.

திருகோணமலையில் ஒரு குடும்பத்தைப் பார்த்திருக்கிறேன். நான்கு பிள்ளைகள் அவர்களுக்கு பிள்ளைகள் தாயின் குரல் கேட்டால் போதும் மருண்டு போய் விடுவார்கள். படிப்பிலும் மிகவும் மந்தமாகவே இருக்கிறார்கள். திடீரென்று இரவில் எழும்பி வீரிட்டு கத்துவார்கள். "அம்மா அடிக்காதேங்கோ" என்று கதறுவார்கள் கனவில். அவர்களின் மனநிலை பிறழ்ந்து போய் இருக்கிறது. இவர்களின் எதிர்காலத்தில் மனக்குழப்பம் உடைய நோயாளர்களாகவே வளருவார்கள்.

மிகவும் நுண்ணிய சென்சிட்டிவான மூளைப் பிசிர்கள் மிக நுண்ணிய நரம்புகளின் அதிர்வுகளினூடு இந்தப் பயம், அச்சம் தேக்கமடையும் போது எதிர்கால சந்ததியினரின் நிலைமை என்னவாகும் என்ற கவலை வருகிறது.

அன்புடனான பரிவு எம்மிடையேயுள்ள அதிகமான பெற்றோரிடம் காணப்படுவதில்லை. இந்தப் பரிவை அல்லது அன்பை ஒரு தெளிவை ஐரோப்பியர்களிடம் கண்டிருக்கிறேன்.

எமது பெற்றோர்கள் தாம் வாழ்ந்த சூழல் அல்லது விதம் பற்றிய அறிவு தொடர்பான எந்தவித தெளிவுமில்லாமல் இருக்கிறார்கள். ஒருவர் சொன்னார், "என்ரை அப்பா என்னை மாமரத்தில் கட்டிப்போட்டு அடிக்கிறவர்." இது எவ்வளவு பெரிய கொடுமை. தனது பிள்ளையை மரத்தில் கயிற்றால் கட்டி வைத்து அடிக்கும் தன்மையில் அந்த தந்தையின் கொடூர மனநிலையை உணர முடிகிறது.

இன்னுமொரு காரணத்தை நான் தேடிய போது கண்டேன். அந்தத் தாய் மாமரத்தில் கட்டிப் போட்டு அடிக்கும் தந்தை ஆகியோர் அவர்களது சிறிய பிராயத்தில் அவர்களின் தந்தையாலோ தாயாலோ அதிகமாக அடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

'அடியாத மாடு படியாது' என்றொரு பழமொழியை தாம் பிரம்பு பாவிப்பதற்கு அனுமதியாக்கிக் கொண்டிருக்கும் பெற்றோரைக் கண்டிருக்கிறேன். பாடசாலையில் ஆசிரியரிடம் பிள்ளையை அரிவரி பாடத்துக்கு அனுப்பும்போதே வாத்தியாரை, "நல்லா அடிச்சுப் படிப்பியுங்கோ" என்று சொல்லும் பெற்றோர் தான் அதிகம்.

நான் ஐந்தாம்வகுப்புப்படித்துக்கொண்டிருந்தேன். தில்லையம்பலம் வாத்தியார் என்றால் அடி வாத்தியார் என்று தான் பிரபல்யம். சுத்தி வர கிராமங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அவர் மாற்றலாகி வரக்கூடாது என்ற பிள்ளைகள் நேர்ச்சை செய்வார்கள். எடுத்ததெற்கெல்லாம் அடி, கேட்டுக் கேள்வியில்லை. அவரிடம் என்ன பாடம் என்றாலும் மாணவர்கள் பயம். வகுப்பில் அடிப்பார். ஆனால் எல்லோருக்கும் மார்க்ஸ் அள்ளிப் போடுவார்.

ஐந்தாம் வகுப்பு நான். ஒரு கடிதம் எழுதிக்கொண்டு வரச் சொல்லி வீட்டுப்பாடம். அதில் ஒரு வரி வரும் ஐம்பது ரூபாய் என்று அடைப்புக் குறிக்குள் ஐம்பது ரூபாய்க்குப் பக்கத்தில் (50.00) என்று போட்டு விட்டேன் ஏதோ ஒரு நினைப்பில். ஆனால் வீட்டுப்பாடம் நீ செய்யுறதோ, கொம்மா செய்யுறதோ என்று கேட்டு அடி. கன்னத்தில் தான் அடிப்பார். கன்னம் வீங்கி விட்டது. 1975-ம் ஆண்டு நடந்தது இன்னும் நினைவில் நிற்கிறது.

தில்லையம்பலம் வாத்தியாரின் உறவுக்காரப் பெண்மணி ஒரு-வரை லண்டனில் துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் ஒரு நூல் வெளியீட்டு விழாவில் சந்தித்த போது அவரது அடி பற்றியும் கதைத்தோம்.

அவர் அடித்தபடியால்தான் நீர் இப்படி முன்னேறி இருக்கிறீர் என்றா. இப்படியான மனோநிலையில் இருப்பவர்கள் தான் ஏராளம். எமது பெற்றோருக்கு பிள்ளைகள் வளர்ப்பது, அவர்களைப் பராமரிப்பது, பிள்ளைகளின் நடத்தைகள் தொடர்பான அக்கறை செலுத்தப்படுவது

மிகவும் முக்கியம் என்பது தொடர்பான பயிற்சிகளும் பட்டறைகளும் விளக்கக் கூட்டங்களும் வைப்பது மிகவும் அவசியம்.

அண்மையில் கொழும்பில் இடம் பெற்ற சிறுவர் நலன் தொடர்பான கருத்தரங்கு ஒன்றிற்கு சென்றிருந்தேன். அதில் இலங்கையில் சிறுவர்கள் தொடர்பான அக்கறையுடைய உரைகள் அமைந்திருந்தன. ஆனால் குளிரூட்டப்பட்ட அறைகளை விடுத்து கிராமங்கள், குடிசைகள், கடற்கரை ஓரங்களில் உள்ள சேரிகள் பக்கம் இந்த அக்கறைகள் செல்ல வேண்டும் என்பதனை அக்கணம் உணர்ந்தேன்.

இலங்கையில் சிறுவர்கள் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு செக்ஸ் தேவைகளுக்காக விற்கப்படுகிறார்கள். சிறுவர்களைக் கொண்டு கஞ்சா மற்றும் ஹெரோயின் போன்ற போதைப் பொருட்களைக் கடத்துகிறார்கள்.

மாபியா அமைப்பினருக்கு பரிசோதனைக்கு ஆளாகதவர்களாக சிறுவர்கள் இருப்பதனால் கடத்தல்களுக்கு லாவகமாக பயன்படுத்த வசதியாயிருக்கிறது. இன்னும் சிறுவர்களைக் கொண்டு பிச்சையெடுக்க வைத்து அவர்கள் மூலமாக பெருந்தொகை பணத்தை சம்பாதிக்கும் நபர்களும் கொழும்பில் அடையாளங் காணப்பட்டிருக்கின்றனர்.

உல்லாசப் பிரயாணிகள் விடயத்தில் இலங்கை ஒரு சிறுவர்களின் சொர்க்கம் என்றே வர்ணிக்கப்பட்டு அவர்களை கவர்ந்தழைக்கிறார்கள். தெஹிவளை, கல்கிசை, நீர்கொழும்பு, திருகோணமலை எங்கணும் இந்த சிறுவர் மீதான, துஸ்பிரயோகத்தைக் காண முடிகிறது. அது தொடர்பான முறைபாடுகளும் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

உலக நாடுகளில் சிறுவர் தொடர்பான அக்கறை வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. யுனிசெப் இன் சிறுவர் மீதான கணிப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. இலங்கையில் சிறுவர்கள் மீதான வன் கொடுமைக்கு எதிராக யுனிசெப் இன் வேலைத் திட்டங்களை அமைத்திருப்பது பற்றிக் கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது.

பல உல்லாசப் பிரயாணிகள் இரண்டு மூன்று முறை இலங்கைக்கு வந்ததன் பின்பு இங்கு கிராமங்களில் உள்ள பெற்றோரை ஏஜண்டுகள் மூலமாக பழக்கம் பிடித்து அவர்களின் பிள்ளைகளை பாலியல் தேவைகளுக்காக பயன்படுத்துவது அறிய வருகிறது. பிள்ளைகளுக்கு விலையாக பெற்றோருக்கு ஒரு மோட்டார் சைக்கிளோ அல்லது ஒரு சிறிய வீடோ அல்லது பணமோ கொடுக்கப்படுகிறது. ஏழ்மையை உல்லாச பிரயாணிகள் வசமாக பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்த விடயத்தில் ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர்.

உல்லாசப் பிரயாணியாக வரும் வெளிநாட்டவர்கள் குறிப்பாக ஐரோப்பியர்கள், அமெரிக்கர்கள் பதின்மூன்றில் இருந்து பதினைந்து பதினாறுவயதுடைய பருவமடைந்த அடையாத பெண்பிள்ளைகளையும் ஆண் பிள்ளைகளையும் விரும்புகின்றனர் என்று கல்கிசையில் சந்தித்த உல்லாசப் பிரயாணிகளை வழிகாட்டும் ஒருவர் சொன்னார். வழிகாட்டிகளே பிள்ளைகளை விநியோகிக்கும் ஏஜண்டுகளாகவும் இருக்கிறார்கள். உல்லாசப் பிரயாணிகளில் சிலர் இதற்காகவே மட்டும்

வருவதாக அவர் சொன்னார்.

சிறுவர்கள் தினம் உலகம் பூராவும் ஒக்டோபர் முதலாம் திகதி கொண்டாடப்பட்டது. சிறுவர்கள் தொடர்பான கரிசனை வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் ஒருதந்தை தன் எட்டு வயது மகளை பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிய செய்தி என்னைக் கலவரப்படுத்தியது. அன்றைய பத்திரிக்கைகளில் இரண்டு செய்திகள் சிறுவர்களை வன்கொடுமைக்கு உள்ளாக்கியது தொடர்பாக இருந்தது.

இலங்கையில் சிறுவர்களை ஓரினச் சேர்க்கையாளர்கள் பயன்படுத்துவது என்பது காலம் காலமாக நடந்து வரும் ஒரு செய்தி. இது சிங்கள, தமிழ், முஸ்லிம் என்றில்லாமல் எல்லா இனங்களிலும் பரவிக் காணப்படுகின்ற குறைபாடாகும். இது தங்களை அறியாமலேயே சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகிறார்கள். கிராமங்களில் பாலியல் போன்ற தேவைகள் மீது சிறுவர்கள் பயன்படுத்தப்படுவது வெளியில் தெரியாமல் நடக்கும் ஒரு சங்கதி.

பாலியல் துஷ்பிரயோகம், குறைந்த வயதினரை பணிக்கமர்த்தி வதைத்தல், சுரண்டுதல் மீது காரசாரமான விவாதங்கள் முன் வைக்கப்பட்டு இப்படியான நடத்தைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கும்படி கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. நீதி மன்றங்கள், தண்டனை வழங்குவது, சீர்திருத்தத்தை சமூகத்தில் வழங்கும் என்ற நம்பிக்கை இழக்கப்பட்டு விட்டது என ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டார். ஆனால் தண்டனைகளுக்கான பிரதி-பலன் சமூகத்தில் இல்லாமல் இல்லை.

இளம் பிள்ளைகள் தொடர்பான கவனத்தை பெற்றோர்கள் அவர்கள் மீது செலுத்துவது மிகவும் முக்கியமானதாகும். உறவினர்கள் என்றபடிக்கு பெரிய பெண்பிள்ளைகளை ஆண்களோடு புழங்கும் விடயத்தில் கண்காணிப்புடன் இருக்க வேண்டும். தனிமையான பிள்ளைகளின் நேரங்களை எப்பொழுதும் அவதானிக்க வேண்டும்.

பாடசாலைகளிலும் துஷ்பிரயோகங்கள் நிகழ்கின்றன. இது தொடர்பாக பிள்ளைகளுக்கு அவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் விளங்கப்படுத்த வேண்டும். இது பெற்றோரின் கவனிப்பில் தான் நடைமுறையில் சாத்தியமாகும்.

எமது பிள்ளைகள் மீதான கரிசனை எமக்கு வர வேண்டும். அதுதான் உண்மையுங்கூட.

# புளியங்குளம்

அந்தப் புளியமரத்தை இப்பொழுது நினைத்தாலும் பயம். கன்னங்கரேலென்ற அடி. அடி வேர்ப்பகுதி உறுதியாய், மிக உறுதியாய் திரண்டு பருத்துப் போய் இருக்கும்.

அதன் மேல் வைரவர் வீற்றிருந்தார். எங்கே? எப்பொழுது என்றில்லாமல் வைரவர் கறுப்பாய் ஆ... வென்ற வாயுடைய நாயோடு வீற்றிருந்தார். தெய்வானை ஆச்சியை வைரவர் அடிச்சுப் போட்டார். புளிய மரத்துக்கு கீழே ஆச்சி செத்துக் கிடந்தா.

பத்தாம் வகுப்பு படிக்கும் போது சட்டி உடைச்ச ரீச்சர் சொன்ன புளியமரத்துக்குக் கீழே பகலில் இருக்கக் கூடாது. அது கரியமில வாயுவை வெளியாக்கும் என ரீச்சர் சொன்னது எங்களுக்கு விளங்கவில்லை. சுகாதார ரீச்சர் அப்படித்தான் சொல்லுவா. ஏனென்றால் அவ படிச்சது அப்படி.

ஒரு நாள் சுகாதார ரீச்சர் ஹோம் சயன்ஸ் பாடம் எடுக்கும் போது சமைக்கும் போது மண் சட்டி ஒன்று உடைந்து போய் விட்டது. அதற்குப் பிறகு அவவுக்குச் சட்டி உடைச்ச ரீச்சர் என்றுதான் பெயர்.

நல்ல மனிசி. எங்களை ஒரு நாளும் அடித்தது கிடையாது.

புளியங்குளம் அருமையானது. அதில் தண்ணீர் நிறைந்து நிற்கும்போது பார்ப்பதற்கு வலு சோக்காக இருக்கும். மானுருவிப் பக்கத்து வான் பாயும், தண்ணீர் வானிற்கு மேலால் போட்டு வைக்கும் மண் மூடைகளையும் மேவி பாயும். அதில் ஜப்பான், ஒட்டி, கௌுத்தி, விரால் மீன் குஞ்சுகள் துள்ளிப்பாயும்.

மானுருவி, கூழாமுறிப்பெல்லாம் எங்கள் குளத்துத் தண்ணீர் பாய்ந்து செழிப்பாக்கும். குளக்கட்டால் நடப்பது ஒரு தனி அழகு. கையை ஸ்ரேறிங் மாதிரி பாவித்து ட்றக்டர் ஓடுவதில் யார் முந்துவது என்ற போட்டி எங்களுக்குள்ளே நடக்கும். மணிவண்ணன், சேகர், புஷ்பராஜன், வவா, வவி, பிரேமா, நான் என்று ஓடுவோம். சில நேரம் நான் முந்துவன். சில நேரம் புஷ்பராஜன்.

புளியமரத்துக்குக் கீழால் ஓடுவதற்கு பயம். வைரவர் அடித்துவிட்டாரென்றால் என்ன செய்வது. அம்மாவுக்கு நான் ஒரேயொரு பிள்ளை ஆம்பிளைப்பிள்ளை.

புளியமரம் ஒரு காலத்துக்கு பூப்பூவாய் பூத்திருக்கும். டிரைவர் மணியண்ணை முத்துமுத்தான பூவை ஆய்ஞ்சு கொண்டு வந்து மர உரலில் போட்டு அளவா உப்புப் போட்டு புளியம்பூவை துவையலாக்கித் தருவார். ச்... சா... இப்பொழுதும் வாயெல்லாம் நீர் ஊறுகிறது.

புளியங்குளத்தினுடைய குளக்கட்டில் புளியமரம் இருப்பது ஒரு இராசபாட்டைதான். புளியமரம் நிற்பதனால்தான் புளியங்குளம் என்னும் காரணப் பெயர் வந்திருக்கும். எங்களது ஊரில் புளிய மரங்கள் நிறைய.

சந்தியில் ஒரு பெரிய புளியமரம், குளக்கட்டில், கணேசன் வீட்டடியில், பொன்னம்பலம் வீட்டடியில், கனகர் வீட்டடியில் என்று

பார்க்குமிடமெல்லாம் புளியமரம்.

கூழா மரத்துக்கும் பெயர் போன இடம் எங்கள் ஊர். சந்தி மரத்தில் கொத்துக் கொத்தாய் கூழாம் பழம் காய்க்கும். ருசி தனி ருசி. கூழாம் பழம் சாப்பிட்டால்தான் அதன் ருசியை அனுபவிக்க முடியும். சொல்வதென்றால் இனிப்பும் புளிப்பும் துவர்ப்பும் கலந்த ஒரு அமிர்தம்.

பள்ளிக்கூடக் காலங்களில் கூழாம் பழம், வீரப்பழம், காரப்பழம் என்று தெருவில் உள்ள இரண்டு மைல் நீளத்துக்கு பழங்களாகத் தின்று கொண்டே வருவோம்.

பாலப்பழம், எங்கள் ஊரில் இரண்டே இரண்டு பாலைமரம் தான் நின்றது. ஒன்று குருவிச்சை ஆற்று மதகடியில், மற்றது முதலைப்பால மதகடியில்... ஆனால் இரண்டுமே எப்பொழுதும் காய்த்த சரித்திரமே கிடையாது. அதிலும் குருவிச்சை ஆற்று மதகடியில் நின்ற பால மரத்தினில் யாரோ ஒருத்தர் கோடரியால் சூலம் கீறி விட, அது பட்டை கிளம்பி ஒரு பெரிய சூலமாகிவிட்டது.

பாடசாலைக் காலங்களில் குருவிச்சை ஆற்று மதகடயில் தனியப் போவதற்கு குலைப்பயம். இப்பவும் நினைக்கும்படி பயம். தனிய அல்லது மையல் இருட்டில் நிற்கவே மாட்டம். நடக்கவும் மாட்டம் ஓட்டம்தான். வேர்க்க விறுவிறுக்க. அப்படிச் சரியான பயம்.

பெரிய அலையுமில்லாமல் ஒரு தழம்பல் லயக் கட்டோடு குளக்கட்டில் முட்டி முட்டி எழும் தண்ணீரைப் பார்க்க ஆசையாகத்தான் இருக்கும். அது ஒரு சரித்திரம்.

புளியங்குளம் யாரை யாரை விழுங்கியதோ, ஆனால் குமாரண்ணையைத் தாட்ட பின்பு, எனக்கு அதன் மீது வெறுப்பு.

ஏன் அப்படிச் செய்தாய்? ஏன் அப்படிச் செய்தாய் என்று நான் குளக்கட்டில் நின்று கூவிக் கூவிக் கேட்டேன். ஆனால் அது பதில் சொல்லாமல் அமசடக்கனாய் கிடந்தது. குளம் நன்மை மட்டும்தான் செய்யும். அதுதான் எங்கள் வரம். அதுதான் எங்கள் சீவியம். அது எங்கள் நண்பன். அது எங்கள் அன்னை.

அதனைப் பார்க்க பார்க்க ஒரு வெறுப்பு மேலிட இதுதான் காரணம். ஒரு பிரயாசைக்காரனை, ஒரு உழைப்பாளியை, ஒரு நல்ல மிக நல்ல மனிசனை, யாரோடும் சண்டைக்குப் போகாத சிறந்தவனைக் கொன்றது புளியங்குளம். குமாரண்ணைக்கு இரண்டு சோடி உழவு மாடுகள். இழுப்பு வந்து படுக்கையில் தகப்பன் செல்லையாண்ணை படுத்திருந்தாலும், வருத்தம் வந்து அவர் வாச்சர் வேலைக்குப் போகாமல் விட்டாலும் வீட்டில் உள்ள மாமரத்துக்குக் கீழே கண்ணாடி வீரியன் கொத்தி அண்ணன் செல்வராசண்ணை செத்தாப் பிறகும் குமாரண்ணை ஏழு பேரைக் குடும்பத்தைக் கண் போல காத்து வந்த நடுவில்.

ஒன்பது பிள்ளையளுக்கு நடுவில் பிறந்தவர் அவர். சோம்பிக் கிடந்ததை நான் பார்த்ததே இல்லை. நெல்லுக் காலத்தில் நெல்லு கொத்துக் கொத்தாய் செழித்து நிற்கும்.

ஒரு போகம் நெல்லு. பிறகு மிளகாய், கச்சான் என்று அவரின் தறை செழித்தே இருக்கும். குமாரண்ணையின் தறைக்கும் புளியங்குளம் தான் தண்ணியீந்தது.

எனது காணி முழுக்க வயல்வெளி எல்லாம் வேலியோரமாய் பனங்கொட்டை நட்டேன். 10 அடிக்கொரு பனங்கொட்டை. 20 வருடத்துக்கு முந்தி. முதல் சின்னக்காலத்தில் சேட் குலையாமல் புதுச் சேட்டினுள் வரும் ஹாட்போட் மட்டை, பொலித்தீன் பை, டொபித்தாள், பேப்பர், சவர்க்கார உறை, சிக்னல் முடிஞ்ச ரியூப் போல்பெயின்ட் பேனா இவையெல்லாம் சேகரித்து வைத்து அம்மாவிடம் ஏச்சு வாங்குவேன்.

"உதென்ன கோதாரிக்குச் சேகரிக்கிறாய். குப்பையளைக் கொண்டு வந்து வீட்டுக்குள்ளை குவிக்கிறான்."

இந்த அம்மாவின் ஏச்சு சகஜம். சேர்த்த மில்க் வைற் சோப் உறைகளுக்கு கனகராசர் பனங்கொட்டைகளை ஊர் ஊராய்க் கொண்டு வந்து கொடுத்தார்.

கற்ப தருக்களை வன்னிப்பக்கம் பரவச் செய்ததிலை கனகராசர் முக்கியமானவர். நல்ல மனிசன்.

குமாரண்ணை நட்ட பனை மரங்களெல்லாம் நல்ல செழிப்பா வளர்ந்து நிற்கின்றன. குமாரண்ணை செத்துப் போனார்.

செல்லையாண்ணை வயல் வரம்பால் நடந்து போகிறார். மாங்குளம்-முல்லைத் தீவு றோட்டில் வலது பக்கமும் இடது பக்கமும் பார்க்க அழகாக இருக்கும் நெற்கதிர்கள். புரட்டாதி, கார்த்திகை, மார்கழி மாதங்கள் பெரும் போகக் காலங்கள். தைப்பூசத்துக்கு வயலில் புது நெல்லுப் பிடுங்கி உரலில் போட்டுக் குத்தி புது அரிசிச் சோறு சமைத்து அம்மா தருவா. ஊரில் உள்ள எல்லோரும் அப்படித்தான். புது நெல்லு அரிசிதான் அன்று சாப்பாடு. மரக்கறி காச்சி வலு சந்தோசமாக இருக்கும்.

செல்லையாயண்ணையின் வயலுக்குள் இருக்கும் குளக்கட்டு விநாயகருக்கு பொங்கல் நிறைமணி போடுவார்கள். நிறைமணி என்றால் எல்லோருக்கும் குதூகலம்தான். புக்கை, வாழைப்பழம், மோதகம், வடை... பாய் விரித்து அரிசிமா பிசைந்து மோதகம் சுட எல்லாப் பெண்களும் கூடி விடுவார்கள். உதவி ஒத்தாசைக்கு.

பால்புக்கை பொங்கி, மணி அடித்து, கற்பூரம் காட்டி விக்கினமில்லாமல் மழை தண்ணீரை அளவோடு தந்தவர் என்று நம்பப்படும் வயல் பிள்ளையாருக்கு குளிர்த்தி, குளக்கட்டோடு இருக்கிறார் விநாயகர். சீமெந்தால் கட்டி கல்லில் செதுக்கிய கடவுள். கல்லையும் கடவுளாய் கண்டான் தமிழன்.

குளக்கட்டு விநாயகருக்கு குளிர்த்தி என்றால் எங்களுக்கு வலு புழுகம், புக்கை, வடை, வாழைப்பழம், கற்கண்டு, மோதகம் என்ற வயிறு முட்ட முட்ட தின்னுவோம். செல்லையாண்ணை அள்ளி அள்ளித் தருவார். வள்ளி ஆச்சியும் தருவா. சில நேரம் நிறைமணிக்கு முள்ளியவளையில் இருந்து பண்டாரம் வருவார். நாலுமூலை வெள்ளை கட்டி படையல் செய்து காவல் தெய்வங்களை சாந்தி செய்வார். குளத்தையும் பல ஏக்கர் வயல்களையும் பாதுகாப்பவைகளை குளிர்ச்சி செய்ய வேண்டும்தானே.

ஆனால் இவ்வளவு குளிர்த்தி செய்த தெய்வங்களும் புளியங்குளமும் குமாரண்ணையைக் கொன்றுவிட்டன.

கொன்றவை அவைகள்தான். உண்மையாக... அவர் என்ன

வேணுமெண்டு போயா விழுந்தவர்.

உழவு மாடு பாவம். பகல் முழுக்க உழுது உழுது களைத்துப் போன உழவு மாடுகளைக் குளிப்பாட்ட யாருக்கு மனம் வராது.

இரண்டு மாடுகளையும் பிரித்து ஒவ்வொரு மாடாக நீளமான கயிற்றில் கட்டி கையில் இறுக்கமாகக் கையில் சுருட்டி வைத்துக் கொண்டு குளத்தில் மாடுகளை இறக்கியிருக்கிறார்.

புளியங்குளத்தில் வடக்குக் கரையில் பன்றி, மான், குழுமாடு, மரை போன்ற மிருகங்கள் இரவில் தண்ணீர் குடிக்க வரும். பூபதி போய் வேட்டையாடி வருவார். வேட்டை இறைச்சி வலு ருசிதான். அந்தப் பக்கம் சேறு.

தெற்குப் பக்கத்தில் எந்தப் பயமும் இல்லாமல் இருந்தது. குமாரண்ணை தாளமுதல் பெரிசாக சேறு சகதியுமில்லை. குளக்கட்டுக்குப் பக்கத்து வீட்டில் குமாரண்ணை இருந்த காரணத்தால் நீச்சலிலும் அவர் விண்ணன் நீந்தத் தெரியாமல் அவர் சாகவில்லை.

மாடுகள் லாவகமாக நீந்தி நீந்தி போனபோது குமாரண்ணை வலு அவதானமாகக் கயிற்றை இழக்கி இழக்கி விட்டிருக்கிறார். மாடுகளும் குளிப்பில் சந்தோசித்துக் கொண்டிருக்கும் போதுதான் அந்த அனர்த்தம், அந்தக் கொடுமை, அந்த அநியாயம் நடந்தது.

ஒரு பெரிய முதலை சிவலை மாட்டை வலது காலில் கௌவி இழுத்தது. தண்ணீருக்குள் அமுத்தி மூழ்கடித்து முறித்தது. சிவலை திணறியது. சிவலையின் செங்கட்டி ரத்தம் குபீர் குபீர் என தண்ணீரில் கொப்பளித்தது. மாடு அல்ல அது உழைப்பாளி. உழும் உழைப்பாளி. வயல் அதனால்தான். நெல், பயிறு, மிளகாய், கச்சான் எல்லாம் அதனால்தான், பணம், செல்வம், சாப்பாடு அதுகளால்தான்.

அது ஒரு மனிதனை விட உழைப்பாளி அது மூழ்கும் போது குமாரண்ணையால் பார்த்துக் கொண்டு இருக்க முடியுமா? பலம் கொண்ட மட்டும் இழுத்தார். மற்ற வெள்ளை மாடு திமிறித் திமிறி கரைக்கு வந்து விட்டது. சிவலை தாண்டு கொண்டு போனது. சிவலையை விடாமல் தொடர்ந்து உன்னி உன்னி இழுத்தார் குமாரண்ணை.

ஒரே உன்னலில்... கயிறு கையில் சிக்கி... குமாரண்ணை சேத்துக்குள் வழுக்கி குளத்துக்குள் விழுந்து விட்டார்.

முதலைக்கு மாட்டிறைச்சி, பிறகு மனித இறைச்சி, குமாரண்ணையை இழுத்துக் கொண்டு தனது பாழிக்குள் போய்விட்டது.

தேடினோம்... தேடினோம்... அந்த உழைப்பாளி கிடைக்கவில்லை. இரவிரவாக அந்த நல்ல மனிதனை முதலை வைத்திருந்தது. அதிகாலையில் கடிகடி என்ற கடித்து உடலை... பிரேதத்தை... கையில்லாமல் கூழையாகிப் போன சிதிலத்தைக் கொண்டு வந்தோம்.

கறுப்பாய்... திரண்டு போய்...

கொலைகாரனாய்...

புளியங்குளம் பரந்து கிடந்தது.

# சனிட்டறி

அந்தக் காலத்தில் கிராமங்களில் பெரிய நோய் என்றால் மலேரியாக் காய்ச்சல்தான். நுளம்பு குத்தி காய்ச்சல் வரும் என்றுதான் நம்பிக்கை. டி.டி.ரி. பவுடர் தெளிப்பதற்கு மருந்தடிக்கிற ஆட்கள் வரும்போது வீட்டிலை உள்ள பொம்பிளைகளுக்கு பெரிய வேலை. ஓவசியர் சகிதம் வெள்ளி நிறத்தில் நீளமான நுளம்படிக்கிற பம் என்று தான் சிறுபிராயத்தில் சொல்லுவோம். ஆனால் அது நுளம்படிக்கிற அல்ல டி.டி.ரி. பவுடரையும் தண்ணியையும் கலந்து அடிக்கிற பயம்.

எங்களது வீடுகளில் அப்படிப் பம்பைக்கான முடியாது. நான் அந்த நுளம்பு மருந்தடிக்கிற பம்பைப் பார்த்து ஆசைப்பட்டிருக்கிறேன். அது வலு அழகாக இருக்கும். அதன் வடிவமைப்பு கவர்ச்சியாக இருக்கும். காற்றடிக்கும் கம்பி மேலே இருக்கும் சைக்கிள் பம்ப் மாதிரி. அதனால் மருந்து விசிறுவது இலேசு.

புளியங்குளம் சந்திக்கு நுளம்பு மருந்து அடிக்கிற ஆட்கள் வந்து விட்டினம் என்றால் எங்களுக்கு சந்தோசம். ஏன் சந்தோசப்படுகிறோம் என்றில்லாத சந்தோசம். காலையில் தபால் காரர் வந்தால், முல்லைத் தீவு மாங்குளம் பஸ் வந்தால், பதினொரு மணி போல மீன் கார சிங்கள மாமா பெல்லடிச்சுக் கொண்டு பெட்டி கட்டி சைக்கிளில் மீன் கொண்டு வந்தால், பின்னேரம் பாண்காரர் பாண் கொண்டு வந்தால், உழவு மெசின் எங்கள் வயலுக்கு உழவந்தால், எங்கள் முத்தையன் கட்டு வாய்க்காலில் தண்ணி வந்தால், மார்கழி மாசம் பனிப் பெய்தால், பனையில் இருந்து பனம்பழம் விழுந்தால், தறுமண்ணை காலையில் கூப்பிட்டு தயிர் தந்தால் எல்லாத்துக்குமே சந்தோசம். இந்த சின்னச் சின்ன சந்தோசங்களில் திளைத்துப் போய் மனம் நிறைந்து போவேன். அனேகமாக எல்லோருக்கும் இந்தச் சந்தோசம் இருக்குமாக்கும். கிராமம் ஒரு சந்தோசமான ஒன்று தானே.

வீட்டில் அம்மாதானே எல்லாம். சமைப்பது, உடுப்புக் கழுவுவது, தண்ணி அள்ளி குடத்தடியில் வைப்பது, ஜிம்மிக்கு சோறு வைப்பது, எங்களைப் பராமரிப்பது எல்லாம்.

சந்திக்கு நுளம்பு மருந்தடிக்கிற ஆட்கள் வந்தால் அம்மாவிடம் ஓடிப் போய் சொல்ல வேண்டும்.

அவதான் அந்த ஒழுங்குகளை எல்லாம் செய்வா. அவசர அவசரமாக வீட்டில் உள்ள சாப்பாட்டுச் சாமான்களை சாக்குப் போட்டு மூடி வைக்க வேண்டும். உடுப்பை மூட வேண்டும். மற்ற சாமான்களை முற்றத்தில் கொண்டு வந்து வைக்க வேண்டும். இந்த வேலைகள் அவசரமாக நடக்க வேண்டும். அல்லது மருந்தடிக்கிறவைக்கு இதெல்லாம் ஒரு பெரிய விசயமே இல்லை. எல்லாத்துக்கும் மருந்தடிச்சுப் போட்டுப் போய்விடுவினம்.

அவர்கள் மருந்தடிக்கும் போது கிஸ்.... ஸ்.... கிஸ்.... ஸ்.... என்று சத்தம் வரும். நல்லா விசிறி எல்லா இடங்களிலும் படும். அடிச்சிட்டுப் போனபிறகு டி.டி.ரீ. மணம் வீடு முழுக்க இருக்கும். ஓட்டில், சிலாகையில் சுவரில் எல்லாம் வெண் புள்ளிகளாய் மருந்து படிந்திருக்கும். நுளம்பு கொஞ்ச நாட்களுக்கு அந்தப் பக்கமே வராது.

எங்கள் வீட்டில் வயலுக்கு மருந்தடிக்கிற பம்ப் ஒன்று இருந்தது. அது சிவப்பு நிறம். காற்றை இடது பக்க கையால் மேலும் கீழும் இழுத்து ஆட்டித்தான் அடிக்க வேண்டும். அதனால் மருந்தடிப்பது கஸ்டம். செல்லையாண்ணை வீட்டில் ஒரு மெசின் பம்ப் இருந்தது. புளியங்குளத்தில் எனக்குத் தெரிய இருந்த ஒரே மெசின் பம்ப் அதுதான். செல்லையாண்ணையின் மகன் பாலசிங்கம் வயலுக்கு அதனால் மருந்தடிக்கும் போது மெசின் சத்தம் கருவேலன் கண்டல் சந்தி வரை கேட்கும்.

பள்ளிக்கூடத்தில் சனிட்டறிக்கு பயப்படுகிற மாதிரி நாங்கள் யாருக்கும் பயமில்லை. சனிட்டறி சுகாதாரப் பரிசோதகர், வலு உசாரான மனிதன். பார்த்தால் படு கம்பீரம், மீசையும் இருக்கு. சிவலை நிறம். சனிட்டறி சும்மா அதிபரைச் சந்திக்க வந்தாலே கதை முழு பள்ளிக்கூடத்திற்கும் பரவிவிடும். அவர் திரும்பிப் போகும் வரைக்கும் பயம், கையில் எப்பொழுதும் ஆயுத சாமான்கள் வைத்திருப்பார். ஆயுத சாமான்கள் என்றால் ரத்தம் குத்தும் ஊசி மற்றும் கண்ணாடிகள், சொட்டு மருந்து கொடுக்கும் உபகரணங்கள், ஊசி போடுவது, அம்மைப்பால் குத்தும் உபகரணங்கள், இந்த சாமான்கள் வைத்திருக்கும் யாரையும் கண்டால் பயம் வரத்தானே செய்யும். முஸ்லிம் பிள்ளைகளுக்கு சுன்னத் எடுக்கும் ஒஸ்த்தா மாமாவைக் கண்டால் வரும் பயம் போல.

மலேரியாக் காச்சல் குளிசை சரியான கசப்பு நாக்கில் முட்டுப்பட்டாலே அன்று முழுக்க ஓங்காளம் வரும்.

காச்சல் வரமுதல் ஒரு அசுமாத்தம் தெரிந்தால் குளோறப்பெனிக்கல் குளிசையோடு வந்து விடுவார் சனிட்டறி.

எல்லா வகுப்பையும் ஒவ்வொன்றாய் கூப்பிட்டு குளிசையை ஒவ்வொருத்தர் வாயில் போட்டு விழுங்கும் வரைக்கும் விடமாட்டார்.

அவர் அதிலை வலு கவனம். பல்லுப் பாக்கிறதில் இருந்து ஊசிபோடுதல், அம்மைப்பால் குத்துற வரைக்கும் எல்லா வேலைகளையும் முறை வைத்துச் செய்வார்.

அம்மைப்பால் குத்தறது ஒரு பெரிய வேலை. எல்லாரும் பயந்தது அதுக்குத்தான். புஸ்ப்பராஜன் சரியான குளப்படி. வீரனைப் போல் இருப்பான். ஆனால் பயந்தவன். ஏழாம் வகுப்பு படிக்கிற நேரம் புஸ்ப்பராஜன் எல்லாரையும் அடிப்பான். அவனோடு சேரக்கூடாது என்று அம்மா ஒரே சொல்லி அனுப்புவா. அவனோடு சேராவிட்டாலும் அடிப்பான். ஏன் சேரமாட்டியோ என்று சேர்ந்தது கேள்விப்பட்டால் அம்மா அடிப்பா.

சனிட்டறி வந்தார். அம்மைப் பால் குத்த. எங்களுக்கு வந்த நேரம் தெரியாது என்ன விசயம் என்று மூன்று மூலை தகரத்தில் கதவு மாதிரி ஒன்றை எடுத்து மேசை மீது வைத்தார். அதற்குள் ஸ்பிறிற் விளக்கு ஒன்றை வைத்தார். என்ன செய்கிறார் என்று நாங்கள் புதினம் பார்த்தோம். ஆனால் அது எங்களுக்குத்தான் என்ற போது பயம் வந்தது. ஒவ்வொரு வகுப்பாக வரிசையில் நிற்கும்படி தில்லையம்பலம் வாத்தியார் சொன்னார். தில்லையம்பலம் வாத்தியார் சொன்னால் அது சொல்லுத்தான். முதலில் ஆறாம் வகுப்பு ஏ பிறகு பீ. என்ன நடக்கிறது என்று புதினம் பார்த்தோம். ஸ்பிறிற் விளக்கில் ஒரு ஊசி மாதிரி

ஒன்றைச் சூடுகாட்டி அதனை மருந்தில் தொட்டு இடது கையில் ஒரு இடத்தில் மூன்று கோடுகள் வீதம் இரண்டு இடத்தில் ஆறு கோடுகள் கிழித்தார்.

பிள்ளைகள் பயத்தில் அழுது கொண்டே இருந்தனர். ஆம்பிளை பொம்பிளை என்று பேதமில்லாமல் எல்லோரும் அழுதனர். ஒப்பாரி மயமாகவே இருந்தது பள்ளிக்கூடம். அம்மைப்பால் குத்தின பெடியன்களின் கையைப் பிடித்துப் பார்த்தால் கோடு மாதிரித்தான் இருந்தது.

புஸ்ப்பராஜனைக் காணவில்லை. தேடினோம் வகுப்பறைகள், ஒப்ஃபிஸுக்கு மேலே உள்ள சிமெந்துத் தட்டு, பின்பக்கத்தில் நின்ற காஞ்சூர மரம் எல்லாம் இடமும் தேடியாச்சு ஆள் இல்லை.

பார்த்தால் கம்பும் கையுமாகப் போன தில்லையம்பலம் வாத்தியார் பிடித்துக்கொண்டு வந்தார் சயன்ஸ் லாப்பில் இருந்து.

இடது கையில் புஸ்ப்பராஜனுக்குத் தான் எங்கள் வகுப்பில் முதலாவதாக குத்தினது. சனிட்டறி குத்தினது இத்தனை வருடங்களின் பின்பும் இடது கையில் இரண்டு பால் தழும்புகள் அடையாளமாகவே இருக்கிறது.

அம்மைப்பால் குத்தின நேரம் இந்துமதி, கிருபா, நந்தினி, சகுந்தலாதேவி, மோகனவதனி, யமுனா எல்லோரும் அழுதது நேற்றுப்போல் உள்ளது. சனிட்டறி எப்பவும் பிள்ளைகள் விசயத்தில் கவனிப்போடு தான் இருப்பார். ஆனால் அவர் என்றால் பிள்ளைகளுக்குப் பயம்.

கல்விச்சுற்றுலா எப்பவும் சந்தோசமான விசயம். ஆனால் இந்தமுறை சனிற்றரியும் எங்களோடு வந்தார். “உவர் ஏன் எங்களோடை வாறார்” என்று பல பெடியன்கள் விசனப்பட்டார்கள்.

அது ஒரு ரயில் பயணம். சனிட்டறி சுகாதார மாகத்தான் எல்லோரையும் கூட்டிக் கொண்டு போவதற்கு ஆலோசனை சொன்னார். வீட்டில் இருந்து சுட்டாறிய தண்ணீர் கொண்டு வரச் சொன்னார். பயணத்தில் சத்தி எடுக்கிற ஆக்களுக்கு குளிசை தந்தார். பயணத்தில் வயிறு முட்டச் சாப்பிடக்கூடாது என்று ஆலோசனை சொன்னார். போகுமிடத்தில் மூடி வைத்த உணவுகளையே உண்ணுவதற்கு உத்தரவிட்டார்.

ஒரு நாள் சுற்றுலா அது. தொண்டை மானாறு வெளிக்கள ஆய்வு நிலையத்தில் பிள்ளைகளுக்கு அது வெளிப்புறப்படிப்பு.

காற்றாடிக்குப் பக்கத்தில் நாகதாளி புடுங்கி ஆராய்ச்சி செய்ததாக ஞாபகம். என்ன ஆராய்ச்சியோ தெரியாது. கடும் வறண்ட பிரதேசங்களில் முட்செடிகள் மட்டும் எப்படி வளர்ந்து வருகின்றன. கள்ளி, நாகதாளி, ஈச்சமரம், தொட்டாச்சுருங்கி, நெருஞ்சி என்று முள்ளுகள் கொண்ட எல்லாம் வளருகின்றன, பார்த்து ஆச்சரியப்பட்டோம். கட்டிக்கொண்டு போன சோற்றுப் பார்சலை தொண்டை மானாறு சந்நிதி கோவில் மடங்களில் வைத்து சாப்பிட்டோம். சனிட்டறியும் தில்லையம்பலம் வாத்தியாரும் சாப்பிட்டார்கள்.

சுற்றுலா போய்விட்டு வந்த ஒரு கிழமையில் எனக்கு

குலைப்பன்காச்சல். சனிற்றறி தான் ஞாபகத்துக்கு எனக்கு வந்தார். ஒரு பெரிய விசயமில்லை.

எங்களின் ஆஸ்பத்திரியில் அரசாங்க மருந்துகள் தான் இருக்கும் அடிப்படை மருந்துகள் மட்டும்.

வருத்தம் கூட என்றால் ஒரு இருபத்தைந்து ரூபா கொடுத்தால் பிறைவேற்றாக டொக்டர், வீட்டில் வைத்து மருந்து தருவார். அந்த மருந்துக்கு அனேகமாக காச்சல் நிற்கும். வேறு நோய்களுக்கும் மருந்து தருவார் டொக்டர் வீட்டில்.

இரண்டு கிழமையாக காய்ச்சல் தொடர்ந்தது.

இது நிமோனியாவோ என்று என்னைப் பார்க்க வந்தவர்கள் பேசிக்கொண்டது கேட்டது. உடம்பு பலவீனமாகிவிட்டது. பார்த்தால் சலம் தேத்தண்ணி நிறத்தில் போகிறது. குலைப்பன் நின்று போய் மஞ்சள் காமாலை வந்து விட்டது. அது ஈரலைத்தான் பாதிக்கும் என்று வாறவை போறவை சொல்லுகினம். எனக்கு எல்லாம் காச்சல்தான்.

"பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போங்கோ" என்று சிலர் சொல்லிச்சினம். ஊர்ப்பரியாரியார் வந்து பார்த்து விட்டுச் சொன்னார் ஒரு கிழமைக்குள்ள சலத்தை தண்ணியாக்கிறன். ஆயுர்வேதக் குளிசைக்கு அந்தளவு சக்தியிருக்கிறது என்பதனை எனக்கு வந்த காச்சல் நிரூபித்தது. கீழ்காய் நெல்லி குளிசை ஏழு நாள்தான் குடித்தது. பரியாரி சொன்னது போல சலம் பச்சைத் தண்ணி நிறத்துக்கு மாறிவிட்டது. கை நகம் கண் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் நிறம் வழமைக்குத் திரும்பியது. குழந்தை வேலர் வந்து தண்ணி ஓதிவிட்டுப் போனார். வாய்க் கச்சல் கொஞ்ச நாளைக்குப் பிறகுதான் மாறியது.

ரவி கிணத்துக்குள் விழுந்துவிட்டான் என்ற செய்தி என்னை அதிரப் பண்ணியது. ரவியின் வீட்டுக் கிணறு சுற்றி முழுக்க கட்டப்படாமல் இருந்தது. பாடசாலையில் இருந்து வந்தவன் தண்ணி குடிக்க துலாவில் தண்ணி அள்ளியிருக்கிறான். துலாக்கொடி வழுக்கி ரவி கிணற்றுக்குள் விழுந்து விட்டான். தத்தளித்து தத்தளித்து இருந்தவனைத் தூக்கி வெளியில் போட்டார்கள். செத்துக் கிடந்தான்.

எங்கள் ஊரில் கிணத்துக்குள் விழுந்து செத்தவர்கள் குறைவு. ரதி அக்கா தற்கொலை செய்து கொள்வதற்கு, முதலில் பொலிடோல் குடிச்சவா. பிறகு வயல் கிணத்துக்குள் விழுந்தவா, பொலிடோல் குடிச்ச நேரம் பாத்தனான் கால் கையை அடிச்சுக் கொண்டு கிடந்தவா.

எங்கள் ஊர் ஆஸ்பத்திரியிலை அதுக்கு மருந்து இருந்தது.

புனல் மாதிரி ஒன்று வாயில் வைச்சு அள்ளி அள்ளி ஓடலி வாயில் ஊத்துவார். சவுக்காரத் தண்ணி என்று தான் பெயர்.

வயித்துக்குள்ளை கிடக்குறது எல்லாம் வெளியிலை வரும். ரதி அக்காவுக்கு வயித்துக்குள்ளை கிடந்த நாடாப்புழு வெல்லாம் வெளியிலை வந்ததைப் பார்த்தேன்.

இரண்டாவது முயற்சி கிணத்துக்குள் விழுந்தது.

அப்பொழுது எல்லோரும் கண்டிட்டம். வயல் பக்கமாய் ஓடி பிறகு கிணத்துக்குள் விழுந்ததை தூக்கிக் காப்பாற்றியாச்சு.

ஏதோ அக்காவின்ரை புருசனோடை பிரச்சனை என்றது மட்டும்

தான் எனக்குத் தெரியும். இது இரண்டாவது. ஆனால் ரவி எங்களோடை படிச்சவன் எங்களோடைய பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டுக்கு வந்தவன் பிரேதமாய்க் கிடந்தான்.

சனிட்டறி எல்லாத் துன்பமான காரியங்களுக்கும் போவார். பாம்பு கடிச்சால் யாருக்காவது எதாவது வருத்தம் என்று வந்தால் துன்பங்களின் ஆபத்பாந்தவனாய் நிற்பார். முதலுதவி செய்வார். பள்ளிக்கூடத்துக்கு மட்டுமில்லை. ஊருக்கும் வைத்தியம் சொல்வார். வீடுகளில் வந்து கதைத்துக் கொண்டிருக்கும் பொழுது தாழ்வாரத்தில் இருக்கும் சிரட்டைகளை தடியினால் கவிட்டு விடுவார். டயர்களை எரிக்கச் சொல்வார். டி.டி.ரி. ஒழுங்கா அடிக்க வருகினமோ என்று கேட்பார். மீன் ரின்கள் நிமிர்ந்து இருந்தால் கவிட்டு விடுவார். எப்பவும் ஆட்கள் மீது அவருக்கு கரிசனை இருக்கும்.

அதற்கு பின்பு எனக்கும் அந்தப் பழக்கம் தானாகவே வந்தது. நுளம்புக் குடம்பிகளைக் கண்டால் அவற்றை அழிப்பது, ரின்களை பிரட்டி வைப்பது இப்படி...

எங்கள் வீட்டில் தேத்தண்ணி குடிப்பார். அடுத்தது செல்லையாண்ணை வீட்டில். வேறெங்கும் அவர் நாக்கு நனைத்ததை நான் காணவில்லை.

பள்ளிக்கூட நோட்டிஸ் போட்டில் நாளை போலியோ மருந்து கொடுக்கப்படும் என்று எழுதப்பட்டிருந்தது. போலியோ தொடர்பாக சின்னத்தம்பி அ.த.க. பாடசாலையில் ஒரு விவரணச் சித்திரம் போட்டார்கள். சுகாதாரப் பிரிவு அதனைச் செய்திருந்தது.

அதில் சாதாரணமாக இருந்த ஒரு பிள்ளைக்கு போலியோ வந்து கால் சூம்பிப் போய்விட்டது.

வெள்ளைத்திரை நிப்பாட்டி படம் காட்டினார்கள்.

உடனே கலாவின் ஞாபகம்தான் வந்தது. அவளின் சின்னக்கால போட்டோ இன்னுமிருக்கிறது.

பார்த்தால் ஆச்சரியப்பட்டு விடுவீர்கள். அப்படி அழகான இரண்டு கால்கள். ஏழு வயதில் 'அம்மா உழையுது, அம்மா உழையுது' என்று சொன்னாள்.

ஒருவருடம் ஆகவில்லை. கால் கொஞ்சம் கொஞ்சமாய் சூம்ப ஆரம்பித்தது.

எனது கண் முன்னலேயே சூம்பி சின்னதாய் போய்விட்டது.

வீட்டில் இருந்த ஒரு பொட்டலத்தில் சீனி கொண்டு வந்தோம். பிறகு தான் தெரிந்தது போலியோ சொட்டு மருந்து இனிப்பு. அதுக்கு சீனி தேவையில்லை. அது பூச்சி மருந்துக்குத்தான். முதலில் வாயில் சீனியைப் போட்டுவிட்டு அண்ணார வேண்டியதுதான். சனிட்டறி நெத்தியில் பிடித்து நிமிர்த்தி மூன்று சொட்டு பூச்சி மருந்தை வாயில் ஊத்துவார். வாயை மூடிக் கொண்டு போக வேண்டியதுதான்.

அந்த முறை இல்லை இதற்கு. இது வெறுமனே வாயைத் திறந்தால் வாய்க்குள் இனிப்பான மருந்து. சனிட்டறி எங்கள் விஷயத்தில் மிகவும் கவனம். வீட்டுக்கு வந்தாலும் அவரின் நினைப்பு வரும். ஒரு நாள் புஸ்பராஜன் சனிற்றறியின் சைக்கிளுக்கு காத்து திறந்துவிட்டுட்டான்.

ஊசி போடுற கோபம், எங்களுக்கும் எங்களுக்கும் தான் போடுறார். நாங்கள் என்ன கோபமே.

பள்ளிக்கூட அசம்பளி நீண்டு கொண்டே போனது. வெள்ளிக்கிழமை என்றால் இப்படித்தான், குளித்து முழுகி ரூபா, யோகா, இந்து எல்லோரும் வந்து பூ வைத்து நமச்சிவாய வாழ்க.... பாடத் துவங்கின மெண்டால் ஒரே இழுவை... 2 பாடத்தின்ரை நேரம் எடுபடும்.

அசெம்பிளி முடிந்து வெளியில் வர அந்தக் கதை எனது காதில் விழுந்தது. சனிற்றரியை இரிகேசன் டிப்பாட்மெண்டுக்கு முன்னாலை வைச்சு புடையன் பாம்பு கொத்திப் போட்டுதாம். திடீரென்று அதிர்ச்சியாய் இருந்தது. இரிகேசன் டிப்பாட்மெண்ட் எல்லாம் சீமெந்து போக்குகள் போட்டு வைச்சிருந்தவை. புடையன் மட்டுமல்ல எல்லாவித நச்சு சமான்களும் அதுக்குள்ளை இருக்கும்.

எத்தினை தடவை காய்ஞ்ச செட்டைகளை கண்டிருக்கிறோம். எத்தனை தடவை பிணைஞ்சு கொண்டு போன அரவங்களை விரட்டியிருக்கிறோம்.

எத்தனை தடவை பாம்பு கொட்டாவியை முகர்ந்திருக்கிறோம்.

புடையன் அந்த நல்ல மனிசனைக் கொத்திப் போட்டுது. இனி யார் எங்களுக்கு பூச்சி மருந்து தாறது. இனியார் எங்களுக்கு ஊசி போடறது. இனி யார் எங்களுக்கு அம்மைப்பால் குத்தறது. இடது கையைத் தடவிப் பார்த்தேன். இன்னும் இரண்டு தளும்புகள் இருந்தன. அது எதுக்கு குத்தினது என்று ஞாபகமில்லை.

# செயற்கை விந்துகள் துள்ளும் உலகம்

ஒரு மாதிரியாக செயற்கையான விந்தணுக்களை பிரிட்டிஸ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்து விட்டனர். சமூகம், குடும்பம், ஆண் பெண் உறவு, உடலுறவு எல்லாவற்றிற்கும் பெரும் சவாலாக அமையப் போகும் ஒன்று என்று இப்பொழுதே குரல்கள் எழும்பத் தொடங்கிவிட்டன.

2009 யூலை 9ம் திகதி லண்டனில் இருந்து வெளிவரும் சன் பேப்பரில் ஒரு கார்ட்டூன் போட்டிருந்தார்கள். ஆதாம் ஏவாள் இருவரும் காட்டுக்குள் இருக்கிறார்கள். ஏவாளை ஆதாம் கூப்பிடுகிறார். நீ தேவையில்லை ஆதாம் என்றபடிக்கு செயற்கை விந்து டப்பாவை கையில் பிடித்தபடிக்கு ஏவாள் நிற்கிறாள்.

ஏற்கனவே சிங்கிள் மம், சிங்கிள் பாதர் என்று சிந்திக்கத் தொடங்கிய வெளிநாட்டு சமூக அமைப்புக்குள் உடலுறவில்லாத செயற்கை கருத்தரிப்பு அறிமுகமாகி டெஸ்ட் ட்யூப் பேபி என்று வந்து, அதற்கும் ஆணின் உயிருள்ள விந்தினை வயிற்றில் சுமந்து பிள்ளை பெற்றவர்கள், இப்பொழுது ஆண்களின் விந்தே தேவையில்லை எனும் அளவிற்கு கொண்டுவந்து விட்டார்கள் விஞ்ஞானிகள்.

முந்தி ஜீன்களை எடுத்து ஆடு செய்யப்போய் வத்திக்கான் திருச்சபை அல்லலோலகல்லோலப்பட்டதன் பிறகு இப்பொழுது ஒருத்தருக்கும் சொல்லாமல் ஆய்வு கூடங்களில் விஞ்ஞானிகள் மறு உருவங்கள் மறு வடிவங்கள் என்ற ஒரு செல்லில் இருந்து மறு செல்லுக்கு என்று உருவாக்கிக் கொண்டே இருக்கின்றனர். அந்த உருவாக்கம் உலக நியதிகளோடு ஒத்துப்போக மாட்டாது என்று திருச்சபைகள் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இப்பொழுது சிங்கிள் மம் போன்றவர்கள் பிள்ளை பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் தங்களது கருப்பைக் குடத்துக்கள் இனம் தெரியாத ஆணின் விந்தை வாங்கி அடைகாக்கத் தேவையில்லை.

இயந்திரங்கள் செய்த விந்தை எடுத்து வைத்துக் கொண்டு பிள்ளை பெத்துவிடலாம். எந்தப் பிரச்சினையும் இல்லை. யாரின் விந்து என்று அல்லாடவும் தேவையில்லை.

அந்தரங்கங்கள், அருமையான உடலுறவு எனும் இன்பம் என்பவையெல்லாவற்றையும் மறுதலிக்கும் ஒரு சமூகம் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

செயற்கை விந்தணுவின் மூலம் முழுமையான ஒரு பிரசவத்தை எந்தக் குறையுமில்லாமல் செய்விக்க முடியும் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

உடலுறவின் மூலமான தொந்தரவுகள் இல்லை என்றும், ஒருவருக்கொருவர் அடி பணிந்து விட்டுக் கொடுத்து வாழ வேண்டுமென்ற வாழ்வை விரும்பாத பெண்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமென்றும் ஒரு சாரார் சொல்கிறார்கள்.

இந்தச் செய்தி வந்த திங்கட்கிழமை காலை எங்கள் அலுவலகத்தில் இருந்த இருபது வயது பெண்மணி மிகவும் குதூகலமாக இருந்தாள்.

"இனி ஆண்களின் துணை தேவையில்லை" என்றாள். "என்னத்துக்கு" என்று கேட்டேன். "பிள்ளை பெறுவதற்கு" என்றாள். "அப்போ செக்ஸுக்கு" என்று கேட்டேன். அதற்கு மழுப்பினாள். "செக்ஸுக்கு ஆண்கள் வேண்டும். ஆனால் கருத்தரிப்பிற்கு செயற்கை விந்தா?" என்று கேட்டேன். அவர் பதில் சொல்லவில்லை.

லண்டனில் பிக்கட்லி சேக்கஸ் எனும் இடம்தான் விபச்சாரிகளுக்கு பேர் போன இடம். இடம் ஊத்தை. அந்த இடத்தில் போய் சுத்தினாலே தெரியும். தம்பி செக்ஸ் செய்யும் பெண்களிடத்துதான் வந்திருக்கிறார் என்று.

எனக்கு எல்லாவற்றையும் அந்த இரண்டு கண்களால் பார்த்து உணர வேண்டும் என்ற அவா இருக்கிறது. ஒரு நாள் அங்கு போனேன். சுற்றிவர செக்ஸ் சாமான்கள் விற்கும் கடை இருக்கிறது.

முதன் முதல் பார்க்கும் போது உண்மையில் அது ஒரு அதிசயம்தான். போய்ப் பார்க்க வேண்டும். ஒவ்வொருவரும் அங்கே மக்கள் வந்து தங்களுக்கான பொருட்களைத் தேர்வு செய்து வாங்கிக் கொண்டு போவதை கொஞ்ச நேரம் நின்று பார்த்தேன், வாங்கும் பொருட்களை.

வளைந்து கொடுக்கும் ஆண் குறிகள் பல வடிவங்களில் பல சைஸ்களில் இருக்கின்றன. பிளாஸ்டிக் போன்றவற்றில் செய்து வைத்திருக்கிறார்கள்.

அதனை வாங்குகிற பெண்கள் பல வயதினர். பிளாஸ்டிக்கால் செய்த, காற்றை ஊதிப் பெண்ணாக்கிவிட்டு அதனோடு உடலுறவு கொள்ளத்தக்க பெண்ணுருவங்கள் உயிரற்றவை அவை.

ஆனால் தனியே இருக்கும் ஆண்கள் அதனை வாங்கிப் போகிறார்கள் என்றார் விற்பனைப் பெண்மணி. காலையில் எழும்பி மூஞ்சையை நீட்டிப் பிடிக்காது. புறுபுறுக்காது. நகை நட்டு, சாறி, மூக்குமின்னி கேக்காது. சாப்பாடு குடிப்பு தேவையில்லை. உறங்காது இரவு முழுக்க பகல் முழுக்க விழித்திருக்கும் அந்த பிளாஸ்டிக் பெண்மணி, எனவே அது இலகு என்று வாங்கிப் போகிறார்கள் என்றாள் அவள்.

எலெக்டிரிக் பேட்டரியில் இயங்கக்கூடிய வாய் போன்ற பொருட்கள், யோனி போன்ற பொருட்கள், முலையைக் கௌவிப் பிடிக்கக் கூடியதும் உணர்வுகளைத் தூண்டக்கூடியதுமான பொருட்கள், செக்ஸ் சம்பந்தமான நூற்றுக்கணக்கான பொருட்கள், மேகஸின்கள், புத்தகங்கள், படங்கள், ஆண் பெண் நிர்வாணப் படங்கள், வீடியோக்கள், சீடிகள், பாட்டுகள் என்று எப்பொழுதும் வியாபாரம் நடக்கும் கடைகள் அவை.

லெஸ்பியன் 'கே' எனப்படும் ஓரினச் சேர்க்கையாளர்கள் மட்டுமல்ல சோடி சோடியாகவும் ஆண்கள் பெண்கள் இந்தக் கடைகளுக்கு வருகிறார்கள்.

உடலுறவின் நிலைகளை மாற்றி மாற்றி துய்த்துணர இப்போதைய தலைமுறை பழகிவிட்டது என்பதுதான் அதன் அர்த்தம்.

இது ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்க ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும் ஒரு மனிதனின் செல்லை எடுத்து அதேபோல் ஒரு

மனிதனை உருவாக்க வேண்டும் என்று ஆலாய்ப் பறக்கிறார்கள் விஞ்ஞானிகள். இப்போது மிகவும் கட்டுக்கோப்பான ஒரு இந்து நாடென்று உணரப்படுகின்ற இந்தியாவில் ஓரினச் சேர்க்கைக்கான சட்ட அங்கீகாரம் தொடர்பாகவே எல்லா இடங்களிலும் பேச்சு அடிபடுகிறது.

ஓரினச் சேர்க்கை பற்றி அதன் மன உணர்வுகள் பற்றி அப்படி இல்லாத என்னைப் போன்றவர்கள் முழுமையாகத் தெரிவிக்க முடியாது.

ஆனால் அடிமனதின் உணர்வுகளில் எதிர்ப்பின் மீதான கவர்ச்சியின்மை உணர்ச்சியின்மை பற்றி ஒரு 'கே'யுடன் உரையாடி இருக்கிறேன்.

அழகான ஆணைக் கண்டால் அவரோடு உடலுறவு கொள்ளத் தூண்டும் எண்ணங்கள் தனக்கு வரும் என்று சொன்னார்.

ஆண்களுக்கு நல்ல கட்டுமஸ்தான அழகான பெண்ணைக் கண்டால் எல்லாம் துடிப்பது போல், ஒரு பால் உறவுக்காரருக்கு அது இருக்குமாம் ஒத்த பாலினைக் கண்டால்.

வெளிநாடுகளில் ஒரு பால் சேர்க்கைக்காரர்கள் ஒன்றாக இருந்து வாழ்கிறார்கள். ஆனால் ஒரு பால் உறவுக்காரர்களின் பின் வழி மூலமான உடலுறவால் எயிட்ஸ் போன்ற பேராபத்து தொடர்பான அச்சம் வெளிப்படுத்தப்படுகிறது. எச்சரிக்கப்படுகிறது. ஆனால் அவற்றைப்பற்றியெல்லாம் கவலை கொள்ளாமல் அவர்கள் உறவு கொண்டு வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்தியாவில் ஒரு பாலுறவுக்கு சட்ட அங்கீகாரம் கிடைத்த மகிழ்ச்சியில் வீதியில் இறங்கிக் குதூகலித்து ஆட்களின் தொகை பிரமிப்பை ஏற்படுத்துகிறது.

இலங்கையிலும் ஒரு பாலுறவுக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் களவாகவே தங்கள் சோடிகளோடு இருக்கிறார்கள். அவர்களுக்கான சட்ட அங்கீகாரம் தொடர்பாக அவர்களும் சிந்திக்கிறார்கள். கூடித் திருமணம் முடித்து வாழ்வது என்பது ஆங்கிலேய கலாச்சாரத்தில் ஒரு விசயமே இல்லை.

இங்கு சுரங்க ரயில், பஸ்களில் ஆண் ஆண், பெண் பெண் சோடிகள் கட்டிப் பிடித்து, உதட்டு முத்தம் எல்லாம் கொடுத்து சந்தோசமாக பயணம் செய்வார்கள். எங்களுக்கு அதெல்லாம் பார்த்துப் பாத்துப் பழகிவிட்டது.

எனது சின்ன மகன்கூட சொல்வான். அவை லெஸ்பியன் என்று சில விஷயங்கள் ஆரம்பத்தில்தான் ஜீரணிக்க கஸ்டமாக இருக்கும்.

இலங்கையில் எங்கள் கிராமங்களில்கூட ஆண்கள் சின்னப் பையன்களோடு உடலுறவு கொள்வது நடந்திருக்கிறது. அது ஒருவகை உணர்வுகளின் வெளிப்பாடுதான். அவர்கள் ஆண்களோடுதான் சாகும் வரை உடலுறவு கொள்வார்கள் என்றில்லை. வளர்ந்த பிறகு கலியாணம் முடித்து பிள்ளை குட்டிகள் பெத்து இருப்பார்கள். அது ஒரு கவர்ச்சி மட்டும்தான்.

ஆனால் ஓரினச் சேர்க்கையாளர்கள் மறு பாலில் வெறுப்புள்ளவர்கள்

தங்களுக்குள்ளே திருமணம் முடித்து உடலுறவு கொண்டு பிள்ளைகளை தத்தெடுத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அப்பொழுது அதீத வளர்ச்சி, தொழில் நுட்பத் தாக்கம், துய்த்து எல்லாவற்றையும் அனுபவித்துவிடத் துடிக்கும் மனம் என்ற விடயங்களால் அன்பு, ஆதரவு என்பன எல்லாம் சிதறிப் போகின்றன. பிரபலங்களுக்கு எல்லாம் இது பெரிய தலையிடிதான். எங்களுக்கு முன்னால் இருக்கும் பெரிய உதாரணம் மைக்கேல் ஜாக்ஸனின் மூன்று பிள்ளைகள். "ஜாக்ஸனைப் போல சிறந்த அப்பாவை உலகத்தில் நாங்கள் காணவில்லை" என்று மனமுருகி பிரேதத்துக்கு முன்னால் நின்று அழுது கொண்டிருக்க, ஜாக்ஸனின் மனைவி ஒரு அறிக்கை விடுகிறார். முதல் இரண்டு பிள்ளைகளும் ஜாக்ஸனுக்குப் பிறந்தது அல்ல. தான் ஜாக்ஸனின் டொக்டரோடு உடலுறவில் ஈடுபட்டுத்தான் பிறந்தது என்று. பிள்ளைகள் நொறுங்கிப் போய்விட்டார்கள். தந்தை செத்தபிறகு கூட அந்தப் பிள்ளைகளை நிம்மதியாக இருக்க விடுகிறார்களில்லை. இந்தப் பொறி போதும் மீடியாக்களுக்கு அந்தப் பிள்ளைகளை வேதனைப்படுத்துவதற்கு.

உண்மையில் உடலுறவின் தாத்பரியம், லிமிட் என்று எதனையும் வரையறுக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் சமூகத்துக்குள் இப்பொழுது செயற்கை விந்துகளும் ஊர்ந்து ஊர்ந்து வந்துவிட்டன.

எல்லாம் செயற்கையாகவே போகப்போகிறதா என்று அச்சப்படத் தேவையில்லை என்கிறாள் மனைவி. ஏனெனில் மனம் முழுக்கக் காதலுடன் செய்யும் உடலுறவுக்கு நிகரில்லை. அந்த இன்பத்துக்கும் ஈடில்லை என்கிறாள் அவள் உண்மைதானே.

# பயணங்கள் அற்புதமானவை

**பா**ரசீக பழமொழி ஒன்று இப்படி சொல்கிறது. பயணம் உன்னை அறிவாளியாக்கும் உண்மைதான். பயணங்கள் எத்தனை அனுபவங்களை அள்ளிக்கொண்டு வருகிறது. எத்தனை காற்றுகள், எத்தனை தண்ணீர்கள், எத்தனை சுவாசங்கள், அப்பப்பா பயணங்கள் அற்புதமானவை.

மயிலிட்டி கடற்கரையில் ஒரு சுவாசம். கடலுக்கு அருகில், உடுப்பிட்டியில் மரம் அறுக்கும் மரக்காலைக்குக் கிட்ட ஒரு சுவாசம், நிலை கதவு செய்யும் கம்மாலைக்குள் ஒரு சுவாசம். கடைச்சல் பட்டறையில் வேறு சுவாசம்.

புளியங்குளத்தில் மார்கழி மாதம் நெல் குடலைப் பருவத்தில் ஒரு வாசம். பிறகு மாசி மாதம் ஒட்டுக்குள் நடக்கும் போது வேறு சுவாசம்.

மாடு கன்று ஈனும்போது நீர்க்குடம் உடையுமே அப்ப ஒரு சுவாசம். ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக்குக் கிட்ட போகும்போது ஒரு மணம்.

தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோயிலில் ஒரு மணம். திக்கத்தில் பனங்கூடலுக்குள் ஒரு மணம்.

கட்டாந்தரையில் தண்ணீரூற்றில் கறுப்பு ஈச்சம்பழம் பழுக்கும் போது ஒரு மணம்.

ஹட்டனில் தேயிலைத் தோட்டத்துக்குள்ளால் நடக்கும்போது ஒரு சுவாசம். அக்குறணையில் ஹித்துள் கள் இறக்குபவர் ஒரு மணம்.

லண்டன் பிறிஜ் அருகில் ஒரு பழைய மணம். சுவிஸ் அல்ப்ஸ் மலை அடிவாரத்தில் ஒரு சுவாசம். ஹொலண்டில், பெல்ஜியம், சிங்கப்பூர் என்று மணங்களும் சுவாசங்களும், எவ்வளவு வித்தியாசமானவை. எவ்வளவு ரம்மியானவை. எவ்வளவு வசீகரமானவை. எல்லாம் பயணத்தின் மூலமாக அள்ளிக்கொண்டு வர முடியும்.

கால் போன போக்கில் எனது பயணம் 15 வயதில் ஆரம்பமானது. அன்றிலிருந்து இன்று வரை நாயோட்டமும் அந்தரப் பாய்ச்சலுமாக வாழ்க்கை ஓடுகிறது.

ஆனால் எனது பயணங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் குடும்பத்தில் நச்சரிப்பால் ஒரு இடத்தில் தங்கியிருக்கிறேன் இப்பொழுது.

ஊரில் இயக்கத்துக்கு ஆள் பிடிக்கிறார்கள். எங்கயாவது ஓடித் தப்புங்கோ என்ற எனது அம்மாவின் சொல்லைக் கேட்டு எனது பிறந்த பூமியை விட்டுவிட்டு, எனது பிறந்த ஊரை விட்டுவிட்டு ஓடினேன்.

கந்தரோடையில் இருந்தபோதுதான் விவசாயிகள், பெரிய தைலாபெட்டியில் வாழைக்குலைகளைப் போட்டு, அதனைச் சுற்றி மணலால் - சாணியால் பூசி மெழுகி அதனுள்ளே சந்தனக் குச்சியை பத்த வைத்து வாழைக்குலை பழுக்க வைக்கும் கைங்கரியத்தை தெரிந்து கொண்டேன். பச்சைக் குலை ஒரு விலை. பழக்குலை விலை கூட. இது ஒரு வியாபாரம். சிறிய வேலை நிறையக் காசு.

உடுப்பிட்டியில் இருக்கும் போது தச்சுவேலைத் தொழிலாளர்களோடு

வேலை பழகினேன். கடைச்சல் வேலையை வல்வெட்டியில் பழகினேன்.

தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோயில் தேர்முட்டி கட்டும் போது சீமெந்து கலந்து கொடுக்கும் வேலை செய்தேன்.

அனலை தீவில் மீன் பிடிக்கும் போது எனக்கு கடல் தொழிலே தெரியாது. கடலுக்கு சும்மாவாகிலும் போய்ப் பாருங்கள். கடல் காற்றுக்கு ஒரு சத்தி வரும். கடல் எல்லாம் வாய்வழியாக வரும், இரத்தம் வரும் வாந்தி, ஒரு மாதிரியாக கடல் தொழில் பழகிவிட்டேன்.

மீன் தொழிலாளர்கள் தான் எனக்கு மிகவும் பிடித்தமானவர்கள். கள்ளங் கபடமற்ற ஏழைகள் அவர்கள். கையில் காசிருந்தால் அவர்கள் ராசாக்கள் தான். யாரையும் அரவணைப்பார்கள். எல்லா இரக்கமும் அன்பும் அவர்களோடுதான் பிறந்தது.

உடுத்துறையில் ஒரு குடும்பம் என்னை வளர்த்தது. நான் யார் என்ற கேள்வி கணக்கில்லாமல் வளர்த்தது. அந்த மீனவத் தாய், எங்கேயென்றும் இன்னும் எனக்குத் தெரியாது. தன் பிள்ளையைப் போல வளர்த்தெடுத்தாள் அந்த அம்மா.

தூஷணம்தான் அவர்கள் மொழி. ஆனால் வாயில் இருந்து வரும். மனம் முழுக்க அன்புதான் நிறைந்திருக்கும்.

சாரத்தோடும் வெறும் மேலோடும் எத்தனை நாள் அந்த மணலில் இரவு இரவாக படுத்திருப்பேன். திசையறியா பயணத்தில் ஒரு நீண்ட பயணம்.

ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு யாழ்தேவிப் பயணம்தான் என் வாழ்க்கையையே புரட்டிப் போட்டது.

கொழும்புக்கு வந்து அதிகாலை ரயில் விட்டாப் பிறகு எங்கு போவதென்று தெரியாமல் திருகோணமலை பஸ்ஸில் ஏறிப்போனேன்.

அங்கு என்னை அரவணைத்துக் கொண்டவர் ஒரு நானா. அவர் எங்கிருக்கிறார் என்று தெரியாது இப்பொழுது. அவரின் மாட்டிறைச்சிக் கொத்து அவ்வளவு ருசியாக இருக்கும். அதன் வாசம் இன்னும் எனது அடி நாசியில் ஒட்டிக் கொண்டு கிடக்கிறது.

மிளகாய்த் தூள் அரைக்கும் மிஷினில் வேலையும் அங்குதான் கிடைத்தது. அவர்கள் மிக நல்ல மனிதர்கள். ஒரு நாடோடியான என்னை எவ்வளவு கரிசனையாக வளர்த்தார்கள். இன்னும் அவர்களைத்தான் நெஞ்சிருத்தி வாழ்கிறேன்.

மாத்தளையில் பாமசியில் வேலைசெய்தபோது தான் மருந்து வகைகள் பற்றி தெரிந்து கொண்டேன். பாமஸியில் மருந்து கொடுப்பவர்கள் அரை வைத்தியர்கள்தான்.

நாவலப்பிட்டியில் குர்ஆன் மதரஸாவில் இருக்கும் பொழுதுதான் மலையகத்தின் அழகை அள்ளி அள்ளி பருக முடிந்தது. ஓடுகின்ற ஆறும் மலையில் இருந்து வரும் பீலித் தண்ணிரும் எவ்வளவு ரம்மியமானவை. ஒருமுறை ஒண்டுக்கிருக்கும் போது அட்டைகள் கடித்து இரத்தம் வடிந்த அனுபவமும் நாவலப்பிட்டியில் தான் நடந்தது.

கதிர்காமக் காடுகளுக்குள் சுற்றித் திரிந்தது. கல்முனைக் கடற்கரையில் அலைந்து திரிந்தது என்று பயணங்கள், கொழும்பில் வேகாத வெய்யிலுக்குள் அலைந்து திரிவதற்கு உண்மையில் தனித்திறமை வேண்டும் தான். மூளை இப்பொழுதும் உருகிக் கொண்டிருக்கிறதல்லவா.

புதுடில்லிக்கு ஒதுக்குப்புறமான கிராமங்கள் உங்களுக்கு ஆயிரம் விடயங்களை கற்றுத் தரும்.

வாழ்வு என்றால் அதுதான். ஒரு நாளைக்கு முழுக் குடும்பமே 15 ரூபாக்களுக்குள் செலவை மட்டுப்படுத்தி விடக்கூடிய கைங்கரியம் அவர்களுக்குத் தெரியும்.

றொட்டியும் சால்னாவும் அல்லது சோறும் சால்னாக் கறியும் 365 நாட்களும் சாப்பிட்டு வாழ்ந்து விடுவார்கள்.

எருமை மாட்டை வைத்து சம்பாதிக்கும் கலையை அங்குதான் பார்த்தேன்.

பால், தயிர், நெய் என்று மாதத்திற்கு பல ஆயிரம் சம்பாதிக்கிறார்கள். எருமை, மாடுதான் அந்தக் கிராமங்களில் சீதனம்.

உழைக்கும் பெண்கள் அங்குதான் அதிகமாக இருக்கிறார்கள். நான்கு கறி, பப்படம், மிளகாய் என்று பல வகைகள் எங்களுக்கு தேவைப்பட ஒரு றொட்டியோடு திடகாத்திரமாக இருக்கும் விவசாயிகள் அவர்கள்.

சென்னையில் இருந்து டில்லிக்கு ரயிலில் பயணம் செய்யுங்கள். அதுவே உங்களுக்கு பேரானந்தத்தை தரும்.

பஞ்சாபின் கோதுமை வயல்களுக்குள்ளால் குதிரை வண்டியில் போய்ப் பாருங்கள். முகத்தில் அறையும் அந்த உழைப்பாளிகளின் வியர்வையின் பெறுமதியைச் சொல்லும். சோம்பல் என்றால் என்ன என்று கேட்பார்கள்.

ஒரு ஊருக்குப் போனால் அதன் நீரை முதலில் பருகுங்கள். அதன் பிறகு அந்த மண் உங்களோடு ஒட்டிவிடும். அந்தக் காற்று உங்களுக்கு ஊறு விளைவிக்காது.

இப்பொழுதெல்லாம் கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு போகும்போதும் கையில் போத்தல் தண்ணியோடுதான் போகிறோம். எப்படி ஒட்டும் மண்ணும் மனிதர்களும்.

முதன் முதலில் ஹொலண்டில் வந்திறங்கியபோதுதான் ஐரோப்பாவின் வாசத்தை நுகர்ந்தேன். கடல் மட்டத்துக்குக் கீழே இருக்கிறதாம். நம்பச் சொல்கிறார்கள். ஹொலண்டிற்கு நடுவே வாய்க்கால் வெட்டி கப்பல் வியாபாரம் செய்கிறார்கள். துறைமுகம் தான் அவர்களுக்கு வியாபார ஸ்தலம். அங்கிருந்துதான் அவர்களுக்குக் காசு கொட்டுகிறது.

பெல்ஜியத்தில் இருந்துதான் கண்டெய்னரில் ஏற்றி களவாக லண்டனுக்கு அனுப்புகின்றனர். தமிழர்களைத் தமிழர்கள், அப்படித்தான் என்னை அனுப்பினார்கள்.

இப்பொழுது அந்தப் பயணங்கள் எல்லாவற்றையும் அடைத்துவிட்டார்கள்.

சுவிற்சர்லாந்தின் பனி மலைகளுக்குள்ளால் கேபிள் காரில் போகும்போதெல்லாம் எமது நாட்டு மலைப் பிரதேசங்கள் தான் நினைவுக்கு வரும்.

எமது மலைப் பிரதேசங்களை எவ்வளவு அழகான சுற்றுலாத் தலங்களாக்கி சம்பாதிக்கலாம். சுவிஸ், சுற்றுலாப் பயணிகளில் தானே தங்கியிருந்து சம்பாதிக்கிறது.

எமது நெல் வயல்கள், எமது கடற்கரைகள், எமது கிராமங்கள், எமது பூந்தொட்டங்கள், எமது இல்மனைட் தொழிற்சலைகள், எமது சீமெந்துத் தொழிற்சாலைகள், எமது மாணிக்கக் கல், தொழிற்பீடங்கள் என்று எல்லாம் எமக்கானவை. தேயிலை, இறப்பர், நெல், மிளகாய், கராம்பு, ஏலக்காய் என்று எங்கள் வளங்களையெல்லாம் அம்போ என்று விட்டுவிட்டோமே.

அரசியல்வாதிகளும் எல்லா நாடுகளுக்கும் பயணிக்கிறார்கள் தானே. ஏன் அந்தப் பயணங்கள் அவர்களை அறிவாளிகள் ஆக்குவதில்லை. மூளைகளை திறந்து அறிவை உள் வாங்கத் தயாராக இல்லையோ அவர்கள்.

எங்கள் மௌமிப ரட்டையை அவர்களின் பயணங்களாவது செழிப்பாக்கட்டும்.

# நோர்வே கடவுளின் நிலம்

உண்மையிலேயே நான் பார்த்து வியந்த இரண்டாவது கடவுளின் பூமி நோர்வே. முதலாவது சுவிஸ். இன்னும் கேரளாவிற்குப் போகவில்லை. பயணங்கள் தொடருகின்றன.

நோர்வே இமிக்கிரேசனில் பொலிஸ் கேட்டார். "என்ன அதிகமாக எயார் போட்டுகளில்தான் நேரத்தை செலவழிப்பீர்களா" என்று. எனது பாஸ்போர்ட்டை பார்த்துவிட்டு, எயார்போட்டுகள் எப்பொழுதும் எனக்கு உவப்பானவை அல்ல. காரணம் முன்பைப் போல அல்லாமல் தோலின் நிறம் பார்த்து வெள்ளைக்காரர் அச்சமடையும் ஒரு இடமாக எயார்போட்டுகள் இப்பொழுது இருக்கின்றன.

நோர்வே எயார்போட் நான் பார்த்த விமான நிலையங்களில் மிகவும் சின்னதாக இருக்கிறது.

சிறப்பு என்னவெனில் முழு எயார் போட்டையும் பலகையால் கட்டி இருக்கிறார்கள். தற்செயலாக நெருப்பு பிடித்தால் கொஞ்ச நேரத்தில் எரிந்து சாம்பலாகிவிடும். அப்படி நினைக்கக் கூடாது. நினைப்பு வருகிறது. ஒன்றும் செய்ய முடியவில்லை.

நோர்வே பொலிஸ்தான் இமிக்கிரேசனில் இருக்கிறார்கள். ஜேர்மனி, சுவிஸ்போல இங்கும் அப்படித்தான். பொலிஸிடம் அந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எனக்கு முன்னால் வரிசையில் ஒரு இந்திய பாஸ்போட்காரி ஒருத்தி நின்று கொண்டிருந்தார். இளம் பெண். அவவில் ஏனோ தெரியாது பொலிஸ் பெண்மணிக்கு சந்தேகம் வந்துவிட்டது.

தனது சுருங்கிய கண்களால் மூக்குக் கண்ணாடிக்கு மேலால் நெற்றியையும் சுருக்கிக் கொண்டு கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டே இருந்தார்.

இப்பொழுது ஸ்ரூடன்மாருக்கு விசா கொடுப்பதனை நோர்வே நிறுத்தி வைத்திருக்கிறது. வரும் மாணவர்கள் யாரும் திரும்பிப் போவதில்லை.

பரந்து விரிந்த பென்னாம் பெரிய பரப்பளவில் வெறுமனே நான்கு மில்லியன் மக்களை மட்டும் நோர்வே கொண்டிருக்கிறது.

பாகிஸ்தானியரும் தமிழரும் நோர்வேயில் நிறைந்திருக் கின்றனர். நிறைந்திருக்கின்றனர் என்றால் 17 ஆயிரம் தமிழர்கள் இருக்கிறார்கள் என்று நண்பர் சங்கர் சொன்னார்.

நோர்வேயில் தமிழர்களுக்கு ஒரு சிறப்பு இருக்கிறது. எப்பொழுதும் நல்ல உழைப்பாளிகள், நாட்டை வளப்படுத்துகிறவர்கள், மூளைசாலிகள் என்று.

தமிழர்கள் ஏனைய ஐரோப்பிய நாடுகளைவிட கிரிமினல் குற்றங்கள் செய்வது குறைவு என்று பாஸ்கரன் சொன்னார்.

ஆனால் நான் அங்கு நின்றபொழுது ஒஸ்லோவில் பல தமிழ்க் கடைகளின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருந்தன. யார் செய்கிறார்கள் என்பது தொடர்பாக எதுவும் தெரியாது என்று சங்கர் சொன்னார். இது இனவாதம் தொடர்பான காழ்ப்புணர்வு என்று உடனடியாகச் சொல்ல

முடியாது என்றும் அவர் சொன்னார்.

தமிழர்கள் நல்ல வேலையில் இருந்து நோர்வே நாட்டினருடன் ஒன்றிப் போய் மிக முக்கியமான மெடிக்கல் போன்ற துறைகளில் கூட இருக்கின்றனர்.

நோர்வேக்கு 1975-ல் முதலாவது தமிழர் இலங்கையில் இருந்து மோட்டார் சைக்கிளில் வந்திருக்கிறார். அது இன்னும் நோர்வேஜியர்களால் பெருமையாக பேசப்படுகிறது. அவர் கரையூரைச் சேர்ந்தவர். அவர் ஒரு ஹீரோவாக நோர்வேயியர்களால் கொண்டாடப்பட்டவர்.

நோர்வே பெண்மணி ஒருவரைக் கலியாணம் முடித்து அவருக்கு 2 பிள்ளைகள், அவர்கள் இரண்டு பேரும் நோர்வேயில் கடற்படையில் வேலை செய்வதாகச் சொன்னார்கள்.

நொஸ்க் மொழியறிவு உள்ளவர்களுக்கும், புத்திசாலிகளுக்கும் நோர்வே வரவேற்பு கொடுக்கிறது.

சரியாக திருகோணமலை மாதிரி ஒரு இடம்தான் நோர்வே. மலைகளும் அதனை ஒட்டிய பெரும் ஆழ்கடலும், தரையும் சேர்ந்த இடம் சுற்றிவர பெரும் கடல். மீன்வளம் நிறைந்த நாடு அது. பெற்றோலியமும் தங்கமும் விளைகின்றன.

மலையும் அதன் அடியில் ஆறுகள் போல பெருங்கடலும் என்னை பேராச்சரியப்படுத்தின.

திருகோணமலை நகருக்கு கிட்டவே பிறிமா தொழிற்சாலைக்கு கப்பல் வந்து நிற்குமே, அதேபோல ஒஸ்லோ தலைநகருக்கு அண்மித்து கப்பல்கள் வந்து நிற்கும்.

இன்னும் 200 வருடங்களுக்கு அவர்களுக்கு பெற்றோலியத்தைத் தோண்டி எடுக்கத் தேவையில்லை. ஸ்ரொக் இருப்பது போதும் என்று அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறதாம். வளம் அவ்வளவு கொள்ளை வளம்.

குட்டி குட்டித் தீவுகளில்பணக்காரர்கள் வாழுகிறார்கள். இங்கு லண்டனில் என்றால் வீடுகள், அடுக்குமாடிகளில் கீழே உள்ள வீடுகளுக்குத் தான் மவுசு அதிகம். நோர்வேயில் மேலே போகப் போகத் தான் விலை அதிகம். காரணம் இயற்கை எழிலை அள்ளி உணர மேலே உள்ள வீடுகளுக்குத்தான் வசதி.

வெயில் வந்தால் மிகவும் சந்தோஷமாக அனுபவிக்கிறார்கள் நோர்வேக்காரர்கள். ஏனெனில் குளிர்தாங்க முடியாத பனிப்பொழிவாக இருக்கும். மலைகள் சூழ்ந்து போன இடங்களில் எல்லாம் பனியின் பொழிவு அதிகமாக இருக்குமாம்.

நான் போனபோது நல்ல வெயிலைத் தந்த இறைவனுக்கும் இயற்கைக்கும் நன்றி. டென்மார்க், சுவீடன், பின்லாந்து என்பன நோர்வேயின் அண்டை நாடுகள். லண்டனை ஒப்பிடும்பொழுது வாழ்க்கைச் செலவு அதிகம் தான்.

லண்டனில் இங்குள்ள உழைப்புக்கு ஏற்ற வகையில் உங்கள் செலவுகளை அமைத்துக் கொள்ளலாம். ஆனால் நோர்வேயில் கடும் உழைப்பு உழைத்தாக வேண்டும். சோம்பேறிகளுக்கு இடம் இல்லை.

பென்னாம் பெரிய பூமியில் 40 லட்சம் பேர் மட்டுமே வாழ்வதால் வாகன நெருக்கடி அங்கு இல்லை. கார்களும் விலை அதிகம். ஒஸ்லோவில் நகரத்தில் போகும் இடம் எல்லாம் நகரசபையினரே சைக்கிளை வினியோகிக்கின்றனர். அதற்கு பதிவு செய்துவிட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டு நகரத்தில் எந்த இடத்தில் என்றாலும் சைக்கிளை விட்டுவிட்டுப் போகலாம். பின்னர் கவுன்ஸில் வாகனம் அதனை எடுத்துக் கொண்டு போய் ஒழுங்குபடுத்தும். சைக்கிள் பயணத்தை ஊக்குவிக்கிறார்கள்.

ஒஸ்லோவில் வாகன பார்க்கிங் கட்டணம் அதிகம். வாகன நெரிசலைக் குறைப்பதற்காக அவர்கள் அப்படிச் செய்கிறார்கள்.

உண்மையில் நெரிசலே இல்லாத ஒரு இடத்தில் சூழலை மாசுபடுத்தக்கூடாது என்று கவனமாக இருக்கிறார்கள்.

இந்த இடங்களை எல்லாம் பார்த்துவிட்டு கொழும்பை நினைக்கும்போது வயித்தைப் பற்றி எரியும். எப்படி அழகான சுற்றிவர கடலுள்ள, மலைகளுள்ள, செல்வச் செழிப்பான பூமியை எவ்வளவு அழகாக ஒழுங்குபடுத்தலாம் இந்த அரசியல்வாதிகள்.

தங்கள் தங்கள் வயிற்றை நிரப்பும் ஊழல் பேய்கள் நிறைந்த பூமியில் பிறந்து தொலைத்தோம். தன்னலம் மட்டுமே கொண்ட அரசியல்வாதிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், ஊழல் பண முதலைகள் கொண்ட இலங்கை எப்பொழுது மற்றைய நல்ல நாடுகள் போல வளரும் என்று நினைக்கும்பொழுது பெருமூச்சுத்தான் வருகிறது. ஒஸ்லோவில் நின்று, சுவிஸில் நின்று, சிங்கப்பூரில் நின்று எனது நாட்டை நினைக்காமல் அகல முடியவில்லை.

இப்படித்தான் 2004-ம் ஆண்டு நான் லண்டனில் அகதி அந்தஸ்த்து வேண்டாம் என்று விட்டுத் திரும்பி வருகிறேன் இலங்கைக்கு. அப்பொழுது விமான நிலையத்தில் இமிக்கிறேஸன் கவுண்டரில் நின்ற ஒரு சிங்களவர் எனது எமர்ஜென்ஸி பாஸ்போட்டை பார்த்துவிட்டு எனது அடையாள அட்டையைக் கேட்டார். அதனைக் கொடுத்தேன். உடனடியாகக் கேட்டார். உன்னிடம் எவ்வளவு பவுண்ஸ் இருக்கிறது. நான் ஆறு வருடங்களுக்குப் பிறகு எமர்ஜன்ஸி பாஸ்போட்டில் வருவதால் உள்ளூர ஒரு பயம் இருந்து கொண்டு இருந்தது. எனது பேஸில் நூறு பவுண் இருந்தது. நூறு பவுண் இருக்கிறது என்று சொன்னேன். அவ்வளவையும் முன்னால் உள்ள டியூட்டி ஃபிறி ஷொப் இல் கொடுத்துவிட்டு வா, வந்து அடையாள அட்டையை வாங்கிக் கொண்டு போ என்றார்.

எனக்கு டியூட்டி ஃபிறி கடைக்காரன் அவருக்குக் கொடுப்பானோ இல்லையோ எனக்கு அடையாள அட்டை கிடைக்குமோ, இல்லையோ என்றெல்லாம் பயம். அடையாள அட்டையைத் தராவிட்டால் வெளியில் ஆமிக்காரன் தூக்கிவிடுவானே என்றெல்லாம் பயம். நூறு பவுணைக் கொண்டு போய் அவரிடம் கொடுத்தேன். ஒரு ரூமுக்குக் கொண்டு போய் அந்தக் கள்வனான இமிக்கிறேஸன் ஓஃபிஸர் எனது காசைப் பறித்துக் கொண்டு எனது அடையாள அட்டையையும், எனது எமர்ஜன்ஸி பாஸ்போட்டையும் தந்தார். இப்படியான கள்வர்களும் ஊழல் பெருச்சாளிகளும் இமிக்கிறேஸனில் இருக்கும் போது என்னதான்

செய்யமுடியாது இலங்கையில்.

கள்வர்களின் கூடாரமாக ஆகிவிட்டதே இலங்கை என்று நான் எண்ணாத நாளே இல்லை. முதலில் இவர்களைப் போன்றவர்களை இல்லாது ஒழிக்கும்வரை எமது நாட்டை ஒன்றும் செய்ய முடியாது.

எங்கு நீர் வளம் இருக்கிறதோ, அந்தப் பூமி செழிப்பாகவே இருக்கும். காடுகளும் ஒரு பெருவளம், நான் பார்த்த இடமெங்கணும் பச்சைப் பசேல் என்று காடுகளும், கண்ணுக்குக் குளிர்ச்சியான நீர் வளமும் நிறைந்து நோர்வே நாடும் அங்குள்ள தமிழர்களும் எனக்கு மிகவும் பிடித்தமானவர்களாக இருந்தனர்.

விமானம் தரையிறங்கியபோது ஆகாயத்தில் இருந்து பார்த்த போதே நோர்வேயின் பசுமை எனது மனதுக்கு மிகவும் பிடித்துப் போனது. இறங்கிப் பார்த்தபின்பு இன்னும் அதன் அழகு மனதில் ஒட்டியபடியே இருக்கிறது. நோர்வேக்கு ஒரு முறையாவது சென்று வாருங்கள் நண்பரே.

# வேலிகள் எப்பொழுதும் எங்களை பிரிக்கின்றனவா?

நல்லவேலிகள் தான் நல்ல அண்டை வீட்டாரை உருவாக்குகின்றன - லடாக் பழமொழி.

இப்படியும் எண்ணத் தோன்றும் சில வேளைகளில், வேலிகள் தான் எங்களைப் பிரித்து கூறு போடுகின்றன. நான் நெடுந்தீவுக்குப் போனபோது கல் வேலிகளைப் பார்த்தேன். கற்களாலான வேலி ஒரு மனிதனின் இடுப்பளவுக்குத் தான் இருக்கும். இடுப்பளவு மறைந்தால் போதும் என்று நினைத்த அம் மக்கள் என்றும் என் மனதில் இருக்கிறார்கள்.

கல் வேலிகளை அதற்கு மேலால் உயர்த்தி அண்டை வீட்டாரை ஏன் மறைக்க வேண்டும் என்று நினைத்திருப்பார்களோ என்னவோ, அந்த மனது எனக்குப் பிடித்திருந்தது.

நல்ல மக்கள் வாழும் பூமி நெடுந்தீவு. மீனவர்களும், விவசாயிகளும், கள் இறக்கும் விவசாயிகளும் வாழும் பூமி அது.

நல்ல பூமியை வெள்ளைக் காரன் தனது சவுகரியத்துக்காக குறுக்கால் ஓடைகளை வெட்டி வாய்க்கால்களை பிளந்து அந்த அற்புதத் தீவை உவர் நிலமாக்கிப் போட்டு வந்து ஹொலண்டில் இருக்கிறான்.

எமது நாட்டை சுரண்டிச் சுரண்டியே எல்லோரும் வாழப் பழகி விட்டனர். இங்கிலாந்துக்காரன் யாழ்ப்பாணத்தில் சாதி ரீதியான பாகுபாட்டை ஏற்படுத்தி அதனை சர்ச்சுகளிலும் பின்பற்ற வைத்து நாசமாக்கினான்.

இங்கு லண்டனில் சமத்துவம், சமதர்மம் என்றும், பெண் விடுதலை என்றும் பேசிக் கொண்டு எங்கள் சின்னச் சின்னக் கிராமங்களின் ஒற்றுமையை நாசமாக்கினான் வெள்ளைக்காரன்.

எங்கள் வேலிகள் எல்லாம் எங்களைப் பிரித்தன. எல்லைக் கோடுகளாக இருந்தன. ஒரு கம்பிக் கட்டைக்காக சண்டை போட்டோம். ஏன், கொலையும் செய்தோம். உறவினர்களை, சொந்தக்காரர்களை, அண்ணன் தம்பியை என்று கொலை செய்தோம். எல்லாம் வேலிச் சண்டைகள்தான் அதிகம்.

வன்னிப் பகுதியில் வேலிகள் எல்லாம் கம்பிக் கட்டைகளாலும், முள்ளுக் கம்பிகளாலும் நிறைந்திருக்கும். வயல் காணிகள் அதிகம் உள்ள பூமிகள் அவை.

யாழ்ப்பாணத்தில் குச்சொழுங்கைகள், வளவுகள், கிளுவை வேலிகளாக இருக்கும். காலையில் அந்த கிளுவை வாசம் மூக்குக்குள் இறங்கும் போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். கிளுவையில் ஒரு குச்சொடித்து வாயில் சப்பி மென்று பல் துலக்கும் முறையே தனிதான். அதன் மணமும் சுவாசமும் அலாதிதான்.

வல்வெட்டிப் பகுதியில் பனை மட்டையால் வேலிகள் வரியப்பட்டிருக்கும். என்ன மணம் பனை மட்டையின், பனம் பழத்தின் வாசம் இந்த இயந்திரத்தனமான நாடுகளில் எங்குதான் கிடைக்கப் போகின்றன. பனங்கூடலின் வாசம் இன்னும் மூக்கில் ஒட்டிக்

கொண்டுதான் இருக்கின்றது.

பிரான்ஸில், லண்டனில், டென்மார்க்கில் எங்கு போய்த் தேடுவோம் நாம் தொலைத்த வாசங்களை. உடுப்பிட்டியில் இருக்கும் போது கிடுகு வேலியில் ஓட்டை போட்டு பக்கத்து வீட்டு கமலராணியின் கையைத் தொட்டது. இன்னும் ஈரமாய் மனதில் இருக்கிறது. காதல் கடிதங்களைப் பரிமாறியது எல்லாம் நினைவுகளில் இருந்து அகல மறுக்கிறது. கிடுகு வேலிகள் காதலர்களுக்கு ஒரு சிம்ம சொப்பனம்தான். ஏனெனில் அதில் ஓட்டை போட்டால் பெரியவர்களுக்கு தெரிந்து விடும். ஏனெனில் பெரியவர்கள் கில்லாடிகள்.

ஒரு வேலிக்கு அடுத்த பக்கம் இருக்கும் வீடுகளில் குமர்கள் இருந்தால் எப்படியோ அந்த கிடுகு வேலி ஒரு ஓட்டையை தாங்கி நிற்கும். எனது அனுபவத்துக்கும் இது பொருந்தும். பகலில் அதனை மறைப்பதும், இரவில் அதனை திறப்பதுமாக இரண்டு வேலை இருக்கும்.

உண்மையில் கிராமத்துக் காதல்கள் எல்லாம் இந்த வேலிகளுக்குள்ளால்தான் மலர்கின்றன. வன்னியில் எங்கள் வீட்டைச் சுற்றி ஐந்து ஏக்கர் வயல், தோட்டக் காணிக்கு கம்பி வேலிதான் போட்டார் எனது பேரன். அடிக்கொருதரம் சுத்தியல், அலவாங்கு, கம்பிக் கட்டை, வளைந்த ஆணி கொண்டு சென்று வேலி திருத்துவதுதான் எமது வேலை.

அம்மையா கெவர் அலவாங்கால் முள்ளுக்கம்பியின் ஒரு முனையைப் பிடிக்க நான் குண்டாணியை கம்பிக் கட்டையில் அடித்து கம்பியடிக்க வேண்டும்.

வேலிகள் தான் மாடுகள் ஆடுகளுக்கான பாதுகாவலன். அல்லது தோட்டமும் வயலும் அவைகளின் வயிற்றுக்குள் போய்விடும். கம்பி வேலிக்குள்ளால் புகுந்து எத்தனை தடவை முதுகு கிளிந்து ரத்தம் வடிந்திருக்கிறது.

சண்டிக் கட்டோடு கம்பி வேலியைக் கடக்கும் போது சாரமும் கிழியும். படாத இடத்திலும் கம்பி குத்தி காயம் வரும். அம்மாவிடம் ஒவ்வொரு நாளும் ஏச்சு வாங்குவோம். எல்லாம் வேலிகளால் வந்த வினைதான்.

வேலி தாண்டி வந்து கால்நடைகளை வெட்டி கொடூரம் காட்டிய கல் நெஞ்சக்காரர்களும் எங்கள் கிராமத்தில் இருந்தார்கள். எங்களிடம் ஒரு கறுப்புப் பசு இருந்தது. அது வேலி தாண்டி மேய்ந்து விட்டது என்பதற்காக யாரோ அதன் வாலை வெட்டிவிட்டார்கள். அன்றிலிருந்து அது 'கூழைவாலி' என்று நாமகரணம் சூட்டப்பட்டு எங்கள் அம்மாவால் அழைக்கப்பட்டது.

வாயில்லா சீவன்களுக்கு தெரியுமா இது செல்லையா அண்ணையின்ர காணி, இது றைவர் ராசனின்ர காணி என்று. ஐந்தறிவு சீவன்களுக்கு வேலியால் கடந்து வரக்கூடாது என்று என்ன தெரியும். அதனுடைய காதை, வாலை, பின்னங்கால் குதியை கத்தியால் வெட்டுகிறவர்களை நான் ஒட்டுசுட்டானில் கண்டிருக்கிறேன்.

உண்மையில் யார் ஐந்தறிவு படைத்தவர்கள் என்று எனக்கே சந்தேகம் வருமளவுக்கு மனிதர்கள் கோபக்காரர்களாக இருக்கிறார்கள்.

வேலிகளுக்குள்ளால் போக முடியாத படி ஆடுகள் மாடுகளுக்கு கழுத்தில் முக்கோண வடிவு தடி கட்டிவிடுவார்கள். புறாப் பொறுக்கி, கம்பர் மலை, நீர் வேலியிலும் பார்த்திருக்கிறேன்.

காதல், காமம், கோப தாபம், கொடுக்கல் வாங்கல், கள்ள உறவு, அடி பிடி சண்டை, கடன், இரவல், மிளகாய்த் தூள், கோடலி, கத்தி, மச்சச் சட்டி, கறிவேப்பிலை, மிளகு, வாழைப்பழம், குழந்தைகள், பாக்கிடிக்கும் உரல், வெற்றிலை, சுண்ணாம்பு என்ற எல்லாமே வேலியால் பரிமாறப்பட்டவை தான்.

என்னை முள்ளியவளையில் வளர்த்தது பக்கத்து வீட்டு அக்காதான். அவ வேலிக்குள்ளால் தான் நான் குழந்தையாக இருந்த போது தூக்கி எடுப்பாவாம். அம்மா செல்லுவா.

வேலிகள் உண்மையிலேயே அற்புதமானவை தான். அது உறவுகளின் பரிமாற்றத்தின் தூண்கள் தான். இன்னும் எமது கிராமங்கள் வேலிகளால் தான் சிறப்புப் பெற்றிருக்கின்றன. வேலி சாதாரணமானது.

ஆனால் இப்பொழுது வந்திருக்கிறதே கல்லு மதில், எல்லா உறவுகளையும் அடைத்துப் போட்டுவிட்டது. ஆத்திரம் அவசரத்துக்கு ஏறவும் முடியாது. இரண்டு ஆள் உயரத்துக்கு போத்தல் ஓடுகளோடு உயர்ந்து போய் உறவுகளை சின்னாபின்னப் படுத்தி நிற்கிறது மதில்கள்.

எந்த ஒட்டும் வேண்டாம் உறவும் வேண்டாம் என்று விட்டு ஆகாசத்தை பார்த்துக் கொண்டு நிற்கின்றன அவைகள்.

நகரங்களில் மதில்கள் தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றன. பெருந்தன்மை, பாதுகாப்பு என்று மனங்கள் கல்லாகிவிட்டதால் கல்லு மதில்கள் தான் பாதுகாப்பு என்றாகி விட்டது.

இங்கு வெளிநாடுகளில் சொல்லவே வேண்டாம். மதில்கள் அல்ல, அவை பெரும் சுவர். இரண்டு வீட்டுக்கும் ஒரு சுவர்தான். ஆனால் பக்கத்து வீட்டுக்குள் யார் இருக்கிறார்கள் என்று தெரியவே தெரியாது.

அவர் கறுப்பரா, வெள்ளையரா என்று கூட சில சமயங்களில் தெரியாது. ஏனெனில் அவரின் வேலை நேரமும் எங்களின் வேலை நேரமும் மாறி இருக்கும்.

நல்ல வேலிகளை இன்னமும் தேடிக் கொண்டிருக்கிறேன். நல்ல அண்டை வீட்டாரை அதுதான் தரும். எல்லாம் சிதைந்து போன எமது நாட்டினில் நல்ல மனிதரே இல்லை. எங்கே போய் நல்ல வேலிகளை தேடுவேன்.

# கன்னிச் சவ்வும் செக்ஸ் சிகிச்சையும்

நேற்று நான் பார்த்த இரண்டு பத்திரிக்கைச் செய்திகள் எனக்கு தொடர்ந்து கலவரத்தைத் தந்து கொண்டிருக்கின்றன.

ஒன்று தமிழ்ப் பத்திரிகையில் வந்த மணமகள் தேவை விளம்பரம். ஜாதியைப் போட்டு, குடும்பப் பாங்கான, சிவந்த நிறமுள்ள, அழகான கன்னி கழியாத கன்னிப் பெண் தேவை என்று அந்த விளம்பரம் இருந்தது.

இந்த விளம்பரத்தில் வந்த கன்னி என்ற சொல் என்னை மிகவும் குழப்பியது. லண்டனில் வைத்துப் பார்த்த இந்த விளம்பரத்தை பிரசுரம் செய்யச் சொன்னவரின் மனநிலை தொடர்பாக நான் குழம்பிப் போகிறேன்.

உண்மையில் கன்னி கழிதல் என்பதற்கான வரைவிலக்கணம் என்ன? என்பது தொடர்பாக யாருமே இதுவரை தெளிவுறச் சொல்லவில்லை.

கற்பை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் வைப்போம் என்று சொன்ன பாரதியின் மனநிலையில் இருந்து பெண்கள் தொடர்பாக ஆண்களின் பார்வையைத் தெளிவாக விளங்கிக் கொள்கிறோம்.

பெண் தேவை விளம்பரத்தில் இவ்வாறு இருக்கும்பொழுது மணமகன் தேவை விளம்பரத்திலும், எந்தப் பெண்ணுடனும் உடலுறவு கொள்ளாத கன்னித் தன்மையுடைய ஆண் தேவை என்று ஏன் விளம்பரம் போடுவதில்லை என்று யாராவது கேள்வி எழுப்புகிறார்களா? அப்படி விளம்பரம் போடுவது எங்காவது உண்டா? ஆனால் கன்னித்தன்மை உடைய பெண்களை மட்டுமேன் சுட்டப்படுகிறது? தமிழர்கள் மத்தியில் இன்னும் இங்கு புலம்பெயர்ந்து வந்ததன் பிறகும் அதியுச்ச படிப்பறிவு உள்ள நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும்போதும் கன்னித் தன்மை தொடர்பாகவே தங்கள் சிந்தனையைச் செலுத்திக் கொண்டிருக்கும் ஆண்களை என்னவென்று சொல்வது.

மாற்று ஆண்களை இச்சிக்காத பெண்களை கலியாணம் முடிக்க வேண்டும் என்ற விருப்பு ஆண்கள் மத்தியில் இருக்கிறதுதான் இந்த விளம்பரம் சுட்டி நிற்கின்ற பொருளா?

அவ்வாறானால் ஒரு மனைவியிடம் எதிர்பார்க்கிற கணவன் தனது கன்னிமையை எப்படி நிரூபிக்கப் போகிறான்?

ஆனால் சேறு கண்ட இடத்தில் மிதித்து, தண்ணி கண்ட இடத்தில் கழுவி விடுவேன் என்று ஆண் நினைத்தால், கன்னிமை என்பது பெண்ணோடு மட்டும் மட்டுப்பட்டுப் போய்விடுகிறதா என்ற கேள்விகள் என்னைத் துளைத்தெடுக்கின்றன.

எல்லாமே கேள்விகளாக மட்டுமே கிடக்கின்றன. சாதிப் பெயரைப் போட்டு பிரிட்டிஷ் பாஸ்போர்ட் உள்ள ஆண், பெண் தேடும் படலம், விளம்பரம் தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கிறது.

கன்னிச்சவ்வு உடைந்து விடாமல் ஒவ்வொரு பெண்ணும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதில் பிரித்தானியாவிலும் அதீத கவனம் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் அல்லவா இருக்கிறாள், ஒரு தமிழ்ப் பெண்மணி.

கன்னிச்சவ்வுக்கு ஆங்கிலத்தில் ழலஅநடீ என்று சொல்லப்படும், ஹைமன் உடைந்துவிடக் கூடிய பல சந்தர்ப்பங்கள் உண்டு. சைக்கிள் ஓட்டுதல், நீளம் பாய்தல், உயரம் பாய்தல் போன்ற விளையாட்டுகளினாலும் சில சந்தர்ப்பங்களில் தானாகவும் கன்னிச்சவ்வு உடைந்துவிடக்கூடும். ஆனால் இது உடைந்துவிட்டால் கற்பு போய்விட்டது என்று ஒப்பாரி வைக்கத் தேவையில்லை. ஆனால் இது இவ்வளவு பெரிய விடயமாக இருக்கிறது தமிழ் ஆண்களிடத்தில்.

முதலில் யூத சமூகத்தினர்தான் கன்னித்தன்மை பற்றிய பரிசோதனை தொடர்பாக ஈடுபட்டதாகத் தெரிகிறது. ஆனால் இப்பொழுது சிங்கள, தமிழ்ச் சமூகம் மத்தியில் இது ஒரு பெரிய விடயமாக இருக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக பல இனக்குழுமங்களிடையே வித்தியாசமான பரிசோதனை முறைகள் இருந்தாலும் சிங்கள சமூகம் மத்தியில்தான் இது மிகவும் மோசமாக அமைந்திருக்கிறது இலங்கையில்.

சிங்கள பௌத்த உயர்சாதி மற்றும் மத்திய தர ஆட்களிடம் கன்னித்தன்மை பரிசோதனை இன்னும் இலங்கையில் இருக்கிறது. சிங்கள உயர்சாதியினருக்கு துணி துவைக்கிற 'ஹேன' சாதியினருக்கு துணி வெளுப்பதோடு, மணமக்களின் முதலிரவின் போது கட்டிலுக்கு வெள்ளைத் துணி விரிப்பதும் மிக முக்கியமான ஒரு வேலையாகும் தொழிலாகும்.

திருமண முதலிரவின் போது முதல் செக்ஸ் உறவின் போது மணப்பெண்ணிடமிருந்து இரத்தம் இந்த வெள்ளை விரிப்பில் பட்டிருந்தால்தான் அந்த மணப்பெண் கன்னித்தன்மையுடையவளாகவும் குடும்ப விளக்காகவும் சிங்கள சமூகத்தால் ஒத்துக் கொள்ளப்படுவாள். அந்தத் துணி விரிக்கும் பெண்ணுக்கு 'றெதி நெந்தா' என்ற பெயரும் உண்டு.

இப்பொழுதும் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள்! சிங்களத் திருமணத்தில் முதலிரவின் பின்னர் இந்த வெள்ளைத் துணியைப் பரிசோதித்துப் பார்க்கும் நிகழ்ச்சி இருக்கிறது. அது இன்றும் இருக்கிறது, நாளையும் இருக்கும். மாறாக ஒரு சடங்காகவே இருக்கிறது இது.

திருமணத் தம்பதியரின் உறவினர்களுடன் 'றெதி நெந்தா' அழைத்துச் சென்று இரத்தக்கறை படிந்திருக்கிறதா என்று வெள்ளை விரிப்புப் பரிசோதனை செய்யப்படும்.

அங்கு மணப்பெண்ணின் இரத்தம் இருந்தால்தான் ''தெவனி கமன'' கால்மாறிப்போதல் என்று தமிழில் சொல்வோமே அது சிறப்பாக அமையும் அல்லது மணப்பெண்ணின் தாய்கூட மணப்பெண்ணை விரும்பாத ஒரு நிலைமைதான் சிங்களவர்கள் மத்தியில் இருக்கிறது.

மணப்பெண் பரிசோதனையில் சித்தியடைந்துவிட்டால் ''தெவனி கமன'' வில் மணமகள் சிவப்பு ஆடை அணிவிக்கப்பட்டு, மாமியார் சிவப்பு பூக்களைக் கொடுத்து வரவேற்பார். மணப்பெண்ணின் பெற்றோருக்கு சிவப்புப் பூக்கள் மணமகனின் தாயிடமிருந்து அனுப்பி வைக்கப்படும். மணமகள் வீட்டுக்கு வரும்பொழுது மணமகனின் தாய் விசேட பரிசு கொடுத்து வரவேற்பாள்.

படுக்கை விரிப்பில் இரத்தக் கறை இல்லாவிட்டால், "தெவனி கமன" விற்கு வெள்ளை நிற சாறி உடுத்தும்படி மணமகள் நிர்பந்திக்கப்படுவாள். மணமகனின் தாய்கூட மணமகளை வரவேற்க மாட்டாள் என்று பல சம்பிரதாயங்கள் இருக்கின்றன.

கன்னித்தன்மையுடைய மணப்பெண் தங்களுக்குக் கிடைக்காததையிட்டு மணமகள் வீடு சோபையிழந்து காணப்படும். முந்திய காலங்களில் இரத்தம் காணாதபோது மணமகள் திருப்பி அவர்களது பெற்றோரிடமே ஒப்படைத்த வரலாறும் உண்டு. ஆனால் இப்பொழுது அப்படி நான் கேள்விப்படவில்லை.

அதுமட்டுமல்ல, கணவன் அவளோடு சேர்ந்து வாழ்ந்தாலும் மனைவியின் கடந்த கால வாழ்வு தொடர்பான சந்தேகத்துடனேயே வாழவேண்டிய நிலைக்கு வந்துவிடுகிறான்.

இது இலங்கை சிங்கள சமூகம் மத்தியில் இருக்கின்ற நடைமுறை.

தமிழ் சமூகத்தில் வெள்ளை விரிப்பு என்ற விடயம் நான் கேள்விப்படவில்லை. ஆனால் தனது மனைவி கன்னித்தன்மையுடன் தன்னைக் கல்யாணம் செய்து கொள்கின்றாளா என்ற சந்தேகம் பல கணவன்மாரிடத்தில் இருப்பது எனக்குத் தெரியும்.

திருமணத்திற்கு முன்பு கன்னித்தன்மை தொடர்பில் அதிகமாக யோசிக்கும் பெண்பிள்ளைகளின் பெற்றோரைப் பார்த்திருக்கிறேன். அது இங்கு புலம்பெயர் நாடுகளிலும் விளம்பரமாக வரும்பொழுது நெற்றிப் பொட்டில் அடித்தது மாதிரி இருக்கிறது.

இரண்டாவது விடயம் நேற்றுக்காலை 'மெற்றோ' பேப்பரில் வந்திருந்தது. மேற்கு லண்டன் பகுதியில் வசிக்கின்ற 54 வயதுடைய 'மோர்சிமோன்' என்ற வெள்ளைக்கார பெண்மணி சொல்லியிருந்தாள். தான் இதுவரை 1500 பேருடன் உடலுறவு கொண்டதாக.

ஆனால் செக்ஸ் வைத்தியத்தின் பொழுதுதான் இந்த உடலுறவை 1500 ஆண்களுடன் செய்ததாக மோர்சிமோன் சொல்கிறார். கணவன் மனைவிக்கிடையில் ஏற்படுகின்ற செக்ஸ் பிரச்சினைகளுக்கு முழுமையான விளக்கம் கொடுப்பதோடு செயல் முறையில் பயிற்சி கொடுப்பதற்காகவே தன்னோடு அவர்கள் உடலுறவில் ஈடுபடுவதாக அவர் குறிப்பிடுகிறார். திருமணம் முடித்தவர்களுக்கு தான் செக்ஸ் பிரச்சினைகள் தொடர்பாக தீர்த்துவைப்பதாகச் சொல்கிறார்.

தான் ஒரு விபச்சாரப் பெண் அல்ல என்று சொல்லும் சீமோன் கடந்த 20 வருடங்களாக செக்ஸ் மருத்துவராக வேலை பார்ப்பதாகக் குறிப்பிடுகிறார்.

மருத்துவ சேவைக்காக செக்ஸ் வைத்துக் கொள்வது சட்டப்படி குற்றமில்லை பிரித்தானியாவில்.

"நான் வழங்கும் அறிவுரைகளுக்காகவும் பயிற்சிக்காகவும் என்னிடம் வரும் நோயாளிகள் பணம் கொடுக்கிறார்கள்.

அவர்களிடம் நான் பணம் வாங்குகிறேன்" என்கிறார் அவர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்களின் செக்ஸ் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு உழைத்திருப்பதாகச் சொல்கிறார் அவர்.

"அந்த ஆண்களின் மனைவிமார்களும் கேர்ள் பிரண்டுகளும் மிகவும்

லாபம் அடைந்திருக்கின்றனர் என்னால்" என்கிறார் சீமோன்.

"எல்லோருடனும் செக்ஸ் வைத்துக் கொள்ள வேண்டிய தேவை வருவதில்லை. இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆண் நே-ாயாளிகளைப் பார்த்திருக்கிறேன். இதில் மனைவியும் கணவனுமாக வருகின்ற தம்பதிகளுக்குப் பயிற்சி அல்லது சிகிச்சை வழங்குவதற்காக மனைவிக்கு முன்பாகவே அவரது கணவருடன் செக்ஸில் ஈடுபட்ட அனுபவமும் உண்டு. அதன் மூலம் செக்ஸில் எப்படி சரியாக ஈடுபட வேண்டும் என்ற மன தைரியத்தையும் பயிற்சியையும் இரண்டு பேருக்கும் கொடுத்திருக்கிறேன்" என்றும் சொல்கிறார்.

"உண்மையில் செக்ஸ் பிரச்சினையைத் தீர்த்து வைப்பவர். மற்றையவர்களை மன மகிழ்ச்சிப் படுத்துபவர் என்ற முறையில் என்னை நினைத்து பெருமைப்படுகிறேன்" என்கிறார் சீமோன். இன்னம் 10 ஆண்டுகள் அவரின் சேவை தொடருமாம்.

இதனை எழுதி முடித்த பிறகுதான் 'கன்னிச் சவ்வும் செக்ஸ் சிகிச்சையும்' என்று தலைப்பிடலாம் என்றும் யோசித்தேன்.

# அலைந்துழலும் தமிழினம்

இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் பொழுது இந்தோனேசியாக் கடற்கரையில் இருந்து அவலக்குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் 260 தமிழர்களின் கண்ணீர் மனதைப் பிழிந்து கொண்டிருக்கிறது. அவர்களின் கண்ணீரைத் துடைக்க எந்தவொரு மேற்குலக நாடுகளும் முன்வரவில்லை.

அகதிகளாக அலைந்து கொண்டிருக்கும் தமிழர் வாழ்வு நீண்டு கொண்டே போகிறது. 'எங்கு போனாலும் சிறப்பு' என்று வாழ்ந்து கொண்டிருக்கிற எம்மினம் எங்கும் போக முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

தமிழர் அகதி வாழ்க்கை தொடங்கி 30 வருடங்களுக்கு மேலாகிறது.

அகதி என்று சொல்வது சுலபம். அந்த வாழ்க்கையை வாழ்ந்து பார்த்தால்தான் அதன் அனுபவம் தெரியும். சிறை வாழ்க்கை ஒரு என்பது ஒரு கொடுமை என்றால் அகதி வாழ்க்கை என்பது வேறொரு கொடுமை.

நாய் குட்டி காவியது போல இருந்த இடத்தை விட்டுவிட்டு மிகவும் அத்தியாவசியமான பொருட்களை மட்டுமே எடுத்துக் கொண்டு, மூட்டை முடிச்சுகளை தலையில் சுமந்து கொண்டு பிள்ளை குட்டிகள், வயதாளிகளோடு ஓடி ஓடி அலைவது என்பது எவ்வளவு பெரிய கொ-டுமை, ஓடிப் பாருங்கள் புரியும்.

எங்களுக்கு நல்ல வீடு இருக்கிறது. காலையில் பைப்பை திறந்தால் தண்ணீர் வருகிறது. முகம் கழுவ, கழிப்பறைக்குப் போக என்று எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொண்டு வாழுகிறோம். காலையில் பாத்ரூமில் பேஸ்ட் முடிந்துவிட்டால் கூட ஒரு வேளைக்கு கைகளால் பல் துலக்க கஷ்டப்பட்டு மனம் சலித்து மனைவிக்கு ஏசுகிறோம்.

காலம் காலமாக இருந்து வாழ்ந்த இல்லிடத்தை விட்டுவிட்டு உயிருக்கு போராடிக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கும் அகதிகளாக நாம் இருக்கிறோம். இந்த அவலத்துக்கு முடிவே இல்லையா என்று தலையிலடித்துக் கொண்டு அழுது கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் ஆறுதல் சொல்ல யாருமே இல்லை.

உள்ளூரில் தங்கள் உடமைகள், வீடுகள், நிலங்கள், வாழ்வு எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு, முகாம்களில் மழையும் சகதியும் நிறைந்த இடங்களில் மலசலம் கழிக்கக்கூட வசதியின்றி தவித்துக் கொண்டிருக்கும் அகதிகள் ஒருபுறம் வாடி வதங்கி உயிரைப் பிழிந்து கொண்டிருக்கும் வேதனையில் இருக்கிறார்கள்.

உயிரை மட்டுமாவது பாதுகாத்துக் கொள்வதற்கு லட்சக்கணக்கில் கட்டி, கடல் வழியாக, விமானம் வழியாக வந்து ஒவ்வொரு நாட்டு போடர்களிலும் கிடந்து உழலுகின்ற தமிழர்கள் மறுபுறமாக விதிக்கப்பட்ட அவலமான அகதி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களின் அவலத்தை என்னவென்று சொல்வது?

வவுனியாவில் இருக்கும் அகதி முகாம்களில் இருந்து பிடித்துக்

கொண்டுபோய்விடுவார்களோ என்று அச்சப்பட்டு தங்கள் பிள்ளைகளை தாய்க்கோழிகள் பருந்திடமிருந்து தங்கள் குஞ்சுகளைக் காப்பாற்றுவது போல காப்பாற்றி லட்சக்கணக்கில் காசைக் கொட்டி ஏஜென்சிகள் ஊடாக அனுப்பக்கூடியவர்கள் அனுப்பிவிட நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் பல தமிழர்கள். உயிரைப் பாதுகாப்பது என்பது எவ்வளவு சிரமமாகிவிட்டது. அச்சத்தை மட்டுமே மனதில் சுமந்து கொண்டு வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம்.

இந்தோனிசியாவில் வந்து கரை ஒதுங்கியிருக்கும் அகதிகள் தொடர்பில் கவனம் செலுத்த யாரும் தயாராக இல்லை. சிறிய ட்றோலர் போட்டிலதான் அத்தனைபேரும் வந்திருக்கிறார்கள்.

முதன்முதலில் கடலுக்குப் போனாலே குடல் பிரட்டி சத்தி வரும். கடல் காத்து எல்லோருக்கும் ஒத்து வராது. நான் இதனை அனுபவித்திருக்கிறேன். கடல் தொழில் செய்த விவசாயி நான். எனக்குத் தெரியும். கடல் காத்து என்ன செய்யும் என்பது.

பிள்ளை குட்டிகளோடு அவுஸ்திரேலியவுக்கு தப்பினோம் பிழைத்தோம் என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வந்த அகதிகளைத் தான் இந்தோனேசிய கடற்படை பிடித்து வைத்திருக்கிறது. அவுஸ்திரேலியா பிரதமர் நேரிடையாகவே சொல்கிறார். 'அவர்களை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்ப வேண்டாம்.. அவர்களை ஏற்றுக் கொள்ள மாட்டோம்' என்று.

ஆனால் இந்தோனேசியா அகதிகளை உள்வாங்கும் எந்த சட்டத்திலும் கையெழுத்து வைக்காத ஒரு நாடு.

ஏற்கனவே அங்கு பிடிபட்டவர்களைக் கூட பராமரிக்க முடியாமல் திணறுகின்ற நாடு. இந்த லட்சணத்தில் இந்த இலங்கைத் தமிழ் அகதிகளையும் உள்ளே எடுக்கும் நிலையில் இந்தோனேசியாவும் இல்லை. அதோடு தமிழர்களும் இந்தோனேசியாவுக்குப் போக விரும்பவில்லை.

அவுஸ்திரேலியாவுக்குப் போக வந்தோம். எங்களை அங்கேயே போக விடுங்கள் என்றே அவர்கள் கேட்கிறார்கள்.

இந்தோனேசியாவில் இருந்து போகவிடாவிட்டால் படகை அப்படியே கொளுத்தி நாங்களும் தற்கொலை செய்து கொள்வோம் என்று மிரட்டினார்கள். உண்ணாவிரதம் இருக்கிறோம் என்று மிரட்டினார்கள். ஆனால் செய்வதை செய்யுங்கள், உங்களை ஏற்கமாட்டோம் என்று அவுஸ்திரேலியா பிரதமர் கெவின் ரூட் திட்டவட்டமாகச் சொல்கிறார். இவர்களை விட்டுவிட்டால் ஆட்கடத்தல் காரர்கள் இன்னும் இன்னும் இலங்கைத் தமிழர்களை பெருமளவில் காசைக் கறந்து கொண்டு அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி விடுவார்கள். இது பணம் கொழிக்கும் ஒரு வியாபாரமாக மாறிவிடும் என்று அவுஸ்திரேலியா பிரதமர் சொல்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கு பொறுப்பான அமைப்பு சொல்கிறது வந்த அகதிகளைக் காப்பாற்ற வேண்டும்.

பெரும் இழுபறியில் இந்த நிலவரம் இருக்கிறது. வாழ்வா சாவா? யார் தங்களை ஆதரிக்கிறார்கள் என்ற எந்த விவரமும் தெரியாமல் அகதிகள் படகில் இருக்கின்றனர்.

இங்கு அகதிகளை உள்வாங்கிய நாடுகளே அகதிகள் விடயத்தில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. ஆயிரக்கணக்கான வழக்குகளை சுமந்துகொண்டு அகதி நீதிமன்றங்கள் தடுமாறுகின்றன என்று பிரிட்டனின் ஹோம் ஒஃபிஸ் சொல்கிறது. இலங்கையில் யுத்தம் இல்லாததை காரணம் காட்டி பிரித்தானிய அரசு அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாகவே தொடர்ச்சியாக சிந்தித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் வவுனியா அகதி முகாம்களில் மக்களை தடுத்து வைத்திருக்கும் அரசின் செயலால் இப்பொழுது திருப்பி அனுப்புவது கொஞ்சம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுதான் முடிந்த முடிவல்ல இங்கு பிரித்தானியாவில்.

அவுஸ்திரேலியாவைப் பொறுத்த அளவில் கடல் மார்க்கமாக அதிகளவிலான அகதிகள் அங்கு செல்வதன் காரணமாக அவுஸ்திரேலியா இப்பொழுது அகதிகள் விடயத்தில் கடும் போக்கைக் கடைப்பிடிக்கிறது.

"இலங்கையில் இருந்து ட்றோலரில் அகதிகள் வருகிறார்கள். அவர்களை தடுத்து நிறுத்துங்கள்" என்று இந்தோனேசியாவுக்கு நேரடியாக சொன்னவரே அவுஸ்திரேலியா பிரதமர் கெவின்ரூட் தான். இது அகதிகள் விடயத்தில் அவுஸ்திரேலியாவின் கடுமைத் தன்மையினை வெளிப்படுத்துகிறது.

இலங்கை நேரடியாக அவுஸ்திரேலியாவுக்கு இப்பொழுது சொல்லிவிட்டது. "இலங்கையில் யுத்தம் முடிந்துவிட்டது. யாரையும் இலங்கையில் இருந்து அகதிகளாக எடுக்கத் தேவையில்லை" என்று. இதுவும் அவுஸ்திரேலியா, அகதிகளை உள்வாங்க மறுப்பதற்கு முக்கிய காரணம்.

அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் வெலகம்பாய இந்த விடயத்தில் தமிழர்கள் அரசியல் அல்லது மனிதாபிமான அகதி அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டியவர்களே இல்லை என்றும், அவர்களை திருப்பி இலங்கைக்கு அனுப்பும் படியும் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்.

சிங்களவர்களுக்குக் கொடுக்கும் சகல உரிமையும் தமிழர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. யுத்தம்தான் முடிந்து விட்டதே என்று அவர் சொல்கிறார்.

ஏற்கனவே மனிதாபிமான அடிப்படையில் நிறைய தமிழர்களை உள்ளுக்குள் எடுத்து விட்டோம். இனியும் முடியாது என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் சொல்கிறது.

அகதிகள் வந்து குவிந்தால் அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவார்கள் என்றும் அவுஸ்திரேலிய அரசாங்கம் சொல்கிறது. 2003 தொடக்கம் 2004 வரையும் 1899 விசாக்களும் அத்தோடு மனிதாபிமான அடிப்படையில் அதே ஆண்டு 676 விசாக்களும், 2007-2008 காலப்பகுதியில் 488 விசாக்களும் கொடுத்துவிட்டதாக அவுஸ்திரேலியா ஹோம் ஒஃபிஸ் சொல்கிறது.

இன்னும் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் இருக்கின்றன. பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்கிறார்கள்.

ஆனால் அகதிகளை இந்த நாடுகள் ஏற்பதும் மறுப்பதும் அரசியல்

விடயங்களில்தான் தங்கியுள்ளது.

பிரித்தானியாவில் தேர்தல் வருகிறது. இப்பொழுது கட்சிகள் கையில் எடுத்திருப்பது அகதிகள் விடயத்தைத்தான். கடந்த 5 வருடத்தில் மட்டும் 77 ஆயிரம் விண்ணப்பங்களை நிராகரித்துவிட்டதாக ஹோம் ஒஃபிஸின் அறிக்கை ஒன்று சொல்கிறது. அதில் இலங்கையர்களும் அடக்கம்.

பிரிட்டன் அரசியலுக்காக அகதிகளை பலியிடக் கூடாது என்று மனித உரிமை அமைப்புகள் சொல்கின்றன.

என்ன சொன்னாலும் அகதிகள் தொடர்பான வழக்குகளை விரைந்து முடித்து அவர்களை நிராகரித்து வீடுகளுக்கு அனுப்பி விட்டோம் என்று எதிர்க்கட்சிக்குக் காட்டவேண்டிய நிலையில் ஆளும் கட்சி இருக்கிறது.

இதில் இங்கு அகதிகளாக அந்தஸ்த்து கோரி இருப்பவர்களுக்கு 5 வருட விசா மட்டுமே கொடுக்கிறார்கள். அவர்கள் வெட்டு கொத்துகளில் ஈடுபடுகிறார்களா? கிரிமினல் குற்றங்களில் ஈடுபடுகிறார்களா என்று பார்க்கிறார்கள்ஏனெனில் உந்த விடயங்களில் தமிழர்கள் வலு விண்ணன்கள். எனவே அதனை அவதானிக்கிறார்கள். 5 வருடத்தில் நல்ல பிள்ளைகளாக இருப்பவர்களுக்கு மட்டுமே அடுத்த ஸ்டேட்ஸ் தொடர்பாக யோசிப்பார்கள். இல்லாவிடில் திருப்பி அனுப்பிவிடுவார்கள்.

அடுத்தது அகதி அந்தஸ்த்து கிடைத்த ஒருவர் கலியாணம் முடித்து மனைவியை இங்கு எடுப்பதிலும் சிக்கல் இருக்கிறது. மனைவியின் விசாவையும் நிராகரிக்கிறார்கள். ஏனெனில் இங்கு வந்து எல்லோரும் இருந்துவிடுகிறார்களே என்று இந்த நாடுகள் பயப்படுகின்றன. உண்மையிலேயே மனம் பொதும்பிப் போகிறது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழன் அகதியாகவே அலைகிறான்.

தமிழன் இல்லாத நாடில்லை. ஆனால் தமிழனுக்கென்றோர் நாடில்லை.

# எங்கள் ஊரும் வீடும் எங்கே?

"**சா**ப்பிட்டு விட்டு இலையில் மீதமிருக்கும் உணவைக் குப்பைத் தொட்டியில் போடாதீர்கள். அது பழுதாகவில்லை. அதனை பசியோடு இருக்கும் ஏழைக்கு கொடுங்கள்" - அன்னை தெரேசா

எனது 7 வயதிலேயே அப்பா இறந்து விட்டார். ஐயாவையும் அம்மாவையும் யாரோ சூனியம் வைத்துப் பிரித்துவிட்டார்கள் என்று தான் அம்மா சொல்லுவா. சிலவேளை இந்தக் காதல் கலியாணத்தில் விருப்பம் இல்லாத அம்மாவின் அண்ணன்தான் செய்திருப்பாரோ என்று அம்மாவுக்கு இன்னும் சந்தேகம்.

இப்பொழுதும் அம்மா அதனைத் தான் நினைத்துக் கொண்டிருக்கிறா. அப்பா அம்மாவை விட்டுவிட்டு போனதன் பிறகு அம்மய்யாதான் எங்களை வளர்த்தெடுத்தார். அம்மாவின் ஐயாவை அப்படித்தான் நாங்கள் கூப்பிடுவோம்.

தங்கச்சி பிறந்த காலம்தான் ஐயாவை எங்களிடம் இருந்து பிரித்து விட்டது என்று எங்கள் ஊர்க்காரர்கள் எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தனர்.

அம்மய்யாதான் எனக்கு எல்லாம் என்றிருந்த காலம் அது. ஐயாவின் பாசம் என்னோடு எப்பொழுதும் இருக்கும் நினைவு. கருவேலன்கண்டல் குணமண்ணையின் தேத்தண்ணி கடையில் தோசையும் சம்பலும் வாங்கித் தந்தது என்று இன்னும் அடிநாக்கில் அந்த ருசியும் தோசையின் மணமும் ஐயாவின் மணமும் அடிமனதில் ஒட்டிப் போய் கிடக்கிறது.

ஐயா இல்லையென்றாகிப் போனபின்பு அம்மய்யாதான் எங்களுக்கு எல்லாமாகிப் போனது. அம்மய்யா படிப்பறிவு இல்லாதவர். ஆனால் மிகப் பரந்த அனுபவ, அரசியல், சமூக அறிவு உடையவர். ஊரில் மிக நல்ல மனிதர். ஒட்டுசுட்டானில் அவரது பெயருக்கும் அவருக்கும் தனி மதிப்பு உண்டு. அவரைத் தெரிந்தவர்கள் எல்லாம் இன்றும் அவருக்காக என்னை மதிக்கிறார்கள்.

என்னை எழுத்தாளர், கவிஞர், அறிவிப்பாளர் ஆக்கியது எது என்று எல்லாப் பேட்டியிலும் கேட்கிறார்கள். எனக்கு குரு யாருமில்லை. என்னை எவரும் ஆகர்சிக்கவில்லை.

உண்மையில் என்னை அருளாமல் கொள்ளாமல் செப்பனிட்டவர் எனது அம்மய்யா என்றுதான் சொல்லுவேன்.

ஆனால் அதற்கு அவர் என்மீது எந்த அதீத முயற்சியும் எடுக்கவில்லை. என்னை ''படி படி" என்று விரட்டவில்லை. என்னை அடிக்கவில்லை. ஒன்றுமே செய்யாத ஒரு விவசாயி அவர்.

அனேகமாக தமிழ் அரசியல்வாதிகளோடு பழக்கம் கொண்டிருந்ததாக சொல்வார். தந்தை செல்வா மீது அதீத பற்றுக் கொண்டிருந்தவர். தந்தை செல்வா தள்ளாத வயதில் ஒட்டு சுட்டான் கோவில் வெளிவீதியில் ஒரு கூட்டத்திற்கு வந்தபோது முள்ளியவளையில் இருக்கும் பண்டாரம் ஒருவருக்கு சொல்லி செல்வா அளவிற்கு ஆளுயர பூமாலை ஒன்று ஒடர் கொடுத்து செய்வித்து இதனை அவரது தள்ளாத வயதில் அவர் கொண்டு போய் போட்டு விட்டு அழகு பார்த்தவர்.

ஒவ்வொரு நாள் விடியற்காலையிலும் ஒட்டுசுட்டானுக்கு புளியங்குளம் வீட்டில் இருந்து நடந்து போய் 'தினபதி' பேப்பர் வாங்கி வந்து வைத்திருப்பார். மாலையில் நான் பள்ளிக்கூடத்தில் இருந்து வந்ததன் பிறகு அவர் ஈஸி செயரில் படுத்துக் கொண்டிருப்பார். அவருக்குப் பக்கத்தில் இருந்து பத்திரிகையின் தலையங்கம் முதல் இறுதிப் பக்கத்தின் கடைசி வரிவரை வாசிக்க வேண்டும். மிகவும் உரக்க வாசிக்க வேண்டும்.

உண்மையில் அந்த அறிவும், இந்த வாசிப்பும் தான் என்னை இந்தளவிற்கு கொண்டுவந்து விட்டதோ என்று இன்னும் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

அவர் வாழ்ந்த, நான் வாழ்ந்த வீடு இப்பொழுது என்னவாகிக் கிடக்கிறது என்று எனக்குத் தெரியாமலேயே போய்விட்டது. ஒட்டுசுட்டானில் இருந்து ஒரு மைல் தூரத்தில் செழிப்பான எனது கிராமம். வாழை வேலி நெடுக போட்டார் அம்மய்யா. ஒவ்வொரு நாளும் வாழைப்பழம் சாப்பிடுவோம், வீட்டோடு சேர்த்து தென்னை மரங்கள், மாமரங்கள், நெல் வயல், தோட்டக்காணி, இரண்டு கிணறுகள் என்று செல்வச் செழிப்போடு வாழ்ந்த மனிதர் நாங்கள்.

அவரும் அப்படித்தான் வாழ்ந்தார். எங்களுக்கான தனிவீடும் இல்லாமலாகிப் போய்விட்டது. தனிநாடு கேட்கப் போய் வந்த வினைதான் இதோ என்று எண்ணத் தோன்றுகிறது. நான் படித்த பள்ளிக்கூடம் இப்ப எப்பிடி இருக்கும்? அம்மய்யா பார்த்துப் பார்த்து கட்டிய வீடு அது என்னவாகி இருக்கும்?

உடைந்து நாசமாகி போயிருக்குமா? அந்த மனிதர் செங்கல்லால் மட்டும் அதனைக் கட்டவில்லை. காலையில் மண்வெட்டியை தோளில் தூக்கினால் பின்னேரம்தான் தோளில் இருந்து அது இறங்கும்.

வியர்வையால் கட்டிய வீடு அது. என் கிராமம் அவ்வளவு அழகானது. குளம் நிறைந்த தண்ணீர், பாடசாலைகள், சுற்றி வர வயல்கள், தோட்டங்கள், நல்ல மனிதர்கள் என்று எல்லாம் மயானமாகிவிட்ட ஒரு பூமியாகி கிடக்கும் இப்பொழுது வெறும்காடு பத்திப் போய் கிடக்கும் இப்பொழுது.

பார்த்துப் பார்த்துக் கட்டிய கிராமத்து உழைப்பாளிகளின் வீடுகள் எல்லாம் என்ன ஆகி இருக்குமோ தெரியாது.

ஒவ்வொரு குச்சு ஒழுங்கையிலும் எனது கால்கள் பட்டுத் திரிந்த காலம் நினைவுக்கு வருகிறது.

வற்றாப்பளை அம்மாள் கோவில் என்னவாகி கிடக்கிறதோ? நந்திக்கடல்தான் அப்பொழுது எங்களுக்கு ஒரு புனித நீர்த்தடாகம். அதில் இருந்து வைகாசி பருவம் நேரம் தண்ணி எடுத்துக் கொண்டு வந்து காட்டு விநாயகர் கோவிலில் தண்ணி ஊத்தி விளக்கு எரிப்பார்கள்.

முல்லைத்தீவுக்கே அது பேரதிசயம். வண்டியில் கட்டி, லொறி பிடித்து, உழவு மெசினில் எல்லாம் பெட்டி நிறைய ஆட்கள் வந்து தண்ணியில் விளக்கு எரியுற அதிசயத்தைப் பார்த்து பரவசப் பட்டுப் போவார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து லொறியில் எங்களது சொந்தம் பந்தம் எல்லாம் வரும். வந்து வைகாசி மாதம் எங்கள் வீடு களை

கட்டிவிடும். வைகாசி காற்று ஒரு கிளுகிளுப்பை மனதில் ஏற்றும். முள்ளிய வளையில் ஒவ்வொரு மணல் ஒழுங்கைகளுக்குள்ளும் கால்கள் புதைய புதைய அந்த பனம்பழ வாசத்தோடும் கிளுவை வாசத்தோடும் நடந்தது இன்னும் அடி மனதில் ஒட்டிக் கிடக்கிறது.

எல்லாம் காடு பத்திப் போய்க் கிடக்கும். என் தெருக்கள் ஒவ்வொன்றும் எனதானவை. ஆனால் இப்பொழுது அவை அன்னியருக்கு சிங்களவருக்கே ஆகிவிடுமோ என்று மனதில் பேரச்சமாக இருக்கிறது.

வற்றாப்பளையில் நின்று பார்த்தால் நந்திக் கடல் ஒரு தேவதையைப் பார்ப்பது போல் பரவசமாயிருக்கும். ஆனால் இப்பொழுது அதுதான் ரத்தம் குடித்த கடலாக கிடக்கிறது.

எமது வாழ்வில் எல்லா அதிசயங்களையும் முடித்து வைத்த ஒரு உப்போடையாக கிடக்கிறது.

இனி அதில் தண்ணி எடுத்து காட்டு விநாயகரிடத்தில் கொண்டு வந்தால் விளக்கெரிந்து அற்புதம் காட்டுமா எனும் சந்தேகம் எழுகிறது.

முழு வாழ்க்கையின் அந்திமத்தை அழித்துவிட்டு இரத்த கடலாகக் கிடக்கிறது நந்திக்கடல். எல்லா வரலாறுகளையும் உடைத்து வீசிவிட்டது யுத்தம். முந்தியென்றால் பண்டார வன்னியன் நினைவுக்கல்லுக்கு கிட்டப்போனாலே ஒரு பரவசம் வரும். ஏனென்று தெரியாத பரவசம். வீரன் அவன் என்று. இப்பொழுது எங்களது கண்ணுக்கு முன்னால் எல்லாம் அழிந்து போய்க் கிடக்குது. பண்டார வன்னியன் ஆண்ட பூமி என்ற பெயர் மட்டுமே வெறுமையாக மனதினில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. முந்தி சங்கிலியன் ஆண்ட பூமி என்று யாழ்ப்பாணத்தை பெருமை பேசி திரிந்தோம். இப்பொழுது எமக்கு எமக்கான எமக்கேயான எங்களுடைய ஒரு துண்டு நிலமாவது சொந்தமாகக் கிடைக்குமோ என்று யோசிக்கக் கூட பயமாக கிடக்குது. நெடுங்கேணியில் காட்டுக்குள் இருக்கிற ஐயனார் கோவிலுக்கு ஒருமுறை போயிருந்தேன். எனக்கு பத்து வயதிருக்கும். காடு முழுக்க தெய்வங்களை வைத்து வழிபட்டவன்தானே தமிழன். எத்தனை பேர் இதனை வாசித்துக் கொண்டிருப்பவர்கள் போய் இருப்பீர்கள். பழைய நினைவுகள் வரும் உங்களுக்கு.

அந்த காட்டுக்குள் ஐயனாருக்கு கிடாய் வெட்டி அன்னதானம் வைத்து சமைத்து சாராயம் படைத்து ஐயனாரை இரவு பகலாக திருப்திப்படுத்திய காலம் அது.

ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் விடலைப் பருவத்து பிள்ளைகளும் என்று காட்டுக்குள் திருவிழா வலு கலாதியாக இருக்கும். ஐயனார் என்றால் பயம் ஒரு பக்கம், மகிழ்ச்சி மறுபக்கமாக ஒரே குதூகலம்தான். வாழ்வு என்பது அதுதான். இப்பொழுது அந்த காடுகளுக்கு அருகில்கூட போகமுடியுமோ தெரியாது.

ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈசுவரர் என்ன ஆனாரோ தெரியாது. இரிகேஷன் டிப்பாட்மெண்ட், முத்தையன் கட்டுக்குளம், ஓட்டுத் தொழிற்சாலை, மானுருவி ஏத்தம், கருவேலன்கண்டல்,

பாடசாலை, கற்சிலைமடு, கள்ளுத் தவறணை எல்லாம் எங்களுடையவை.

ஆனால் இவையெல்லாம் எங்களுக்கு மீண்டும் தருவார்களா? மாட்டார்களா? தருவோம் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள். நிம்மதியாக இருந்து விட்டுப் போகிறோம். தரமாட்டேன் என்றால் நாங்கள் அங்கேயே செத்திருக்கலாம். ஏன் எங்களை உயிரோடு கிடத்தி அணு அணுவாக கொல்கிறீர்கள்.

## ‘சச் கா சாம்னா’ உண்மையை உரித்தல்

‘அந்தரங்கம்’ என்ற சொல்லுக்கான அர்த்தமே உலகில் இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் இப்பொழுதெல்லாம் ரீவீக்களின் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் பொழுது எனக்கு வருகிறது.

அந்தரங்கம் அல்லது ஒரு மனிதரின் தனிப்பட்ட இரகசியங்களை எவ்வளவு தூரம் மற்றவர்கள் தெரிந்து கொள்ள முடியும் என்பதில் என்ன வரையறை இருக்கிறது என்பது குழப்பமான ஒரு விடயம்தான்.

நாங்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குச் சொல்லமுடியாத பல நூறு ரகசியங்களைச் சுமந்து கொண்டு செல்கிறோம்.

அது காமம், காதல், குரோதம், பொறாமை, வாழ்வு, மனைவி, நாம் சம்பந்தப்பட்டது என்று நூறு ரகசியங்கள் எமது மனதில் புதைந்துபோய்க் கிடக்கின்றன.

பெரியவர்கள் அல்லது மதிப்புக்குரியவர்கள் என்று எங்களுடனேயே எங்களது அருகில் வாழ்கிறவர்களிடம்கூட எவ்வளவு வெளியில் சொல்லமுடியாத ரகசியங்கள் புதைந்து போய் கிடக்கின்றன.

அவரின் ரகசியங்கள் அல்லது எங்களது ரகசியங்கள் தொடர்பாக மற்றவர்கள் தெரிந்து விட்டால் எங்களை மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள் என்றொரு அச்சம் இருக்கத்தான் செய்கிறது தொடர்ந்தும் மனதில்.

தங்களது ரகசியங்களை இன்டர்நெட்டில் டயரியாகவே எழுதுகின்ற தமிழ்ப்பெண் மேரிஆன் மோகன்ராஜ். இவர் போன்ற தமிழர்கள் வேறு யாரையும் நான் காணவில்லை. செக்ஸ் வாழ்க்கை போன்ற விடயங்களையும் வெளிப்படையாகச் சொல்பவர்களின் மேரிக்குப் (அமெரிக்கா) பிறகு ஷோபா சக்தியைப் பார்க்கிறேன் தமிழில். ஷோபா சக்தி தனது ‘தமிழ்’ என்ற கதையில் தன்னை முன்னிலைப்படுத்தி தான் உடலுறவு கொண்ட விபச்சாரப் பெண்களில் சிலரை வரிசைப்படுத்தி தெளிவாக எழுதியிருக்கிறார்.

இங்கே பாலியல் தொடர்பான விடயங்கள் மட்டும் தான் அந்தரங்கமா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

அது பெரிய அந்தரங்கமாகவும், ஏனைய பல விடயங்கள் சிறிய அந்தரங்கமாகவும் பார்க்கப்படுகின்றன என்று நினைக்கிறேன்.

இப்பொழுது வாருங்கள்! உங்கள் அந்தரங்கங்களை உரித்துப் போடுங்கள்! ஒரு கோடி ரூபா தருகிறோம்! என்று வடஇந்தியாவில் பிரபல்யமான ஸ்டார் ரீ.வி. அழைக்கிறது.

தமது ரகசியங்களை எல்லாம் சொல்லிவிட்டு பணத்தை அள்ளுவதற்காக பலர் வரிசையில் நிற்கிறார்கள்.

வட இந்தியாவில் மங்களூர் என்ற இடத்தில் பெண்கள் பாருக்குப் போய் பியர், விஸ்கி குடிக்கிறார்கள். மது குடிக்கும் அளவுக்கு இந்தியக் கலாச்சாரம் சீர்கெட்டுவிட்டது என்று இந்தியாவின் இந்து தீவிரவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த குண்டர்கள் பார்களுக்குப்போய் பெண்களை அடித்து நொறுக்குகிறார்கள். பப்புகளில் குடித்துக் கொண்டிருந்த பெண்களை ஓட ஓட விரட்டி அடிக்கிறார்கள்.

அங்கு பெண்கள் பியர் குடிக்க வந்தார்களா அல்லது ஓரேன்ஜ் ஜூஸ் குடிக்க வந்தார்களா என்று தேடிப் பார்க்காமல் எல்லோரையும் அடித்து விரட்டுகிறார்கள். அதனையும் ரீ.வீ.க்கள் ஒளிபரப்புகின்றன. அடிக்கடி ஒளிபரப்புகின்றன.

ரீ.வீ. நிலையங்களுக்கு சொல்லிவிட்டுத்தான் பெண்களை அடிப்பதற்கு காடையர்கள் பொல்லுகளுடன் போயிருக்கிறார்கள். இதுதான் இங்கு விடயம். தாங்கள் கமராவில் இருப்போமே. உலகம் முழுக்கப் பார்ப்பார்களே என்பதற்கு அப்பால் தங்களது செயல்கள் ரீ.வீ.க்களில் ஒளிபரப்பாக வேண்டும் என்பதே அவர்கள் நோக்கம். பெண்கள் கதறி ஓடி வருவதை ரீ.வீ.க்கள் அடிக்கொருதரம் ஒளிபரப்புகின்றன.

தங்களது றேட்டிங்கை உயர்த்திக் கொண்டு விளம்பரதாரரிடம் விலை பேசுவதற்கு ரீவீக்கள் எதுவும் செய்யத் தயாராகி விட்டதையே ஸ்டார் ரீவியின் 'சுயம்வர்' நிகழ்ச்சி காட்டியது.

இந்திய ரீவிக்கள் தங்கள் பரபரப்பையும் விளம்பரதாரர்களையும் விருத்தி செய்வதற்கு இனி எந்த அளவுக்கும் போவார்கள் என்பதற்கு நல்ல உதாரணமாக இருந்ததுதான் 'ராக்கி சாவந்'தினுடைய 'சுயம்வரம்' நிகழ்ச்சி.

கோடிக்கணக்கான உலக ரசிகர்களை தம் பக்கம் 'சுயம்வர்' நிகழ்ச்சியின் மூலம் ஸ்டார் ரீவி ஈர்த்தது.

'ராக்கி சாவந்' என்ற கவர்ச்சி காட்டும் நடிகை தனது மாப்பிள்ளையைத் தேடிக் கல்யாணம் கட்டும் நிகழ்ச்சியின் நேரடி ஒளிபரப்புதான் 'சுயம்வரம்.'

இதனை இலங்கையில் எத்தனை பேர் பார்த்தார்களோ தெரியாது. இந்தியா மற்றும் உலக நாடுகள் இன்னும் 'யு ரியுப்'இல் கோடிக்கணக்கானவர்கள் பார்த்திருக்கிறார்கள் என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

நூற்றுக்கணக்கானவர்கள் ராக்கி சாவந்தை கலியாணம் முடிக்கவும் இந்த ஷோவில் பங்குபெறவும் வந்திருந்தனர். ஆனால் கடைசியில் 15 பேரைத் தெரிவு செய்து அதிலும் பல போட்டிகள் நிபந்தனைகள் போட்டு ராக்கி சாவந்தின் மனதுக்குப் பிடித்தமானவராக இருப்பதற்கு பல டெஸ்ட்டுகள் வைத்து ஒன்றுமில்லாத ஒன்றை பென்னம் பெரிதாக்கிக் கொண்டு போகப் போக எப்பிசோட்டுகள் அதிகரித்து ஒருமாதிரியாக ஒரு ஆணை அந்த நிகழ்ச்சியின் முடிவில் தனது கணவராக அவர் தெரிவு செய்து மோதிரம் மாத்தினார். மணக்கோலத்தில் மாப்பிள்ளையும் ராக்கியும் இருந்தனர். பெரும் பொருட் செலவில் செட் போட்டு செய்யப்பட்ட திருமணம் அது. ஸ்டார் ரீவி போட்ட பணத்தை விட நூறு மடங்கு பணத்தையும் பரபரப்பையும் அள்ளிக் கொண்டு விட்டது. ஆனால் ராக்கி சாவந்த் இப்பொழுது அந்தத் தெரிவு செய்த மாப்பிள்ளையோடு இல்லை என்றே மும்பை பத்திரிகைகள் எழுதுகின்றன. எப்பொழுதும் பரபரப்பாக மீடியாவை தன்னைச் சுற்றியே வைத்திருக்க வேண்டும் என்று விரும்புகின்ற ராக்கியின் மற்றுமொரு விளையாட்டு இந்த 'சுயம்வர்' என்கின்றன பத்திரிகைகள்.

ஆனால் ரம்பா 'சுயம்வர்' நிகழ்ச்சியைப் போல ஒன்றை இங்கே தமிழக ரீவியில் செய்யப்போகிறார் என்ற செய்திக்கு என்ன முகாந்திரம் என்று இன்னும் தெரியவில்லை.

ஸ்டார் ரீவியின் ரகசியங்களை உடைத்துப்போடும் நிகழ்ச்சியின் பெயர் 'சச் கா சாம்னா'. 'உண்மைக்கு முன்னால். . .' என்று அதன் தமிழ். ஹிந்தியில் இது ஒளிபரப்பாகிறது. இந்த நிகழ்ச்சி முதன் முதலில் கொலம்பியாவின் ரீவி ஒன்றில் வந்தது. அதன் பெயர் 'நடா மாஸ் கியூ லா வேர் தாத்' என்பது. பின்னர் அமெரிக்காவில் மிகப் பிரபல்யமான ஷோவாக வந்தது. 'த மூவ்மெண்ட் ஓஃப் ரூத்' என்பது அமெரிக்காவில் ஒளிபரப்பானது.

இப்பொழுது ஸ்டார் ரீவியில் இங்கே லண்டனிலும் இது தெரிகிறது.

'சச் கா சாம்னா' உண்மையை உரித்து உரித்துக் கேட்கும் கேள்விகளை நடிகர் ராஜிவ் கேட்கிறார். திங்கள் முதல் வெள்ளி வரை நடக்கிறது.

நிகழ்ச்சியின் ஆரம்பம் என்னவோ சாதாரணமான கேள்விகளாகத்தான் இருக்கும். ஆனால் காசு கூடக் கூடக் கேள்விகளும் அந்தரங்கத்தினுள் நுழைந்துவிடும்.

நிகழ்ச்சியில் பார்வையாளர்கள், போட்டியாளரின் அம்மா, அப்பா, மாமா, மாமி, மனைவி, கணவன், சகோதரர்கள் என்று எல்லோரையும் மேடையில் உட்கார வைத்து விடுவார்கள். எல்லாம் மனதினில் உள்ள உண்மைத் தன்மை தொடர்பான பரீட்சைதான்.

போட்டியாளர் உட்கார்ந்திருப்பது கதிரை அல்ல. குற்றவாளிகளின் உண்மைத் தன்மையைக் கண்டறியும் 'லை டிடக்டர்' எனும் கருவியின் மீது. 'லை டிடக்டர்'தான் முடிவெடுக்கும். இவர் உண்மை சொல்கிறாரா, பொய் சொல்கிறாரா என்று. மெசினின் முடிவே இறுதியானது. அதற்குத் தான் பரிசு கிடைக்கும்.

ஒரு லட்சம் ரூபா பரிசுக்கான கேள்விகளில் 'நீங்கள் சின்ன வயதில் களவெடுத்திருக்கிறீர்களா?' என்று ஆரம்பிக்கும். ஆனால் 5 லட்சம் ரூபா வரை நீங்கள் போவதற்கு பெரும் சோதனைகளைத் தாண்ட வேண்டும்.

அனிதா என்ற பெண்மணி கடந்த வாரங்களில் இந்தப் போட்டியில் பங்கு பெற்றிருந்தார்.

5 லட்சம் ரூபாவுக்கான கேள்விகள் ஆரம்பித்தன. 'உங்கள் கணவரைத் தவிர வேறு யாருடனும் உடலுறவு கொண்டீர்களா?' என்பது முதலாவது கேள்வி. அம்மா, அப்பா, தம்பி, கணவர் உட்கார்ந்திருக்க இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது.

பணத்துக்காக ரகசியங்களை விற்கும் இந்த நிகழ்ச்சிக்கு ஏன் றேட்டிங் எகிறுகிறது என்பது உங்களுக்கு இப்பொழுது தெரிகிறதா?

அதிரும் இசை, உறவுகளின் முகங்களை குளோசப்பில் காட்டுகிறது கமரா. எனக்கே தூக்கி வாரிப் போட்டது. அனிதாவின் பதில் 'ஆம்' என்று இருந்தது. 'லை டிடக்டர்' பதில் சரி என்றது. இரண்டாவது

கேள்வி 'கணவர் இல்லாத சமயங்களில் உங்களது பாய்பிரண்டோடு ஓடிப்போய் வாழ்ந்தால் நல்லாயிருக்கும் என்று நினைத்தீர்களா?' அனிதா இப்பொழுது அழுகிறார்.

கணவரின் முகம் குளோசப்பில் காட்டப்படுகிறது. அம்மா, தங்கை, தம்பி எல்லோரின் முகங்களிலும் கலவரம். அனிதா 'இல்லை' என்றார். உண்மை கண்டறியும் கருவி 'பொய் சொல்கிறார் அனிதா' என்றது.

அனிதா ஒரு சதம் பணம் இல்லாமல், பொய் சொன்னதற்காக போட்டியில் இருந்து விலக்கப்படுகிறார். அழுது அழுது ஓடிப்போய் கணவனைக் கட்டிப் பிடிக்கிறார்.

கணவன், மனைவி, ரகசியம், அந்தரங்கங்கள் எல்லாவற்றையும் உடைத்துப் போடும் இந்த நிகழ்ச்சிதான் ஹிந்தியில் சக்கை போடு போடுகிறது.

ஆம் அல்லது இல்லை என்பதில் முழு அந்தரங்கத்தையும் 'போலிகிறாப்' மெஷினிடம் ஒப்படைத்துவிட்டு நிர்வாணமாக நிற்கும் உண்மையில் றியலிட்டி ஷோக்கள் என்னத்தைச் சொல்ல வருகின்றன? குழம்பிப் போகிறேன் நான்.

# கோபக்காரர்கள்

லண்டனில் எங்களது வீட்டுக்கு அண்மையில் உள்ள பள்ளி வாசலுக்கு போன வெள்ளிக்கிழமை ஜூம்மா தொழுகைக்காக போயிருந்தேன். பொதுவாக அன்றுதான் பள்ளி வாசல் தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள் தங்களை யார் என்று மற்றவர்களுக்கு தெரியப்படுத்தும் நாள்.

இலங்கையிலும் அப்படித்தான். வெள்ளிக்கிழமை தொழுகைக்கு வெள்ளுடுப்பு உடுத்து முன்னால் நிற்பார்கள். பள்ளி ட்றெஸ்டி என்றால் ஒரு பெருமைதானே.

இங்கு ஜூம்மா தொழுகைக்கு வருகிறவர்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தார் ஒரு வயதான ட்றெஸ்டி. அப்படியே நின்று கொண்டிருந்தவரின் கவனம் உள் கதவு அருகில் வந்து நிற்பவர்களின் மீது விழுந்தது.

"கதவோடை நிற்க வேண்டாம்" என்று உருது மொழியில் சொன்னார். எல்லோருக்கும் தெரியும் எல்லாம் பெரியவர்கள் தானே. மீண்டும் ஒரு முறை சொன்னார் "கதவருகில் நிற்க வேண்டாம்." சரி போய்விட்டார்கள். அடுத்த கூட்டம் வந்து நின்றது. இவர்களுக்குத் தெரியாது அவர் சொன்னது. "கதவோட நிற்க வேண்டாம்" பாகிஸ்தான்காரர்தானே அவர் முகம் சிவந்து விட்டது. கொஞ்சம் காரமாகவே சொன்னார்.

எண்ணை சட்டியில் பொரித்த பணியாரம் போல இருந்தது அவர் முகம். அரை மணித்தியாலமாகக் கத்திக் கொண்டிருந்தார். "கதவுக்குக் கிட்ட நிற்க வேண்டாம்" என்று. ஆனால் வருகிறவர்கள் புதியவர்கள் அவர்கள் என்ன என்று சுதாகரித்து அப்பால் போன பின்பு, வேறு பலர் வந்து நிற்பார்கள். ஜூம்மா தொழுகைக்கு வந்த வண்ணமே இருந்தார்கள் மக்கள். பாங்கு சொல்லும் போதும், கொத்துபா ஓதும் போதும் பேசக்கூடாது என்று நபிகளார் சொல்லியிருக்கிறார்கள். அப்படி பேசினால் பள்ளிவாசலுக்கு தொழ வந்த நன்மையே இல்லாமல் போய்விடும்.

அவர் "கதவுக்கு கிட்ட நிற்க வேண்டாம்" என்று திட்டி திட்டியே அவரின் நன்மை எல்லாவற்றையும் ஒரு கோபக்காரராக இழந்து வெறுங்கையோடு அன்று வீட்டுக்குப் போய் இருப்பார்.

எனக்கு முதலாவது கோபக்காரராக இன்னும் தெரிபவர் அரிவரி (முதலாம் வகுப்பு) வாத்தியார் தில்லையம்பலம்தான். அவரின் கோபம் எமது சுத்துப்பட்டு கிராமும் அறிந்தது. தில்லையம்பலம் வாத்தியாரின் கோபம் காரணமாக ஒட்டுசுட்டான், கூளாமுறிப்பு, கருவேலன்கண்டல், கற்சிலைமடு, முத்தையன் கட்டு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை மட்டும் தெரிந்திருந்தது.

அவர் நல்ல சிமாட்டான மனிசன். ஆனால் அடி என்றால் நெவிள் பறந்த அடி. அதிபர்மார் ஏனைய பொம்பிளை ரீச்சர்மாரோடு கதைக்கும் போது சிரித்து சிரித்து நல்லா கதைப்பார். ஆனால் எங்களைக் கண்டால் மாத்திரம் முகத்தை கம்மாலைக்குள்ளை கிடக்கும் இரும்பு மாதிரி இறுக்கமாக வைத்திருப்பார். ஏதோ அடிக்க போறவர்

மாதிரிதான் வருவார். ஆனால் ஒரு சண்டியனின் தோற்றம் அவரிடம் இல்லை. அவர் மெலிந்து அழகாக இருப்பார். அனேகமாக அவரின் முகம் இறுகியே கிடக்கும் எங்களைக் கண்டால், தில்லையம்பலம் வாத்தியார் எங்கள் பள்ளிக்கூடத்தை விட்டு மாற்றலாகிப் போறார் என்றால் எங்களுக்கெல்லாம் பெருத்த சந்தோஷம். ஆனால் அவர் போற பள்ளிக்கூடத்துப் பெடியன்கள் ஈரல் கருகி நிற்பாங்கள். ஆனால் அவரைத்தான் எங்கள் பெற்றோருக்கும் பிடிக்கும். பிள்ளைகளுக்கு வெறுப்பு. திரும்பத் திரும்ப எங்கள் சுத்துப்பட்டு கிராமத்தை விட்டு வேறு இடங்களுக்கு அவர் போகவேயில்லை. எங்கள் கிராமங்களின் கல்வி தொடர்பான அக்கறை அவருக்கு மிக அதிகமாகவே இருந்தது. ஆனால் சரியான கோபம் எங்களோடு.

அம்மாவின் கோபம் ஊரறிந்தது. நானும் தங்கச்சியும் தான். ஆனால் எனக்குத் தான் எடுத்ததெல்லாத்துக்கும் அடி விழும். ஏன் என்று நான் யோசிக்க முதல் அடி விழும். ஊரில் நான் பெரிய குழப்படிக்கார பிள்ளை இல்லை. சின்னச் சின்ன குழப்படிகள் செய்வேன். எங்கள் அம்மய்யாவின் லெதர் பேர்ஸில் இருந்து இரண்டு ரூபா ஒரு ரூபா களவெடுத்து விடுவேன். எப்படியோ அம்மாவுக்கு மூக்கடி வேர்த்து விடும். அதற்கும் சணல் பறந்த அடி அடிப்பா. குடத்தடியில் மண்குடம் என் கால் பட்டு உடைந்தாலும் அடி. கிணத்துக்குள் வாளி தவறி விழுந்தாலும் அடி.

ஐயா சின்ன வயதில் கோவிச்சுக் கொண்டு போய் விட்டார். அதனால்தான் அம்மா அந்த கோபத்தையெல்லாம் என் மீது காட்டுகிறா என்று ஊர்ச்சனம் சொன்னது எனது காதிலும் விழுந்தது.

ஒரு நாள் பள்ளிக்கூடம் விட்டு வரும்பொழுது வீரப்பழம் புடுங்குற சண்டையில் மணிவண்ணனின் கையைக் கடித்து விட்டேன். கை துண்டாகி விட்டது. நான் வீட்டுக்குப் போக முதல் யாரோ விசயத்தைச் சொல்லிவிட்டார்கள் அம்மாவுக்கு. வீட்டில் புதுக்கம்பு முறித்து அம்மா தயாராக இருப்பா என்று தெரியும் எனக்கு. வீட்டில் புத்தகத்தை வைத்தது தான் தெரியும். அடி என்றால் அப்படி ஒரு அடி.

நான் பிறகு வளர்ந்துவிட்டேன். ஒரு நாள் அம்மா என்னத்துக்கோ அடிக்க வந்தா. நான் ஒரு முறை முறைத்தேன். அதற்கு பிறகு அவ அடிக்கிறதை நிறுத்திவிட்டா.

பிறகு சித்தப்பாவை இரண்டாம் தாரமாக கலியாணம் கட்டிக் கொடுத்தாப் பிறகு அவாவின் கோபம் தணிந்து விட்டது. ஊராக்கள் சொன்னது சரிதான் என்று எனக்கு பட்டது.

ஊரில் சுந்தரலிங்கம் என்றொரு ஓ.ஐ.சி. இருந்தார். அவர் பெரும் கோபக்காரர் என்று பிரபல்யம் பெற்றவர். பிடிக்கிற இயக்கப் பெடியன்களை எல்லாம் அடித்து முறித்து போடுவார். அவரிடம் அகப்பட்டால் எலும்பு முறிந்து தான் வீட்டுக்கு வருவார்கள் பெடியன்கள். அவ்வளவு அடி. ஊரே பயந்து போயிருந்தது.

இயக்கப் பெடியன்கள் அவரைக் கொல்ல வேண்டும் என்றே கங்கணம் கட்டி இருந்தார்கள். அவ்வளவுக்கு உபத்திரவம் அவர். மானுருவியில் வைத்து அவர் சாகக் கொல்லப்பட்டு விட்டார் என்று கேள்விப்பட்ட போது எல்லோருக்கும் சந்தோசம். அவர் இனிமேல்

அடிக்க மாட்டார் என்ற சந்தோசம் தான் அது.

நான் வேலை செய்த அலுவலகத்தில் ஒரு மானேஜர் இருந்தார். அவர் வேலை செய்யும் ஊழியர்களைக் கண்டால் ஏதோ எதிரியைப் பார்ப்பது மாதிரிதான் பார்ப்பார். வேலை செய்பவர்கள் தங்கள் பாட்டுக்கு வேலை செய்து கொண்டிருப்பார்கள்.

கொஞ்சம் சிரித்துக் கதைத்தால் கூப்பிட்டு கேட்பார். "ஏன் சிரித்து கதைக்கிறீர்கள். என்னென்ன வேலை செய்கிறீர்கள் என்று எழுதிக் கொண்டு வாருங்கள்" என்பார். அவருக்காக நான் செய்யும் கிழமை வேலைகள், மாத வேலைகளை ஒரு துண்டில் எழுதியே வைத்திருக்கிறேன். கேட்ட உடனே கொண்டு போய் கொடுத்து விடுவேன். காலையில் போகும் போது எனக்கு அருகால்தான் போவார். ஒரு குட் மோனிங் சொல்ல மாட்டார்.

தனக்கு விருப்பமென்றால் மாத்திரம் சிரிப்பார். சிலரோடு மட்டும் சிரிப்பது என்ற விரதத்தோடு இருப்பார்.

மற்றப்படி முகத்தை வாய் மூடிய ஒட்டகத்தைப் போல வைத்திருப்பார். அவருக்கு இரண்டு முறை ஹார்ட் அட்டாக் வந்திருக்கு. இன்னொரு முறை வந்தால் போய் விடுவார். அவரின் பதட்டம் தான் அவருக்கு எமன். அவரை சிரிக்க வைக்க அவரது மனைவியால் கூட முடியாது என்று மனைவியே ஒரு முறை என்னிடம் சொன்னா. விஸ்க்கி குடிக்கும் போது சிரிப்பார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

சாவகச் சேரியில் நான் கார் பூட்டு திருத்தும் கடை ஒன்றில் வேலை பழகினேன். கனகரத்தினம் அவரின் பெயர். அவர்தான் முதலாளி. அவருக்கும் பெயருக்கும் சம்பந்தமில்லாத தோற்றம் அவருடையது. முகத்தில் முடியிருக்கும் தலையில் இல்லை. அவர் ஒரு கோபக்காரர். பொதுவாக கராஜ்காரர், மெக்கானிக்மார் எல்லோருக்கும் ஒரு வகை கோபக்காரர்கள்தான். எப்படி அவரின் கராஜுக்கு வேலைக்குப் போனேன் என்பது மறந்து விட்டது.

அவர் எடுத்ததெற்கெல்லாம் அடிப்பார். அவர் நல்ல வேலைக்காரர் என்பது ஊரெல்லாம் அறிந்த செய்தி.

ஒரு நாள் ஏதோ செய்து விட்டேன் என்று தலையில் சாவியால் அடித்து விட்டார். தலையில் பெரிய கட்டி வந்து விட்டது. அந்த ஆத்திரத்தில் ஓடுகின்ற யாழ்தேவியில் விழுந்து தற்கொலை செய்து கொள்வோமோ என்று நினைத்தேன். யாழ்தேவி கராஜுக்கு பின்னால் தான் தண்டவாளத்தில் போகும். பிறகு உவருக்காக ஏன் விழுந்து சாவான் என்று நினைத்து விட்டு, ஊரில் குமாரண்ணையின் செத்த வீட்டைச் சொல்லிவிட்டு பையைத் தூக்கிக் கொண்டு சாவகச்சேரியும் வேண்டாம். அவரும் வேண்டாம் என்று கைகழுவி விட்டு வந்து விட்டேன். அதுக்குப் பிறகு 2005-ம் ஆண்டுதான் 25 வருடத்துக்கு பிறகு ஒரு டி.வி. டொக்கியூமன்றி எடுப்பதற்காக போனேன். நான் அடி வாங்கிய அந்த கோபக்காரன் இடம் காடுபத்திப் போய் இருந்தது.

மனைவியை எனது மகன் ஒரே கோபப்படுத்திக் கொண்டே இருப்பான். இதனை ரூமில் வைத்து எழுதிக் கொண்டிருக்கும் போதும் மனிசி ஏதோ சன்னதமாடிக் கொண்டுதான் இருக்கிறது குசினிக்குள்.

தலை முடி வெட்டுதல், குளித்தல், முகம் கழுவுதல், சாப்பிடுதல் எல்லாவற்றையும் மனிசி நினைக்கிற மாதிரி அவன் செய்ய மாட்டான்.

ஒரு உடுப்பை போடச் சொன்னால் அவன் கேட்க மாட்டான். "அம்மாவை கோபப்படுத்தாதேயடா. அம்மா நாங்கள் இருக்கும் வரை அவ ஆரோக்கியமாக இருக்க வேணுமடா" என்று அவனுக்குச் சொன்னால் வலது காதால் கேட்டுவிட்டு இடது காதால் விட்டுவிடுவான்.

மனிசியை சாந்தப்படுத்துவதில்தான் எனது காலம் கரைகிறது. "தகப்பன் எண்டு இருக்கிறியள் நாலு அடி போட்டு உவனை திருத்துங்கள்" என்று என்மீது ஏறி விழும். அவனுக்கு இனி அடித்து, லண்டனில் அவன் திருந்தி...

இப்படித்தான் அவன் சின்னப்பிள்ளை 12 வயது என்றால், அதற்கும் என்மீது ஏறி விழும். சில நேரம் நான் அவனின் ஆய்கினையை தாங்காமல் கத்தினால், "என்ன புள்ளைக்கு ஏசுறியள்" என்று மூஞ்சையை அஸ்ட கோணத்தில் வைத்திருக்கும். எல்லாவற்றையும் ஒரு சிரிப்போடு காலம் கடத்த எனக்கு நல்லா தெரியும்.

# மனைவியின் மரணம்

**உ**ண்மையிலேயே மரணம் உள்ளம் சார்ந்த விடயம். ஒவ்வொரு மரணமும் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு உணர்வுகளைத் தரும். நாங்கள் செல்லுகின்ற மரண வீடுகள் எல்லாமே எங்கள் மனதுக்குக் கவலையைத் தருவனவல்ல. சில மரணங்கள் எங்களை விட்டு அகலாமல் மனதில் ரணமாகவே இருந்து கொண்டிருக்கும்.

நாங்கள் வளர்த்த பசு ஒன்று இறந்து போனதற்காக எனது பேரனார் மூன்று நாட்கள் உண்ணாமல் இருந்திருக்கிறார்.

எங்கள் காலடியைச் சுற்றிக் கொண்டிருக்கும் நாய். வளர்த்த பாசத்தோடு இருந்தது. திடீர் என்று செத்துப் போனால் மனதில் துக்கம் தாளாது அழுது விடுகிறோம். செத்த பிறகு காலில் ஏதாவது தட்டுப்பட்டாலே அது நாங்கள் வளர்த்த ஜீவனோ என்று மனம் தாங்க மாட்டாமல் அழுதுவிடுகிறோம்.

இவ்வாறுதான் பூனை, நாய், பசு என்று வளர்ப்புப் பிராணிகளின் மீது நாங்கள் வைக்கும் பாசம் ஒரு மரணத்தின் மூலம் பிரிக்கப்பட்டால் மனம் பொங்கிப் போகிறது.

பக்கத்து வீட்டுக்காரரின் மரணம் பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில் அவரோடு ஒன்றாக கதை பேசி உண்டு, கழித்து, சிரித்து, மகிழ்ந்து இருந்த காலங்களில் திடீரென்று அவர் மரணித்து விட்டால் மனதுக்கு கஷ்டமாக இருக்கும். வேலியில் இருந்து அவரை சிலநேரம் செத்தப்பிறகும் கூப்பிட்ட அனுபவம் சிலருக்கு இருக்கும்.

சில மரணங்கள் நிகழ்ந்திருக்கவே கூடாது என்று நினைத்திருப்போம். நேற்றிரவு நான் மரணித்துவிட்டதாக மனைவி கனவு கண்டு காலையில் எனக்கருகில் வந்து நின்று கொண்டு புலம்புகிறது. தான் இப்பூவுலகில் இருக்கும்வரை நான் இருக்க வேண்டுமாம்.

அதுமட்டுமல்ல இரவு பூராகவும் அந்தக் கனவு தன்னைக் கலவரப்படுத்தியதாகவும், "ஐயோ இருக்கும் வரை ஏசி ஏசி இருந்தேனே."

அதைக் கேட்டாரே இதைக் கேட்டாரே செய்து குடுத்திருக்கலாமே" என்று கவலைப்பட்டு ஒப்பாரி வைத்து அழுது

அழுது கண்வீங்கி காலையிலும் என்னைப் பார்த்து அழுது கொண்டிருக்கிறது. மனைவியின் ஆசை. நான் சாக முதல் தான் சாக வேண்டும் என்பது. அதுவும் இப்போது இல்லை. நன்றாக வயது போனதன் பிறகு.

மனித ஆசைகள் அவரவர்களுக்கு எவ்வளவு அதிகமானவை. நான் எப்பொழுதும் மனைவிக்கு தொந்தரவு கொடுப்பவனில்லை. மனைவியும் எனக்கு தொந்தரவு கொடுக்கமாட்டாது. ஆனால் தன்னால் எனக்கான காரியங்கள் செய்தது போதாமையுள்ளதோ என்று எண்ணி கனவில் செத்த எனக்காக கதறி அழுதிருக்கிறது மனைவி.

ஒவ்வொருவரின் மனைவிமாரும் கணவன்மாரும் நினைப்பது இதுதான். ஆண்களுக்கு மனைவி செத்துப்போனால் வீட்டு நிர்வாகம் சீர்குலைந்து விடுமே என்ற கவலை. பிள்ளைகளை ஒழுங்காக

பார்த்து அவர்களை கரை சேர்க்க முடியுமா என்ற கவலை தொடர்ந்து கொண்டிருக்கும். அதுவும் பெண் பிள்ளைகள் இருந்து விட்டால் அவர்களின் வாழ்வை ஒப்பேற்றுவது கரைசேர்ப்பது என்று தனி ஒரு ஆணால் முடியுமா? மனைவி செத்துப் போனால் என்ன செய்வது என்ற கவலை ஒவ்வொரு ஆண்கள் மத்தியில் இருக்கும்.

மனைவி அன்பாக இருக்கும் போது ஏதாவது கடுமையான வருத்தம் மனைவிக்கு வந்தாலே ஏதோ தான் கணவரை விட்டு விட்டுப் போகப் போவதாக கற்பனை செய்து கொண்டு அழுது கொண்டிருக்கும் மனைவிமாரை கண்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல தான் செத்துப் போனால் நல்ல ஒரு பொம்பிளையாக பார்த்து கலியாணம் கட்டிக் கொண்டு சந்தோசமாக இருங்கோ என்று இரு கண்களிலும் கண்ணீர் வழிய சொல்லுகின்ற மனைவிமார்களையும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

தனக்குத் தீராத வருத்தம் வந்து செத்துப்போய்விடுமோ எனும் தவிப்பில் கவலையில் தனது கணவனுக்கு இன்னொரு பெண்ணைக் கலியாணம் கட்டிக் கொடுத்துவிட்டு, வருத்தம் சுகமாகி நல்ல தேகாரோக்கியம் வந்த பிறகு இரண்டு பெண்களோடு அவஸ்தைப்படும் ஒருவர் இலங்கையில் இருக்கிறார். எனக்குத் தெரியும்.

அது காலம், சூழல், இடமாற்றம் ஏற்படுத்துகின்ற பிரச்சினைகள். எங்களது சொந்த வீட்டில் ஏற்படுத்துகின்ற மரண நிகழ்வின் மாற்றம் நீண்ட காலத்துக்கு இருக்கும்.

ஒரு மகள் அல்லது மகனின் மரணம் பெரும் அவஸ்தையானது. அவன் துள்ளித் திரிந்த காலம். அவனின் விளையாட்டுப் பொருட்கள், அவனின் அல்லது மகளின் ஆடைகள் எல்லாமே பார்க்கும் போது மனது கிழிந்து இரத்தம் வரும். எல்லாமே துன்பகரமானவை.

வீட்டுக்குள்ளே நடக்கின்ற மரணங்கள் மிகவும் வலியுள்ளதாக இருக்கும். எத்தனையோ பேர் இந்த வலிகளோடு நடைப்பிணமாக அலைந்து கொண்டிருக்கின்றனர்.

நான் சின்ன வயதில் அம்மா செத்துப் போவதாகக் கனவு காண்பேன். ஒரு பெரிய பள்ளத்தில் விழுந்து அம்மா செத்துப் போவா. திடுக்கிட்டு அழுது குழறி தடுமாறினால் அது கனவாக இருக்கும்.

நான் தேசாந்திரியாக அலைவதனால் எனது பதினைந்து வயதுக்குப் பின்னால் எங்களது வீட்டில் நடந்த இரண்டு மரணங்களை எனக்குப் பார்க்க கிடைக்கவில்லை.

ஒன்று எனது பேரனின் மரணம், மற்றது எனது தங்கச்சியின் மரணம். பேரனுக்கு எழுபது வயது தாண்டிவிட்டது.... தங்கச்சி ஒரு வயதுக்கும் குறைவு. இந்த இரண்டு மரணங்களும் எனது வீட்டுக்குள் நிகழ்ந்திருந்தாலும் எனக்கு அவற்றின் வலி தெரியவில்லை. ஏனெனில் நான் இல்லை. கண்ணால் காணவில்லை. எனது நெருங்கிய உறவினர்களின் மரணத்தையும் நான் கண்ணால் காணவில்லை. தப்பித்து வருகிறேனோ என்று நினைக்கிறேன். மனைவியின் அப்பா செத்த போது நான் லண்டனில். மனைவியின் அம்மா செத்த போது

நான் கொழும்பில். ஆனால் மையத்தை எடுத்துவிட்டார்கள். வீட்டுக்கு திருகோணமலைக்குப் போனபோது.

கூட இருந்து, கூட வாழ்ந்து, கூட உணர்வுகளை பகிர்ந்து, கூடவே உடலைப் பகிர்ந்து, இன்பம், துன்பம், சந்தோஷம், களிப்பு, துயர்கள், வேதனைகள், பிள்ளை பெற்று, வாழ்ந்து என்று கூடவே இருக்கின்ற மனைவியின் மரணத்தை அனுபவித்து வேதனைப்படுகின்ற ஒரு நண்பனை அவனின் துக்கத்தை எனக்குத் தெரியும்.

நொறுங்கித்தான் போனான்.

தங்கை, தாய், சகோதரர், பிள்ளைகளின் மரணம் ஏற்படுத்துகின்ற வலியிலும் பார்க்க மனைவியின் மரணம் ஏற்படுத்துகின்ற வலி மிகவும் அதிகமானது.

நெஞ்சடைத்து போகின்ற வலி. கையறு நிலையாகும் வலி. வீடே ஸ்தம்பித்துப் போகும் வலி.

ஆண்கள் தைரியசாலிகள் என்றெல்லாம் சொல்வார்கள். ஒரு வீட்டில் மனைவியின் பங்குதான் முழுவதும். பிள்ளைகள் பிரச்சனை, சமைத்து வக்கணையாக சாப்பாடு போடுவது, வீட்டை நிர்வகிப்பது என்பது ஒரு அலுவலகத்தை நிர்வகிப்பது போல அல்லவே. வீட்டில் எட்டு பேர் என்றால் எட்டுபேரின் சுவை, உணர்வு, மனம் எல்லாம் எட்டுவிதமாக இருக்கும். கணவனுக்கு தெரியாதது எல்லாம் வீட்டில் மனைவிக்குத்தான் தெரியும். கணவன் கொண்டு வருவதை சீர்மைப்படுத்தும் மனைவியின் இழப்பு தாங்க முடியாதது.

மிச்சம் பிடித்தல் என்பது மனைவிக்குத் தானே தெரியும். உறவுகளில் அற்புதமான ஒரு பிணைப்பு மனைவி.

மனைவி செத்துப் போனதன் பின்பும், இப்பொழுது நான்கு வருடமாகியும் தனது பிள்ளைகளை வளர்த்து கஷ்டப்படும் ஒரு-வரை இங்கு லண்டனில் கண்டிருக்கிறேன். அவரிடம் இன்னொரு பெண்ணை மனைவியாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்று அவர்களது உறவினர்கள் இன்றும் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர் முடியாது என்று சொல்லி விட்டார். இரண்டு பிள்ளைகளை தனியே வளர்க்கிறார்.

தன்னோடு வாழ்ந்த காதல் மனைவியின் நினைவுடனேயே வாழ்ந்து கொண்டிருப்பதாக சொல்கிறார்.

உண்மைதான் இரண்டாவது மனைவி என்பவளோடு மனம் ஒட்டாது என்று அவர் சொல்கிறார். தனது மனைவியின் இழப்பை இன்னும் அவர் மனதில் இருத்தி வருத்தப்படுகிறார். கண் கலங்குகிறார்.

ஒரு கணவனின் வாழ்வில் மனைவியின் இடம் நிரப்ப முடியாதபடிக்கே இருக்க, அது அப்படித்தான் ஒரு சொந்தமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது.

அவளோடு இருந்த கதிரை, அவளோடு படுத்த கட்டில், அவளோடு சயனித்த தலையணை, அவளோடு போன இடங்கள், அவளோடு பகிர்ந்த உறவுகள் எல்லாம் மனைவியின் இறப்பினால் துயரங்களாக மாறிவிடுமே.

மனைவி இறந்ததன் பின்னாலும் மனைவியின் பெயரைச்

சொல்லிக் கூப்பிட்டு, "தேத்தண்ணி கொண்டுவா" என்று எத்தனை கணவன்மார்கள் ஏமாந்து போயிருக்கிறார்கள்.

தேத்தண்ணியும் மனைவியும் வராமல்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண்ணின் கணவர் ஒரு வருடத்துக்கு முன்பு செத்துப் போனார். இன்னும் அவள் அழுது கொண்டிருக்கிறாள். கணவனின் வெற்றிடம் அவ்வளவு அகலமானது அவளுக்கு. ஒரு கண-வனாக நான் சொன்னால் ஈடு செய்ய முடியாத இழப்பு என்று சொல்வது மனைவியின் மரணத்துக்கு எவ்வளவும் பொருந்தும்.

சி.மோகனின் கவிதையொன்று மனைவியின் மரணத்தை இப்படிச் சொல்கிறது.

உன் மறைவுக்குப் பின்
நாளின் முதல் நிகழ்வான
காலை விழிப்பு
முன்போல சகஜமாக இல்லை
விழிக்கும் போதே
விழித்துக் கொண்டு
இம்சிக்கிறது
நான் இருக்கிறேன்
என்ற எண்ணம்.

# ஆண் விபச்சாரகர்கள்

உங்களுக்கு இந்தத் தலையங்கமே நெற்றிப் பொட்டில் அறைந்தது மாதிரி இருக்கும். எங்களது ஆணாதிக்க சமூகத்தில் ஒரு ஏற்றுக் கொள்ள முடியாததும், அப்படி இருந்தாலும் பரவாயில்லை எனும் போக்குமே காணப்படுகிறது. ஆண் விபச்சாரம் செய்கிறான் என்பதனை ஆ. . . அப்படியா என்று உலக நியதிகளுக்கு மாற்றமானதும் என்றும் நினைக்க பழக்கப்படுத்திப் போன மனது எங்களுடையது. ஆனால் எல்லா இடங்களிலும் நடக்கிறது. ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், லண்டன் என்றால், ஓ... அது வெள்ளைக்காரர் தானே. அவர்களுக்குள் ஆயிரம் இருக்கும் என்று விட்டு விடும் ஒரு அசண்டையீனம் தெரியும் எங்களில்.

ஆனால் கொழும்பில் சத்தமில்லாமல் ஆண் விபச்சாரம் செய்யும் கட்டழகன்கள் இருக்கிறார்கள். நம்பித்தான் ஆக வேண்டும்.

கொழும்பில் நல்ல கட்டழகான ஆண் ஒரு நாளைக்கு 20 ஆயிரம் ரூபா மட்டில் சம்பாதிக்கும் தொழிலாக இது வளர்ந்து விட்டது.

பணக்கார பெண்கள் மட்டுமல்ல ஓரளவு வசதியானவர்களும் இந்த ஆண்களை பயன்படுத்த துவங்கிவிட்டார்கள் தெரியுமோ?

ஆண் விபச்சாரர்களை சப்ளை செய்யவென்று ஏஜண்டுகள் இருக்கின்றன. எல்லாம் காதும் காதும் வைத்ததுபோல ஒழுங்காக நடைபெறுகிறது.

பெரிய சூப்பர் மார்க்கட்டுகளிலும் ஆண் விபச்சாரர்கள் தனது கஸ்டமருக்காக காத்து நின்றும் வியாபாரம் போகிறதாம். அண்மையில் நல்ல கட்டழகான ஆண் ஒருவனை சந்தித்தேன்.

இந்த சந்திப்பு எதேச்சையாக விமானப் பயணம் ஒன்றில் நிகழ்ந்தது. வத்தளையைச் சேர்ந்த இளைஞன். இலங்கை, கொழும்பு பற்றிப் பேச்சு எழுந்தபோது தான் ஆண் விபச்சாரர்தான் என்பதை தனது உரையாடலில் அவர் வெளிப்படுத்தினார். அதற்காக அவர் வெட்கப்படவில்லை. அது தனது தொழில் என்றும், மணித்தியாலத்திற்கு 5 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் வரை வாங்குவதாகவும் கொழும்பில் இரகசியம் என்று நினைக்கும் பரகசிய தொழில் இது வென்றும் சொன்னார்.

எனது மூளைக்குள் அதற்குப் பிறகு, அவரோடு பேசியதற்குப் பிறகு ஆயிரத்தெட்டு கேள்விகள் நெளிந்து நெளிந்து கொண்டிருந்தன. ஒவ்வொன்றாய் அவரிடம் போட்டுப் போட்டு வாங்கிக் கொண்டிருந்தேன்.

கொழும்பில் கொடி கட்டிப் பறக்கும் ஒரு தொழில் என்றால் செக்ஸ்தான். அதிலும் எனக்குத் தெரிய இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் சீனா, தாய்லாந்து, மலேசியா, கேரளா பெண்களை மூன்று மாதம். ஆறுமாதம் விசாவில் வரவழைத்துத் தொழிலை நடத்துகிறார்கள்.

உள்ளூர் பெண்களும் தாராளமாக இதில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். பெண்களுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு 1500ரூபாவில் இருந்து றேட் மேலே மேலே போகிறது.

அதிலும் பல கிளாஸ்கள் இருக்கின்றன. உள்ளூர் பெண்கள் என்றால் 500 ரூபாவுக்கும் கிடைக்கிறார்கள். ஆண்கள் என்றால் முதலில் மசாஜ் செய்பவர்கள் என்றுதான் அறிமுகமாகிறார்களாம். ஒரு பணக்காரப் பெண்ணை பிடித்துவிட்டால் அவர் ஒரு உறுதியான கஸ்டமர் ஆகிவிடுவாராம். முதலில் ஓயில் மசாஜ். அதற்குத் தனிக்கட்டணம். பிறகு எக்ஸ்ட்ரா வேலைகளுக்கு தனிக்கட்டணம் அளவிடுகிறார்களாம்.

பாதுகாப்பான செக்ஸ் தொடர்பாக ஆண் விபச்சாரர்களும் கஸ்டமர்களும் மிகவும் கவனமாக இருக்கிறார்களாம். ஆண்களுக்கு பெண்களைவிட நின்று பிடிக்கும் தன்மை குறைவாக இருப்பதால் ஆண்கள் அதற்காக பலவிதமான ஸ்பிறே மற்றும் ஓயின்மெண்டுகளை பாவிக்கிறார்களாம். ஏலக்காய் ஒரு நல்ல சாமான் என்று சிரித்தபடியே சொன்னார். ஆனால் இதனை பெண்களுக்கு கொடுக்க வேண்டுமாம். துரிதஸ்கலிதமாகிவிடுமாம். ஆண்கள் ஏலக்காய் தின்றால் அம்போதானாம். பிறகு வேலை செய்ய முடியாது என்றும் அந்த இளைஞர் பல விபரங்களைக் கூறினார்.

முதலில் தானாம் பெண்கள் பயப்படுவார்களாம். பிறகு தங்களது சொந்த வீடுகளுக்கே கணவன் அற்ற சமயங்களில் மசாஜ் பண்ணக் கூப்பிடுவார்களாம்.

இது வாய்வாயாக தொடர்புபடுத்தும் ஒரு தொழிலாம்.

ஒரு ஆணின் வேலைச் சுத்தம், கைங்கர்யம் பார்த்து பெண் கஸ்டமர் தனது தோழிக்குத் தெரிந்தவருக்குச் சொல்லி, அப்படித்தானாம் கஸ்டமர்களைப் பிடிப்பது.

முதலில் ஒரு நல்ல பெண் கஸ்டமர் அம்பிட்டுவிட்டால் அதுவே ஒரு ஆண் விபச்சாரரின் முழு வெற்றியாம். பொதுவாக கணவரின் செக்ஸில் திருப்தி இல்லாத பணக்கார பெண்கள் அனேகமானவருக்கும் இளவயது ஆண்களின் சுகம் தேவையான அனேகமானவர்களுக்கும் சேவை செய்வதே தங்களது தலையாய கடமை என்று அவர் சொன்னார். தான் நல்ல ஸ்ட்ராங்கான 11 கஸ்டமர்களை வைத்திருப்பதாகவும் தனக்கு பணத்துக்கு பஞ்சமே இல்லையென்றும் சொன்னார்.

காலியில் கூட தனக்கு கஸ்டமர் ஒருவர் இருப்பதாகச் சொன்னார். ஒரு நாளில் மூன்று கஸ்டமர்களும் அழைப்பார்களாம். அதனைச் சமாளிப்பது தொழில் ரகசியம் என்று சொன்னார். தனது கை வித்தையின் மூலம் எல்லோரையும் திருப்திப்படுத்த முனைகிறது என்றார்.

சொல்லும்பொழுது தனது வலது கை சுண்டு விரலைக் காட்டினார். உண்மையில் பயணங்கள்தான் எவ்வளவு கற்றுத் தருகிறது.

எமது கலாச்சாரம், பண்பாடு, ஒருவனுக்கு ஒருத்தி, செக்ஸ் ஒழுக்கம் என்றெல்லாம் சிந்திக்கக்கூட நேரமில்லாமல் உலகில் பரந்து கிடக்கும் இன்பங்கள் எல்லாவற்றையும் அள்ளிப்பருகிட வேண்டும் என்ற பேராவலில் எமது ஆண்களும் பெண்களும் அலைகிறார்கள்.

அவர் சொன்னார், பணத்துக்காக முடிந்த கலியாணங்களில், பணக்காரர்களுக்காக முடித்த கலியாணங்களில் செக்ஸும் அன்பும் ஒரு பொருட்டாகவே மதிக்கப்படுவதில்லை என்று அறிவாக அந்த ஆண் விபச்சாரர் பேசினார். பொதுவாகவே வெளிநாடுகளில் கட்டுப்பாடற்ற

தன்மை, மறைவான நேரங்களை, இடங்களை ஒதுக்கக்கூடிய வாய்ப்புகள் என்றும் கணவன் மனைவியை இனங்காணுவதில் அவனுக்குரிய தேவையைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தாமையால் தனது அன்புக்கும் செக்ஸுக்கும் வேறு ஆண் துணையைப் பல பெண்கள் நாடிக் கொண்டிருக்கின்றனர். எனக்கு பலரைத் தெரியும்.

இங்கு பிரான்ஸில் ஒரு பெண்மணி இருக்கிறாள். அவள் எனது நண்பி. அவளின் கணவன் ஒரு தமிழர். பெற்றோல் ஸ்டேசனில் வேலை செய்கிறார்.

அவர்கள் கலியாணம் முடித்து 5 வருடம் ஆகிறது. அவள் இளமையானவள். அவர் கொஞ்சம் வயதானவர்.

அவர்களுக்கு 2 குழந்தைகள். ஆனால் அவரின் செக்ஸ் செயல்பாடுகள் அவளுக்குத் திருப்தியில்லை என்கிறாள். தனக்கென்று ஒருவனை செக்ஸுக்கு வைத்திருக்கிறாள்.

இங்கு பிரச்சினை என்னவென்றால் அன்பு, திருப்தி, செக்ஸ் லைப் என்று ஆண்களும் பெண்களும் புதிது புதிதாக அனுபவிக்க முயலுகின்றனர். புதியது தேடலும் கட்டுப்பாடற்ற சுதந்திரமும் கை நிறைய சம்பாதிப்பதும் எல்லாவற்றையும் அனுபவிக்க வாய்ப்பு கிடைக்கிறது.

இங்கே பிரான்ஸில் ஒரு பத்திரிகை விளம்பரம் பார்த்தேன். ஆண் மசாஜ் செய்பவர்கள் தேவை என்று போட்டிருந்தது. நான் வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருந்தபோது அந்த நம்பருக்கு போன் பண்ணி, "எனக்கு வேலை தாருங்கோ" என்று கேட்டேன். பெயரையும், விலாசத்தையும், டெலிபோன் நம்பரையும் குறித்து வைத்துக் கொண்டு இன்ன திகதிக்கு வாங்கோ என்றனர். போனேன். வாசலில் நின்ற பெண்மணி என்னைப் பார்த்துக் கண்ணடித்துச் சிரித்தார். "இது மசாஜ் வேலைக்கான அழைப்பு" என்றாள். உள்ளே போனால் ஒரு ஆஜானுபாகுவான பெண்மணிதான் வருகிறவர்களை இன்ரவியூ பண்ணிக் கொண்டிருந்தாள்.

என்னைப் பார்த்தவுடன் வயது என்ன என்று கேட்டாள். 41 என்று சொன்னேன். புருவத்தை தூக்கினாள். இது 20 வயது தொடங்கி 25 வயதுக்குட்பட்டோருக்கான வேலை. உயரம், கட்டுமஸ்தான உடல், வண்டி தொந்தி இல்லாத தேகம், பார்க்க முழு வசீகரம் என்று எல்லாம் வேண்டும் என்றாள். நான் அப்படி என்ன வேலை என்று கேட்டேன்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் மசாஜ் செய்ய வேண்டும். சமயா சமயத்தில் கஸ்டமர் கேட்டால் செக்ஸிலும் ஈடுபட வேண்டும் என்றாள்.

எனக்கு தூக்கிவாரிப் போட்டது. அவள் சர்வ சாதாரணமாகவே சொன்னாள். ஒரு வேலைக்கு ஒருவரை எடுப்பதற்கு எப்படிப் பேச வேண்டுமோ அப்படித்தான் அவள் பேசினாள்.

செக்ஸ் வொர்க்கர் என்பது ஒரு சாதாரணமான தொழிலல்ல. உடலை வலிய வைத்து செய்கின்ற தொழில். இது பல ஐரோப்பிய நாடுகளில் அரசால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை, இந்தியாவில் பொலிஸாரின் அங்கீகாரத்துடன் வெகு சிறப்பாக நடக்கிறது.

மசாஜ் செய்யும் இடம் என்ற பெயர்ப் பலகையோடு லண்டனில், ஜெர்மனியில், ஹாலந்தில் என்று அதுதான் தொழில். ஹொங்கெங்கில் வலு அழகாக இருக்குமாம் 'றெட்லைட் ஏரியா.' நான் போகவில்லை. ஆனால் ஹொலன்ட் போயிருக்கிறேன். அங்கு ஷோகேஸுகளில் பெண்கள் இருப்பார்கள். சாறியை தெரிவு செய்வது போல தெரிவு செய்யலாம்.

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விலை. வயதுக்கு ஏற்றவாறு இருக்கிறது. அது ஒரு ரக்ஸ் கட்டும் தொழில் ஐரோப்பிய நாடுகளில்.

விபச்சாரம் என்றவுடன் இப்பொழுது யாரும் பெண்களை விரல் நீட்டிக் காட்டமுடியாது. ஆண்கள் விபச்சாரமும் கொடி கட்டித்தான் பறக்கிறது.

இந்த வாழ்வின் மாற்றங்களைப் பற்றி எமது மூதாதையர்கள் அறியாமலே செத்துப்போனார்கள் பாத்தீர்களா?

# ஐரோப்பாவில் முஸ்லிம்கள் மீதான வன்முறை

**பா**கிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி என்கின்ற முஸ்லிமும், இங்கிலாந்து பிரதமர் கோடன் புறவுன் என்கிற கிறிஸ்தவரும் லண்டனில் நம்பர் ரென் வீட்டில் கைகுலுக்கிக் கொண்டு குசலம் விசாரித்து ஆரத்தழுவிக் கொண்டிருக்கையில் சுவிற்சர்லாந்தில் முஸ்லிம்களின் பள்ளி வாசல்களில் மினராக்கள் இருப்பது பெரும் ஆபத்து போலவும், அவை கிறிஸ்தவர்களை மனம் முழுக்க புண்படுத்துவது போலவும் அதனை உடைக்க வேண்டுமென்றும் ஒரு கருத்துக் கணிப்பை எஸ்.வி.பி. என்ற கட்சி நடத்தியது.

பள்ளிவாசல்களில் பாங்கு (தொழுகைக்கான அழைப்பு) சொல்வதற்காக கட்டப்பட்ட மினராக்கள்தான் கிறிஸ்தவ அடிப்படைவாதிகள் அல்லது சுவிற்சர்லாந்தின் தேசப் பற்றாளர்களுக்கு கண்ணுக்குத் தெரிகின்ற ஒரு பூதமாக இருக்கிறது.

ஆயிரத்து நானூற்று முப்பது வருடங்களாக மினராக்கள் பாங்கு சொல்வதற்கு பயன்படுத்தப்பட்டன. இப்பொழுது மினராக்கள் லவுட் ஸ்பீக்கர் கட்டி பாங்கு சொல்வதற்குத்தான் பயன்படுகின்றன.

ஆனால் இந்த வருடம் மினராக்கள் ஏதோ மிஸைல்களைப் போல தோற்றம் தருகிறதாம் எஸ்.வி.பி. கட்சியினருக்கு.

அதற்கெல்லாம் ஒரு படிமேலே போய் பி.பி.ஸி. செய்திச் சேவையும், தனது செய்தி அறிக்கையில், தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளரின் பின்பக்கத்தில் போடப்பட்ட படத்தில் ஒரு தீவிரவாத முஸ்லிம் முகத்தை கண்ணளவு தெரிய தனது துண்டால் மறைத்துக் கொண்டிருந்தார். மினராக்கள் மிஸையில் (ஏவுகணை) போல கூரானதாக காட்டி இருந்தார்கள்.

இது பி.பி.ஸி. என்னத்தை சொல்ல வருகிறது என்பது தெளிவானது. உண்மையில் இது பார்க்கின்ற பார்வையாளனை மினராக்கள் ஏவுகணையின் மறுவடிவம்தான். எனவே அது பயங்கரவாதத்தின் சின்னம்தான். ஆகவே பள்ளிவாசல்கள் கிறிஸ்தவத்துக்கெதிரானவையே.

அதுமட்டுமல்ல இந்த பயங்கரவாதிகளின் (முஸ்லிம்கள்) சின்னங்களை தாங்கிய பயங்கரவாத கூடங்களை (பள்ளிவாசல்களை) அழிக்க வேண்டும்... இடிக்க வேண்டும்... இனியும் கட்ட விடக்கூடாது என்ற வக்கிரமான, குரோதமான எண்ணத்தை தோற்றுவித்து ஐரோப்பாவில் கனன்று கொண்டிருக்கிற இஸ்லாமிய எதிர்ப்பிற்கு இன்னும் எண்ணை ஊற்றுகின்ற வேலையைத் தான் பி.பி.ஸி. செய்தது செய்கிறது.

மினராக்கள் கட்டுவதனையும் அதனைத் தடுப்பதற்குமான அல்லது ஏலவே இருப்பதனை இல்லாமலாக்குவதற்கான வாக்கெடுப்பு ஒன்றை சுவிற்சர்லாந்தின் எஸ்.வி.பி. கட்சி செய்தபோது அதன் பெறு பேறுகள் தொடர்பாக பி.பி.ஸி. செய்திச் சேவை செய்த முஸ்லிம் எதிர்ப்புக்கான தனது பங்களிப்புதான் அது. ஐரோப்பாவில் தங்களது மத கலாச்சார சுதந்திரத்திற்கான உயிரைக் கொடுக்க வேண்டிய நிலைக்கு இஸ்ல-

ாமியர் இருக்கின்றனர் என்பதுதான் வேதனை.

முகம் மூடி ஃபர்தா போடுவது, தலையில் தொப்பி, தலைப்பாகை, ஃஸ்காா்ப் கட்டுவது என்றும் தாடி வைப்பது போன்ற நபிகளாரின் வழிமுறையை ஒரு முஸ்லிம் பின்பற்றுவதற்கு தனது உயிரைக்கூட தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது என்பதைத்தான் சொல்கிறேன்.

சுவிஸின் எஸ்.வி.பி. என்ற இனவாதக் கட்சியின் கை ஓங்குவது ஐரோப்பாவிற்கு நல்லதல்ல என்று இடதுசாரிகள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

சுவிஸில் நவம்பர் 29ம் திகதி நடந்த வாக்கெடுப்பில் 53 வீதமானவர்கள் மினராக்களால் ஒரு பிரச்சினையுமில்லை, அதனை அகற்றுவது தேவையற்றது என்றும், 37 வீதமான மக்கள் மினராக்களை அகற்ற வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள் என்று எஸ்.வி.பி. கட்சி சொல்கிறது.

இந்த வாக்கெடுப்பு முஸ்லிம் சமூகத்தின்மீது விடுக்கப்படும் அச்சுறுத்தல் இதனை ஏற்கவே முடியாது என்று சுவிஸின் ஆளும்கட்சி சொல்கிறது. மூன்று லட்சம் இஸ்லாமியர்கள் வாழும் சுவிற்சர்லாந்தில் இது ஒரு பெரும் குழப்பமாகவே இருக்கிறது.

ஏற்கனவே பிரான்ஸில் இஸ்லாமிய பெண்கள் பர்தா அணிந்து கொண்டு கல்லூரிகளுக்கோ, பாடசாலைகளுக்கோ, பல்கலைக் கழகங்களுக்கோ வரக்கூடாது என்று தடைவிதித்து இப்பொழுது அந்த விடயம் நடைமுறையில் இருக்கும்பொழுது பெரும் புயலை கிளப்பி விட்டு அடங்கிக் கொண்டிருக்கும் பொழுதே டென்மார்க்கில்

நபிகளார் போல கார்ட்டூன் வரைந்து பத்திரிகை ஒன்று குழப்பிவிட அது குழப்பமாகி அல்லோல கல்லோலப்பட இப்பொழுது சுவிஸில் குழப்பி விட்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் அத்வானி பாபர் மசூதியை இடித்ததாகட்டும், மாவனல்லையில் சிங்களவர்கள் பள்ளிவாசலை உடைத்ததாகட்டும் எல்லாம் முஸ்லிம்கள் மீதான வன்முறையின் கொடூரங்கள்தான்.

ஈராக் மீதான படையெடுப்பு கூட ஒரு சொந்த நாடொன்றின் எண்ணை வளத்தை, ஆக்கிரமிப்புக்காக செய்த படையெடுப்பு என்பதை இப்பொழுது அமெரிக்கர்களே உணரத் தொடங்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல வெளிப்படையாக எழுதியும் பேசியும் வருகின்றனர்.

கடந்த எட்டு வருடங்களாக தொடரும் ஆப்கானிஸ்தான் மீதான யுத்தமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

பாகிஸ்தான் பிரதமர் யூஸுஃப் ரஸா கிலானி லண்டனில் கோடன் பிறவுனின் வீட்டில் வைத்தே சொன்னார்.

பின்லேடன் பாகிஸ்தானில் இல்லை. பிரதமர் கோடன் பிறவுன் தவறாக எண்ணியிருக்கிறார். லேடன் பாகிஸ்தானில் இருப்பதாக அவர் சொன்ன பொழுது கோடன் பிறவுனால் ஒரு நமட்டுச் சிரிப்பைத்தான் சிரிக்க முடிந்தது. பத்திரிகையாளர்களுக்கு முன்பாக 'இல்லை இல்லை உங்கள் நாட்டில் தான் அவர் இருக்கிறார். அவரை உயிருடன் பிடிப்போம். அவர்தான் தாலிபான்களையும் இயக்குகிறார். அவர்களையும் அழிக்கத்தான் இந்த யுத்தம்' என்று பிறவுனால் சொல்லமுடியாமல்

இருந்தது.

ஏனெனில் தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள அடுத்த தேர்தலில் வெற்றிகொள்ள இங்கிலாந்துப் படையினரில் இன்னும் கொஞ்சப்பேர் சாக வேண்டும் ஹெல்மன்ட் மலையில் என்று விதி இருக்கும் போது என்ன செய்யமுடியும். எல்லாம் அரசியல்.

மனிதர்கள் மீதான வன்முறைகள் காலங்காலமாக மனித உயிர்களை எப்படி எல்லாம் காவு கொண்டு அலைகிறது. எல்லா இடங்களிலும் மனிதன் மனிதனை கொன்று கொண்டிருக்கிறான்.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத்தை விமானத்தின் மூலம் தாக்கியவர்கள் முஸ்லிம்கள் என்பதனை மட்டும் வைத்துக் கொண்டு விரிகின்ற வன்முறைகளின் கொடூரம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

லண்டனிலும் அமெரிக்காவிலும் சீக்கியர்கள் மீதான கொலை அச்சுறுத்தலும், கொலை நடவடிக்கைகளும் தொடர்வதாக சீக்கிய அமைப்புகள் சொல்கின்றன.

சீக்கியர்களுக்கு தலைப்பாகையும் தாடியும் கட்டாயமானதாகும். பின்லேடன் தலைப்பாகையும் தாடியும் வைத்திருப்பதனால் சீக்கியரும் பின்லேடனின் உறவினர்கள் என்றுதான் வெள்ளைக்காரர் இன்னும் நினைக்கின்றனர். இதனால் வெட்டக்கூடாத தாடி மயிரையும், தலை மயிரையும், தலைப்பாகையையும் துறந்துவிட்ட பல சீக்கியர்களை இங்கு லண்டனில் நான் காண்கிறேன்.

இந்தியாவுக்குப் போய் தமக்கு எயர்போட்டில் இருக்கும் அச்சத்தை சொல்லியே பல பணக்கார சீக்கியர்கள் பாஸ்போட்டில் தங்களது புகைப்படத்தை மாற்றிக் கொண்டு வந்திருப்பவர்களை எனக்குத் தெரியும்.

ஏதோ முழு முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கு எதிரானவர்கள் என்ற கோஷத்தையே ஐரோப்பிய நாட்டு ஊடகங்களும் வலிந்து செய்கின்றன. எப்படி தமிழர்கள் எல்லோரையும் புலிகள் என்று சிங்கள ஊடகங்கள் இன்னும் சொல்லி வருகின்றனவோ அதேபோலத்தான். இன்னும் நெற்றி நிறைய குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டு கொழும்பில் போக அச்சப்படும் பல பெண்களைப் பார்த்திருக்கிறேன்.

சும்மா கட்டுத்துவக்கை தனது கண்களால் கூட பார்த்து இருக்காத அப்பாவிகள் எத்தனை பேர் தமிழன் என்ற ஒரே காரணத்துக்காக இன்னும் சிறையில் வேதனைப் பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

எத்தனை பெண்கள் விதவைகளாக கிடந்து தினமும் செத்துக் கொண்டிருக்கின்றனர். எத்தனை பெண்கள் மீது பாலியல் வன்கொடுமை நிகழ்ந்திருக்கிறது. ஒவ்வொரு தமிழனிடமும் ஓராயிரம் வன்முறையில் அகப்பட்ட கதைகள் இருக்கும்.

எல்லாம் ஒரு இனத்தின் மீதான வெறுப்பை இன்னொரு இனம் கொட்டித் தீர்ப்பது.

இதுபோலத்தானே சாதிச் சண்டைகளும் இன்னும் தொடர்ந்து கொண்டுதானே இருக்கிறது தமிழகத்தில். இந்தியாவில் எல்லா இடமும். இதற்கு உத்தபுரம் ஒரு நல்ல சாட்சி. ஒரு சாதியினர் இன்னொரு

சாதியினரின் பக்கத்து ஊருக்குள் போகக்கூடாது என்று சுவர்கட்டி வைத்திருக்கிறார்கள்.

ஜெர்மனியில் பேர்லின் சுவர்போல பாலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடைப்பட்ட சுவர்போல உத்தபுரத்திலும் சுவர். மனிதர்கள் மீதான உச்சக்கட்ட வன்முறையின் பாய்ச்சல்தான் இது.

இங்கே லண்டனில் ஃபர்தா போட்டுக் கொண்டுபோன ஒரு பெண்ணைப் பார்த்து வெள்ளைக்கார இளைஞர்கள் காறி உமிழ்ந்திருக்கிறார்கள். அதனை ஒரு தொலைக்காட்சி பேட்டியின்பொழுது அந்த முஸ்லிம் பெண்மணி சொன்னார்.

ஐரோப்பிய நாடுகளின் எயார்போட்டுகளில் எப்பொழுதும் முஸ்லிம் பெயர்கொண்ட பாஸ்போர்ட்காரர்களுக்கு இறுக்கமாகவே இருக்கின்றன.

ஒருமுறைக்கு நான்குமுறை பாஸ்போட்டை செக் பண்ணுகிறார்கள். உலுக்குகிறார்கள். கொஞ்சம் எரிச்சல்படுகிறார்கள் இமிக்கிறேஸனில் உள்ள வெள்ளைக்காரர்கள். ஏதோ வந்தான் வரத்தான் மாதிரி பார்க்கிறார்கள். இதில் கொடுமை என்னவென்றால் இந்தியாவில் இருந்து இங்கு வந்தவர்களுக்குப் பிறந்ததுகள் கூட இமிக்கிறேஸன் ஓஃபிஸராக இருக்கிறவர்களும் தாங்களும் பிரிட்டிஷ் என்று சொல்லிக் கொண்ட மனநிலையில் கறுப்புத் தோல் கொண்ட முஸ்லிம்களை உறுக்கிறதை நேரில் கண்டேன் ஹீத்ரோ எயார்போட்டில்.

இது ஒரு நோய்போலத்தான் இப்பொழுது தொடர்கிறது.
தங்களது பப்ளிசிட்டிக்காக இங்குள்ள இனவாதக் கட்சிகள் இப்பொழுது எடுத்திருக்கிற ஆயுதம், முஸ்லிம்கள், இஸ்லாம் சம்பந்தப்பட்ட விடயங்களைத்தான்.

இவ்வாறு ஏதாவது செய்ய அதனை மீடியாக்களும் ஊதி ஊதிப் பெருப்பிக்க அதுவே அவர்களுக்கு விளம்பரம்தான். ஆனால் இம்முறை எடுத்திருக்கும் தலையங்கம்தான் அபத்தமானது. எவ்வளவு கற்பனையானது. "மினராக்கள் வெள்ளைக்காரனுக்கு எதிரான மிஸைல்கள்." முஸ்லிம்கள் மீதான வெள்ளைக்காரரின் வன்முறைக்கு எத்தனை வடிவங்கள் பாருங்கள். அடுத்தமுறை வேறொன்றைக் கொண்டு வருவார்கள் வெள்ளையர்கள்.

# தமிழன் லண்டனிலும் அகதி

# வவுனியாவிலும் அகதி

எனது வீட்டில் இருந்து கூப்பிடு தூரத்தில் தான் 'ஈட்டன் ஹவுஸ்' இருக்கிறது. இங்கு லண்டனில் 'ஈட்டன் ஹவுஸ்' என்றால் தமிழ் அகதிகளுக்குப் பரிச்சயமான இடம்.

வாரா வாரம் மாதா மாதம் அகதிகள் இங்கு வந்து கையெழுத்துப் போடுவார்கள். கையெழுத்துப் போடுவதே ஒருவகை உளவியல் வேதனைதான்.

போன கிழமை ஒரு குடும்பத்தைச் சந்தித்தேன். 10 வருடமாக ஈட்டன் ஹவுசுக்கு கணவன் கையெழுத்துப் போட வருவதாக சொன்னா. ஒரு முடிவும் சொல்கிறார்களில்லை என்றும் ஆதங்கப்பட்டா. அப்பொழுது மனைவியின் கண்கள் குளமாகி கண்ணீர் உடைந்து விழுந்தது. எனது மனதில் பொட்டொன்று ஒரு வலி.

பெண்ணின் கண்ணீர் கூரிய வாளை ஒக்கும். சரிதான் "ஏன்தான் இப்படி அலைக்கழிக்கிறார்கள்" என்று கணவன் விசனமாக என்னிடம் கேட்டார்.

அகதிகள் விடயத்தில் பிரித்தானியா விழி பிதுங்கிப் போய் இருப்பதாகவே ஈட்டன் ஹவுஸில் வேலை செய்யும் ஒப்பிஸர் ஒருவரை பள்ளிவாசலில் கண்டபொழுது சொன்னார். அவர் இந்தியர், குஜராத்காரர். அவருக்கு இலங்கை அகதிகளின் விடயம் ஒரு பிரச்சனையாக இருக்கிறதே தவிர உணர்வு ரீதியான பிரச்சனை இல்லை.

சிலோன் யுத்தம் எல்லாம் அவர்களுக்கு பேப்பர் செய்திகளும், ரீவி செய்திகளும் தானே தவிர அதன் வலி உணரக்கூடிய நிலையில் இங்கு வெள்ளைக்காரரோ அல்லது அகதிகள் தொடர்பான கேஸ் வேக்கர்களோ அல்லது அதிகாரிகளோ ஏன் சட்டத்தரணிகளோ இல்லை.

தமிழ் சட்டத் தரணிகளை அகதிகள் திட்டிக் தீர்க்கிறார்கள். ஒருவருக்கு அகதி அந்தஸ்து கிடைக்க இரண்டு தரப்பாரும் கடுமையாக உழைக்க வேண்டும். இங்கு இரண்டு தரப்பார் என்றது ஒன்று சட்டத்தரணி மற்றது அகதி.

சட்டத்தரணிகள் அகதிகளிடமிருந்து காசு பறிக்கும் ஒரு தொழிலாகவே இதனை செய்கிறார்களே தவிர மன உணர்வு ரீதியாக தமிழர்கள் என்று பார்க்கிறார்கள் இல்லை என்பது இங்குள்ள அகதிகளின் வாதம். சிலர் அப்படி இல்லை என்பதும் எனக்குத் தெரியும்.

கடந்த வாரம் வவுனியா அகதி முகாமில் இருந்து யுத்தத்தில் தாயையும் தந்தையையும் பறி கொடுத்த 13 வயது பிள்ளையின் உறவினர் ஒருவரோடு கதைத்தேன்.

கூழாமுறிப்பில் இருந்த குடும்பம் ஓடி ஓடி புதுக்குடியிருப்பு பகுதிகளூடாக ஒழிந்து ஒழிந்து காடுகளுக்குள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி கடைசியில் முள்ளி வாய்க்கால் வரை உயிரைத் தாக்காட்டி வைத்திருந்த அம்மாவும் அப்பாவும் துப்பாக்கி குண்டு பட்டு செத்துப் போனார்களாம்.

மிக அண்மையில் துப்பாக்கிளுக்கு நடுவில் இருந்தவர்கள் அவர்கள். 13 வயது மகள் கதிர்காமர் முகாமில் மனம் பேதலித்த படியே இருக்கிறாளாம்.

தின்கிறாள் இல்லை. குடிக்கிறாள் இல்லை. ஒரே யோசனையில் இருக்கிறாளாம். சிலநேரம் கண்ணீர் அவளின் கண்களில் இருந்து தா-னாக வழிகிறதாம். "என்ன கொடுமை செய்தோம்?" என்று சொல்லி அந்தப் பிள்ளையின் உறவினர் ஒருவர் லண்டனில் இருந்து கொண்டு அழுகிறார்.

அகதிகள் வாழ்வு நீண்டு நெடியதாய் இருக்கிறது. அண்மையில் அடைக்கலநாதன் எம்.பி., கிஷோர் எம்.பி., போன்றவர்கள் துணுக்காய் பகுதிக்குப் போய் விட்டு வந்திருக்கிறார்கள். துணுக்காய், மல்லாவி, ஒட்டுசுட்டான் பகுதியில் இப்பொழுது மீள் குடியேற்றம் இடம் பெற மாட்டாது என்று சொல்கிறார்கள் அவர்கள். பரந்த வன்னிப் பகுதியில் வாழ்ந்த மக்களில் செத்துப் போனவர்கள் போக மீதியாக உள்ள மூன்று லட்சம் பேரும் வடக்கு கிழக்கின் அகதி முகாம்களில் தொடர்ந்தும் அகதிகளாகவே இருக்கின்றன. இந்த அவலமான வாழ்க்கை தமிழருக்கு விதிக்கப்பட்ட வாழ்வுதானாக்கும்.

"ஊரோடு போய் வாழ்வதற்கும் இன்னும் துணிச்சல் வருகுதில்லை" என்று ஈஸ்ட்ஹாம் பகுதியில் சந்தித்த அகதி ஒருவர் சொல்கிறார். அவர் இங்கு வந்து ஒன்பது வருடங்கள் ஆகின்றன. வழக்கை எடுக்கிறார்களில்லை என்று புலம்புகிறார் அவர்.

அகதி வாழ்வு இங்குள்ள லண்டன் தமிழ் ஏழைகள் மத்தியில் பெரும் வாழ்வு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது.

உண்மையில் ஏன் இந்த விடயத்தை அழுத்தி சொல்கிறேன் என்றால் லண்டனில் இருக்கும் எல்லோரும் பணக்காரர்கள் என்ற நினைப்பு சிலோனில் உள்ள உறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருக்கிறது. அந்த நினைப்பை இந்த நிமிடத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்பதற்காகத்தான் அப்படி சொன்னேன்.

வாழ்வோ அகதி, இரண்டு மூன்று வேலை செய்து மாடு மாதிரி உழைத்து நாலு பணம் சம்பாதிக்க ஊரில் உள்ளவர்கள் ஒரு தொலைபே-பசி அழைப்பில் ஒரு லட்சம் அனுப்பு இரண்டு லட்சம் அனுப்பு என்று கேட்டு விடுகிறார்கள்.

அது மட்டுமல்ல எங்கோ ஒரு தூரத்து உறவுக்கார பிள்ளைக்கு கலியாணம் அவளுக்கு தாலி செய்ய காசு அனுப்பு, ரிசப்சன் செய்யக் காசு அனுப்பு என்று நச்சரிக்கிறார்கள்.

இங்கு லண்டனில் உள்ளவர்களும் ஏதோ சீமையில் இருக்கிற நினைப்பில் அங்கு இங்கு கடன்பட்டு வங்கியில் கடன் பட்டு சீரழிந்து போயிருக்கிறார்கள்.

எனது நெருங்கிய நண்பன் ஒருவன் ஊரில் கேட்கும் நேரமெல்லாம் பணம் கொடுத்துவிட்டு இப்பொழுது உடைந்து நொறுங்கிப் போய் இருக்கிறான்.

பெண்சாதியின் உறவினர்கள் அகதியிடம் பணம் கேட்பார்கள். ஏதோ முந்தி கொடுத்து வைத்தவர்கள் போல.

அவனும் பெருமைக்குக் கொடுத்துவிட்டு அல்லாடிக் கொண்டிருக்கிறான்.

இப்பொழுது அகதிகளுக்கு 5 வருட விசாதான் கொடுக்கிறார்கள். அது முடிய என்ன செய்யப் போகிறார்களோ தெரியாது.

"வவுனியா அகதி முகாமில் இருக்கும் எனக்குத் தெரிந்த ஒருவரோடு பேசினேன். ஊரோடை போக விடமாட்டாங்கள் போலத்தான் கிடக்குது தம்பி. எனக்கு இழப்பதற்கு இனி ஒண்டுமில்லை" என்கிறார் அவர். அவரது கண்ணுக்கு முன்னால் அவரது மனைவி ஷெல் விழுந்து உடல் சிதறிப் போனதை இன்னும் சொல்கிறார்.

மனிதர்களாக நடமாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாங்கள் சவங்கள்தான் என்கிறார் அவர்.

உண்மைதான் மனம் நொறுங்கிப் போய் இருக்கும். அவரின் ஒரே மகளை ஆமிக்காரங்கள் விசாரணைக்கு என்று கூட்டிப் போனவர்கள் இன்னும் விடவில்லை.

தேடித் தேடி களைத்துப் போனார் அவர். வெளியில் விட்டவர்கள் என்று சொல்லப்பட்டவர்களும் உறவினர்கள் தெரிந்தவர்களின் முற்றங்களில் கொட்டிலைப் போட்டுக் கொண்டு இருக்கின்றனர். உந்த வாழ்க்கை என்னத்துக்கு என்று சலித்துக் கொண்டார் அவர்.

இனி வாழ்வதில்தான் என்ன பிரயோசனம் இருக்கிறது என்று நொந்து போயிருக்கிறவர்கள் தான் அதிகம். இருந்த வீடு, வருமானத்தின் தோட்டம் வயல்கள், ஆடு மாடு, கோழி என்று எல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டு வாழ்வை அடுத்த நாட்டில் எப்படி வாழ்ந்து தொலைப்பது என்று மனம் உடைந்து போன அவரின் கவலை சொல்லி மாளாதது.

"முல்லைத்தீவு பகுதியில் என்ன செல்வாக்காக சீமா-னாக இருந்த நான் இப்பொழுது தோளில் போட்டுக் கொள்ள ஒரு சால்வைகூட இல்லாமல் பிச்சை எடுக்க வேண்டியிருக்கிறது தம்பி.

இனியும் ஏன் இந்த அகதியாய் வாழ வேணுடா. ஏதாவது மருந்து கிருந்தை குடிச்சு செத்துப் போகலாம்போல கிடக்குது தம்பி. அனேகமாக வெகு விரைவிலை நான் தற்கொலை செய்து கொண்டு விடுவேன்" என்கிறார் அவர்.

தொலைபேசியில் பேசிய நான் அவருக்கு என்னத்தை சொல்ல? வாயடைத்து நின்றேன். "இல்லை தற்கொலை செய்யாதீங்க" என்று சொல்லவோ அல்லது "உங்களுக்கு நல்ல வாழ்க்கை எதிர்காலத்தில் அமையும்" என்றோ அல்லது "எதிர்காலத்தில் நல்லாட்சி சிலோனில் வந்து நீங்கள் கண்கலங்காமல் வாழலாம்" என்றோ எந்த ஆறுதலையும் என்னால் சொல்ல முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன். இது ஒரு கையாலாகத தனம்தான் என்னது. "தனி ஒருவனுக்கு உணவில்லை என்றால் செகத்தினை அழிக்கும்" துணிவு என்னிடம் இல்லை என்பது எனக்குத் தெரியும்.

அழிவு, அழித்தல், கொல்லுதல், கைது செய்தல், சிறையில் தள்ளுதல் என்ற அரசாட்சியின் கீழ் என்னத்தை செய்து தொலைக்கலாம் மனித உயிருக்கும் உணர்வுக்கும் என்ன மதிப்பு இருக்கிறது சிலோனில்.

பணக்காரர்கள் கொழுத்துக் கொண்டே போகிறார்கள்; கொள்ளையர்கள் கொள்ளையடிக்கிறார்கள்;

ஊழல் செய்கின்றவர்கள் ஊழல் பெரு முதலைகளாக இருக்கின்றனர். மனித வாழ்வில்,மனித வாழ்வு அகிம்சை, மனித உணர்வு தொடர்பாகவும், உரிமைகள் தொடர்பாகவும் யாரும் சிந்திக்கத் தயாராக இல்லாத பொழுது அந்த மனிதனை தற்கொலை செய்யாதே என்று சொல்வதற்கு எனக்கு எந்த வழியும் தெரியவில்லை. எனக்கு மனம் நெருடியபடியே இருக்கிறது அந்த அகதி தமிழனை எண்ணி.

லண்டனில் அகதி வாழ்வு பல குடும்பங்களில் ஆயிரம் பிரச்சனைகளை அள்ளிக் கொண்டு வருகிறது.

எனக்குத் தெரிந்த தமிழ் அகதி ஒருவர் தமிழகம் போய் தடல் புடலாக கலியாணம் முடித்துவிட்டு வந்தார். அவரின் மனைவி கொழும்பில் இருக்கிறார். நல்ல பொடியன். அவனுக்கு 5 வருட விசா கொடுத்தார்கள். இன்னும் இரண்டு வருடம்தான் மீதி இருக்கிறது. அந்த அகதி விசா முடிவதற்கு.

இப்பொழுது மனைவியை கொழும்பில் இருந்து எடுப்பதற்கு விசாவுக்கு அப்ளை பண்ணினால் ரிஜக்ட் பண்ணிவிட்டார்கள். காரணம் இவரின் விசா தொடர்பாக சமுசியமாம் அங்குள்ள விசா ஒபிஸருக்கு.

இப்பொழுது இலங்கைகாரருக்கும் சென்னையில்தான் இங்கிலாந்து விசா கொடுக்கிறார்கள். இனி அப்பீல் அது இது என்று ஒரு வருடம் இழுபடும். அப்போதும் கொடுக்கிறார்களா இல்லையா தெரியாது.

புதுப்பெண்சாதி கண்ணீரும் கம்பலையுமாய் கிடக்குது. அவளின் உறவினர்கள் சொல்கிறார்களாம் விசா இல்லாத மாப்பிள்ளையை கலியாணம் கட்டிவிட்டாயே என்று.

பாருங்கள் பிரச்சனைகள் என்னென்ன ரூபத்தில் எல்லாம் வருகிறது அகதிகளுக்கு உண்மையில் இது உணர்வு ரீதியான பிரச்சனை. விசா தொடர்பாக யாருக்கும் விளங்கப்படுத்த முடியாது.

அது பெரும் இடியப்பச்சிக்கல். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரி இருக்கும்.

அன்னிய நாட்டில் அவர்கள் இருக்க விட்டதே பெரிசு என்று நினைப்பவர்கள் ஒரு புறம்.

அகதி அந்தஸ்து கிடைக்காமல் அலைபவர்கள் மறு புறம், அகதி அந்தஸ்து கிடைத்தும் குடிகாரர்களுமாய் போத்தலும் கையுமாக அலைபவர்கள் மறுபுறம், கிறிமினல் வேலைகளில் ஈடுபடுபவர்கள் வெட்டு, கொத்து என்று திரிகிறவர்கள் ஒரு புறம்,

ஆரம்ப காலங்களில் அதாவது 80-களில் வந்து லண்டனில் செட்டிலாகி தாங்கள்தான் பெருந்தமிழர்கள் என்று தலைக்கனத்தில் அலைபவர்கள் ஒருபுறம்.

எத்தனை மனிதர்கள் இங்கே லண்டனில் இருக்கிறார்கள். என்னத்தைச் சொன்னாலும் அகதிகளாய் அலையும் தமிழரின் அவலம் நெருடல் மிக்கது. அதன் துயரங்கள் அளப்பரியன. நெருக்கடிகள் அதிகமானவை. அது லண்டன் என்றாலும் சரி, வவுனியா என்றாலும் சரி எல்லாமே துயரங்கள்தான்.

# தங்கத்தைவிட பெறுமதி பொயின்ட்ஸ்

**ல**ண்டனில் கார் வைத்திருப்பது ஒரு விடயம். அதைவிட பென்னம் பெரிய விடயம் லைசன்ஸை வைத்திருப்பது. அதைவிடப் பெரிய விடயம் அந்த லைசன்ஸை பாதுகாப்பது.

லைசன்ஸை எடுத்தோம், றோட்டில் காரை விரைந்து ஓட்டினோம் என்ற கதைதான் இல்லை.

இலங்கையில் இருந்து வந்த எனக்கு லைசன்ஸ் என்பது முதலில் ஒரு பெரிய விடயமாகவே படவில்லை.

ஆனால் மணித்தியாலத்துக்கு 21 பவுன் கொடுத்து கார் பழகினதன்பின்பு லைசன்ஸ் எடுக்கப்பட்ட கஷ்டங்களை முன்பு ஒருமுறை சொல்லியிருந்தேன்.

இங்கு கார் ஓட்ட லைசன்ஸ் எடுப்பது ஒரு சிரமம் என்றால், அதனை பாதுகாப்பது என்பது ஏன்டா இந்த காரோட்டம் என்று நினைக்குமளவுக்கு இருக்கிறது.

லட்சக்கணக்கான கார்கள் லண்டன் வீதிகளில் ஓடிக்கொண்டிருக்கின்றன. எல்லாட்றைவர்மாரும் சட்டம் ஒழுங்குகளை கடைபிடிக்காமல் விட்டால் தலைதூக்க முடியாத அளவு தண்டப்பணமும், லைசன்ஸ் பறிமுதலும் செய்யப்படும். நிலைமை என்னவாகும்?

நான் ஏன் புலம்புகிறேன் என்று கேட்டால் எனது லைசன்ஸில் இருந்து மூன்று பொயின்ட்ஸ்களைப் பறித்து விட்டார்கள் பொலிஸார். ஏன் என்று சொன்னால் உங்களுக்கு இலங்கை இந்தியாவில் இருந்து பார்த்தால் சிரிப்பு வரும். 50 மைல் ஸ்பீடில் போக வேண்டிய றோட்டில் 58 மைல் ஸ்பீடில் காரை ஓட்டிவிட்டேன். இதுதான் நான் செய்த குற்றம். அதுக்கான பெரிய தண்டனைதான் இது லண்டனில்.

லைசன்ஸும் நானும் படாத பாடுபடுகிறோம்.

பொயின்ட்ஸ் என்பது இருக்கிறது என்று எனக்குத் தெரியும். ஆனால் எப்படி எல்லாம் பறிப்பார்கள் என்று இப்பொழுது பட்ட பின்னால்தான் தெரிகிறது.

எந்தவிதமான வீதி ஒழுங்களும் இல்லாத முட்டாள்தனமாக வீதிகளில் வாகனங்களை விரைந்து ஓட்டும் ஒரு தேசத்தில் இருந்து பார்க்கும்பொழுது உண்மையில் சிரிப்பாகத்தான் இருக்கும்.

வலது பக்கமா? இடது பக்கமா? எங்கு திரும்ப வேண்டும்? வன்வேயா அதா? இதா? என்று கவலைப்படாமல் வாகனம் ஓட்டுகின்ற இலங்கை இந்திய வாகன ஓட்டிகளைப் பார்த்து வளர்ந்த எங்களுக்கு உண்மையில் கஷ்டமான ஒரு விடயம்தான் இந்த பொயின்ட்ஸ் சிஸ்டம்.

நான் லைசன்ஸ் எடுத்து 8 மாதங்கள் மட்டுமே ஆகி இருக்கும் நிலையில் 3 பொயின்ட்ஸ் போய்விட்டது. இரண்டு வருடங்களுக்கு 6 பாயின்ட்ஸ் மட்டுமே தருவார்கள். அதனை கண்ணை பாதுகாப்பது போல் காக்க வேண்டும்.

புதிய கார்தானே. ஸ்போர்ட்ஸ் கார்தானே என்றுவிட்டு கண்மண் தெரியாமல் ஓட்ட முடியாது. இங்கே லண்டனில் என்னென்ன விடயங்களுக்கெல்லாம் பொயின்ஸ் பறிப்பார்கள் பாருங்கள்.

ஆக்ஸிடன்ட் பண்ணிவிட்டு ஓடிப்போனால் 5 தொடக்கம் 10 பொயின்ட்ஸ் கழிப்பார்கள். கவனமில்லாத றைவிங் 3 தொடக்கம் 9, சாராயம் குடித்துவிட்டு ஓட்டினால் 3 தொடக்கம் 11, பிறேக் லைட், பிறேக் ஒழுங்காக வேலை செய்யாவிடில் 3, டயர், ஸ்ரேறிங், பிறேக் ஆபத்தான கொண்டிஸனில் இருந்தால் 3, ஆல்கோல் லெவல் அதிகமாக இருந்தால் 10. அடுத்த றைவருக்கு இடைஞ்சல் கொடுத்தால் 6, வாகனத்தை ஒழுங்காக பாக் பண்ணாமல் ஆபத்தான தரிப்புக்கு 3, றோட்டில் வாகனத்தை வைத்து விளையாடினால் 3, கண்பார்வை குறைந்த ட்றைவர் லைசன்ஸ் கொம்பனிக்கு அறிவிக்காமல் விட்டால் 3, ஸ்பீட் லிமிட்டை தாண்டினால் 3, மஞ்சள் கோட்டில் மனிதர் கடந்து போவதற்கு விடாமல் இடைஞ்சல் செய்தால் 3, நிப்பாட்ட வேண்டிய இடத்தில் நிப்பாட்டாமல் விட்டால் 3, போக வேண்டிய இடத்தில் போகாமல் விட்டால் 3, ஹைவேயில் ஃபாஸ்ட்டாக போக வேண்டிய இடத்தில் ஸ்லோவாக போனால் லைசன்ஸை பறித்துவிடுவார்கள் பொலிஸார்.

லண்டனில் லைசன்ஸ் ஒரு மனிதருக்கு மிக முக்கியமானது. அவரது அடையாளம் சம்பந்தமான எல்லாவற்றிற்கும் அதனைக் காட்டலாம். ஆனால் அதனை எடுப்பது பெரும் பிரயத்தனம்.

சரி இந்த பொயின்ட்ஸ் சிஸ்டத்தை இவ்வளவு இறுக்கமாக வைக்காவிடில் எங்கடை ஆட்கள் றோட்டில் என்ன விளையாட்டெல்லாம் விடுவார்கள்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சோமாலியா, ஆப்கானிஸ்தானில் கார் ஓட்டினது மாதிரி எல்லாம் இங்கேயும் ஓட்டத் தொடங்கிவிடுவார்கள்.

முதல் இரண்டு வருடத்துக்கும் ஆறு பொயின்ட்ஸ் மட்டுமே இருக்கும் லைசன்ஸில். அடுத்த இரண்டு வருடத்தில் இன்னம் 6 பொயின்ட்ஸ் கையில் இருக்கும். குற்றம் செய்தால் ஈவு இரக்கமின்றி பொயின்ட்ஸை வெட்டி துண்டாடிவிடுவார்கள்.

எனது நண்பர் ஒருவர் ஹைவேயில் 60-ல் போக வேண்டிய இடத்தில் 50-ல் போயிருக்கிறார். பின்னால் வந்த பொலிஸ் லைசன்ஸை பறித்துக் கொண்டு போய்விட்டது.

இன்னும் இருக்கிறது சிக்கல். முதல் இரண்டு வருடத்தில் இருக்கிற 6 பொயின்ட்ஸும் போய்விட்டால் அதைவிட சீரழிந்த வேலை வேறு ஒன்றும் இல்லை.

முதலில் புதிதாக புறொவஷனல் லைசன்ஸ் எடுக்க வேண்டும். அதாவது முதலாவதாக எடுப்பது போல், அதற்குப் பிறகு ஒரு ரிஜிஸ்டர் பண்ணின லேனர்ஸ்காரர் இடம் போக வேண்டும். பின்னர் எழுத்துப் பரிட்சை முதலாவதைப் போல எடுக்க வேண்டும். பிறகு கார் ஓட்டும் பரிட்சை எடுக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் குறைந்தது 6 மாதமாவது போகும். கார் ஓட்டின உடம்பு 6 மாதம் பஸ்ஸில் பயணிக்க வேண்டும். அத்தோடு பெரும் செலவான மன உளைச்சல் மிக்க வேலை. அதனால்தான் தங்கத்தைவிட பொயின்ட்ஸ் பெறுமதி என்று சொல்கிறேன்.

வரையறைகளும் வரம்புகளும் ஒழுங்குகளும் இல்லாவிடில்

ஆக்ஸிடென்டுகள் பல்கிப் பெருகிவிடும். அதனால்தான் லண்டன் பொலிஸ்காரர் கண்ணுக்குள் எண்ணைவிட்டு பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

எனக்கு இப்ப றோட்டில் கார் ஓட்டவே பயமாய்க் கிடக்கு. இன்னும் 3 பொயின்ட்ஸ் உடன் இன்னும் ஒன்றரை வருடத்தைக் கழிக்க வேண்டும். ஒரு சிவப்பு லைட் தாண்டிப் போய்விட்டால் நான் லண்டனில் கார் ஓட்டத் தகுதியற்றவனாகிவிடுவேன்.

நான் கார் ஓட்டும்போது பக்கத்தில் இருக்கும் மனுசிகூட பதகளிப்படுகிறது. பெனால்ட்டி கட்டி பொயின்ட்ஸை இழந்துபோய் விடுவோமோ என்ற அச்சம்தான் அது.

இவ்வளவு கட்டுப்பாட்டோடு நாங்கள் இங்கே லண்டனில் ஒரு லைசன்ஸை வைத்துக் கொண்டு பதற்றப்பட, சிலோனை நினைத்துப் பார்க்கிறேன்.

ஒரு ட்றைவர் எந்த ஒழுங்கும் இல்லாமல் தனது மனம் விரும்பும் வண்ணம் வாகனத்தை ஓட்டலாம். இடது பக்கத்தால் போக வேண்டுமா போ, வலது பக்கத்தால் போக வேண்டுமா போ, ஆற்றேக்குள்ளையும் போய்ச் செருக வேண்டுமா செருகு. உனக்குத்தான் முழுவீதியும் சொந்தம் என்றபடிக்கு ஓட்டித் தள்ளலாம் என்ற மனநிலையில் சிலோன், இந்திய ட்றைவர் இருக்கினம். எங்கள் ஊர்களில் மஞ்சள் கோடுகள் சும்மா கடமைக்கு மட்டும்தான் இருக்கின்றன. மஞ்சள் கோடுகளில் வைத்தே அடித்துக் கொன்றுவிடுகிறார்கள் சாரதிகள். பாதசாரிகள் பாதுகாப்பு, கடமைகள் என்பவை சும்மா கிடக்கின்றன.

பொலிஸார் வாங்கும் லஞ்சத்தின் அடிப்படையில் வாகனங்கள் ஓடுகின்றன. ஹைவேயில் ஸ்பீட் மீற்றருடன் இருக்கும் பொலிஸார் ஒவ்வொரு நாளும் முப்பதாயிரம் தொடக்கம் ஐம்பதாயிரும் ரூபா வரை லஞ்சப் பணம் சம்பாதிக்கிறார்.

என்னுடன் வேலை செய்த ஒரு பெண்மணியின் அப்பா ட்ராஃபிக் பொலிஸ் ஆக இருந்தவர். இப்ப அவர் ஓய்வு பெற்று விட்டார். அவள் சொல்வாள் தங்களது வீட்டு மேசை லாச்சியில் பணம் குவிந்து கிடக்கும். அம்மா, தங்கச்சி, நான் யாரும் எவ்வளவு வேண்டுமானாலும் எடுக்கலாம். அப்பா ஒவ்வொரு நாளும் வேலையில் இருந்து வந்து காசை லாச்சியில் கொட்டிவிடுவார். எண்ணிக்கூடப் பார்க்கமாட்டார்.

இந்த ஒன்றே போதும் நல்ல உதாரணத்திற்கு. எங்களுடைய பாதைகள், பஸ்கள், ஓட்டோக்கள், வாகனங்கள் எல்லாமே எவ்வளவு ஆபத்தானவை.

சிக்னல் லைட்டுகள் வெறும் சோபனைக்கு மட்டும்தான். றவுண்ட் எ போட்டுகளை இறுக்கிவிட்டு காது கிழிய ஹோர்ரன்னை அடித்துக் கொண்டிருக்கும் வாகன ட்றைவர்மாரை எந்த இனத்தில் சேர்ப்பது? வாகன ஓட்டம் என்பது எவ்வளவு பொறுமையானது.

ஐரோப்பிய நாடுகளில் வந்து பாருங்கள். எவ்வளவு பொறுமை, எவ்வளவு காருண்யம், எவ்வளவு விட்டுக் கொடுப்பு. இங்கு பாதையில் நடந்து போகும் மனிதருக்குத்தான் முன்னுரிமை, அடுத்து சைக்கிள்காரருக்கு, அடுத்தது மோட்டார் சைக்கிள்காரருக்கு, அடுத்துதான் கார், பஸ்காரருக்கு உரிமை கொடுக்க வேண்டும்.

ஒன்று தெரியுமா? பாதையில் நடந்து போகும் ஒரு பாதசாரிக்கு வாகனத்தில் போகும் ஒருவர் தேங்கி நிற்கும் மழைத்தண்ணீரை வாகனத்தால் அடித்தால் நடந்து போகிறவர் சரியான ஆதாரத்தைக் காட்டி இன்சூரன்ஸில் கிளைம் பண்ணலாம். கார்காரரின் இன்சூரன்ஸில் வெட்டி எடுத்து பாதசாரிக்குக் கொடுப்பார்கள்.

அவருக்கும் ஏற்படும் நஷ்டத்தைப் பொறுத்தது. உதாரணமாக அவரது உடை ஆயிரம் பவுன்ஸ் இருக்கலாம். அல்லது அவர் இன்ரவியூக்குப் போகிறவராக இருக்கலாம். அவரது டொக்கியூமண்டுகள் பழுதாகியிருக்கலாம். அதனால் அவர் நஷ்டப்பட்டிருக்கலாம்.

அண்மையில் ஸ்கூல் பிள்ளைகளுக்கு மழைத்தண்ணீர் அடித்த கார் சாரதிக்கு தண்டனை வழங்கப்பட்டதுதான் லண்டனின் அண்மைய முக்கிய செய்தி.

இதையெல்லாம் சிலோன் சாரதிகள் கேட்டு என்ன செய்யப் போகிறார்கள்?

எனது மீதி பொயின்ட்ஸ்களை பாதுகாத்துக் கொள்வதற்கு ஸ்ரேறிங்கில் கை வைக்கும்போதே நான் அலேட் ஆகிவிடுகிறேன். இதுதான் என் நிலைமை இப்பொழுது லண்டனில்.

# பேச்சு மனிசனுக்குத் துணை

**தொ**லைக்காட்சியில் நான் வேலை செய்யத் தொடங்கியதன் பிறகு நிறையப் பேருடன் அதிகமான தொடர்பைப் பேணமுடியவில்லை. நேரமின்மை ஒரு காரணம். ஆனால் எனக்கு கனபேருடன் தொடர்பு முதல் இருந்தது என்றும் சொல்ல முடியாது.

எனது நிகழ்ச்சிகள் அரசியல், சமூகம் சார்ந்ததாக இருக்கும் பொ-ழுது செய்விகள் காணும் பொழுதும் நான் முகத்தை சிரிப்பாக வைக்க முடியாமல் இருக்கிறது. செய்தி வாசிக்கும் பொழுது எப்படி முகத்தை சிரித்த முகமாக வைத்திருக்க முடியும்.

ஆனால் தொலைக்காட்சியில் என்னைப் பார்த்த எனக்கு முதலில் தெரிந்தவர்கள் ஏதோ கடுமையான மனிசனாக நான் இருப்பேன் என்று விட்டு பேசாமல் இருந்து விடுவார்கள். அது ஒருவகையில் நல்லதுதான் என்று நான் சொன்னால், மனிசி அதற்கு எதிர்மாறு. கல கல என்று கதைக்க வேணும் அவளுக்கு. எனக்கு வாசிப்பு, சாப்பாடு, தூக்கம் என்பதே போதும்.

மனிசிக்கு பேச வேண்டும். தன்னோடு உட்கார்ந்து பேசுமாறு என்னைக் கூப்பிடும். சரி பேசுவோம் என்றால் எனக்கு ஊர்ப்பேச்சு, குடும்பத்தில் நடக்கும் பிரச்சனைகள், ஊரில் மனிசியின் உறவினர்கள், எனது உறவினர்கள் வீட்டில் நடக்கும் பிரச்சனைகள், சண்டைகள், சச்சரவுகள் பற்றி ஒன்றும் தெரியாது. தெரிந்து கொள்ளவும் நான் விரும்புவதில்லை. சரி கதிரையில் இருந்து மனிசியும் நானும் பேச ஆரம்பிக்க ஏதாவது அல்-ஜஸீரா பி.பி.சி.யில் டொக்கியூமன்றி படம் போட ஆரம்பித்தால் எனது கவனம் முழுக்க அதில் போய்விடும். ஊர்ப்பேச்சு தடைப்பட்டு விடும். மனிசிக்கு எரிச்சல் வரும். ஆனால் உந்த மனிசன் உப்படித்தான் என்று விட்டு எனது குணம் தெரிந்து சும்மா இருந்து விடும்.

பேசுவதன் மூலம் மனச்சுமை இறக்கப்படுகிறது. மனம் விட்டுப் பேசுங்கள் என்று இங்கே லண்டனில் மன வைத்திய நிபுணர்கள் சொல்கிறார்கள்.

பேசுவதென்றால் என்ன ஊர் துளவாரங்களை பேசுவதா? என்று கேட்டால் அவர்கள் "ஆம்" என்று சொல்கிறார்கள்.

ஊரில் என்றால் எங்கள் கிராமங்களில் வேலை நேரம் போக, வேலை என்றால் விவசாயம், மாடு வளர்ப்பு, தோட்டம் என்று அந்த நேரம் போக மாலை வேளையில் பெண்கள், ஆண்கள் கூடியிருந்து பேசிக் கொண்டிருப்பார்கள்.

என்ன பேசுகிறார்கள் என்ற எந்தத் தலையங்கமுமே கிடையாது. பேசிக் கொண்டிருப்பார்கள்.

வயல்வெளியில் சந்தித்தால் பேச்சு, குளக்கட்டில் சந்தித்தால் பேச்சு, மாலையில் கள்ளுத் தவறணையில் சந்தித்தால் பேச்சு என்று பேச்சு எங்கள் வாழ்வோடு கலந்து உறவாடிக் கொண்டிருந்தால் எல்லோரும் உற்சாகமாக இருந்தார்கள். கிராமத்தில் என்கிறார்கள் மன வைத்திய நிபுணர்கள். பேசுவதன் மூலம் மன அழுத்தம் குறைக்கப்படுகிறதாம். லண்டனில் பேசுவதற்கென்று சிகிச்சை நிலையங்கள் இருக்கின்றன.

அதுமட்டுமல்ல கொமியுனிட்டி சென்டர்களில் பேசுவதற்கென்றே மக்கள் கூடுகிறார்கள். அதற்கு அரசு செலவுக்கு காசும் கொடுக்கிறது.

லண்டனில் இங்கு ஒவ்வொரு கிராமத்திலும் கட்டியிருக்கும் பழமை வாய்ந்த 'பப்புகள்' (சாராயக்கடைகள், பியர் கடைகள்) எல்லாம் உட்கார்ந்து பேசுவதற்கான இடங்கள்தான்.

இங்கு பப்புகளுக்கு போகும் வெள்ளைக்காரர்கள் வெறுமனே குடிக்க மட்டும் போகிறவர்களில்லை. ஒரு பைந் பியர் கிளாஸை ஒரு மணித்தியாலமாக குடித்துக் கொண்டிருப்பார்கள். பழைய நண்பர்கள், உறவினர்கள் என்று போய் உட்கார்ந்து கொண்டு கதைத்து கதைத்து குடிப்பார்கள். சிலர் குடிப்பதற்காக மட்டும் பப்புகளுக்கு போகும் முடாக் குடியர்களும் இருக்கிறார்கள்தான். ஆனால் எல்லோரும் அப்படியில்லை.

மனம் உளைச்சலில் உள்ளவர்கள், பேசுவதற்கான கிளினிக்குகள் புரோபஸனலாக இயங்குகின்றன. ஆனால் கவுன்சிலிங் செய்பவரோடு போய் பேசுகின்ற பழக்கம் தமிழ் மக்களிடம் அதிகம் இல்லை.

கவுன்ஸிலிங் செய்பவரிடம் உண்மையை எல்லாம் சொல்லலாமா என்ற பயம் இருக்கிறது தமிழ் ஆட்களிடம். ஆனால் வெள்ளைக்காரர் அப்படி இல்லை. கவுன்ஸிலிங் செய்பவரை நம்புகின்றனர். தமிழ் ஆட்களிடம் எப்பவும் மனம் நிறைய சந்தேகக் குணம் இருக்கும்.

அது மண்ணோடு, ஊரோடு, நாம் வாழ்ந்த சமூகத்தோடு ஒத்த பிறவிக்குணம், அச்ச மனப்பான்மை, இலங்கையில் இருந்து வந்தவர்களுக்கு இங்கு லண்டனில் பொலிஸைக் கண்டால் பயம், ஆனால் லண்டன் பொலிஸாரோடு பேசித் தீர்த்துக் கொள்ளலாம். அவர்கள் அவ்வளவு கடுமையாக இருக்க மாட்டார்கள்.

பிரச்சனை என்னவெனில், அடிக்கும் போலிஸை, ஆமியைத்தான் எங்களுக்குத் தெரியும். நாம் பிறந்த நாடு அப்பிடி, அந்தப் பயம் இன்னும் மனதில் அப்படியே இருக்கிறது.

அந்த அச்சநிலையும் சந்தேகமும் தொடர் மன உளைச்சலை ஏற்படுத்தி இருக்கும் பலரை நான் நேரடியாகக் கண்டிருக்கிறேன்.

அடுத்தது தனிமை, இங்கே லண்டனில் பக்கத்து வீடு என்ற ஒன்று இருப்பது பலருக்கு தெரியாது. எல்லா நேரமும் முன் கதவு பூட்டப்பட்டிருக்கும் வீடுகள் தான் இங்குள்ள வீடுகள். அப்படித்தான் பழக்கம்.

ஊரில் என்றால் காலையில் திறந்த தலைவாசல் கதவு மாலையில் தானே மூடப்படும். அதுவும் நித்திரை என்ற ஒன்று இல்லாவிடில் இரவு இரவாக திறந்து கிடக்கும்.

நேற்று பகல் எனக்கு ஒரு ஓய்வு நேரமாக பார்த்து என்னோடு ஊரில் ஓடியாடித் திரிந்த, எனக்கு ஒரு வயது கூடிய நண்பன் ஒருவன் எங்கேயோ தேடி எனது நம்பரை எடுத்து தொலைபேசியில் பேசினான்.

நிழலாக அவனதும் என்னதும் பதினைந்து வயது பருவ காலங்கள் தான் மனதில் இருந்தன. 15 வயதுக்குப் பிறகு இன்னும் அவனை நானும் என்னை அவனும் பார்க்கவில்லை.

பேச்சின் ஆரம்பமே எங்களுடைய இளமைக் காலத்துக்குப்

போய் விட்டது. அதனைத் தவிர பேசுவதற்கு உடனடியாக எதுவும் வரமாட்டேன் என்கிறது.

எங்களுடைய வீட்டுக்குப் பக்கத்தில்தான் அவன் வீடு. மூன்று காணி தள்ளி அவன் காணி. அந்தக் காலத்திலேயே அவன் எந்த சோலி சுறட்டுக்கும் போகாமல் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பான். நல்ல உழைப்பாளி.

எப்பொழுதும் அவனின் காணிக்குள் தான் வேலை செய்து கொண்டிருப்பான். அவனுக்கும் பத்து பதினைந்து மாடுகள் இருந்தன.

எங்களுக்கும் மாடுகள் இருந்தன. நாங்கள் இரண்டு பேரும் மாடுகளை மேய்க்கப் போவோம். மாலையில் வயல் வெளிகளில் நிற்கும் மாடுகளை அணைத்து கூட்டி வந்து பட்டிக்குள் விடுவோம்.

அவனின் அக்கா அந்தக் காலத்தில் கலியாணம் முடிக்கவில்லை. காலையும் மாலையும் அத்தனை மாடுகளிலும் பால் கறந்து காய்ச்சி தயிருக்கு உறை போட்டு வைப்பா.

காலையில் முகம் கழுவி விட்டு பள்ளிக்கூடம் போக முதல் ஓடிப் போய் அவனின் அக்காவிடம் செம்பு நிறைய தயிர் வாங்கிக் கொண்டு வந்து சுடச் சுடப் புட்டும் வாழைப்பழமும், சீனியும் தயிரும் போட்டு சாப்பிட்டுவிட்டு ஒரு மைல் நடந்து பள்ளிக்கூடம் போவோம். இதனை எல்லாம் பேசிக் கொண்டிருந்தோம். எங்களது கிராமம், எங்களது ஆட்கள் எல்லோரும் எங்கே இருக்கிறார்கள் என்று பேசிக் கொண்டிருந்தோம். எங்களது வயல் காணி, தோட்டம் துறவுகள் தொடர்பாக பேசினோம்.

எங்களுக்குத் தயிர் தந்த அந்த உழைப்பாளி அக்கா கதிர்காமர் முகாமில் வவுனியாவில் இருக்கிறா என்றும், இன்னொரு அக்கா தற்கொலை செய்து கொண்டதாகவும் அம்மா அப்பா எல்லோரும் செத்துப் போய்விட்டதாகவும், இன்னும் பலர் யுத்தத்தில் சுடப்பட்டு செத்துப் போனதாகவும் சொன்னான் நண்பன்.

அத்தோடு இப்பொழுது நாங்கள் எங்கள் கிராமத்துக்குப் போனால் அடையாளம் காணக்கூடிய நபர்கள் இல்லாமல் போய் இருப்பார்கள் என்ற விடயத்தையும் சொன்னான்.

உண்மைதான் எங்களை அடையாளம் காண முடியாத மூன்றாவது தலைமுறைதானே எங்கள் ஊர்களில் இருக்கப் போகிறது. அவன் சொன்ன பிறகுதான் எனக்கே உறைத்தது அந்த விடயம்.

எங்கள் பேரன், எங்கள் அம்மா அதுக்குப் பிறகு நாங்கள், எங்கள் பிள்ளைகள் என்று தொடர் சங்கிலியாய் வாழ வேண்டிய எமது சமூகம் இரண்டு தலைமுறைகள் அகதிகளாய் உலகம் முழுக்க ஓடி ஓடி ஒழிந்து கொண்டிருக்கும் பொழுது எங்கள் பிறந்த பூமியில் இருக்கின்ற மூன்றாவது தலைமுறை எங்களை அடையாளம் கண்டு மதிக்குமா என்பது அவனின் தார்மீகமான கேள்வி.

ஒன்றும் தேவையில்லை எங்கள் சொந்த பூமிக்கு போய் அந்த மண்ணை ஒருமுறை முத்தமிட வேண்டும் என்று நண்பன் சொன்ன போது மனது கனத்திருந்தது எங்கள் இரண்டு பேருக்கும்.

அச்சம் மிகுந்த பூமிக்கு நாங்கள் போக மாட்டோம் என்று எங்களது

பிள்ளைகள் அடம் பிடிக்க எங்கள் தாய் மண்ணை கொஞ்ச வேண்டும் என்று நாங்கள் துடிக்க உண்மையில் இது ஒரு போராட்டமாகத்தான் எதிர்காலத்தில் வரப்போகிறது.

ஐரோப்பிய நாடுகளின் துப்புரவான வாழ்க்கை எங்களது அடுத்து தலைமுறையின் மனதிலும் உடலிலும் ஊறிப் போய் கிடக்க இன்னும் நாங்கள் எங்கள் மண்ணையே நேசித்துக் கொண்டிருக்கிறோம்.

நீண்ட நேரம் எனது சின்ன வயது நண்பன் பேசியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

மனிசி அவர்களது உறவினர்களோடு பேசுவதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்தேன். குறைந்தவிலையில் இலங்கையில் ஒரே ஒரு நம்பரோடு மட்டும் தொடர்புபடுத்தக் கூடிய மலிவான ஒரு தொலைபேசி லைன் ஒன்றை கேள்விப்பட்டு இரண்டு முக்கிய உறவுகளுக்கு தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தேன்.

இப்போ நினைத்த நேரத்தில் நினைத்த மாதிரி லண்டனில் இருந்து எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம்.

அப்பாடா ஊர் துளவாரங்கள், அங்கு என்ன கறி, புளி. எப்படி ஊர் இருக்கிறது. குடும்பத்தில் என்ன நிலைமை, குழப்பமா, சுமுகமா எல்லாம் ஒவ்வொரு நாளும் அப்டேட் ஆக இங்கை லண்டனில் இருக்கும் மனிசிக்கு தெரியும்.

இப்பொழுது பேச, வா; பேச, வா என்று என்னை நச்சரிப்பதில்லை.

நான் நிறைய வாசிக்கிறேன். நிறைய எழுதுகிறேன். லீவு நாளில் பகலில் ஒரு மணி நேரம் தூங்குகிறேன். அப்பாடா. இதைவிட வேறென்ன வேண்டும் எனக்கு?

# செக்ஸ் தொடர்பான அறிவு அருவருப்பானதா?

செக்ஸ் தொடர்பான அறிவு ஒரு மனிதனுக்கு அவசியமா? உண்மையில் இந்தக் கேள்வியை எமது முன்னோர்களிடம் கேட்டால் அருவருப்புபட்டிருப்பார்கள். ஆனால் பாடசாலை பாடத் திட்டங்களில் செக்ஸ் தொடர்பான கல்வி ஐரோப்பிய நாடுகளை பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. பல வருடங்களாக பாடத் திட்டத்தில் முக்கிய அம்சமாக செக்ஸ் கல்வி இருக்கிறது.

கடந்த வாரம் எனது 12 வயது மகன் பாடசாலையில் இருந்து ஒரு கடிதம் கொண்டு வந்தான். அதில் உங்கள் மகனுக்கு செக்ஸ் கல்வியை படிப்பிப்பதற்கான அனுமதியை கோருகிறோம் என்று இருந்தது.

ஒன்பதாம் வகுப்பில் இருந்து செக்ஸ் கல்வி படிப்பிப்பதற்கான பாடத் திட்டம் இருக்கின்றது. பெற்றோர் எந்த அளவுக்கு அதற்கு உற்சாகமாக இருக்கின்றனர் என்ற அறிவுறுத்தலுக்கான கடிதம் தான் அது.

ஆசியப் பெற்றோர் என்றில்லாமல் ஐரோப்பிய வெள்ளைக்காரப் பெற்றோருக்கும் வழமையாக அந்தக் கடிதம் போகும். அவர்களும் சைன் பண்ணி அனுப்ப வேண்டும்.

ஒருவேளை "எனது பிள்ளைக்கு செக்ஸ் கல்வி தேவையில்லை. மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை" என்று நினைத்து, நான் வேண்டாம் என்று சைன் பண்ணி அனுப்பியிருந்தால், என்னை பாடசாலைக்கு கூப்பிட்டு இரண்டு மணி நேரம் வகுப்பு எடுப்பார்கள்.

சிலோனில் இருந்து வந்த தமிழ் பெற்றோருக்கு செக்ஸ் என்றவுடன் கண்ணுக்கு முன்னால் தெரிவது ஒரு ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்ளும் காட்சிதான். ஆனால் அதனை தவிர்க்கவும் முடியாது. ஏனெனில் அப்படித்தான் வளர்க்கப்பட்டிருக்கிறோம் நாங்கள்.

செக்ஸ் கல்வி என்பது தனது உடல் சார்ந்து அறிவை வளர்த்துக் கொள்வது, அதில் உறவும் வரும்.

செக்ஸ் பொசிசன்களை பாடசாலையில் சொல்லிக் கொடுப்பார்கள் என்று பதகளிப்படத் தேவையில்லை. அது அவர்களின் வேலையில்லை.

முதலில் உடலின் இயக்கத்துக்கு சாப்பாடு, தண்ணீர், காற்று, சீதோஸ்ணம் எவ்வளவு முக்கியமோ அந்தளவுக்கு செக்ஸும் முக்கியத்துவமானது என்றே வல்லுனர்கள் சொல்கிறார்கள்.

உடல் இயக்கங்களைப் பற்றி அறிதல் மூலமான தெளிவின்மையால் பலர் அவதிப்பட்டிருக்கிறார்கள்.

சிலோனில் எனக்குத் தெரிந்த ஒருவர் திருமணம் முடித்து ஒரு மாதமளவிலும் உடலுறவிற்குத் தயாராகாமல் இருந்தார். இளம் வயது ஆணுக்கும் பெண்ணுக்கும் நல்ல வடிவான புதுப் பெண்சாதியை ஊரில் உள்ளவர்கள் அழகுக்காகவே அவளை ஒன்றுக்கு இரண்டு முறை பார்ப்பார்கள்.

பையனுக்கு கவலை மனைவியோடு உடல் ரீதியான தாம்பத்தியம் சரிவர வாய்க்குதில்லையே என்று.

ஊரில் உள்ள வயதானவர்கள் கலியாணம் முடிந்தால், அடுத்த

மாதம் கர்ப்பப் பையில் பிள்ளை தங்காமல் விட்டால், என்ன நடந்தது? ஏன் பிள்ளை தங்கவில்லை? ஆருக்கும் குறைபாடா? என்று பதறத் தொடங்கி விடுவார்கள். ஊரிலே சும்மா இருப்பவர்களும் கேட்கத் தொடங்கிவிடுவார்கள். ஏன் பிள்ளை உண்டாகவில்லை என்று. அது ஒரு வழமையான நச்சரிப்பாக ஆகி விடுகிறது.

சரி இந்த தம்பதிகளுக்கு பிரச்சனையாம் என்று அரசல் புரசலாக கதை வெளியில் வருகிறது. அந்த அழகான பெண்ணுக்கு மறைவிடத்தில் பிரச்சனை. அதனை அறுவை சிகிச்சை செய்துதான் சரிப்படுத்த வேண்டும் என்று ஏதோ எல்லாம் தெரிந்தவர் போல மாப்பிள்ளை முடிவெடுத்துவிட்டார்.

சரி, அப்படி இருக்கலாம் என்று மணமகனின் பெற்றோர்கள், மண-மகளின் பெற்றோர்கள் எல்லோரும் கவலை, கண்ணீர்.

செக்ஸ் பிரச்சனை தொடர்பாக டொக்டரை பார்ப்பது என்பது எங்களது கலாச்சாரத்தில் இல்லாத ஒன்று. அது ஏதோ பாவமான விடயம் போல் சித்தரிக்கப்பட்டு விட்டதே ஊரில். இருந்தும் அந்தக் குடும்பத்தில் ஒரு தைரியவான் முன்னே வந்தார். பிள்ளையும் மாப்பிள்ளையையும் ஒரு வைத்தியரிடம் அழைத்துப் போய்க் காட்டுவது என்று.

வைத்தியரிடம் அழைத்துக் கொண்டு போய் பிரச்சனையை சொன்னபோது, டொக்டர் அனுபவசாலி ஒன்றுமே கேட்கவில்லை.

பிள்ளையைப் பார்த்துவிட்டு அவளை அனுப்பிவிட்டு, மாப்பிள்ளையை கூப்பிட்டு நன்றாக ஏசினார். அதோடு புத்தியும் சொல்லி அனுப்பினார். மருந்து மாத்திரை எதுவும் குடுக்கவில்லை. எல்லாம் புத்திமதிதான். அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று போனவர், இப்பொழுது பதினைந்து வருடங்களாக, ஏழு பிள்ளைகளைப் பெத்துப் போட்டிருக்கிறார்.

பொதுவாக எமது ஊர்களில் இருக்கின்ற கிராமத்து பிள்ளைகளுக்கு உடலுறவு தொடர்பான அறிவு இல்லாமலே இருக்கின்றது.

திருமணம் முடித்த ஆரம்பத்தில் அச்சம் காரணமாக முறையான செக்ஸ்சுக்கு பல காலம் எடுக்கும்.

சிலருக்கு இரண்டு மாதங்கள் கூட எடுக்கும். அதனை குறைபாடு என்று முடிவு எடுக்கக்கூடாது என்பதற்கு இவர்கள் நல்ல உதாரணம்.

உடல் தொடர்பான ரகசியங்கள் தொடர்ந்தும் ரகசியங்களாகவே பாதுகாக்கப்பட்டு வருவதனால் அது தொடர்பான ஆலோசனைகளை நிபுணர்களிடம் பெறுவதை ஒரு அருவருப்பானதாக எண்ணியே எமது அறிவை வளர்க்க நாங்கள் தயாராக இல்லை.

செக்ஸ் தொடர்பான ஒரு வைத்தியரோடு உரையாடிக் கொண்டிருந்த போது கணவன் மனைவி இடையே நடைபெறும் தாம்பத்திய உறவு தொடர்பான மன எழுச்சி, மகிழ்ச்சி ஒருவாரம் கூட அவர்களை புத்துணர்ச்சியாக வைத்திருக்கும் என்றார்.

அவர் தன்னிடம் வந்த தம்பதியினரின் பிரச்சனை தொடர்பாக சொன்னார். அவர்கள் மனதளவில் மிகவும் சோர்ந்து போய் இருந்ததாகவும் தங்களுக்கான இன்பத்தை அடைந்து கொள்வதில் தங்கள் இருவருக்கும்

முடியாமல் இருப்பதாகவும் தாங்கள் பிரிந்து போக யோசிப்பதாகவும் இறுதியாக ஒருமுறை டொக்டரிடம் ஆலோசனை பெற வந்ததாகவும் மனம் திறந்து பேசியதாக சொன்னார்.

அவர்களின் பிரச்சனை திருமணம் முடித்து ஒரு வருடம். காதலித்து திருமணம் முடித்தவர்கள். காதலிக்கும் பொழுது செக்ஸ் உறவில் ஈடுபட யோசிக்கவேயில்லை.

மணம் முடித்த பின்னும் செக்ஸ் திருப்தியாகவே அமையவில்லை.

அந்தப் பெண்ணுடன் பேசியபொழுது அவா சொன்ன ஒரு விடயம், தான் டொக்டருக்கு பொறி தட்டிய விடயம். அவாவின் நண்பிகளோடு கல்யாணத்துக்கு முதல்நாள் பேசிக்கொண்டிருந்த பொழுது முதலிரவின் உறவின் போது பெண்ணுக்கு இரத்தம் வரும் என்று அவவின் நண்பி ஒருத்தி சொல்லியிருக்கிறாள்.

அது அவவின் மனதில் பதிந்து போயிருக்கிறது. அது ஒரு பெரும் பயமாக மாறிவிட்டது. இரத்தம் வரும் என்ற வார்த்தை மூளையில் கிடந்தது. பயமாக அழுத்த, அந்தப் பெண் உடலுறவுக்கு தயாராகின்ற மன நிலையில் எந்தத் தருணத்திலும் இல்லை.

அதாவது கடந்த ஒரு வருடத்தில் ஒரு முறையேனும் கணவருடன் உடல் உறவிற்கான ஒத்துழைப்பை வழங்கவில்லை. அவவின் மனதும் உடலும் அதற்குத் தயாராக வில்லை. தயாராகவில்லை என்றால் உறவின்பொழுது சுரக்கவேண்டிய சுரப்பிகள் வேலை செய்யவில்லை.

அச்சம், பயம் மட்டுமே மனதில் இருந்தது. பெருமளவு இரத்தம் வரும் என்ற எண்ணம் மட்டுமே அவவின் மனதில் இருந்தது. அதனால் எதுவுமே நடக்கவில்லை.

வாழ்க்கையின் மீது அதிருப்தியும் பதட்டமும் கணவருக்கு ஏற்பட பிரிந்து போவது என்பதற்கு முன்னால்தான் இந்த டொக்டர் சந்திப்பு.

உண்மையில் முதல் சொன்ன தம்பதிகள் போலவும், இரண்டாவது சொன்ன தம்பதிகள் போலவும் நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு ஆலோசனை பெறுவது, பகிர்வது என்பது எல்லாமே பிரச்சனை தான். இந்தப் பெண்ணின் மனதில் உள்ள பிரச்சனை பயம் என்பதனை கண்டறிந்த டொக்டர் அதனைப் போக்குவதற்கான ஆலோசனைகள் செய்து அவர்களுக்கு அறிவுரையின் மூலமான கலந்துரையாடலின் பின்பு மிகவும் மகிழ்வாக குழந்தை குட்டிகளோடு வாழ்கின்றனர் என்றும் சொன்னார்.

பிரச்சனைகள் என்ன என்ன வடிவத்தில் வருகின்றன. என்ன வடிவத்தில் வந்தாலும் பிரச்சனைதான்.

கணவன் மனைவி இடையேயான தாம்பத்திய உறவு மட்டும் சரியாக இருந்து விட்டால் உலகமே உங்கள் காலடியில் கிடப்பதை நினைத்துக் கொள்வீர்கள். மனப் பதட்டம், வேலையில் ஒழுங்கீனம், எரிந்து விழுதல், பிள்ளைகளை ஒழுங்காக கவனிக்காமை, எல்லாவற்றுக்கும் செக்ஸ் உறவின் சீரின்மையை காரணம் சொல்கிறார்கள் டொக்டர்கள்.

இன்னும் ஒரு பாரிய பிரச்சனை இப்பொழுது இளம் ஆண்கள் மத்தியில் இருக்கிறது. தனது துணையை முதலிரவின்பொழுது திருப்திப்படுத்த தவறினால் முழு வாழ்க்கையுமே நாசமாகிவிடும் என்ற மனப்பயம்.

இது எங்கிருந்து வந்தது என்ற கேள்வி என்னை வெகு நாட்களாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. இந்தப் பத்தியை வாசித்துக் கொண்டிருக்கும் பலருக்கும் இந்தப் பிரச்சனை அல்லது இந்தக் கேள்வி எழுந்திருக்கும். வெளியில் சொல்லாமல் பூட்டி வைத்திருப்பீர்கள்.

இதெல்லாம் வியாபாரிகள் என்ற போலிகள் செய்யும் வேலை. மனித மனங்களை வைத்து விளையாடும் போலி லேஹிய வியாபாரிகள் பேப்பர்கள், டிவிகள், ரேடியோக்கள் மூலமாக முழு மனிதர்களையும் பலவீனப்படுத்துகிறார்கள்.

அவர்களின் கபடத் தனத்திலிருந்து எமது மனதைப் பாதுகாக்க வேண்டும். 'ஆண்மைக் குறைபாடா' என்று தான் அவர்களுடைய விளம்பர வாசகம் ஆரம்பிக்கும்.

சும்மா இருப்பவர்களும் தனக்கு உடலுறவு செய்ய முடியாது என்ற முடிவுக்கு வரும் அளவுக்கு அவர்களின் விளம்பரம் இருக்கும்.

'சிறு வயதில் சுய இன்பத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களா?' என்று விளம்பரம் கேட்கும். பார்க்கின்ற வாலிபனுக்கு மூளை கிறுகிறுத்துப் போகும். ஏனெனில் எல்லோருக்கும் அந்த அனுபவம் இருக்கும். ஆகவே நெற்றிப் பொட்டில் அடித்தது மாதிரி விளம்பரங்களை போலி லேஹிய வியாபாரிகள் போட்டு, எமது இளைஞர்களைக் குழப்புகிறார்கள். இதனால் இளைஞர்கள் மத்தியில் எழுகின்ற கேள்வி, "தான் ஒரு ஆண்மையற்றவன்" என்ற முடிவுக்கு வந்துவிடுகிறான். இது முட்டாள் தனம் என்பதை ஒவ்வொரு இளைஞனும் உணர வேண்டும்.

இங்கு லண்டனிலும் இந்த 'ஆண்மை' வியாபாரிகள் இருக்கின்றனர். ஒருவரின் வியாபார இடத்துக்குப் போனேன்.

பாதாம் பருப்பு, கஜூ, பேரிச்சம்பழம், தேன் விட்டு உரலில் இடித்துக் கொண்டிருந்தார். என்ன என்று கேட்டேன். லேஹியம் என்றார்.

ஒரு டப்பா அவர் இடிக்கும் சாமானின் கோஸ்ட் 2 பவுண். அவர் விற்பது 20 பவுண். 18 பவுன் லாபத்துக்கு அவர் போடுகின்ற வசனம் 'ஆண்மைக் குறைபாடு' என்பது தான். எனவே மனப் பயத்திற்கு முறையான வைத்திய ஆலோசனை அறிவு பெற வேண்டும்.

செக்ஸ் பற்றியும் உங்கள் உடல் பற்றியும் எப்பொழுதும் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் மனைவி உங்கள் விலை நிலம் போல. அதேபோல உங்கள் கணவரும்.

செக்ஸ் கல்வி அவசியமா என்று கேட்டால், விடை 'ஆம்' என்றே இருக்கும் என்னிடத்தில்.

# விபச்சாரத்தின் நிறம் சிவப்பு

எனது முகத்தின் இரு பக்கங்களும் லேசாக கறுப்பு படர்ந்து வந்தது. மனிசி சொன்னா, "உந்தக் கறுப்பை இல்லாமல் ஆக்குங்கோவன் இப்பத்தான் ஆயிரத்தெட்டு கிறீம்கள் இருக்குதானே" என்று.

அது சரியென்றும் எனக்குப் பட்டது. இங்குள்ள மருந்துக் கடைகளில் பிரபல்யமான 'பூட்ஸ்' கடைக்குப் போய் அங்கு நின்ற அழகான பெண்ணிடம் என்னுடைய முகத்தைக் காட்டிய போது, அவ ஒரு கிறீமை எடுத்துத் தந்தா. அதில் எழுதப்பட்டிருந்த வாசகம், "நீங்கள் பாவிக்கத் தொடங்கும் முதல் நாளில் இருந்தே செயல்பட ஆரம்பிக்கும்." உண்மைதான் நான் அலுவலகத்துக்குப் போகும்பொழுது அங்குள்ள பெண்பிள்ளைகள் கேட்டார்கள், "என்ன வர வர அழகாகுது முகம்" என்று.

நான் ஒரு நமட்டுச் சிரிப்புடன் "ஓம் ஓம்" என்றேன். அவர்களுக்கு கிறீமின் கைங்கரியம் பற்றி சொல்லவேயில்லை.

எல்லாவற்றிலும் வெள்ளை அழகில் மயங்குவது பொதுவாகவே ஆசியாப் பக்கத்தில் இருக்கிறது. சிலோனில் திருகோணமலையில் இருக்கும் போது வெள்ளைக்காரர்களுக்குப் பின்னால் பிள்ளைகள் ஓடி ஓடிப் போவார்கள். ஏனெனில் வெள்ளை அழகு அவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

நாங்கள் கறுப்பாய் இருக்கிறோம். அதனால் வெள்ளை அழகைக் கண்டு வியந்து போகிறோம்.

மாத்தளையில் பாமஸி ஒன்றில் நான் வேலை செய்த போது எங்கள் கடைக்கு ஒரு வெள்ளைக்காரர் கிழமைக்கு இரண்டு தரம் சாமான்கள் வாங்க வருவார். அவரின் மனைவியின் தலைமுடி பொன்னிறமாக அழகாக இருக்கும். அந்த வெள்ளைக்காரரை கண்டால் எனது முதலாளி எழும்பி நின்றுதான் கதைப்பார், சாமான் கொடுப்பார்.

எத்தனை கறுப்பான எங்கள் ஆட்கள் வந்தாலும் எழும்ப மாட்டார். கதிரையில் வைத்து கயிற்றினால் கட்டி விட்டவர் போல இருப்பார். ஆனால் வெள்ளைத் தோலுக்கான மரியாதை அது, எழுந்து நிற்பது.

மகனையோ மகளையோ வைத்திருக்கும் எங்களுடைய தமிழ் ஆட்கள் கலியாண விளம்பரம் போடும்பொழுது இரண்டு விடயத்தில் மிகக் கவனமாக இருப்பார்கள். ஒன்று சாதி; மற்றது சிவந்த நிறமுள்ள ஆம்பிளையோ பொம்பிளையோ தேவை என்பது கட்டாயமாக அந்த விளம்பரத்தில் இருக்கும்.

அந்த அளவுக்கு சிவந்த நிறம் எங்கள் மூளைக்குள் புகுந்து சன்னதம் ஆடுகிறது.

இப்பொழுது கறுப்பாக பிறந்து விட்ட ஆண்களும் பெண்களும் தங்களை சிவப்பு நிறமாக்குவதற்கு ஆலாய்ப் பறக்கிறார்கள்.

விளம்பரக் கம்பெனிகளும் இந்த மனிதர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு முகத்துக்கு பூசும் கிறீம்களுக்கு போடும் விளம்பரங்களிலும் சிவப்பாகும் தோலின் அளவை அளப்பதற்கு அடிமட்டம் கூட வைத்து விடுகின்றன.

அது மட்டுமல்ல ஒரு மனிதனின் மனதை எவ்வளவு தூரம் அவை ஊடறுத்து நாசம் செய்கின்றன என்றால்,

மேக்கப் இல்லாத ஒரு பெண்ணின் முகத்தைக் காட்டிவிட்டு அது பார்க்க செழிப்பில்லாமல் இருக்கும் போது, தன்னம்பிக்கை இல்லாத பெண்ணாக அவள் சோர்ந்து போய் இருப்பதாக விளம்பரங்களில் சொல்வது பெரும் அபத்தம்.

பின்னர் அந்த கிறீமை பூசிவிட்டு அவள் சிவப்பாகி வந்தவுடன் அந்தப் பெண்ணுக்கு தன்னம்பிக்கை வந்து விட்டதாகக் காட்டுவது கண்டிக்கத்தக்கது.

ஏனெனில் கறுப்பான அல்லது பொது நிறமான பெண் தன்னம்பிக்கை அற்றவளா? அல்லது அந்தக் கிறீமை பூசி விட்டு தோல், இரசாயனத்தால் சிவந்து போனவள் தன்னம்பிக்கை உடையவளா? இவ்வாறான பெண்களை கேலி செய்யும் விளம்பரங்கள் உளவியல் ரீதியில் பெண்களை பெரும் பலவீனமாக்குகின்றன.

அந்தக் கிறீமை நூற்றுக்கணக்கான ரூபாய் கொடுத்து வாங்கிப் பூசத் திராணியற்ற கிராமத்து கறுப்பு நிறமான பெண் தன்னம்பிக்கையற்றவளா?

இவ்வாறான முட்டாள் தனமான விளம்பரங்கள் மூலம் பெண்களை இழிவுபடுத்துகின்ற போக்கை பெண்ணுரிமை அமைப்புகளும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதுதான் வேதனை. அந்த விளம்பரங்களில் நடிகைகளும், நடிகர்களும் நடித்து லட்சக்கணக்கான பணத்தை சம்பளமாக எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். ஆனால் அவர்களைப் பார்க்கும் அவர்களின் ரசிகன், ரசிகை தன்னைச் சிவப்பாக்குவதற்கு அல்லது அவர்களைப் போல் ஆகுவதற்கு படாதபாடு படுகிறான். தனது சேமிப்பு எல்லாவற்றையும் கொட்டி அழுகிறான், அழுகிறாள்.

இங்கே ஐரோப்பிய நாடுகளில் விபச்சார விடுதிகள் லைசன்ஸ் எடுத்து இயங்கி வருகின்றன. லண்டன், பாரிஸ், பிரங்போட், அம்ஸ்ரடம் என்று எல்லா இடங்களிலும் அதனை சட்டபூர்வமான ஒரு தொழிலாகவே வைத்திருக்கிறார்கள்.

அந்த தொழிலில் ஈடுபடுவதற்கு மிக முக்கியமாக அதன் முதலாளிகள் தேடுவது சிவந்த நிறம் தான். அதுமட்டுமல்ல அம்ஸரடம், டென்ஹாக் போன்ற இடங்களில் இருக்கும் விபச்சாரிகளின் பஸாரில் இருக்கும் சௌகரியம் என்னவெனில் அவர்கள் எல்லோரும் கண்ணாடிப் பெட்டிகளில் அமர்ந்திருப்பார்கள்.

ஹொலன்டின் டென்ஹாக்கில் நேரே பார்த்திருக்கிறேன் நான். வாடிக்கையாளர்கள் தங்களுக்குத் தேவையான பெண்ணை கண்ணாடிப் பெட்டிக்குள்ளால் தேடி தெரிவு செய்யலாம்.

வீதி நெடுக ஷோ கேஸுக்குள் உட்கார்ந்திருக்கும் பெண்களைப் பார்த்திருக்கிறேன். எல்லோருமே வெள்ளை நிறமுள்ளவர்கள்தான். அதுமட்டுமல்ல கஸ்டமர்களை வரவேற்கவும் வெள்ளை நிறமுள்ள பெண்கள்தான் வைக்கப்படுகிறார்கள்.

ஏன் எங்களுடைய கல்யாண வீடுகளிலும் வரவேற்பதற்கு வெள்ளை நிறமுள்ள பெண்களைத் தான் தேடுகிறார்கள்.

கலியாணம் முடிக்கும் எமது ஆண்களும் வெள்ளை நிறமான வயிறு இல்லாத பெண்பிள்ளைகளைத் தான் தேடுகிறார்கள்.

அப்போ நிறம் குறைந்த எங்கள் குமரிகள் என்ன செய்வது? அவர்கள் எல்லோரையும் வெள்ளையாக்க முடியுமா எங்களால்? உலகம் முழுக்க ஏன் வெள்ளை நிறத்தை வாஞ்சிக்கின்றன. அது என்ன? ஏன்?

எமது கிராமங்களில் இருக்கும் முகச் செந்தளிப்பான பெண்கள் எவ்வளவு அழகாக இருப்பார்கள். ஒரு முறை பச்சைத் தண்ணீரினால் முகத்தைக் கழுவிவிட்டால் அவர்களின் பொலிவு எப்படி இருக்கும். மஞ்சள் பூசி, கடலை மா பூசி, தயிர் அடை பூசி முகத்தை செழிப்பாக வைத்திருக்கும் கிராமத்து அழகு எவ்வளவு ரம்யமானது.

நகர்ப்புறங்களில் 'வாருங்கள் சிவப்பாக்குகிறோம்' என்று போட் போட்டு வைத்திருக்கும் கடைகள் எல்லாம் உண்மையில் சிவப்பாக்குகின்றனவா?

இங்கு லண்டனில் எனக்குத் தெரிந்த பெண்மணி தனது கறுப்புத் தோலை வெள்ளையாக்க ஒரு கடைக்குப் போய் அளவுக்கு அதிகமாக பிளீச்சிங் பண்ணி முகம், இப்பொழுது உலகத்தில் இல்லாத ஒரு கலருக்கு வந்து விட்டது. பிறவுனும் வெள்ளையும் கறுப்பும் கலந்த ஒரு கலர். மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். எல்லாம் வளர்ந்த பிள்ளைகள். புருஷனுக்கு அந்தக் கலர் பிடிக்கவில்லை. தினமும் வீட்டில் மனிசியைக் காணும் போதெல்லாம் சண்டைதான். ஏற்கனவே இருந்து கறுப்பு கலரில் மனிசியின் முகம் அழகாகவே இருந்தது. ஆனால் கலரை மாற்றி விட்டதன் பிறகு முகம் அலங்கோலமாகி விட்டது.

பிள்ளைகளுக்கும் அந்தப் புதிய முகம் பிடிக்கவில்லை. அம்மாவுக்கு முகத்தை மாற்றிவிட்ட கவலை. வீட்டில் ஒரே எரிச்சல்படுகிறவர்களுக்கு மத்தியில் இருக்க வேண்டிய நிலை. எல்லோரும் ஒவ்வொரு பக்கத்துக்கு இறுக்கமாக இருக்க, அவளுக்கு யோசித்து யோசித்து மனம் பாதிக்கப்பட்டு இப்பொழுது அவ கவுன்சிலிங் போகிறா. இருந்ததை இல்லாமலாக்கியதன் விளைவு அது.

இப்பொழுது பெண் பிள்ளைகள் அதிகமாக பியூட்டி பாலர்களில் முகத்தை வெள்ளையாக்குவதற்கு அலைந்து கொண்டிருக்கின்றனர். அழகாக இருப்பது என்பது ஒவ்வொருவருக்கும் முக்கியமானது ஆனால் அதனைப் பற்றியே யோசித்து யோசித்து மன நோய் வருவது என்பது அபத்தம்.

இப்பொழுது பிஸினஸ் மார்க்கட்டை அள்ளுவதற்காக ஆண்களுக்கான வெள்ளை நிற கிறீம்,பெண்களுக்கான வெள்ளை அழகு கிறீம் என்று வியாபாரிகள் கடைகளை பெரிதாக்க பெரிதாக்க நோயாளர்கள்தான் அதிகமாகிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி யாரோ சொன்னார்கள் என்பதற்காக மீடியம் சைஸில் இருந்த மார்பகத்தை பெரிய சைஸாக மாற்றுவதற்கு அறுவைச் சிகிச்சை செய்தார். இப்பொழுது அவளின் ஒரு மார்பகத்தை முற்றாக அகற்ற வேண்டிய அளவுக்கு நோய் வந்துவிட்டது. மார்பக அழகு அறுவை சிகிச்சை செய்து அதற்குள் சிலிக்கன் உருண்டைகளை வைத்து பெரிதாகக் காட்டுவதுதான் இப்பொழுது ஐரோப்பிய நாடுகளில் ஸ்டைல்.

ஆனால் சும்மா கிடந்த மார்பகத்தை பெரிதாக்கப் போய் இப்பொழுது புண்ணாகி சீழ் வடியும் நிலைக்குக் கொண்டு போய் விட்டுவிட்டது அதன் விபரீதம்.

லேசர் சிகிச்சையின் மூலமும் தோலை சிவப்பாக்கும் முயற்சிகள் இப்பொழுது பல இடங்களில் வந்துவிட்டன. அது தோல் புற்று நோய் வரை போய்விடும் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள்.

உண்மையில் இயற்கை அழகு எவ்வளவு நல்லது. முகம் அழகாக இருப்பதே நிறைவுதான். கறுப்பை சிவப்பாக்கும் அவசரம் என்ன வந்தது.

உலகத்தில் உள்ள கெமிக்கல்களை எல்லாம் முகத்தில் பூசி அதனை அலங்கோலமாக்கிவிட்டு அலைபவர்கள் பலரை எனக்குத் தெரியும்.

தன்னம்பிக்கை என்பது மனதோடு கூடிய விடயம். முகத்தை பிரவுண் ஆக்குவது, தலையை பிரவுண் ஆக்குவது, மார்பகங்களை பெரிதாக்குவது என்று பெண்கள் கொஸ்மட்டிக் சிகிச்சைகளின் பக்கம் போகிறார்கள்.

ஆகவும் வெள்ளைக்காரர்களை விட ஆசிய நாட்டுப் பெண்மணிகள்தான் இந்த விடயங்களில் அதிகம். யாரோ நடிகை மூக்கை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலம் சரி செய்து கொண்டார் என்பதற்காக எமது பெண்கள் இப்பவும் மூக்கை சரி செய்வதற்கு ஆலாய்ப் பறக்கிறார்கள்.

கொஸ்மட்டிக் சிகிச்சையினால் சீரழிந்து போனவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள்.

யு ரியூப் இல் போய் பாருங்கள். வீடியோவாகவே கிடைக்கும். உண்மையில் இயற்கை அழகுக்கு நிகர் உலகத்தில் என்ன இருக்கிறது.

பெண்களே, ஆண்களே, எமக்குரிய நிறமே மரியாதைக்குரியது. வெள்ளை நிறம் குளிர்ப்பிரதேச மக்களுக்குரியது. ஒவ்வொரு தேசத்துக்கும் ஒவ்வொரு நிறத்தை இயற்கை கொடையாக வழங்கியிருக்கிறது.

ஒன்று தெரியுமா? வெள்ளைக்காரப் பெண்கள் கறுப்பு நிற ஆண்களைத் தான் விரும்புகிறார்கள். வெள்ளையும் கறுப்பும் கலந்த பொன்னிறமான குழந்தைகள் அவர்களுக்குப் பிறக்கின்றன. அந்தக் குழந்தைகளின் முடி கறுப்பாக இருக்கும். இது ஒரு புதிய கலப்பின சமூகமாக இப்பொழுது இங்கு வளருகிறது.

காலம் மாறிப் போச்சுது.

எங்கள் கறுப்பு நிறத்தை நாங்கள் போற்றுவோம்.

கறுப்பு வாழ்க.

# காமம் - சர்ச்சைக்குரியதா?

உலகத்திலேயே காமம் தொடர்பாக அதிக சர்ச்சைப்பட்டது நாம் சார்ந்த சமூகத்தில்தான் அதிகம் என்று நினைக்கிறேன்.

காமம் என்பதை எந்தளவில் மட்டுப்படுத்த வேண்டும் என்ற விதிமுறைகளுக்கு ஒவ்வொருவரும் தமது விருப்பத்திற்கு ஏற்ற வடிவில் உருவம் கொடுத்து வைத்திருக்கிறோம்.

ஒரு பிரபல்ய தனி நபர் காமம் தொடர்பான முறை தவறும்பொழுது அது உலகத்துக்குப் பெரும் செய்தியாகி விடுகிறது.

வெள்ளைக்காரச் சமூகம் உடலைக் கொண்டாடுகிறது. உடல் அங்கங்களில் கவர்ச்சியான பகுதிகள் என்று நாம், அதாவது சமூக கலாச்சாரம் சார்பாகத் தமிழர்கள் சொல்லும் பகுதிகளை அதாவது, பெண்களின் மார்புப் பகுதி, தொப்புள் பகுதி, இடுப்பு பகுதி, முகம், உதடு பகுதிகளை எவ்வளவு வசீகரமாக சொந்த வாழ்க்கையில் வைத்திருக்க முடியுமோ, அந்தளவு வசீகரமாகவே வைத்திருக்கவே விரும்புகின்றனர் வெள்ளைக்காரப் பெண்கள். அது மட்டுமல்ல, அந்தக் கவர்ச்சியான பகுதிகளை மேலும் மேக்கப் பொருட்களால் அழகுபடுத்தி வெளித்தெரிய வைப்பதனால் தங்களது தன்னம்பிக்கை அதிகரிப்பதாகச் சொல்கின்றனர் ஐரோப்பியப் பெண்கள்.

அதற்காக மூக்கு, மார்பக, உதடு அழகு அறுவை சிகிச்சைகளை அதிக செலவில் மேற்கொள்கின்றனர். தொப்பை என வயிற்றிலுள்ள கொழுப்பை அகற்றும் அறுவை சிகிச்சைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இது பெண்கள். ஆண்களோ அகன்ற தோள்கள், விரிந்த மார்பு, உள் ஒடுங்கிய அழகான வயிறு இதனைப் பராமரித்துப் பெண்களைக் கவருவதற்கு விரும்புகின்றனர். பெண்களும் தொப்பையான ஆண்களை விரும்புவதில்லை என்றே சொல்கின்றனர்.

இந்த உடல் பராமரிப்புக்கு முக்கிய காரணம், காமக் கவர்ச்சிதான். ஒருவரை இன்னொருவர் பார்த்தபொழுது காமம் தொடர்பான ஹார்மோன்கள் வேலை செய்யத் தொடங்குவது இயற்கைதான். ஆண், பெண் என்ற இருபாலருக்கிடையிலான இயற்கை சுரப்புகள் அவை.

ஆனால் பகுத்தறிவுக்குக் காமம் ஒரு தடையாக இருக்கிறது. கண்டவுடன் காம உணர்வுகளை எல்லா இடங்களிலும் மனிதன் வெளித் தெரியவிட முடியாதபடிக்கு பகுத்தறிவு கட்டுப்படுத்துகிறது.

முழு உலகத்திலும் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனின் மோனிக்கா லிவிங்ஸின் காமம் தொடர்பான தொடர்பு.

முழு உலகமும் ஆவலோடு அடுத்து என்ன நடந்திருக்கும் என்று எதிர்பார்த்துக் காத்துக் கிடக்க, மீடியாவும் தொடர்ந்து ஒரு மாதமளவிற்குத் தீனி போட்டது.

கிளின்டன் மோனிக்காவை அறைக்குள் வைத்து 'ஹக்' பண்ணும் போட்டோதான் அந்தக் காலத்தில் பிரபல்யம் 1995லிருந்து 1997 வரை இரண்டு வருடம் மோனிக்காவுக்கும் கிளின்டனுக்கும் காம

ரீதியான தொடர்பு இருந்ததாகப் பின்னர் தெரியவந்தது. பிறகு இது அரசியல்ரீதியான பழிவாங்கல் என்று மீடியாக்களும் முற்றுப்புள்ளி வைத்தன. நாமும் அமைதியாகிவிட்டோம். 13 வருடங்கள் கழிந்துபோய் விட்டன. நாம் மறந்து விட்டோம்.

சாதாரண மக்களின் காமம் தொடர்பான உணர்வுகளுக்கும் பிரபல்யமானவர்களின் காமம் தொடர்பான உணர்வுகளுக்கும் தொடர்புகளுக்குமிடையில் எவ்வளவு பெரிய வித்தியாசம் இருக்கிறது. பிரபல்யமானவர்கள் பெருங்கொள்ளையிலும் ஊழலிலும் சொத்து சேகரிப்பதிலும், படுகொலையிலும் மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்று குவிக்கும் படுபாதகச் செயலில் ஈடுபட்டாலும் ஒரு தனிமனிதனான அரசியல்வாதி மீது. பிரதமர், ஜனாதிபதி, கவர்னர் மீது, சாமியார் மீது ஒரு துளி கோபம் கொள்ளாத இந்த கேடு கெட்ட உலக மக்கள்; அரசியல்வாதி, பிரதமர், ஜனாதிபதி, கவர்னர், சாமியார் ஒரு பெண்ணுக்கு முத்தம் கொடுத்ததைக் கண்டவுடன் அல்லது காமத்தைப் பகிர்ந்து கொண்டவுடன் அவர்களை முற்று முழுதாக நிராகரிக்கின்றனர். சமூகம் அவர்களின் அலுவலகங்களை உடைக்கிறது. அவர்களின் புகைப்படங்களைக் கிழிக்கிறது. அவர்களை முழுவதுமாக ஓரங்கட்டுகிறது.

ஆனால் அவர் சமூகத்தின் பெருங்கொடுங்கோலர்களாக இருந்தாலும் இருந்துவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிடுகிறது சமூகம்.

ஆனால் காமத்தில் மட்டும் கை வைக்கக் கூடாது என்பதுவே சமூகத்தின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பு. அதுதான் இங்கு பாரிய பிரச்சினையாகும் (இங்கு ஆண்களை முன்னிலைப்படுத்தி எழுதுவதற்குக் காரணம், காமம் தொடர்பான சர்ச்சைகளில் முன்னிலைப்படுத்தப்படுபவன் ஆண்தான் என்பதால்).

எமது இந்தியக் கலாச்சாரத்தில் காமம் தொடர்பான புனிதத் தன்மைக்கு இன்னும் மதிப்பு இருக்கிறது. அதனால்தான் பெரும் குற்றவாளிகளையும் காமம் தொடர்பான ஒழுக்கத்தினூடு அவன் நல்லவனாக நாம் ஏற்றுக் கொண்டாடுகிறோம்.

ஒழுக்கம் தொடர்பாக ஒருவரை எடைபோடும்பொழுது குடி, சூது, புகை இவையெல்லாம் மன்னிக்கப்படக் கூடிய வழிதவறல்கள் என்றும், காமம் தொடர்பானது மன்னிக்கமுடியாத வழிதவறல் என்றும் நினைக்கும்படி எமது சமூக கலாச்சார கட்டமைப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இங்கே சாமியார்கள் என்று சொல்லப்படுகிற ஆண்கள் தொடர்பாக அதீதமான ஆர்வமும், ஆச்சர்யமும் கொண்ட ஒருவகை மூடத்தனமான சமூகமாக எமது சமூகம் இருக்கிறது.

ஒரு காவி. கொஞ்சம் தலைமுடி, திருநீற்றுப் பூச்சு, கவர்ச்சியான பேச்சு பேசும் ஒரு ஆண் எந்த நேரத்திலும் உடனடியாக சாமி வேடம் தரிக்கலாம்.

அது இலங்கை, இந்தியா, ஐரோப்பா என்று எங்கு எமது சமூகம் இருக்கிறதோ அங்கெல்லாம் ஆகிவிடலாம். ஆங்கிலம் பேசத் தெரிந்தால்

அவர் பெரும்புகழைக் குறுகிய காலத்தில் அடைந்துவிடலாம். (இங்கு லண்டனில், கோவில்களை நீங்கள் என்ன பெயரிலும் உடனடியாக ஒரு வீட்டில் திறந்தால், சாத்திரம் பார்க்கிறோம் என்று வந்தால், காண்டம் பார்க்கத் தெரிந்தால், சூனியம், மலையாள மாந்திரீகம் தெரிந்தால் கொள்ளை கொள்ளையாக சம்பாதிக்கலாம். அப்படி இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது.)

ஆனால் என்ன, சாமியார் தனது காமம் தொடர்பான தூண்டுதல்கள் இல்லாமல் இருக்க வேண்டும். அதுமட்டும்தான் சமூகம் எதிர்பார்ப்பது. அத்தோடு கொஞ்சம் யோகாவும் தெரிய வேண்டும். தலையில் வைத்துக் கொண்டாடுவார்கள்.

ஒரு ஸ்பீச்சுக்கு 1000 பவுண்ட் கேட்டாலும் தருவார்கள்.

ஒரு தரிசனத்துக்கு 100 பவுண்ட் வாங்கும் சாமியார்களும் வந்து போயிருக்கிறார்கள்.

இங்கு வெளிநாடுகளில் காமம் தொடர்பான குற்றங்களைக் குறைப்பதற்கென்று செக்ஸ் தொடர்பான பெண் தொழில் உருவாக்கிக் கொண்டார்கள். ஒவ்வொரு நாட்டிலும் அதன் ஆரம்பக் கட்டணம் ஒவ்வொரு மாதிரி இருக்கும்.

சாதாரண ஒரு பிரஜை குறைந்த கட்டணத்தில் செக்ஸ் தொழிலாளியிடம் போய் வருவார். பணக்காரர் தனது வசதிக்கு ஏற்ப தொழிலாளர்களிடம் போய் வருவார். இதனை ஒரு பகிரங்கத் தொழிலாக்கியதன் மூலம் வரி கட்டும் தொழிலாக ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்து போய் இருக்கிறது செக்ஸ் தொழில்.

ஆனால் எமது இந்தியக் கலாச்சாரத்தில் செக்ஸ் ஒரு பாவமாகப் பார்க்கப்பட, அதன் மீதான புனிதத் தன்மை மேலும் மேலும் இறுக்கப்பட, சாமியார் செக்ஸ் செய்தால் அது ஒரு பாவமாகக் கருதப்படுகிறது. பொதுமகன் கோபப்படுகிறான்.

எல்லாம் ஒரு வரையறைக்கு அப்பால் விதிக்கும் அதீதமான மரியாதை மதிப்பு இவைதான். இந்தக் காமம் மீதான கடுமையான எதிர்வினைக்குக் காரணம்.

சுவாமி நித்தியானந்தரை எடுத்துக் கொண்டால் அவர் 31 வயது இளைஞன். நான் நினைக்கிறேன் 18 வயதில் இருந்து அவர் கவர்ச்சிகரமாகப் பேசி ஆன்மீகச் சொற்பொழிவாற்றி வருகிறார். 'கதவைத் திற காற்று வரட்டும்' என்பது அவரது பிரபலமான பத்தி எழுத்து, மிக நன்றாகவே எழுதுவார்.

31 வயது இளைஞனுக்கு காம உணர்வுகள் என்பது கொந்தளிக்கும் பருவம் என்பதனை பொதுஜனங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லாத ஒரு பிம்பத்தைப் போர்த்திவிட்டு இப்பொழுது தர்மசங்கடப்படுகிறார்.

சரி, 80 வயதுகளில் உள்ள கவர்னர் என்.டி. திவாரி காமம் தொடர்பான அவரின் வீடியோப் படக் காட்சிகள் வெளியில் வரத் தர்மசங்கடப்பட்டதை என்னவென்று சொல்ல? காஞ்சிபுரம் கோயில் குருக்கள் தேவநாதன் கர்ப்பக் கிருகத்துக்குள்ளேயே காமம் தொடர்பான செயலில் ஈடுபட்ட வீடியோ படக் காட்சிகள் வெளிவந்து அவரும் இப்பொழுது கைது செய்யப்பட்டுள்ளார்.

நித்யானந்தா, திவாரி, கிளின்டன், தேவநாதன் ஆகியோரின் காமம்தான் அவர்களைப் பெரும் சிக்கலில் ஆழ்த்தியிருக்கிறது.

ஆகவே காமம் என்பது பிரச்சனைக்குரியதாகவே சமூகத்தில் பார்க்கப்படுகிறது. அதிலும் பிரபல்யமானவர்கள், நம்பிக்கைக்குரியவர்கள், சாமியார்களின் காமம் என்பது சமூகத்தில் கோபத்தை வரவழைக்கக் கூடியதாக இருக்கிறது.

காமத்துக்கு இச்சைக்கு முறையான காமம், முறைகேடான காமம் என்று எந்த வரையறையை எங்கிருந்து ஆரம்பிப்பது, எங்கே முடிப்பது? அதற்கு என்ன அளவுகோல்?

கற்பு என்பது தொடர்பான சர்ச்சையை பெண்ணியவாதிகள் எழுப்புகின்றனர். இந்தக் கற்பு தொடர்பில் ஆணின் காமம் எத்தனை பெண்களோடும் இருந்துவிட்டுப் போகலாம். பெண் மட்டும்தான் ஒரு ஆண் என்பவனோடு தனது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமா என்று கோபமாகக் கேட்கின்றனர் அவர்கள்.

கற்பு என்பது என்ன என்பதற்கு வரைவிலக்கணம் என்பதனை யார் வரையறுத்துக் கொள்ள முடியும்?

காமத்தை எந்தளவுக்குப் பிரயோகிக்க முடியும் அல்லது முடியாது என்ற வரையறை என்ன? அது தனிமனிதன் சார்ந்ததா? பொதுமக்கள் சார்ந்ததா? அல்லது சமூகம் சார்ந்ததா? அல்லது அதற்கும் அப்பாற்பட்டதா?

இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் விடை என்ன? யாரிடம் பதில் கேட்பது?

ஒரு பெண்ணின் மனதில் எழுகின்ற காம உணர்வை அப்படியே குளிர்ந்த தண்ணீரில் குளித்து அல்லது முகம் கழுவி அடக்கிக் கொள்ள வேண்டும் என்று எமது கலாச்சார மரபு சொல்லிக் கொடுத்தால் ஒவ்வொரு காமக் கிளர்வின் போதும் இதுதான் பரிகாரமா? இது போதுமா?

விதவைகள் என்று எமது சமூகம் ஒதுக்கி வைத்திருக்கும் பெண்கள் தொடர்பாக, அவர்களது காமம் தொடர்பாக, அவர்களது சிந்தனைகள் தொடர்பாக, இன்னும் அதே முந்தைய நூற்றாண்டுக் கலாச்சார சமூகக் கட்டமைப்புதான் சரியா?

காமக் குற்றங்களில் முன்னிலைப்பட்டு இழிவுபடுத்தப்படுவது பெண்கள் மட்டும்தான் என்பது எமது சமூகக் கலாச்சாரத்தின் சாபக்கேடு.

அந்த வகையில் மோனிக்கா ஒரு வீரப் பெண்மணி போல இன்னும் அமெரிக்காவில் வலம் வர, நித்யானந்தாவோடு காமத்தைப் பகிர்ந்து கொண்ட நடிகைகள் என்ற பெண்கள் மிகவும் அச்சப்பட்டு தலைமறைவாக இருக்க வேண்டிய அவலமான நிலைமை இருக்கிறது. இலங்கை, இந்தியாவில் ஒரு பெண் காமம் தொடர்பாக கைது செய்யப்பட்டால் பெண் மீதுதான் விபச்சார வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

அந்தக் காமத்தைப் பகிர்ந்து கொண்ட ஆண் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை. இது தொடர்பாக பல தடவை சமூக ஆர்வலர்கள் எழுதியும் பேசியும் வந்திருக்கிறார்கள். ஆனால்

இன்னும் அந்தச் சட்டம் வரவே இல்லை.

காமம் தொடர்பான விடயத்தில் ஆண் எப்பொழுதுமே கைது செய்யப்படுவதும் இல்லை. தண்டிக்கப்படுவதும் இல்லை. மீடியாக்களும் விபச்சார வழக்கில் அழகிகள் கைது என்றுதான் எழுதுவார்களே தவிர, அழகன்கள் எங்கு போனார்கள் என்று தெரிவிப்பதே இல்லை. இதுவே பெரியதொரு வன்கொடுமை. ஆனால் காமத்துக்கு கைது எதற்கு?

எனவே காமம் தொடர்பான பிரச்சினையில் பெண்களை மாட்டிவிட்டுக் கூறுபோடும் சமூகம் ஒரு இழிவான சமூகம் என்கிறேன்.

காம உணர்வு ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமாகவே இருக்கிறது.

ஆனால் இதற்கான வரையறை எது? குற்றம் எது?

# சிலோன்காரரின் லண்டன் வாழ்வு

லண்டனில் தமிழர்கள் தங்கள் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள படாத பாடு பட வேண்டியிருக்கிறது. எல்லா வகையிலும் தாங்கள் பிரிட்டிஷ் பிரஜையா? இலங்கைப் பிரஜையா? என்ற அடையாளத்தைப் பெற முடியாமல் தடுமாற வேண்டியிருக்கிறது.

ஞாயிற்றுக் கிழமை அவசர அவசரமாக எனது கிறிஸ்தவ நண்பன் ஒருவன் தேவாலயத்துக்கு ஓடிக் கொண்டிருந்தான். "என்ன விசயம், ஏன் இவ்வளவு அவசரமாக சேர்ச்சுக்கு ஓடுகிறாய்" என்று கேட்டால், "தேவாலயத்தில் பாதரின் கண்ணில்பட வேண்டும், அதற்காகத்தான்" என்கிறான். சேர்ச்சில் பாதரின் கண்களில் ஞாயிற்றுக்கிழமை பூசையின் போது பட்டால்தான் அவர் ஒரு கிறிஸ்தவன் என்று பாதர் சேட்டிபிக்கட் கொடுப்பார்.

சீக்கிரமாக தேவாலயத்துக்குப் போனால்தான் கிறிஸ்துவனுக்குரிய சலுகைகள் இங்கு லண்டனில் கிடைக்கும்.

இப்பொழுதுதான் கலியாணம், அதற்குப் பிறகு பிள்ளையை பாடசாலையில் சேர்ப்பது போன்ற விடயங்கள் இலகுவாகும்.

தேவாலயத்துக்குப் போனால் மட்டும் போதாது. பூசை முடிந்து பாதரிடம் கட்டாயம் கடைசியில் ஒரு வார்த்தை பேசிவிட்டு வர வேண்டும்.

அப்பொழுதுதான் கத்தோலிக்க பாடசாலையில் சேர்வதற்கு பிள்ளைக்கு சிபாரிசு கடிதம் கொடுப்பார் பாதர். தேவாலய பாதரின் சேட்டிபிகட் இல்லாமல், அவரது சீல் இல்லாமல், கையெழுத்து இல்லாமல் கத்தோலிக்க பாடசாலைகள் பிள்ளைகளை சேர்க்க மாட்டா. எனவேதான் பிள்ளைகளுக்காகவும், தங்களது கத்தோலிக்க அடையாளத்தை உறுதிப்படுத்தவும் ஞாயிற்றுக்கிழமை சேர்சுக்குப் போகவேண்டிய கட்டாயத்துக்காக ஓடும் பல சிலோன் தமிழர்களை இங்கு லண்டனில் கண்டு கொண்டிருக்கிறேன் நான்.

கலியாணம் என்று வரும்பொழுதும் இந்த தேவாலயத்துடனான தொடர்பு மிக அதிகமாக பார்க்கப்படுகிறது. தேவாலயத்துடன் தொடர்பு பட்டிருந்தால்தான் இங்கு கலியாணம் முடித்து வைக்க பாதர் கடிதம் கொடுப்பார்.

இங்குள்ள ஒருவர் திருமணம் முடிக்க கிறிஸ்தவராக இருந்தால் சிலோனில் உள்ள அவரது சேர்ச்சுக்கும் இங்குள்ள சேர்ச்சுக்கும் தொடர்புள்ளவராக இருந்தால்தான் பாதர் அனுமதி வழங்குவார்.

லண்டனிலுள்ள பாதர் சிலோனில் உள்ள அவர்களது பாதருக்கு கடிதம் மூலமோ தொலைபேசி மூலமோ தொடர்பு ஏற்படுத்தி மண-மகனோ மணமகளோ முதலில் திருமணம் முடிக்காத கன்னியானவர்கள் என்று உறுதிப்படுத்துவார்கள். ஆகவே தான் இங்குள்ள தமிழர்கள் இரண்டு தேவாலயங்களோடும் உறவை பேண வேண்டிய தேவையுள்ளவர்களாக இருக்கின்றனர்.

அகதிகளாக வாழ்பவர்களுக்கும் இதுதான் நடைமுறை. சிலோன் பாஸ்போட்டில் இருப்பவர்களுக்கும் இதுதான் நடைமுறை. அதனால்தான் என்ன வேலை வெட்டி இருந்தாலும் ஞாயிற்றுக்கிழமை

என்றவுடன் விழுந்தடித்துக் கொண்டு சேர்ச்சுக்கு ஓடிப் போகிறார்கள் கத்தோலிக்க அன்பர்கள்.

போன வாரம் எங்கள் வீட்டுக்கு அருகாமையில் இருக்கும் சிங்கள பெண்மணி ஒருவர் வந்திருந்தார். வந்த நேரத்தில் இருந்து அழுது கொண்டிருந்தார். ஏன் என்ன பிரச்சனை என்று கேட்டால், சிலோனின் கேகாலையில் இருந்த தனது தகப்பன் செத்து விட்டார். தன்னால் போக முடியவில்லையே என்று விம்மினார். லண்டனில் இருந்து செத்த வீட்டுக்கெல்லாம் உடனடியாக போக முடியாது. அவளுக்கு வீட்டில் நான்குபேர். புருஷன், இரண்டு பிள்ளைகள், அவள் போகிறதென்றால் நான்கு பேரையும் கூட்டிக் கொண்டு போக விமான டிக்கெட்டுக்கு 3200 பவுண் வேணும்.

ஊருக்குப் போனால் சிலவு. குறைந்தது 4000 பவுண் வேணும். எப்படி 4000 பவுணை செலவு செய்வது? யார் தருவார்? யாரிடம் கடன் வாங்குவது? அப்படி கடன் வாங்கினாலும், பின்னர் சிலோனில் இருந்து வந்து எப்படி கடனை எந்த வழியில் கட்டுவது என்று மனம் கலங்கிப் போய் அழுது கொண்டிருந்தார். அதோடு இன்னொரு விசயத்தையும் சொன்னார்.

தகப்பனின் செத்த வீட்டை வெப் கமரா மூலம் 'ஸ்கைப்'ல் பார்த்ததாகக் குறிப்பிட்டார். எப்பிடி இருக்கிறது நிலமை பாருங்கள்.

கேகாலையில் நடந்த செத்த வீட்டை லண்டனில் இருந்து கொண்டு வெப் கமராவில் கொம்பியூட்டரில் பார்க்க வேண்டிய நிலமை அவளுக்கு. இன்னும் எத்தனை பேர் இப்பிடி இருக்கிறார்கள் தெரியுமா?

பத்து வருடம் இருபது வருடம் என்று எந்த விசாவும் இல்லாமல் அல்லாடிக் கொண்டிருக்கும் தமிழர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

ஐந்து வருடம் அகதிகளுக்கு விசா கொடுக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் சிலோனுக்குப் போகமுடியாதவர்களாக இருக்கின்றனர். சிலோனுக்குப் போனால் விசா பழுதாகிவிடும். சிலோனில் உயிர் பயம் என்றுதான் விசா வாங்குகிறார்கள்.

எனக்குத் தெரிந்த பிரபல்யமான ஊடகவியலாளர் ஒருவரைச் சந்தித்தேன். மனைவி குழந்தைகளோடு மிக நன்றாக கொழும்பில் வாழ்ந்தவர். இங்கு வந்து அகதியாக பதிந்து விட்டு அல்லோலகல்லோலப்படுகிறார். முதல் முறை அரசியல் அந்தஸ்துக்கு லண்டனில் கோரிக்கை விட அவருக்கு அகதி கோருதலுக்கான ஆதாரம் போதாது என்று ரிஜக்ட் பண்ணி விட்டார்கள். இப்பொழுது அப்பீலுக்கு போட்டுவிட்டு காத்திருக்கிறார். இது அண்மையில் நடக்கும் சங்கதிகள்.

இப்பொழுதுதான் யுத்தம் சிலோனில் இல்லையே என்று அரசாங்க அகதி கேஸ் வேக்கர்கள் மிகத் தெளிவாகச் சொல்கின்றனர்.

தினமும் இலங்கை, பிரித்தானியா, அமெரிக்க தூதரகங்கள் தங்கள் நாடுகளுக்கு அறிக்கை அனுப்பிக் கொண்டிருக்கின்றன. அந்த அறிக்கைகளை வைத்துக் கொண்டு அந்தந்த நாடுகள் முடிவுகளை எடுத்துக் கொண்டிருக்கின்றன. அதற்கு அப்பால் அகதிகளால் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது.

ஒரு கல்யாண வீட்டுக்குப் போய் இருந்தேன். பெரும் பணக்காரர். யாழ்ப்பாணத் தமிழர். ஆனால் கல்யாணத்தை மிக எளிதாக நடத்தியிருக்கிறார். அவர் என்னோடு மனம் விட்டுப் பேசினார். உண்மையில் பிள்ளைகள் எங்களது சொல்லைக் கேட்கிறார்களில்லை என்பது அவரது பெருங்கவலை. அவரின் மகள் கலியாணத்துக்கு முன்பே தான் காதலித்த பெடியனோடு உடலுறவு கொண்டு வயித்தில் பிள்ளை உருவாகிவிட்டது. 'அந்தப் பிள்ளையை அழித்துவிடு' என்று தகப்பன் சொல்லியிருக்கிறார்.

ஆனால் மகள் மாட்டேன் என்று அடம்பிடித்து விட்டாள். சரி என்று அரை மனதோடு அவள் காதலித்த பெடியனுக்கே கலியாணம் செய்து வைக்க ஒப்புக் கொண்டார்.

ஆனால் தான் பாசம் வைத்த பிள்ளை தன்னைக் கேட்காமல் இந்தியாக்காரன் ஒருவனைப் பிடித்து வந்து விட்டாளே என்ற பெருங்கவலை அவருக்கு.

அவருக்கு இருக்கும் பணத்துக்கு ஊரைக் கூட்டி கலியாணத்தை ஒரு பெருந்திருவிழாவாக செய்திருக்கலாம்.

ஆனால் பிள்ளைகள் சொல்லுக் கேட்காமல் விட்டால் என்ன செய்வது? மாப்பிள்ளை பார்க்கவில்லை. பொம்பிளை பார்க்கவில்லை. காதல், கர்ப்பம், கலியாணம் என்று போய்விட்டது.

கலியாணத்தின் பிறகு விசாரித்தால் மாப்பிள்ளைக்கு ஒரு வேலையுமில்லை. வேலை செய்யும் நோக்கமுமில்லை.

மிகவும் சோம்பேறித்தனமான ஒரு பெடியனை பெட்டை பிடித்துவிட்டாள் என்று தெரிந்தது. அவரின் அந்தஸ்த்துக்கு பங்கம் வந்துவிட அவர் நோயில் விழுந்தார்.

இப்பொழுது பெண் பிள்ளையின் தாயுக்கும் தகப்பனுக்கும் சண்டை. தாய் தன்னிடம் ஒன்றும் சொல்லவில்லை என்று தகப்பன் சொல்கிறார்.

"சொல்வதற்கு நீங்கள் எப்பொழுது கேட்டீர்கள்?" என்று தாய் ஏசுகிறா. தகப்பன், தாய், பிள்ளைகளுக்கிடையேயான அன்போ, புரிந்துணர்வோ இல்லை. வெறுமனே காசு, காசு என்று அலைந்து பாசத்தை தொலைத்துவிட்டு தேடுகிறார்கள்.

"இப்பொழுது இருக்கும் மில்லியன் கணக்கான சொத்தில் ஒரு சிறு துளியை மகனுக்கும் வேலை இல்லாத மருமகனுக்கும் கொடுங்கள்" என்று தாய் தகப்பனை நெருக்குகிறா.

ஆனால் தன் சொல்லைக் கேட்காத பெண் பிள்ளை எக்கேடு கெட்டும் போகட்டும் என்று தகப்பன் அடம்பிடிக்கிறார். தாய்க்கும் தகப்பனுக்கும் சண்டை முற்றி விட்டது.

இவ்வளவு காலமும் சண்டையாகத்தான் இருந்தது. இப்பொழுது முற்றிப் போய்விட சரி என்னை டிவோஸ் பண்ணுங்கள்.

நான் வேறையாகப் போகிறேன் என்று பெண்ணின் தாய் தந்தையோடு அடம் பிடிக்கிறா. ஏற்கனவே பிரச்சனையாகி டிவோஸ் வரைக்கும் போன உறவை ஊர் சிரிக்கும் என்பதற்காக ஒட்ட வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் மகளின் பிரச்சனை இப்பொழுது தாய் தந்தை டிவோஸ் வரைக்கும் போய் விட்டது. இனி ஒட்ட முடியாமல் இருக்கிறது.

குடும்பம் விழி பிதுங்கிப் போய் இருக்கிறது. மில்லியனராக வாழ்ந்து என்ன பிரயோசனம்.

குடும்பத்தில் மன நிம்மதி இல்லாவிடில், ஒவ்வொரு நாளும் நரக வேதனைதான்.

மனைவி யோசிக்கிறா, டிவோஸ் பண்ணினால் இங்கு பிரித்தானியாவில் புருஷனின் சொத்தில் அரைவாசி அப்படியே தாலி கட்டிய மனைவிக்குப் போக வேண்டும் என்பதுதான் விதி, சட்டம். எனவே அவவுக்கு மில்லியன் கணக்கான சொத்து வந்து சேர்ந்து விடும். அதனில் ஒரு பகுதியை மகளுக்குக் கொடுக்கலாம் தானே.

எப்பிடி எல்லாம் எமது குடும்ப முறை அன்பான வாழ்க்கை முறை சிதைந்து போய் விட்டது எமது புலம் பெயர்ந்த வாழ்வில் பாருங்கள்.

எப்படி வீட்டில் மகிழ்ச்சி இருக்கும்? வெறுமனே படாடோப வாழ்க்கை வாழும் மனிதர்கள் ஊர்விட்டு வந்து வெறும் இயந்திரங்கள் போலத் தான் இருக்கின்றனர்.

லண்டனில் அன்றாடம் உழைத்து வாரச் சம்பளம், மாதச்சம்பளம் எடுத்து பெண்சாதியையும் பிள்ளைகளையும் அன்போடும் கவனிக்கும் எத்தனையோ குடும்பங்களை நான் லண்டனில் கண்டிருக்கிறேன்.

மனதில் ஆசை, வாழ்வின் மீதான அங்கலாய்ப்பு என்பனதான் மனிதர்களை உலுக்கி எடுக்கின்றன.

போதுமென்ற மனம் இல்லாமல் அலைந்து கொண்டு வாழ்வைத் தொலைத்தவர்கள் அதிகம். தொலைத்துக் கொண்டிருப்பவர்கள் அதிகம்.

இங்கு லண்டனில் பல சிலோன் முஸ்லிம்களின் வீடுகளுக்குப் போயிருக்கிறேன்.

அவர்கள் சிலோனில் வாழ்வது போலவே பெண்களை வேலைக்கு அனுப்பாமல், ஆண்கள் உழைக்கப் போகிறார்கள். இதில் என்ன வசதி என்றால் பிள்ளைகளை எப்பொழுதும் உம்மா கண்காணித்துக் கொண்டே இருப்பா வீட்டில்.

பெண் பிள்ளைகள் கூட உம்மாவின் கண்காணிப்பில் எப்பொழுதும் இருக்கும்.

ஆண் பிள்ளைகளும் நன்றாக வளருகிறார்கள்.

பாகிஸ்தான், இந்திய முஸ்லிம்களை விட சிலோன் முஸ்லிம்கள் இங்கு வாழ்ந்தாலும் கட்டுக்கோப்பான வாழ்க்கை வாழ்கிறார்கள். அவர்களின் வீடுகளில் பிரச்சனைகளும் குறைவு.

ஆகவே அம்மா, அப்பாவின் முழு அரவணைப்பில் ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் கலியாணம் முடிக்கும் வரை கொண்டு போக வேண்டும். அன்பால் சாதிக்க முடியும்.

ஆனால் லண்டனில் பல தமிழ் பெற்றோர்கள் இந்த விடயத்தில் தோற்றுத்தான் போய் விடுகிறார்கள். பேராசைதான் காரணம் என்ற ஒரு வார்த்தையில் சொல்வேன் நான்.

# சம்பிக்க ரணவக்க - இரண்டு முகம்

'**ச**ரித்திரம் மனித நிகழ்வுகளின் தடங்கள், பகுத்தறிவை ஊட்டுவதிலும் பார்க்க சரித்திரத்தை உருவாக்குவது இன்று சுலபம். வாழ்க்கைச் சக்கரம் மனிதனுடன் மோதும்பொழுது பகுத்தறிவிற்கும் சூழ்நிலைக்குமிடையே உள்ள ஒளிக்கீற்றை மிகச் சிலரே காண்கின்றனர்.'

- இந்த உயரிய வாசகத்தைச் சொன்னவர் வேறு யாருமல்ல, ஜாதிக ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்க.

சம்பிக்க ரணவக்க ஒரு சூழலியல் பட்டதாரி. சூழல், மனித விழுமியங்கள் தொடர்பாகப் பல அரிய நூல்களை எழுதியிருக்கிறார்.

ஆனால் அவரின் எழுத்துக்களை மதிப்புற விடாமல் மறைத்துக் கொண்டிருப்பது அவரின் இனவாதம். அவரா இப்படி ஒரு வாசகத்தைச் சொன்னார் என்று அதிசயப்படும் அளவுக்கு அவரின் எழுத்தும் வாழ்வும் வித்தியாசப்பட்டு நிற்கின்றன. அதுதான் பிரச்சினை. இனவாத வெறுப்பை ஊட்டி வளர்ப்பதில் அறிவிலிகள் உடன் சேர்ந்து இந்த 21-ம் நூற்றாண்டில் பெரும் பங்களிப்பைச் செய்திருக்கிறார் அவர்.

வாழ்வு என்பது எப்பொழுதும் கொண்டாடப்படக்கூடியது. அதனைக் கொண்டாட வேண்டும். ஆனால் எமது வாழ்வு. இலங்கைத் தமிழரது வாழ்வு என்றுமே கொண்டாடக் கூடிய அளவுக்கு வாய்க்கவில்லை.

சமூக இருப்பு தொடர்பாக ஒவ்வொருவரும் நம்பிக்கையீனமே கொண்டிருக்கிறோம். இன்னும் அந்தப் பிரச்சினை தொடர்கிறது. தமிழர்கள் சிங்களர்களின் பூமியில் வந்து ஆக்கிரமித்து இருக்கிறார்கள் என்ற பாணியிலான கருத்துக்களை இந்தப் பகுத்தறிவுவாதிகளான மற்றும் பகுத்தறிவின் ஒளிக்கீற்றைப் பற்றி பேசுகிற சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி வருகிறார்கள்.

கர்ண கடூரமான யுத்தத்தில் ஆயிரக்கணக்கான சிங்கள, தமிழ் உயிர்கள் பாதிக்கப்பட்டு விட்ட பிறகும், சிங்கள அரசியலாளர்கள் ஒரு சமதர்ம பூமி தொடர்பாக சிந்திக்கத் தயாராக இல்லை.

தொடர்ச்சியாக சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைப் பரப்பும் நடவடிக்கைகளில் மிகக் கேவலமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஒரு நல்ல சுமுகமான செல்வங் கொழிக்கும் ஒரு வாழ்வை இலங்கைப் பிரஜைகள் ஏன் வாழ முடியாது என்று இங்கு லண்டனில் வைத்து யோசிக்கும் பொழுது ஒவ்வொரு நாளும் இந்தக் கவலை எனக்கு ஏற்படுவதுண்டு.

ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் மிகவும் நல்ல வாழ்வு வாழலாம். ஒரு சின்ன மாற்றத்தைத் தான் ஏற்படுத்த வேண்டும்.

ஒரு வீட்டை நிர்வகிக்கும் அழகிய நிர்வாகம் போல இலங்கைத் தீவை நிர்வகிக்கலாம். ஊழலும் இனவாதமும் மலிந்த அரசியல்வாதிகள் மக்களைப் பற்றிக் கவலைப்படுகிறார்களில்லை. நல்ல வீதியமைப்பைக் கொண்டு வர வேண்டும். ஜெர்மனிக்குப் போன போதுதான் வீதிகளின் அமைப்பு பற்றி உண்மையில் வியந்து போனேன். ஹிட்லர் ஜெர்மனியில்

முதல் முதலில் செய்த வேலை மிகச் சிறந்த பாதைகளை உருவாக்கினார். அத்தோடு சுற்றி உள்ள நாடுகளின் ஊடாக ஜெர்மனியைச் சுற்றி இலகு பாதைகள் உருவாக்கினார். பாதைகள் எப்பொழுது இலகுவாகிறதோ அப்பொழுது நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி அடையும்.

பொருட்கள் கொண்டு வரவும், கொண்டு போகவும் துரித கதி தேவை.

எல்லா இடத்தில் இருந்தும் எல்லா இடத்துக்கும் தொடர்பு தேவை. எமது பாதை அமைப்புகளில் ஒரு வாகனத்தை நிம்மதியாக ஓட்ட முடியுமா? கொழும்பு - யாழ்ப்பாணம் 240 மைல். நல்ல மோட்டார் வே இருந்தால் நாலரை மணித்தியாலத்தில் போய் விடலாம். கொழும்பு - திருகோணமலை 160 மைல். இரண்டரை மணித் தியால மோட்டார் வே ஓட்டம்.

ஆனால் முழு நாளும் ஒரு பயணத்துக்காகச் செலவழிக்க வேண்டிய துர்பாக்கிய நாடு எமது நாடு.

இனவாதச் சிந்தனைகள் நிறைந்த மூளை உள்ள அரசியல்வாதிகள், அமைச்சர்கள் நூறு பேரும் உட்கார்ந்து தமது வயிற்றை நிரப்பும் யோசனைகளை விட்டுவிட்டு, சம்பந்தன்,சரத் பொன்சேகாவோடு ஒப்பந்தம் செய்து நாட்டைப் பிடிக்கப் போகிறார் என்று பொய்க் கற்பனையை சிங்கள மக்கள் மத்தியில் விதைத்துவிட்டு, தங்கள் நாற்காலியைப் பாதுகாப்பதற்கு

அல்லாடாமல் மனிதப் புரிந்துணர்வை ஏற்படுத்துவது எப்படி என்று கண நேரமாவது யோசிக்கிறார்களில்லையே.

பொதுமக்களின் வாழ்வு தொடர்பாக, எமது நாட்டின் ஏற்றுமதி தொடர்பாக, ஒற்றுமை தொடர்பாக, சம்பிக்க சொல்கின்ற பகுத்தறிவு தொடர்பாக, பாதைகள், நகரவாழ்வு, சமூக வாழ்வு தொடர்பாக, சுகாதாரம் தொடர்பாக யாருமே யோசிக்கிறார்களில்லை.

ஜி.எஸ்.பி. பிளஸ் கிடைக்கும் என்கிறார் பீரிஸ். கிடைக்காது என்கிறார் ரணில். கிடைக்காவிட்டாலும் சமாளிக்கலாம் என்கிறார் யாப்பா. ஆனால் அன்றாடம் செய்தியைப் பார்க்கும் மக்களுக்கு ஜி.எஸ்.பி. ப்ளஸ் என்றால் என்னவென்றே தெரியாது. அதற்கான அறிவூட்டல் இல்லை.

எமது கரும்புத் தோட்டங்கள், நெல் வயல்கள், பயறு, உழுந்து, கௌபி, சோளம் விதைக்கும் இடங்கள் எல்லாம் காடு பற்றிக் கிடக்கின்றன.

ஒரு இனத்தை மற்றொரு இனம் இன்னும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறது.

தமிழர் - சிங்களர் - முஸ்லிம்களுக்கு இடையிலான உறவில் எந்த முன்னேற்றமும் இல்லை. அரசியல்வாதிகள் பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் பகுத்தறிவு தொடர்பாக வக்கணையாகவே பேசுவார்கள். எழுதுவார்கள். ஆனால் நடைமுறையில் மரத்த தோல் உடையவர்களாகவே இருக்கின்றனர்.

இப்பொழுது எங்கு பார்த்தாலும், சிங்களர்கள் தமிழர்களைக் கண்டால், தாங்கள் யுத்தத்தால் வெற்றி பெற்று விட்டவர்களாகவும், தமிழர்கள் தோல்வியுற்றவர்களாகவும் பார்க்கும் ஒரு மனப்பாங்கு

வளர்ந்து கொண்டே செல்கிறது.

இன்னும் எத்தனை நாளைக்கு சிங்கள அரசியல்வாதிகள் வன்னியில் புலிகளிடம் இருந்து எடுத்த ஆயுதங்களைக் காட்டி, 'தேசத்தின் மகுடம்' கண்காட்சிகளை வைத்து இனவாதத்தைக் கிளறி விட்டுக் கொண்டே இருக்கப் போகிறார்கள்.

ஆயுதங்கள் இனியும் கம்பீரமானதொரு காட்சியை மக்களுக்கு ஏற்படுத்துமா? இனி யுத்தம் செய்யப் புலிகள் இல்லை. ராணுவம் இனி என்ன செய்யப் போகிறது. அவர்களை வைத்துக் கட்டி மேய்ப்பது எவ்வளவு கஷ்டம்.

ஒன்றா இரண்டா, ஒன்றரை லட்சம் பேர். அவர்களுக்கு நல்ல தொழில் துரவுகளை ஏற்படுத்திக் கொடுத்து மனைவி பிள்ளைகளோடு வாழ வழி செய்யலாம், செய்ய வேண்டும்.

ஒரு தேர்தல் முடிந்த கையோடு, வாழ்வு கொடுக்கப்படும் என்று சொன்னார் ஜனாதிபதி. இப்பொழுது அடுத்த தேர்தலிலும் தான் வென்றால் நாட்டின் அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்கிறார்.

சமூகங்களை, மக்களை வழி நடத்துகின்ற ஊடகங்கள் கூட இன்னும் புலிகளை வைத்துப் பூச்சாண்டி காட்டாமல் கட்டுரைகளை எழுத முடியாமல் இருக்கிறது. அவ்வளவு வாங்குரோத்து நிலைமை.

இன்னும் ஒரு பிரபாகரன் இல்லை. இன்னும் 50 பிரபாகரன்கள் தோன்றுவார்கள் என்று வேளாவேளைக்கு ரணிலும் சொல்கிறார். மங்கள சமரவீரவும் சொல்கிறார். போதாததுக்கு சம்பந்தனும் சொல்கிறார்.

வேண்டாம். எல்லோரும் சேர்ந்து இன ஒற்றுமை தொடர்பாகப் பேசி ஒவ்வொருவர் மத்தியிலும் ஒரு இன சௌஜன்யத்தை ஏற்படுத்தலாமே. ஒருவரும் இதற்குத் தயாராக இல்லை.

நாட்டில் எல்லோரும் எல்லாமும் பெறக்கூடியதாக ஆக்கலாமே. அடிப்படை சம்பளத்தை உருவாக்குதல், ஒவ்வொருவருக்கும் வேலை நேரத்தை உருவாக்குதல், எல்லா வேலைகளுக்குமான பயிற்சிகளை உருவாக்குதல், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், உள்ளூர் உற்பத்திகளுக்கு முதலிடம் கொடுத்தல், கல்வியை ஓங்கி வளரச் செய்தல், சட்டங்களை இறுக்கி மக்களை சட்டங்களுக்கு கண்டிப்பாகப் பழக்குதல் என்று எவ்வளவு வேலைகள் இருக்கின்றன அபிவிருத்தி நோக்கிய பாதைக்கு. இன்னும் அதல பாதாளத்துக்குக் கொண்டு போவோம்.

இன்னும் அமைச்சர்களைக் கூட்டுவோம். அவர்களை மட்டும் சொகுசானவர்களாக வலம் வரச் செய்வோம் என்று நாடாளுமன்ற வளாகத்தை மட்டும் செழிப்பாக்க நினைக்கும் அரசியல் தலைமைகளிடம் என்ன விடயத்தையும் மக்கள் எதிர்பார்க்காமல், வெறுமனே யுத்தக் களிப்பில் இருந்து விட்டுப் போக நினைக்கிறார்களே என்பதுதான் கவலை.

தமிழர்களின் கஷ்டங்கள் தீருவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு விடை தெரியவே இல்லை என்று

கொழும்பில் உள்ள தமிழ் அரசியல்வாதி ஒருவர் என்னிடம்

சொன்னார்.

இந்தியா சீனாவைக் கண்டு பயப்படுவது தெளிவாகவே தெரிகிறது. இலங்கையிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி... உள்ள தமிழ் அறிவாளிகள் சொல்வதெல்லாம் இந்தியா மட்டும்தான் தமிழர்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய ஒரே நாடு.

அதனை விடுத்து மேற்குலகம் எப்பொழுதும் தமிழர்கள் விடயத்தில் மூக்கை நுழைக்காது என்பது தெளிவான விடயம். எங்களுக்கு முன்னால் ஈராக் தெளிவான உதாரணம்.

குட்டையைக் குழப்பு குழப்பென்று குழப்பிவிட்டு, சதாமையும் கெமிக்கல் அலியையும் கொன்றுவிட்டுப் போதுமான அளவுக்குப் பெட்ரோலையும் எடுத்துக் கொண்டு டாட்டா காட்டிவிட்டுப் போய்விட்டது அமெரிக்கா.

இந்தியாவினுடைய இலக்கு புலிகளும் பிரபாகரனும்தான். அது நீண்டகால அரசியல் பகை. அது தீர்ந்துவிட்டதன் பிறகு தமிழர்கள் மீது இந்தியாவின் கவனம் திரும்ப மாட்டாதா என்ற எண்ணம் தான் தொடர்ச்சியாக எல்லோர் மத்தியிலும் இருக்கின்ற பெரிய எதிர்பார்ப்பு.

அண்மையில் கலைஞரின் அறிவிப்பு இந்தியாவின் மேலிடத்தின் அறிவிப்பாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

'தமிழர்களுக்கு இலங்கை அரசு சுயாட்சி அதிகாரம் கொடுக்காவிட்டால் நாம் சும்மா பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்' என்று யாருமே சலனப்படாத நேரத்தில் கலைஞர் சொல்கிறார் என்றால் அது கலைஞரின் தனிப்பட்ட சொல் அல்ல என்கின்றனர் அறிவாளிகள்.

தமிழர்களின் வாழ்வு குதறிக் குதறி இந்த அளவுக்கு வந்துவிட்டது. வன்னிப் பகுதி எங்கும் வீடுகளுக்குள் பத்தை வளர்ந்து விட்டது. புற்றுகளை வெட்டித்தான் இனி புதிதாக வீடு அமைக்க வேண்டும்.

எல்லாம் முப்பது வருடங்கள் பின்தங்கிவிட்டன வாழ்வு.

அகதி முகாம், கல்வியின்மை, வாழ்வின் நிம்மதியின்மை என்று அலைக்கழிந்து கொண்டிருக்கும் வாழ்வின் முடிவு என்ன?

சொந்த இடத்தில் குளித்து முழுகித் தண்ணீர் தெளித்து முற்றம் கூட்டிக் காலைச் சூரியனை வரவேற்கும் நாள் எது?

தமிழர்களுக்கான விடிவெள்ளியை யார் காட்டப் போகிறார்கள்?

பகுத்தறிவு, மானுட வாழ்வு தொடர்பாக எழுதுகின்ற சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் மனம் மாறி தமிழர் - சிங்களவர் ஒற்றுமை பற்றி மனம் திறந்து பேசமாட்டார்களா? மனித உறவு பற்றி எப்பொழுது பேசுவார்கள்? காத்திருக்கிறேன்...

# லண்டனில் குண்டியில் தட்டினால் குற்றம்

லண்டனில் உள்ள ஐசில்வேத் கிறவுண் கோட்டில் 'ஜூரி' வேலை கிடைத்தது. கடந்த வாரம் முழுக்க நீதிமன்றத்துக்கும், எனது சொந்த வேலைக்குமாக அலைந்ததில் கடும் பிஸியாக இருந்தேன்.

இங்கு லண்டனில் காலம் காலமாக இந்த ஜூரி வேலை நீதிமன்றத்தில் இருக்கிறது. இது ஒரு நிரந்தரமான தொழில் இல்லை.

பொதுமக்களை விசாரணைகளை அவதானிக்க வைத்து அவர்களின் அபிப்பிராயத்தையும் கேட்டு நீதிவான் தீர்ப்பு வழங்குவார்.

நீதி, நீதியாக வழங்கப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்த ஜூரிகளின் பங்கு ஒரு விசாரணைக்கு முக்கியமாகிறது.

அதனால் கணினி மயப்படுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பில் இருந்து பொதுமக்களைத் தோராயமாகத் தெரிவு செய்கிறார்கள் இந்த வேலைக்கு.

ஆனால் கோட்டினால் தெரிவு செய்யப்படும் நபர் மிக மிக கட்டாயமாக நீதிமன்றம் கூப்பிடும் நாளுக்குப் போயே ஆக வேண்டும். விபத்து, கடுமையான நோய் போன்ற காரணங்களை, மிக மிக உறுதியான ஆவணங்களுடன் காட்டினால் மட்டுமே கோட்டுக்குப் போகாமல் இருக்க முடியும்.

ஆனால் மீண்டும் கூப்பிடுவார்கள். லண்டனில் இருக்கும் பிஸியான வேலைகளுக்கு மத்தியில் லீவு எடுத்துக் கொண்டு கட்டாயம் ஜூரி வேலைக்குப் போக வேண்டும். அப்படி வேலை செய்யும் நிறுவனம் ஜூரி வேலைக்குக் கூப்பிட்டவருக்கு லீவு கொடுக்க முடியாது என்று சொன்னால் அந்த நிறுவனத்தின் மீது தண்டப்பணம் செலுத்தும் அதிகாரமும், அந்த நிறுவனத்தின் மேனேஜர் அல்லது பொறுப்பாளரை ஜெயிலில் போடும் அதிகாரமும் நீதிமன்றத்துக்கு இருக்கிறது.

ஜூரியாக தெரிவு செய்யப்பட்டவர் நீதிமன்றத்தின் அழைப்புக் கடிதத்தை நிராகரித்தால் அல்லது பதில் போடாமல் விட்டால் அவருக்கு 1000 பவுண்ட் தண்டனையும் சிறையும் கிடைக்கும்.

எனவே என்ன வேலை இருந்தாலும் எல்லாவற்றையும் போட்டது போட்டது மாதிரி விட்டுவிட்டு நீதிமன்றம் கூப்பிடும் ஜூரி வேலைக்குப் போயே ஆக வேண்டும். இதுதான் விதி, சட்டம். லண்டனில் இருக்கும் யாரும் தட்டிக் கழிக்க முடியாத ஒரு சமூக வேலை.

சரி, இந்த வேலைக்காகத்தான் பிஸியான நிலைமைக்குள் இருக்கும் நான் கடந்த வாரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தேன்.

ஒரு ஜூரர் குழுவில் 12 பேர் அங்கத்துவம் பெறுவர். அந்த 12 பேரில் நானும் ஒருவன்.

இது நீதிமன்றத்துக்குப் போகும் முதல் நாள் என்றதனால் பெரும் பதட்டம். ஆனால் ஏற்கனவே ஒரு முறை கண்டி நீதிமன்றத்துக்குப் போன அனுபவம் இருக்கிறது. எனது நண்பர் ஒருவருடன் நானும் மோட்டார் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தபொழுது ஒரு வயதானவர் எனது மோட்டார் சைக்கிளுக்குள் வந்து விழுந்து விட்டார். நாங்கள்தான் மோட்டார் சைக்கிளால் அடித்தது என்று அந்த

வயதானவர் போய் பொலிஸில் சொல்ல வழக்கு, எனது நண்பர் மீது வந்து விட்டது.

அந்த வழக்குக்காகத்தான் 1996-ம் ஆண்டு கண்டி நீதிமன்றத்திற்குப் போனேன். அங்கு போடப்பட்டிருந்த மரத்தினாலான வாங்குகளில் ஒன்றில் உட்கார வைத்தார்கள்.

மூன்று மணித்தியாலத்துக்கு மேல் அந்த வாங்கில் இருந்து மூட்டைப் பூச்சி கடித்துத் துன்புறுத்திய ஞாபகம் இன்னும் எனது பிருஷ்டபாகத்தில் இருக்கிறது.

லண்டனில் நீதிமன்றம் என்றாலே என்ன அழகு, என்ன ஒழுங்கு, என்ன துப்புரவு, கோட்டுக்குள் போய் இருப்பதுவே ஒரு அலாதியான அனுபவம்தான்.

எங்கள் 12 பேரில் ஒருவரைத் தலைமை ஜூரியாக நீதிபதி தெரிவு செய்வார். வழக்கு விசாரணை முடிவில் எங்கள் ஒவ்வொருவரின் அபிப்பிராயமும் கேட்கப்படும்.

எனக்கு வந்த விசாரணைக்கான வழக்கு எனக்கு உண்மையில் அதிர்ச்சியாகவே இருந்தது. ஏனெனில் சிலோனில் அல்லவா நான் பிறந்தேன். எனவே சிலோன், இந்தியாவில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு இது உண்மையில் அதிசயமாகத்தான் இருக்கும். தவிர்க்க முடியாதது.

ஹவுன்ஸ்லோவில் இருக்கும் ஒரு பஞ்சாபிக்காரரின் கடைக்கு வந்த மூன்று றோமானிய இளைஞர்கள் சிகரெட் வாங்கினார்கள். பின்னர் கடையில் றாக்கையில் பொருட்களை அடுக்கிக் கொண்டு நின்ற கடைக்காரரின் தங்கச்சியான 23 வயது அழகான பஞ்சாபிப் பெண்ணின் பிருஷ்டப் பாகத்தில்தட்டி விட்டார்கள்.

அதாவது எங்கள் கிராமத்துப் பேச்சு வழக்கில் சொல்வதானால் அந்த பஞ்சாபி பொம்பிளைப் பிள்ளையின் குண்டியில் தட்டி விட்டார்கள்.

இதுதான் கேஸ். பிறகு கடையில் பெரிய களேபரமாகி கடையில் வைத்து அந்த மூன்று பேரையும் உள்ளே பூட்டி வைத்து விட்டு அந்தப் பெண்ணின் அண்ணன் அடித்து நொறுக்கி விட்டார்.

பின்னர் பொலிஸில் அந்த மூன்று இளைஞர்களையும் பிடித்துக் கொடுத்து விட்டார்கள்.

பொலிஸ்தான் இந்தக் கேஸைக் கொண்ட வந்தது நீதிமன்றத்துக்கு. இப்படியான கிரிமினல் வழக்குகளுக்குப் பொதுமக்களில் இருந்து வாக்காளர் அட்டையில் இருந்து ஜூரிகளைத் தெரிவு செய்து அழைத்து ஒரு கேஸ் 12 பேர் வீதம் உட்கார வைத்து ஜூரிகளின் அபிப்பிரயாத்தையும் கேட்டு நீதிவான் முடிவில் தீர்ப்பை அறிவிப்பார்.

ஆனால் நீதிவானுக்கு முன்னால் வழக்கு என்று வந்துவிட்டால் சட்டத்தரணிகள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லித்தானாக வேண்டும் என்பது எமது இந்திய கலாச்சாரத்தில் வளர்ந்த எங்களுக்கு ஒரு பெரும் அசௌகரியம்தான். அதனை இந்த வழக்கில் நான் மனரீதியாக மிகவும் உணர்ந்தேன்.

அந்தப் பெண் பிள்ளையைத்தான் முதல் விசாரணைக்காக கூண்டில் கொண்டு வந்து நிறுத்தி வைத்திருந்தார்கள்.

குற்றம் சாட்டப்பட்டவரின் பக்கத்தில் இருந்து வந்த சட்டத்தரணிகள்

பஞ்சாபிப் பெண்ணைக் கேள்விக்கு மேல் கேட்டுத் துளைத்து எடுத்து விட்டார்கள்.

உண்மையில் துளைத்து எடுத்து விட்டார்கள் என்பதிலும் பார்க்க துன்புறுத்தி விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.ஆங்கிலத்தில் பிருஷ்டபாகத்திற்கு 'பொட்டம்' என்ற சொல்லைத்தான் அழுத்தி அழுத்திப் பிரயோகித்தார்கள்.

'பேக்சைட்' என்ற சொல்லை மிகவும் அரிதாகவே சட்டத்தரணிகள் கேள்வி கேட்கும்பொழுது பாவித்தார்கள்.

அந்தப் பெண்ணினால் சாட்டப்பட்ட குற்றத்தை உடைப்பதற்காகவே கேள்வி கேட்டார்கள். "பிட்டத்தைப் பெடியன்கள் ஒருவர் தட்டினாரா? பிடித்தாரா அல்லது அழுத்தினாரா? அழுத்தும்பொழுது உனக்கு எப்படி உணர்வு இருந்தது? ஐந்து விரல்களின் அழுத்தத்தை உணர்ந்தாயா? கை முழுவதுமாகப் பிடித்ததை உணர்ந்தாயா? நீ என்ன உடுப்பு போட்டிருந்தாய்? செக்ஸியாக உடுத்தியிருந்தாயா? மற்றவர்கள் பார்க்கும்பொழுது தொடக்கூடிய தூண்டுதல் உனது ஆடையில் தோற்றத்தில் இருந்ததா?" என்பது போன்ற கேள்விகளை எதிர்கொள்ள முடியாத உக்கிரத்தின் காரணமாக பஞ்சாபி பெண் கூண்டில் உட்கார்ந்தே அழுதே விட்டாள். ஆனால் ஒன்றை நான் கவனித்தேன். சாட்சிக் கூண்டில் கண்ணீர் வந்தால் துடைப்பதற்கு என்று ரிசு வைத்திருந்தார்கள்.

வேறு எங்கும் ரிசு பேப்பர் வைத்திருக்கவில்லை. அழுகின்றவர்கள்தான் அதிகமாக இந்தக் கூண்டுகளை நிரப்பியிருப்பார்கள் போல.

வாழ்க்கையில் இனிமேல் என்ன நடந்தாலும் பொலிஸிடம் போய் முறையிடமாட்டேன் என்று அந்த இடத்தில் வைத்து மனதால் சத்தியம் செய்திருப்பாள் அந்தப் பெண் என்று நினைக்கிறேன். அந்தளவு கேள்விகள், தொந்தரவு, தொல்லைகள். கேஸைக் கொண்டு வந்த கடைக்காரர் பஞ்சாபிக்காரர், பெண்களில் தட்டியது அல்லது தொட்டது என்று வந்தால் வழக்கில் வெற்றி பெற்றால் நிறைய பணத்தை எதிரி தரப்பில் இருந்து கறக்கலாம் என்று நினைத்திருப்பார்.

இங்கேலண்டனில் பெண்கள் தொடர்பான சட்டங்கள் பெண்களைப் பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்ட சட்டங்களாக வகுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அதனையே சாதகமாகப் பாவித்து பலர் அந்த சட்டங்களைத் துஷ்பிரயோகம் செய்து மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதற்கும் காரணமாக ஆக்கி விடுகிறார்கள். இதுதான் ஆபத்து.

இங்கு ஏன் இவ்வாறான சட்டங்கள் மிக கடுமையாக ஆக்கப்பட்டிருக்கின்றன என்றால் மனித உறவுகள் மீதான நம்பிக்கையின்மை வலுத்ததொரு சமூகமாகவே வெள்ளைக்கார சமூகம் இருக்கிறது. தன்மீது மட்டும் நம்பிக்கை கொள்கிறவராகவே ஒரு வெள்ளைக்காரர் இருக்கிறார்.

இது குடும்ப வாழ்விலும் பிரதிபலிக்கிறது. காதலிப்பார்கள், செக்ஸ் வைப்பார்கள், கலியாணம் முடிப்பார்கள் அல்லது ஆணும் பெண்ணும் லிவ்-இன்-டுகெதராக வாழ்வார்கள், பிள்ளையும் பெறுவார்கள்.

ஒரு சின்ன முரண்பாடு வந்தவுடன் உறவை உதறித் தள்ளிவிட்டுப் பிரிந்து போய் விடுவார்கள். இங்கே அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் இருக்கும் 18 வயது வரை. அம்மா வேறொரு கலியாணம் அல்லது காதல்.

இப்பொழுது வளர்ப்புத் தந்தை என்றொருவர் உள்ளே வருகிறார். அவர் மனைவியின் பிள்ளையை அடிக்கவோ தொடவோ முடியாது.

அதாவது இங்கே மனைவியின் குழந்தை பெண் பிள்ளையாக இருக்கும் பொழுதுதான் பிரச்சினை இன்னும் கூடுதல் தலைவலியாக இருக்கிறது.

இங்கு லண்டனில் பாடசாலைகளில் கூட வளர்ப்புத் தந்தையிடம் கவனமாக இருக்கும்படி வகுப்பில் டீச்சர் அறிவுறுத்துவார்.

வளர்ந்த பெண் பிள்ளைகள் தனது பெத்த தகப்பனாருடன் கூட நெருங்கிப் பழக வேண்டாம் என்றுதான் பாடசாலையில் சொல்லிச் சொல்லி, தமிழ்க் குழந்தைகள்கூட தந்தையைவிட்டு அன்னியமாகி விடுவதாக எத்தனையோ நண்பர்கள் என்னிடம் சொல்லி இருக்கின்றனர்.

வெள்ளைக்காரர்கள் அஞ்சுவதற்குக் காரணம், வளர்ப்புத் தந்தைமார் மதுபோதையில் தனது மனைவியின் பெண்பிள்ளையோடு செக்ஸ் வைத்த சம்பவங்கள் அதிகமாக ஐரோப்பிய நாடுகளில் நடந்திருக்கின்றன.

எனவேதான் பெண்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்களை இறுக்கி வைத்திருக்கிறார்கள்.

நான் பங்கு கொண்ட விசாரணையில் பஞ்சாபிப் பெண்ணின் அம்மா, அண்ணன், கடையில் நின்று சாமான் வாங்க வந்தவர். பெடியன்கள் மூன்று பேர், அவர்களை கைது செய்ய வந்த பொலிஸ்காரர் என்று விசாரணை நீண்டு கொண்டே போனது.

இங்கு லண்டனில் ஒருவரின் அனுமதி இல்லாமல் ஒருவர் மீது தொடுவதும் பெரும் குற்றமாகும். அது கிரிமினல் குற்றம்.

கள்ளமாக கிரடிட் காட் பாவிப்பது, கொலை செய்வது, கொலைக்குத் தூண்டுவது, களவெடுப்பது, பாலியல் வல்லுறவு போன்ற கிரிமினல் குற்றங்களுக்குக் கடும் தண்டனை கிடைக்கும் இந்த வழக்குகளுக்கு ஜூரிகளும் உடனிருந்து தங்களது அபிப்பிராயத்தைச் சொல்வார்கள். ஆனால் இறுதித் தீர்ப்பு நீதிபதியுடையதுதான்.

நீதிமன்றத்துக்குத்தான் இதுவரை போனதில்லை நான். ஆனால் லண்டனில் ஜூரியாக நீதிமன்றம் போனது மிகவும் வித்தியாசமான அனுபவமாகத்தான் இருக்கிறது எனக்கு.

# லண்டன் - கள்வர்களின் நகரம்

எப்பொழுது லண்டன் ஐஸில் வேத் கிரவுண்ட் கோர்ட்டுக்கு ஜூரி வேலைக்குப் போனேனோ அன்றில் இருந்து இந்தத் தலைப்பு மனதில் கிடந்து அழுத்துகிறது.

லண்டன் இப்பொழுது குற்றவாளிகளின் நகரமாக மாறிக் கொண்டு வருகிறது. கள்வர்கள், போதைப் பொருள் கடத்துபவர்கள், சிறுவர்களைப் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்கிறவர்கள், கொ-ாலை செய்கிறவர்கள், பிள்ளைகளைக் கடத்துகிறவர்கள், பெண்கள் மீதான வன்முறையைப் பிரயோகிப்பவர்கள் என்று குற்றங்கள் நிறைந்த இடமாகக் காணப்படுகிறது.

உள்ளூர் ஆங்கிலத் தொலைக்காட்சிகளில் எல்லாம் 'கள்வர்கள் கவனம்' என்று விளம்பரம் போட்டுச் சொல்லுமளவிற்குக் குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனக்கு வந்த மற்றுமொரு வழக்கு, 4500 பவுண்ட் பெறுமதியான றோலக்ஸ் கடிகாரம் ஒன்றை வெள்ளைக்கார மனிதரிடம் இருந்து அல்பானியர் ஒருவரும் பாலஸ்தீனியர் ஒருவரும் சேர்ந்து பறித்துக் கொண்டு ஓடிவிட்டனர். சீ.சீ.ரி.வி. கமரொவில் அது பதிவாகி இருந்தது.

நடந்தது இதுதான். 65 வயது வயோதிகர் ஒருவர் சயன்ஸ்பரி சூப்பர் மார்க்கட்டில் சாமான் வாங்கிக் கொண்டிருக்கும்பொழுது அவர் கட்டியிருந்த றோலக்ஸ் மணிக்கூடைக் கண்ட இந்தக் கள்வர்கள் இருவரும் அவரைப் பின் தொடர்ந்து வந்து கார் தரிப்பிடத்தில் வைத்து அவரது காருக்குள் சாமான்களை எடுத்து வைப்பதற்கு உதவிபுரிவதாகச் சொல்லிப் பாசாங்கு செய்து அந்த வயதானவரின் மணிக்கூட்டைப் பறித்துக் கொண்டு ஓடி விட்டனர்.

பறித்துக் கொண்டு ஓடிய கள்வர்கள் இரண்டு பேரும் முஸ்லிம்கள். கடந்த ரமலான் நோன்பு நேரம் களவு எடுத்திருக்கின்றனர்.

அவர்கள் ஏற்கனவே இரண்டு களவுகளில் ஜெயில் தண்டனை வழங்கப்பட்டவர்கள். எனவே நீதிவான் இம்முறை அவர்கள் இருவருக்கும் 5 வருட சிறைத்தண்டனை தீர்ப்பு வழங்கினார்.

லண்டனில் வெளிநாட்டவர்களின் வருகைக்குப் பின்னர்தான் களவும், கொள்ளையும் குற்றச் செயல்களும் அதிகரித்துவிட்டதாக வெள்ளைக்கார நண்பர் ஒருவர் சொன்னார்.

அதில் உண்மையில்லாமலும் இல்லை. சமூக ரீதியான பெரும் அசௌகரியங்களை வெளிநாட்டவரின் வருகை ஏற்படுத்தி இருக்கிறது லண்டனில்.

நான் நீதிமன்றம் போன இரண்டு கிழமைகளில் பார்த்த கேஸ்களிலெல்லாம் குற்றவாளிக் கூண்டில் நிற்பவர்கள் எல்லாருமே வெளிநாட்டுக்காரர்கள்தான்.

உள்ளூர் வெள்ளைக்காரர் செய்யும் கிறிமினல் குற்றங்களில் கொலைகள், பிள்ளைகள் மீதான பாலியல் பலாத்காரம் போன்றவைதான் அறியப்படுகின்றன. ஆனால் அவை லண்டனில் உள்ள வெளிநாட்டுக்காரர் செய்யும் குற்றங்களோடு ஒப்பிடும்பொழுது

மிகவும் எண்ணிக்கையில் மிகவும் குறைவானது.

ஜெர்மனி, சுவிஸ், நோர்வே போன்ற நாடுகளில் பொலிஸாரின் பிடி மிகவும் இறுக்கமாகவே இருக்கும். சுவிஸ்ஸில் எந்தக் கடுமையான குற்றவாளிகளையும் ஒடுக்கும் வல்லமையும் திறமையும் பொலிஸாரிடம் இருக்கின்றன.

கடும் தண்டனையும் உண்டு. நண்பன் அஜீவனோடு சுவிஸ்ஸில் சுற்றித் திரிந்த காலங்களில் அவன் காரின் கதவை 'லொக்' பண்ணமாலே திரிவதைக் கண்டிருக்கிறேன்.

ஆனால் லண்டனில் அப்படி ஒருபோதும் செய்ய முடியாது. பூட்டி இருக்கிற காரை உடைத்துத் திருடிக் கொண்டு போய்விடுவார்கள்.

இப்பொழுதுதான் சட்டங்களை லண்டனில் பொலிஸார் இறுக்கிக் கொண்டு வருகின்றனர். ஆனால் கள்வர்கள் இங்கு வியாபித்து விட்டனர்.

போன வாரம் எனது அலுவலகத்தில் வேலை செய்யும் ஒரு பெண்மணி ஹவுன்ஸ்லோ கடை வீதிக்குத் தனது சின்ன மகனுடன் சென்றிருக்கிறார்.

தள்ளுவண்டியில் அவர் கொழுவி வைத்திருந்த கைப்பையைத் திருடி விட்டார்கள்.

பொலிஸில் போய் சொன்னார் அவர். இத்தனைக்கும் ஹவுன்ஸ்லோ முழுக்க சீ.சீ.ரி.வி. கமெரா பூட்டியிருக்கிறார்கள்.

ஆனால் கள்வனின் பின்பக்கம் மாத்திரம்தான் சீ.சீ.ரி.வி.யில் தெரிகிறது என்கிறது பொலிஸ்.

இது மட்டும் சுவிஸ்ஸில் நடந்திருந்தால் 12 மணித்தியாலத்தில் கள்வன் பொலிஸ் ஸ்டேஷனில் இருந்திருப்பார்.

சைக்கிள் திருடர், கைப்பை திருடர், வீட்டுத் திருடர் என்று கள்வர்கள் அதிகமாகி வருகின்றனர் லண்டனில்.

அல்பேட்டனில் ஒரு இடத்தில் ஒரு கார் பார்க்கிங்கில் வைத்திருந்த காசு மெசினை இரும்பு வெட்டும் பிளேட்டால் வெட்டி எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

இப்பொழுது அங்கு காசு மெசின் எல்லாம் கொங்கிறீட் போட்டுக் கட்டி வைத்திருக்கின்றர்.

இதெல்லாம் உலகத்தின் கனவு நகரான லண்டனில்தான் நடக்கிறது என்றால் உங்களுக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

கடந்த மாதம் இங்கு தொலைக்காட்சியில் ஒரு டொக்கியூமன்றி நிகழ்ச்சி காட்டினார்கள். அது பாகிஸ்தானியர்களின் கைங்கர்யத்தைப் புட்டுப் புட்டு வைத்தது.

கள்ள பாஸ்போட், ட்றைவிங் லைசன்ஸ், இன்சூரன்ஸ் நம்பர் கார்டு செய்வதற்கு ஒரு அலுவலகமே திறந்து வைத்து நடத்தியிருக்கிறார்கள்.

ரகசிய கமெராவில் பிடித்த விடயங்களைப் போட்டுக் காட்டினார்கள்.

பாகிஸ்தானியர்கள் ஆள் கடத்தி லண்டனுக்குக் கொண்டு

வருவதிலும் பெரும் விண்ணர்களாக இருக்கின்றனர். சிலோன் தமிழர்கள் செய்து வந்த கிறடிட் கார்டு மோசடி, கொலைகள், குழு சேர்ந்து அடித்து நொறுக்குதல், கப்பம் கேட்டு மிரட்டுதல் போன்றவை இப்பொழுது குறைந்து விட்டது.

'ஒப்பறேசன் என்வர்' என்ற ஒரு பொலிஸ் நடவடிக்கை மூலம் தமிழ் சண்டியர்களை லண்டன் பொலிஸ் ஒடுக்கியது.

தமிழர்கள் பலருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு இன்னும் ஜெயிலில் கிடந்து உலைகிறார்கள்.

இங்கு பொலிஸாருடன் உரையாடும் பொழுது வழிப்பறி திருட்டுகளையும் மொபைல் போன் திருட்டுகளையும் குறிப்பாகச் சொல்கிறார்கள்.

திருடர் பாதையில் பார்த்திருந்து மணிபேர்ஸ், ஹான்ட் பேக், மொபைல் போன்களைப் பறித்தெடுத்துக் கொண்டு ஓடிவிடுகின்றனர்.

கடந்த வாரம் றோட்டில் வைத்து ஒரு சாப்பாத்துக் கடையில் மகனுக்கு சாப்பாத்து வாங்கிக் கொண்டிருந்தபொழுது ஒரு தமிழ்ப் பெண்மணியின் ஹான்ட் பேக்கை பறித்துக் கொண்டு போய் விட்டார்கள்.

மனிசி றோட்டில் நின்று ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருந்தது.

பொலிஸுக்குப் போக பயந்ததால் போகவில்லை. மொழி தெரியாத பயம் அவருக்கு.

கடைக்காரரும் உதவி செய்யவில்லை. கையில் வைத்துப் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே மொபைல் போனைப் பறித்துக் கொண்டு போய்விடுகிறார்கள் லண்டன் கள்வர்கள். பல கள்வர்கள் குழுக்களாக இயங்குவதாக பொலிஸ் சொல்கிறது.

இப்பொழுது இங்கே கூரிய ஆயுதங்களை வைத்திருப்பவர்களைப் பிடித்து ஜெயிலில் போட்டு விடுகிறார்கள். கூரிய ஆயுதங்களைக் காரில் வைத்திருப்பதையும் தடை செய்திருக்கிறார்கள்.

பல இடங்களில் பேப்பர் வெட்டும் கத்தியால் வெட்டிவிட்டுக் கொள்ளையடித்த சம்பவங்களை தொடர்ந்து இந்தக் கட்டுப்பாட்டை பொலிஸார் கொண்டு வந்திருக்கின்றனர். சிறிய கத்திகளைக் கூட பொக்கட்டில் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் தண்டனை கிடைக்கும்.

குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இப்பொழுது லண்டனில் பல கட்டுப்பாடுகளை விதித்து வரும் பொலிஸார், கவுன்ஸிலுடன் இணைந்து மது அருந்தக் கூடாத இடங்கள் என்று பல இடங்களை அடையாளப்படுத்தி இருக்கிறது.

பஸ்களில், அண்டர்கிறவுண் ரயில்களில் மது அருந்துவது தடை, அத்தோடு கடற்கரையின் பல இடங்களிலும், இன்னும் பல நகர்ப்புறங்களின் கடை வீதிகளிலும் பகிரங்கமாக

பியர்கானைக் குடித்துக் கொண்டு போவது முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது.

போதை மூலமாக ஏற்படும் குற்றங்களைத் தடுப்பதற்கு இந்தக்

கட்டுப்பாடுகளை பொலிஸ் நடைமுறைப்படுத்தி வருகிறது. மது அருந்த தடை செய்யப்பட்ட இடங்களில் மது அருந்தி பிடிபட்டால் 500 பவுண்ட் குற்றக்காசு கட்ட வேண்டும். அவரது நடத்தையைப் பொறுத்து 2500 பவுண்ட் வரை குற்றக்காசு கட்ட வேண்டி வரும். அவர் மது அருந்திவிட்டு குளப்படி செய்தால் 2 மாதத்தில் இருந்து 2 வருடம் வரை ஜெயிலில் போடுவதற்கும் வழி இருக்கிறது.

சமூகத்தில் குளப்படி செய்யும் சிறுவர்களுக்கும் பல அறிவுறுத்தல்களை பொலிஸார் வழங்கி வருகின்றனர். லண்டனில் சிறுவர்கள் கூரான கத்தி வைத்திருப்பதைப் பெருமையாக நினைக்கின்றனர். அத்தோடு அதனை வேறு சிறுவர்களின் கை-களை வெட்டிப் பார்ப்பதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். கத்தியை வைத்திருக்கும் பாடசாலை போகும் சிறுவர்களின் இலவச பாஸ் பிரயாணச் சீட்டு பறிக்கப்படும் என்று இப்பொழுது சட்டம் வந்திருக்கிறது.

அத்தோடு பஸ்ஸில் மற்றயவர்களுக்கு இடைஞ்சல் பண்ணும் மாணவர்களின் இலவச பஸ், பிரயாணச் சீட்டு பறிக்கப்படும் என்றும் பொலிஸார் விளம்பரங்களைப் போட்டிருக்கின்றனர்.

போன வருடம் மட்டும் தோராயமாக 2000 கத்தியால் வெட்டிய சம்பவங்கள் லண்டனில் பதிவாகியிருப்பதாக பொலிஸார் சொல்கிறார்கள்.

இவ்வாறான குற்றச் செயல்களில் இருந்து தடுப்பதற்கு இசை, டான்ஸ் புறோக்கிராம்களில் சிறுவர்களை ஈடுபடச் செய்து அவர்களின் கவனத்தை திருப்பி உதவும்படி பெற்றோரை பொலிஸார் கேட்கின்றனர்.

அரசாங்கம் 100 மில்லியன் பவுண்டை வருடம் தோறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குச் செலவழிக்கிறது என்று புள்ளி விவரங்கள் சொல்கின்றன.

குற்றமும் ஊழலும் நிறைந்த நாடுகளில் இருந்து வந்து இங்கு குடியேறியவர்கள்தான் தொடர்ந்து பாரியக் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஊழலின் பிறப்பிடங்களும், குற்றச் செயல்களின் பிறப்பிடங்களுமான சிலோன், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, பாலஸ்தீன், ஈராக், அல்ஜீரியா, பொஸ்னியா, ஆப்ரிக்க நாடுகள் என்று இங்கிருந்து வந்தவர்கள் பெரும் கள்வர்களாகவும் திருடர்களாகவும் இருக்கின்றனர்.

ஒரு ஹான்ட்பேக்கை கொண்டு நிம்மதியாக லண்டன் தெருக்களில் நடமாட முடிவதில்லை. உண்மையில் பயமாக இருக்கிறது.

இனிவரும்காலங்களில்இன்னும்இன்னும்வெளிநாட்டுக்காரர்களின் வருகை அதிகரிக்க அதிகரிக்க குற்றச் செயல்கள் கூடும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

வீடுகளைக் கூடப் பூட்டிவிட்டுக் கொஞ்சம் தூரப் பயணம் போ-கமுடியாத நிலைமை காணப்படுகிறது. கள்வர் பார்த்திருந்து உடைத்துக் களவெடுக்கிறார்கள்.

லண்டன் லண்டன் என்று பெருங்கனவோடு இங்கு வந்துவிட்டுக் கள்வர்களிடம் தனது வீட்டுச் சாமான்களைப் பறிகொடுத்து விட்டு நிற்கும் ஜெர்மனியில் இருந்து வந்ததொரு தமிழ்க் குடும்பம் பெரும் கவலையில் மூழ்கி இருக்கிறது.

பாதையில் பாதுகாப்பில்லை. எப்பொழுதும் ஒரு கள்வனின் கண் உங்களைப் பின் தொடரலாம். அதனால்தான் லண்டன் - கள்வர்களின் நகரம் என்று சொல்கிறேன் நான்.

# மெலிந்த உடல் என்னும் மோகம்

சுவிற்சலாந்துக்கு அண்மையில் போனபோது எனது நண்பன் ஒருவனின் வீட்டுக்கும் போனேன். இவர் எனது நீண்டகால நண்பர். அக்குறனையில் நானும் அவரும் தொண்ணூறுகளில் சுற்றித் திரிந்தோம்.

பின்னர் அவரின் விதியும் ஊரெல்லாம் அழைத்துச் சென்றது. எனது விதியும் நாடு நாடாக அழைத்துச் சென்றது. நீண்ட காலத்திற்குப் பிறகு இரண்டு பேரின் குடும்பங்களும் சுவிற்சலாந்தில் சந்தித்து மகிழ்ந்து போனோம்.

அவருக்கு ஒரு மகள், வயது ஆறு. நண்பரின் மனைவியின் பிரச்சினை என்னவென்றால் ஆறு வயது மகள் சோறு சாப்பிடுகிறாள் இல்லை என்பது. இது ஒரு பெரிய கவலை அவவுக்கு.

"ஏனடி சோறு சாப்பிடுகிறாய் இல்லை" என்றால் சோறு சாப்பிட்டால் குண்டாகி விடுவாளாம். இப்பவே முருங்கைக்காய் மாதிரி இருக்கிறாள். சோறினைத் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டாள். காலையில் சாலட், பகலில் சாலட், இரவுக்கும் சாலட். இப்படி சாலட்டை மட்டுமே சாப்பிடும் ஒரு மனிசியாக அவள் மாறிவிட்டாள்.

அவள் படிக்கும் பாலர் பாடசாலையில் பிள்ளைகள் கூடிப் பேசும்போது யாரோ சுவிஸ் நாட்டுப் பிள்ளை சொல்லிவிட்டது. சோறு சாப்பிட்டால் உடம்பு குண்டாகிவிடும் என்று. அதனை அப்படியே பிடித்து வைத்துக் கொண்டு அவள் அடம் பிடிக்கிறாள். அவளுக்கு ஒரு தம்பி இருக்கிறான். அவனையும் சொல்லி சொல்லி சோறு சாப்பிடாமல் பண்ணிவிடுவாளோ இவள் என்று அம்மாவுக்குக் கவலை. சுவிசுக்குப் போனபோது ஜெனிவாவில் ஒரு பிடி சோறு சாப்பிட வேண்டும் என்று நானும் மனைவியும் கடை கடையாக அலைந்தோம். இது ஜெனிவாவைச் சுற்றிப் பார்க்கப் போனபோது நடந்தது. ஒரு மாதிரி ஒரு மொறொக்கோ காரின் கெபாப் கடையில் சோறு இருந்தது. பெரிய பெரிய அரிசி எங்கிருந்து இறக்கினார்களோ தெரியாது. வாயில் ஆசையோடு வைத்தால் 'சப்' என்று இருந்தது அந்தச் சோறு. எனக்கெல்லாம் மூன்று நேரத்தில் ஒரு நேரம் சோறு உள்ளிறங்க வேண்டும். ஊர்க் குத்தரிசியை நினைத்தால் இன்னும் நாவில் நீர் ஊறுகிறது.

அதன் மணமும் குணமும் தனி. கொழும்பில் இருக்கும் போது சிறிகதிரேசன் றோட்டில் இருக்கும் யாழ்ப்பாணம் சாப்பாட்டுக் கடையில் குத்தரிசி சோறும் மீன் குழம்பும் சாப்பிட்டது இன்னும் ருசி அடி நாக்கில் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

இப்பத்தைய பிள்ளைகள் சோறை வெறுக்கிறார்கள்.

அளவாக சாப்பிட்டு உடம்பை 'சிக்' என்று வைத்திருப்பதை விட்டு விட்டு 'டயட்' என்ற பெயரில் உடம்பை பாரமில்லாமல் ஆக்குகிறார்கள். அதனால் பல நோய்கள் அண்டும் ஆபத்து இருக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியைப் பற்றி கவலைப்படாமல் உடலை மெலிய வைப்பதில் மட்டுமே ஆர்வம் கொள்கின்றனர்.

மெலிந்த இடை, பெரிய மார்பு, ஒல்லியான உடல்வாகு என்ற

நிலமைதான் மேற்குலகில் பெண்கள் மத்தியில் உள்ள வாய்ப்பாடு.

ஆனால் எமது ஊர்ப்பிள்ளைகள் இந்த மூன்றையும் அடைவதற்கு ஆலாய்ப் பறக்கிறார்கள்.

இந்திய, இலங்கை ஆண்களுக்கு கொஞ்சம் குண்டான, மார்பு பெருத்த பெண்களைத் தான் பிடிக்கிறது. சினிமாவிலும் பாருங்கள். நமீதா, முன்பு குஷ்பு என்றுதான் ரசிக ஆண்கள் இருக்கிறார்கள்.

டயட் டயட் என்று உடலை மெலிய வைப்பது மட்டுமில்லாமல் வளரும் இளம் பெண்கள் மிகவும் ஆரோக்கியம் பேண வேண்டும். அதோடு சத்தான உணவும் சாப்பிட வேண்டும். இல்லாவிடில் அவர்களின் உடலுக்கு பேரிடர் வந்துவிடும்.

உடம்பும் மெலிந்து இருக்க வேண்டும். ஆனால் சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டும் என்பதே வைத்தியர்களின் ஆலோசனை.

இளைய பெண்களே 17 வயதில் உங்கள் எலும்புகள், தோல், உயரம், வளர்ச்சி கிட்டத்தட்ட இறுதிக் கட்டத்திற்கு வருகிறது. ஆகவே இந்தக் காலங்களில் நல்ல சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும்.

பெண்களைப் பொறுத்தமட்டில் உடலின் கொழுப்புச் சத்து மிகவும் முக்கியம். அதாவது இனப்பெருக்க உறுப்புகள் அமைப்பாக வளர்வதற்கு மிகவும் முக்கியம். இளம் பெண்கள் (நான் சொல்வது 13 முதல் 17, 18 வயது வரையானோர்) மெலிதாக இருக்க வேண்டும் என்பதற்காக சரியான சாப்பாடு சாப்பிடாமல் விட்டால் முதலில் பூப்பெய்தலில் பிரச்சினை ஆரம்பிக்கும்.

பிறகு மாதவிலக்குப் பிரச்சினைகள் ஏற்படும். சரியான சத்துணவுகளை சாப்பிடாமல் விடுவதன் காரணமாக இரும்புச் சத்தும் கல்சியமும் உடம்பில் குறைந்து பெரும் பிரச்சினைகள் ஏற்படும்.

வளரும் பிள்ளைகளினுடைய ஒவ்வொரு நாள் சக்திக்கும் 2500 கலோரி தேவை. இது குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மாச்சத்து ஒவ்வொரு நாளும் எடுத்துக் கொள்ள வேண்டும். அரிசி அல்லது கோதுமை மாப்பண்டங்கள் நல்லது. இதில் 10 முதல் 12 வயதுடைய பிள்ளைகள் நாளொன்றுக்கு 320 கிராம் வரை சாப்பிட வேண்டும். 13 முதல் 15 வரையான பிள்ளைகள் 350 கிராம் அளவில் சாப்பிட வேண்டும். அதற்காக தினமும் தராசு வைத்து நிறுத்துக் கொண்டிருக்கத் தேவையில்லை.

ஒரு நாள் அளவு பார்த்தால் தினமும் அந்த அளவு சாப்பிடலாம்தானே. பருப்பு, பயறு வகைகள் தினமும் 70 கிராம் சாப்பிட வேண்டும். அப்பொழுதுதான் புரதம் கிடைக்கும். இறைச்சி, மீன் ஒவ்வொரு நாளும் ஒரு பெரிய துண்டு அதாவது 60 கிராம் அளவில் சாப்பிட வேண்டும். மரக்கறிக்காரர் என்றால் பட்டாணிக் கடலை 50 கிராம் சாப்பிடுங்கள். கட்டாயம் 10 முதல் 18 வயதுள்ள சிறுமிகள் நாளொன்றுக்கு ஒரு லிற்றர் பால் குடிக்க வேண்டும். ஒரு நாளைக்கு நான்கு கிளாஸ் பால் குடியுங்கள். அது ஒரு லிற்றர் பாலுக்கு சமனாகி விடும். ஒவ்வொரு நாளும் உணவில் கீரை சேர்க்க வேண்டும். பப்பாசிப்பழம், மாம்பழம், வாழைப்பழம் தினமும் சாப்பிடுங்கள். இது எங்கள் ஊர்களில் கிடைக்கும். அலட்சியப்படுத்தக்கூடாது. புளிப்புள்ள பழங்கள் சாப்பிடலாம். அதில் விற்றமின் சி கிடைக்கும். ஆகவே உடல் மெலிந்து போக சாப்பிடாமல்

பட்டினி கிடந்து ஒன்றும் ஆகப்போவதில்லை. நோயெதிர்ப்பு சக்தியைக் கூட்ட வேண்டும். அல்லது நோய் வந்து அதனை மாற்ற முடியாமல் அவதிப்படுவீர்கள்.

எங்கள் அலுவலகத்தில் ஒரு பெண்மணி. கலியாணம் முடிக்கிற வயது. உடல் மெலிந்து இருக்க வேண்டும் என்பதற்காக காலையில் சாப்பிட மாட்டா. சாப்பிட்டாலும் ஒரே ஒரு பாண் துண்டு. பகலுக்கு சூப் மட்டும் குடிப்பா. அதுவும் கடையில் விற்கின்ற உடனடி சூப் பக்கற்றை வாங்கி வந்து தண்ணியில் சூடாக்கி குடிப்பா. இரவு சாப்பிடுவதில்லை. நல்லா சாப்பிடு உடம்பு போயிடும் என்று எங்கள் ஓபிசில் உள்ளவர்கள் ஒரே சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

அவ ஒரு சிரிப்போடு போய்விடுவா. வயிறு உள்ளே போய் அழகாகத்தான் இருந்தா. ஆனால் வந்தது ஒரு நோய். துவண்டு விழுந்து விட்டா. அந்த நோயிலிருந்து இன்னமும் மீளவே இல்லை.

வயிற்றில் புண் வந்துவிட்டது. கை நடுக்கம், வாந்தி என்ன உணவை இப்பொழுது சாப்பிட்டாலும் உடனடியாக வயிற்றாலை போய் விடும். ஒரு சிறங்கை மருந்து உட்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துவிட்டா இப்பொழுது.

அதோடு இன்டர்நெற்றில் போய் தனக்கு என்ன வருத்தம் என்று வெப்சைட்டுகளில் தேடி வருகிறா. அவா ஏற்கனவே மனது பலவீனம் உடையவா. வெப் சைட்டில் அவவினது வருத்தத்திற்குப் பெயர் தெரியாத நோய்கள் எல்லாம் இருக்கிறது என்று எழுதியிருக்கிறதைப் பார்த்து விட்டு இப்பொழுது மனப் பிரமை பிடித்தவ மாதிரி இருக்கிறா. "இன்டர்நெற்றில் போய் நோய் அறிகுறிகளைத் தேடுவதை நிறுத்து" என நான் ஏசினேன்.

வெப்சைட்டில் பொதுவான அறிகுறிகளும் நோயும்தான் போட்டிருப்பார்கள். அது அப்படியே இருக்கும் என்று உடனடியாக நம்புவது மடத்தனம்.

எனது நண்பன் ஒருவனுக்கு இரவுக் காய்ச்சல். தொடர்ச்சியாகவே இருந்தது. இதற்கு இங்கே லண்டனில் வைத்து மருந்து எடுத்தான்.

அவனின் மனிசி வெப்சைட்டில் போய் இரவுக் காய்ச்சல் என்ன நோய் என்று தேடினால் அது கான்சருக்கான அறிகுறி என்று இருந்தது. மனிசி குழம்பி, நண்பர் குழம்பி தனக்கு கான்சர் என்று அழுது இப்படி அல்லாடிக் கொண்டிருக்கும் பொழுது குடும்ப வைத்தியர் ஏசி அனுப்பியிருக்கார். முதலில் வெப்சைட்டில் நோய் அறிகுறியை வைத்துத் தேடுவதை நிப்பாட்டச் சொல்லி.

யாருக்குத்தான் செத்துப் போக விருப்பம். கான்சர் என்று பயந்தவன் தற்போது உசாராகி வேலை செய்கிறான்.

லண்டனில் ஒரு பெண்மணி தனது மகன் மெலிந்து போய் இருக்கிறான் என்று வெப்சைட்டில் போய் தேடி மருந்துகள் வாங்கிக் கொடுத்தா. அவன் இப்பொழுது குண்டாகி குண்டாகிக் கொண்டு வருகிறான். ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது. இப்பொழுது அந்தப் பெண் தலையிலடித்துக் கொண்டிருக்கிறா. டொக்டர்கள் கையை விரித்து விட்டார்கள்.

மகனின் உடல் பருத்துக் கொண்டே வருகிறது. இது அவனுக்குப் பேராபத்தை விளைவிக்கப் போகிறது. உலகம் முழுவதும் இளம் பெண்கள் மெலிந்த தோற்றமுள்ளவர்களாகவே இருக்க விரும்புகிறார்கள்.

அதற்கு சரியான போதுமான உணவு, நடைப் பயிற்சி, தேகப்பயிற்சியின் முக்கியத்துவத்தை உணர்கிறார்களில்லை. வெறுமனே இலகுவான முறை என்று சாப்பாட்டை ஒதுக்கிறார்கள். இது பெரிய பக்கவிளைவுகளை ஏற்படுத்தும். எமது சிலோன் பெண்கள் கலியாணம் முடிக்கும் வரை எலும்பும் தோலுமாக இருப்பார்கள். மெலிந்து துடி இடையோடு இருப்பார்கள். என்ன மாயமோ மந்திரமோ கலியாணம் முடிந்து ஒரு பிள்ளை பெற்றவுடன் குண்டாகிப் பருத்து விடுவார்கள். ஆனால் வெள்ளைக்காரர் ஐந்து, ஆறு பிள்ளைகளைப் பெற்றாலும் அதே மெலிவாகத்தான் இருக்கிறார்கள்.

உடல் என்பது கைக்குள் வைத்துப் பாதுகாக்க வேண்டிய பொக்கிசம். அதனை சீரழிய விடக்கூடாது.

'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்' என்பது உடலைப் பொறுத்தவரை பொய்யானதல்ல.

# வட்டுக்கோட்டை தீர்மானமும் வன்னித் தமிழரும்

"லண்டன் பனிக்குள்ளை இருக்க முடியாது. ஊரோடை போகலாம் எண்டால் இருக்கிறதுக்கு ஒரு இல்லிடம் கிடையாது ஐயா" என்று ஒரு வயதானவர் சொன்னார்.

ஜனவரி மாதம் கடைசிக் கிழமை இங்கே லண்டனில் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொண்ட கிளிநொச்சியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் சொன்னது அது.

உண்மையில் வட்டுக்கோட்டையில் என்ன தீர்மானத்தை யார் எடுத்தார்கள் என்ற எந்த அறிவும் இல்லாத ஆயிரக்கணக்கான தமிழர்கள் இங்கு வாக்குகளை அளித்துக் கொண்டிருந்தனர்.

தமிழர்களுக்கென்றொரு தமிழீழ பூமி வேண்டும் என்று விரும்புகிறவர்கள் 'ஆம்' என்றும், தமிழீழம் வேண்டாம், ஐக்கிய இலங்கைக்குள் சிங்களவர்களோடு வாழுவோம் என்றவர்கள் 'இல்லை' என்றும் வாக்களித்திருந்தார்கள்.

கனடா, சுவிற்சர்லாந்து, நோர்வே, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து என்று வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடைபெற்றிருக்கிறது. கடந்த வருடம் ஏப்ரல் மாதம் முள்ளி வாய்க்காலில் விடுதலைப்புலிகள் நெருக்கடிபட்ட நேரம் ஐரோப்பிய நாடுகளில் இப்படியான வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும்படி பிரபாகரன் வெளிநாட்டுத் தமிழர்களுக்கு அறிவுறுத்தி இருந்ததாக பிரித்தானிய தமிழர் தேசியப் பேரவை என்ற அமைப்பினைப் புதிதாக உருவாக்கிய ஸ்ரீரஞ்சன் சொல்கிறார்.

'நெருக்கடி பட்ட நேரத்தில் இவ்வாறான அழுத்தங்களை ஏப்ரல் மாதமளவில் வெளிநாடுகளுக்குத் தெரியப்படுத்தி தமிழீழம் தொடர்பான மக்களின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி யுத்தத்தை நிறுத்த இலங்கையரசுக்கு நோர்வே போன்ற நாடுகளின் மூலம் அழுத்தம் கொடுக்க பிரபாகரன் நினைத்திருக்கலாம். ஆனால் ஏப்ரல் மாதமென்பது மிகவும் காலதாமதமாகி விட்ட ஒருநேரம்' என்று ஸ்ரீரஞ்சன் சொன்னார்.

ஆனால் இந்த வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழர்கள் ஆர்வமாக வாக்களித்திருந்தனர் என்றுதான் சொல்ல வேண்டும்.

தங்களது இருப்புக்கு ஒரு நாடு வேண்டும் என்ற ஆவலும் ஆர்வமும் இங்குள்ள தமிழ் பொதுமக்களிடம் காணக்கூடியதாக இருந்தது.

நோர்வேயில் நடந்த வாக்கெடுப்பில் 5,633 பேர் வாக்களித்திருந்தார்கள். இதில் ஈழம் வேண்டும் என்று 5574 தமிழர்கள் வாக்களித்தார்கள். வேண்டாம் என்று 50 பேர் வாக்குப் போட்டிருந்தனர்.

இதில் உள்ள விடயம் என்னவெனில் வெளிநாட்டுப் புத்திஜீவிகளும் அறிஞர்களும் கண்காணிப்பாளர்களும் அதிகாரிகளாக இருந்து இந்த

வாக்கெடுப்பை நடத்தினார்கள்.

ஜெர்மனியில் 23,089 பேர் வாக்களித்தார்கள். 'ஆம்' என்று 22,904 பேரும், 'இல்லை வேண்டாம்' என்று 136 பேரும் வாக்களித்திருந்தார்கள். இதில் 49 வாக்குகள் செல்லுபடியாகவில்லை.

பிரித்தானியாவில் 64,692 பேர் வாக்களிப்பில் கலந்து கொண்டார்கள். 'ஆம்' என்று 64,256 பேர் வாக்கு போட்டார்கள். 'இல்லை' என்று 185 பேர் வாக்களித்தார்கள். 251 வாக்குகள் செல்லுபடியற்றதாகி இருந்தன.

கனடாவில் 48,481 பேர் தமிழ் ஈழம் வேண்டும் எனவும், 85 பேர் வேண்டாம் எனவும் வாக்களித்தார்கள். 16 வாக்குகள் செல்லுபடியாகவில்லை.

அதேபோல பிரான்சிலும் இந்த வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு இடம் பெற்றது. 30,936 பேர் 'ஆம்' என்றும், 43 பேர் 'இல்லை' என்றும் வாக்களித்தார்கள். இதில் செல்லுபடியாகாத வாக்குகள் 169.

சுவிற்சர்லாந்தில் இடம் பெற்ற வாக்களிப்பில் ஆம் என்று 16,357 பேரும், இல்லை என்று 3 பேரும் வாக்களித்திருந்தனர். 39 வாக்குகள் செல்லுபடியாகவில்லை.

சரி, இங்கே வாக்களித்தவர்களில் ஒரு சிலர் தமிழ் ஈழம் வேண்டாம் என்று தங்களது கருத்தைச் சொல்வதற்காகவே வாக்களிப்பு நிலையத்துச் சென்று வாக்களித்ததை 'இல்லை' என்ற வாக்குகள் சொல்கின்றன. அடுத்தது பழுதான அல்லது செல்லுபடியற்றதான வாக்குகள் வேண்டுமென்றே வாக்குச்சாவடிக்குப் போய் செல்லுபடியற்றதாகக் கீறி விட்டார்களோ என்றும் யோசிக்கத் தோன்றுகிறது. அந்த வாக்குச் சீட்டில், 'ஆம்,' 'இல்லை' என்று இரண்டு விடயங்கள்தான் இருக்கின்றன. அதனைச் செல்லுபடியற்றதாக்குதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு. இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் சிலர் செல்லுபடியற்றதாக்கி யிருக்கின்றனர் தாறுமாறாகக் கீறி.

ஐரோப்பிய நாடுகளில் இப்பொழுது கடும் குளிர்காலம். இந்தக் குளிரிலும் தமிழ் மக்கள் சாரி சாரியாகச் சென்று வாக்களிப்பில் கலந்து கொண்டார்கள்.

“ஊரில் எங்கடை வீட்டில் வாழ வேண்டும். எங்களுக்குத் தமிழீழம் கிடைக்க வேண்டும். அதுக்காக 'ஆம்' என்று வாக்குப் போடுவதற்காக வந்தேன்” என்று லண்டனில் றெய்னஸ்லேன் பகுதியின் வாக்குச்சாவடிக்கு வந்த பெண்மணி ஒருவர் சொன்னார்.

1976-ம் ஆண்டு மே மாதம் 14-ம் திகதியன்று வட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள பண்ணாகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானம் தமிழர்கள் சிங்களவர்களோடு இனி வாழவே முடியாது என்று முடிவெடுத்த தீர்மானம்.

'பண்ணாகம் தீர்மானம்' என்றுதான் இருக்க வேண்டும். ஆனால் ஏன் வட்டுக்கோட்டை தீர்மானம் என்று இருக்கிறதோ தெரியவில்லை எனக்கு.

இங்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஸ்கான்டிநேவிய நாடுகளிலும்

கனடாவிலும் நடத்தப்பட்ட இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு வட்டுக்கோட்டை தீர்மானம் மீதான வாக்கெடுப்பு என்று ஏற்பாட்டாளர்கள் சொல்கிறார்கள் இல்லை. வட்டுக்கோட்டை தீர்மானத்தின் ஒரே ஒரு விடயமான சுதந்திரத் தமிழ் ஈழம் அமைக்கப்பட வேண்டும் என்ற ஒரு விடயத்தை மட்டும் தான் முன்னிலைப்படுத்துகின்றனர்.

ஆனால் வட்டுக்கோட்டை தீர்மானத்தில் பல விடயங்கள் இருக்கின்றன. அவற்றில்.. தமிழ் ஈழம் எல்லோரும் சமமாக வாழும் பன்முகப்படுத்தப்பட்ட அரசியலைப்பைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

சாதி ஒழிக்கப்பட வேண்டும். எல்லாச் சமயங்களுக்கும் சமமான அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

தமிழ் அரசு மொழியாக இருக்க வேண்டும்.

அத்தோடு முக்கிய விடமாக தமிழ் ஈழம் என்கிற இந்த தேசத்தை அடைவதற்காகப் புனிதப் போரில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க முன்வரும்படி தமிழ் தேசிய இனத்துக்கும் தமிழ் இளைஞர்களுக்கும் அழைப்பு விடுக்கிறது இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானம். அதிலே யுத்தத்திற்கான உற்சாகம் கொடுக்கப்படுகிறது. தமிழ் இளைஞர்கள் ரத்தம் சூடாக்கப்படுகிறது. ஒரு தமிழ் தேசம் தொடர்பான ஆர்வம் கொடுக்கப்படுகிறது.

தமிழ்த் தலைவர்கள் தங்கள் சாத்வீகப் போராட்டம் தோல்வியடைந்ததன் பின்னர், 'தமிழனை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று கடவுளின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு, இளைஞர்கள் கையில் தேசமீட்பு போராட்டத்தை ஒப்படைக்கிறார்கள். அது பெரு யுத்தமாக விரிவடைகிறது.

ஆனால் அந்த யுத்தம் அல்லது மண் மீட்புப் போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ம் திகதியோடு முடிவடைகிறது. இயலாமலாகிப் போன இந்த 'தமிழரின் பூமி' என்கின்ற விடயம் இப்பொழுது மீண்டும் புலம்பெயர் நாடுகளில் மேலெழும்புகிறது.

1976-களில் இல்லாத அளவுக்குத் தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கின்றனர். புலம்பெயர் நாடுகளில் பல தமிழ் மில்லியனர் இருக்கின்றனர்.

சிலோனில் ஒரு லோயர் சம்பாதிப்பதற்கும், லண்டனில் சம்பாதிப்பதற்கும் மலையளவு வித்தியாசம்.

2010-ல் புலம்பெயர்ந்த தமிழர்கள் இங்குள்ள அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறார்கள். பணபலத்தாலும் புத்திஜீவித்தனத்தாலும்.

அமெரிக்கத் தேர்தலில் 'ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு' என்று மில்லியன் கணக்கான டொலர்களைச் செலவு செய்யக் கூடிய அமைப்பாகத் தமிழர்கள் வளர்ந்திருக்கின்றனர்.

பொதுமக்களும் தங்கள் பூமிக்காக பணத்தை ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு விதத்தில் கொடுக்கின்றனர்.

இங்கு பிரச்சாரங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே போன்ற நாடுகளின் ஊடாக இலங்கை அரசு மீது அழுத்தங்களைக் கொடுத்து எவ்வாறாவது தமிழர்களுக்கு வடக்கு-கிழக்கு இணைந்த சுய நிர்ணய அரசு ஒன்றைப் பெற்றுக் கொடுக்க முயற்சி செய்கின்றனர். ஆனால் இந்தியா அழுங்குப்பிடியாக மகிந்த ராஜபக்ஷேவைப் பிடித்து தமிழர்களுக்கான மொழியுரிமையுடன் கூடிய சுயாட்சியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று ஒருசாரார் தெரிவிக்கின்றனர். இந்தியாவை விட்டு விட்டு தமிழர் பிரச்சினையில் தீர்வு காணவே முடியாது என்பது பலரது வாதம். பிராந்திய அரசியலில் தமிழர் வாழ்வோடு பின்னிப் பிணைந்தது இந்தியா. அதனைத் தவிர்த்து விட்டு எதனையும் சாதிக்க முடியாது என்கின்றனர் அவர்கள்.

இந்தியாவோ வெளிநாடோ எதுவானாலும் எங்கள் தமிழர் பூமியில் முந்தி இருந்தது போல வாழ விடுங்கள் என்பதுதான் தமிழர்களின் அங்கலாய்ப்பாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில்மக்கள் இப்பொழுதுயுத்தம்முடிவடைந்ததன்பிறகு நிம்மதியாக இருப்பதாக அங்குள்ள உறவினர்கள் சொல்கிறார்கள்.

எங்கள் எங்கள் வீடுகளில் நிம்மதியாக ஒரு வாய்க் கஞ்சியைக் குடிக்க விடுங்கள் என்பதுதான் வன்னி மக்களின் வேண்டுகோள். யோகர் சுவாமிகள் வன்னிப் பக்கம் கையைக் காட்டிச் சொன்னாராம். "இது சாம்பல் மேடாகப் போகிறது. இது சாம்பல் மேடாகப் போகிறது." அந்த வார்த்தை தீர்க்கதரிசனமாகி விட்டது.

வாழ்வும் சாவும் நோயும் துன்பமும் மனக்கவலையும் அகதி வாழ்வும் அல்லல்படுதலும் தொடர்ந்து தமிழர்களின் காலைச் சுற்றிக் கொண்டே இருக்கிறது. பஸ்களில் கொண்டு போய் பறிக்கப்படுபவர்கள் ஒருவரும் சுக போக வாழ்க்கையை வாழவில்லை. பழைய படி கடைகள், பழைய படி கோவில்கள், வயல் நிலங்கள், ஆடு மாடுகள், கோழிகள், தென்னை மரங்கள், நீர்ப்பாசன வயல்கள், வாழ்வு என்று நிம்மதியான சூரி-யோதயம் எப்பொழுது கிடைக்கும் என்பதே அகதிகளின் கேள்வியாக இருக்கிறது.

ஒரு தேர்தல் முடிந்து விட்டது. அதற்கு பிறகு விடிவு வரும் என்றால் சாண் ஏற முழம் சறுக்குகிறது தமிழருக்கு.

மகிந்த ராஜபக்ஷே சொன்னார். 'வாக்கு போட்டவர்கள், எனக்கு வாக்கு போடாதவர்கள் எல்லோருக்கும் நான் ஜனாதிபதி' என்று.

இது ஆயிரத்தில் ஒரு வார்த்தை. இப்பொழுது அதனை நிறைவேற்ற வேண்டும். தமிழர்கள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷே என்ன நினைக்கிறார் என்றே தெரியவில்லை. ஜனவரி 31ம் திகதிக்கு முன்பு மீள் குடியேற்றம் என்றார். ஆனால் அது இன்னும் முடிந்த பாடில்லை.

இந்தியா தொடர்ந்து கோடிக்கணக்கான பணத்தை மீள் குடியேற்றத்திற்காகக் கொட்டிக் கொண்டு இருக்கிறது.

ஒரு தறப்பாள் கொட்டிலில் இருப்பதற்கு மட்டுமா அவ்வளவு பணமும் செலவாகிறது. உண்ண உணவில்லாமல் உடுக்க உடையில்லாமல் தங்களது சொந்த இடத்தைப் பறி கொடுத்த மக்களுக்கு எப்பொழுது வடக்கின் வசந்தம் வரப்போகிறது. கும்பிட்ட கையோடு வடக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் தமிழ் மக்கள்.

# அச்சம் மிகுந்த விமானப் பயணம்

இப்போது விமானப் பயணம் என்பது பெரும் வில்லங்கமாகவே இருக்கிறது. ஐரோப்பிய நாடுகளில் ஏயார் போட்டுக்குப் போவது ஏதோ பாதுகாப்பு மிகுந்த ஆமி காம்புக்கு போவது போலவே இருக்கிறது.

நவீன ஆயுதம் தாங்கிய பொலிஸார் எப்பொழுதும் சுட்டு விடுவார்களோ என்ற பயத்தோடுதான் டிக்கட் கவுண்டர், விசா கவுண்டரில் நிற்க வேண்டி இருக்கிறது. விமான நிலையத்தில் எந்த மகிழ்ச்சியும் எங்கும் இல்லை.

விமானத்தில் ஏறி உட்கார்ந்ததன் பின்பும், யாராவது குண்டு வைத்திருக்கிறேன் என்று மிரட்டி விடுவார்களோ என்ற அச்ச உணர்வே மேலோங்கி இருக்கிறது.

எங்களது நாட்டு ஏயார்போட்டுகளை விட ஐரோப்பிய, அமெரிக்க, ஸ்கன்டினேவிய நாடுகளின் ஏயார்போட்டுகள் அச்சம் மிகுந்தவையாக இருக்கின்றன. விமானப் பயணத்தை விட கப்பல் பயணம் நல்லது என்று எனது நண்பன் ஒருவன் சொன்னான். ஆனால் கப்பலில் எத்தனை நாட்கள் என்று பயணிப்பது? எங்கும் உயிர் பயம் மிகுந்தே காணப்படுகிறது.

தீவிரவாதிகள் என்று தங்களை அறிவித்துக் கொள்வோரின் குறி ஆயுதம் தாங்காத ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிகர்களைக் கொண்ட அப்பாவிப் பொதுமக்கள் மீது திரும்பியிருப்பது மிகவும் வெறுக்கத்தக்கது.

போர் செய்பவர்களும் ஆயுதம் தாங்கிய எதிரிகளை விட்டு விட்டு கொத்துக் கொத்தாக குண்டுகளை எறிந்து அப்பாவிகளைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல விமானத்தில் பயணம் செய்யும் அப்பாவிகளைக் கொல்வதில் தீவிரவாதிகள் குறியாக இருக்கும் பொழுது கொல்லப்படுவது பொதுமக்கள்தான்.

யுத்தம், தீவிரவாதம் எதிலுமே சம்பந்தப்படாத பொதுமக்களை தமது கொலைக்களமாக்கியருக்கும் யுத்ததாரிகள் மிகவும் கொடியவர்களாக இருக்கிறார்கள்.

அமெரிக்காவும் தனது வேவு பார்க்கும் முறை தோல்வியடைந்து விட்டதாக ஒப்புக் கொள்கிறது.

தீவிரவாதிகள் பொதுமக்கள் போல விமானத்தில் ஏறி வெடிபொருட்களைச் சர்வ சாதாரணமாக எடுத்து வந்து வெடிக்க வைக்கிறார்கள்.

அவசரமான பயணம், பொழுது போக்கு, வியாபாரம் என்று பயணிக்கும் மக்களோடு மக்களாக அவர்களைக் குறிவைத்துக் கொண்டு மரணமே நோக்கமாகக் கொண்டு கொலையுணர்வுடன் பயணிக்கும் மனிதரை எப்படி வேறுபடுத்திப் பார்ப்பது என்று விமான நிலைய செக்கியூரிட்டிகள், ஸ்கான் கமெராக்கள் எல்லாம் விழிபிதுங்கி நிற்கின்றன. யார் கொலையாளி என்பதுதான் பெரும் சங்கடம்.

விமானத்தில் 300 பேர் இருந்தால் அவ்வளவு பேரையும் நடுவானில்

வைத்து துவம்சம் செய்ய ஒரே ஒரு கொலையாளி போதும் என்பதுதான் தீவிரவாதிகளின் கொள்கை. ஆனால் செத்துப் போவது 300 பேர். நினைக்கவே நெஞ்சு பதறிப் போகிறது.

வாழ்வை வாழ ஆசைப்படும் மனிதனுக்கு எப்பொழுதும் கொலை செய்யப்பட்டு விடுவோம் எனும் அச்சமே அவனை மன-நோயாளி ஆக்கிவிடும்.

கொலை செய்யும் எண்ணம் எப்படி இந்த இளைஞர்கள் மத்தியில் வேரூன்றி வருகிறது என்பது பெரும் கேள்வியாக, விடை காண முடியாத கேள்விகளாக இருக்கின்றன. அதுவும் முஸ்லீம் இளைஞர்ளை இவ்வாறு தற்கொலைத் தாக்குதலுக்குத் தூண்டும் காரணிகள் என்ன? 2001-ம் ஆண்டில் இருந்து வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. செப்டம்பர் 11 அன்று அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு பின்லேடன் என்ற ஒரு பெரும் தீவிரவாத மனிதர் தொடர்பான கருத்தாடல்கள் உலகம் முழுவதும் வியாபித்து இருக்கும் பொழுது அவர்தான் ஒட்டுமொத்த முஸ்லீம் இளைஞர்களையும் இயக்குகிறாரா என்ற கேள்விதான் அமெரிக்க உளவுத்துறை, பிரித்தானிய உளவுத்துறையின் மிகப் பெரிய வினா. அதற்கு விடை கடந்த பத்தாண்டுகளில் கிடைக்கவில்லை.

முதலில் ஏழை இளைஞர்கள், வேலை இல்லாத இளைஞர்கள்தான் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற வாதம் பொய்யாகி விட்டது.

கடந்த பத்தாண்டுகளில் தீவிரவாதத் தாக்குதலில் ஈடுபடும் இளைஞர்கள் எல்லோருமே இங்கிலாந்தில், அமெரிக்காவில் படித்தவர்கள், நல்ல வேலை செய்து கைநிறையச் சம்பாதிக்கக் கூடியவர்கள்.

காசுக்காரக் குடும்பங்களில் இருந்து வந்தவர்கள். ஆகவே இந்த இளைஞர்கள் எப்படி ஏனையவர்களைக் கொன்று தாங்களும் தற்கொலை செய்யும் அளவிற்கு துணிகிறார்கள் என்றால் எல்லோரும் கையைக் காட்டுவது இஸ்லாம் மார்க்கம் மீது தான். அது ஏன்?

இங்கே லண்டனில் வெள்ளிக்கிழமை தொழுகையின் போது பள்ளிவாசல்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. அது மட்டுமல்ல வெள்ளிக்கிழமை ஜூம்மா பிரசங்கத்தில் தீவிரவாதத்திற்கு இளைஞர்களைத் தூண்டும் பிரசங்கங்களைப் பள்ளிவாசல் மௌலவிமார் செய்கிறார்களா என்று பிரித்தானிய உளவாளிகள் பள்ளிவாசல்களில் முஸ்லிம்களைப் போல அல்லது முஸ்லிம்களை வைத்து கண்கொத்திப் பாம்பாகக் கண்காணிக்கிறார்கள். ஒற்றுமையே மிகுந்த சிறந்த வழிகாட்டியான இஸ்லாம் மார்க்கம் மீது பழிபோடத் தக்க தீவிரவாதத் தாக்குதலை இஸ்லாத்தின் பெயரால் செய்யும் தீவிரவாதிகள் உலகில் முஸ்லிம்களுக்குள்ள எல்லா மரியாதையையும் உரிந்து விட்டார்கள்.

ஒரு மனிதரைக் கொலை செய்யும் எந்த உத்தரவையும் புனித குர்-ஆன் எங்கும் வழங்கவில்லை. ஆனால் முஸ்லிம்களின் நாடுகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். இதனை மட்டுமே சர்வதேச ஆங்கில ஊடகங்கள்

முதன்மைப்படுத்துகின்றன. வெள்ளைக்காரர் மத்தியில் கைது செய்யப்படும் முஸ்லிம் இளைஞர்களை வைத்து ஒட்டுமொத்த முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களுக்கு எதிரானவர்களாக காட்ட, முஸ்லிம்கள் அனைவரும் எதிரிகளே என்ற மனப்பாங்கு தினம் தினம் அதிகரித்து வருகிறது.

ஈராக் மீதான தாக்குதல்கள், ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்கள் இப்பொழுது யெமன் மீதான தாக்குதல்கள் எல்லாம் இஸ்லாமிய தீவிரவாதத்தின் மீதும் மேற்குலகை அழிக்க நினைக்கும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் என்றே ஊடகங்கள் பெரிதுபடுத்துகின்றன.

பாலஸ்தீனம் என்றொரு நாடு இருக்கக்கூடாது என்று இஸ்ரேல் கங்கணம் கட்டி நிற்கிறது.

ஹமாஸ் மீதான கொடும் தாக்குதல்கள் அதனை நிரூபிப்பதைப் போல இருக்கிறது.

ஈரான் மீதும் தாக்குதல் தொடுத்து ஈரானைத் துவம்சம் செய்துவிட வேண்டும் என்று அமெரிக்கா உறுமிக்கொண்டிருக்கிறது.

முஸ்லிம்களின் மீதான தாக்குதலுக்கு இஸ்லாம் மதத்தின் மீதான தாக்குதல்களாகவும் முஸ்லிம்கள் எப்பொழுதும் ஆபத்தானவர்களாகவும் காட்ட என்னென்ன வழிகளைச் செய்ய வேண்டுமோ அத்தனை வழிகளையும் அமெரிக்காவும் அதன் சார்பு ஊடகங்களும் முயற்சி செய்கின்றன.

ஈரான் மீதான தாக்குதல் தொடுக்க ஈராக் நாட்டிற்கு சதாம் குசைனுக்குத் தொடர்ச்சியாக ஆயுதங்களைக் கொடுத்த அமெரிக்கா, ரசியா மீது குடைச்சல் கொடுத்த தலிபான்களுக்கு ஆயுதம் கொடுத்த அமெரிக்கா இப்போது அவையெல்லாம் தம்மீது திரும்பிவிட அந்த விடயத்தையே மறந்துவிட்டு திருப்பித் தாக்கும் விடயத்தினை ஊடகங்கள் மறந்தும் சொல்லுவதில்லை.

எங்கு பார்த்தாலும் இஸ்லாமிய பயங்கரவாதம் என்பதுதான் பேசுபொருளாக நிறைந்து கிடக்கிறது. மதரசாக்கள் என்கின்ற அரபுக் கல்லூரிகள் பயங்கரவாதிகளை உருவாக்கும் இடங்களாகப் பார்க்கும் ஒரு நிலைமை உருவாகி இருக்கிறது. தாடி வைத்தவர், தலைப்பாகை அணிந்தவர், ஜூப்பா போட்டவர் என்றால் அவர் அடிப்படை முஸ்லிம் என்றும் அவரால் ஆபத்து வரும் என்றும் அஞ்சும் நிலைமை பிரித்தானியா போன்ற இடங்களில் இருக்கிறது. பக்கத்து வீட்டில் தாடி வைத்து, பள்ளிவாசலோடு அதிகமான தொடர்புடைய முஸ்லிம் ஒருவர் இருந்தால் அண்டை வீட்டாரான வெள்ளைக்காரர் பயப்படும் அளவுக்கு ஊடகங்கள் அதனைப் பெரிது படுத்துகின்றன.

றோட்டில் தாடி வைத்த, தலைப்பாகை கட்டி ஜூப்பா போட்ட ஒரு முஸ்லிம் கார் ஓட்டிப் போனால் பொலிஸ் கார் ஒன்று அவரைப் பின்தொடர்ந்து நோட்டமிடுகிறது. அவர் ஏதாவது பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டுவிடுவாரோ எனும் பயங்கரம்தான். மனிதர் மீதான நம்பிக்கையீனம் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. ஒருவரின் தோற்றத்தை வைத்து, நடை, உடை, பாவனையினை வைத்து ஒருவரின் மதத்தை வைத்து பெயரை வைத்து அச்சமடையத் தொடங்கிவிட்ட உலகம் பேராபத்தானது.

முகமட் எனும் பெயர் மேற்குலகில் அச்சம் தரக்கூடிய பெயராக வெளிப்படையாகவே இருக்கிறது. இதில் முகமட் எனும் பெயருடையவரை விமானத்தில் ஏற்றுவதற்கு ஒன்றுக்கு மூன்று தடவை யோசிக்கிறார்கள் விமானக் கம்பெனிகள். ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான்,

யெமன், மத்திய கிழக்கு நாடுகள் என்று முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் இருந்து ஒவ்வொருவரையும் 'பொடி ஸ்கானிங்' மெசினுக்குள்ளால்தான் ஒவ்வொரு விமானநிலையத்தில் இருந்தும் அமெரிக்காவிற்கு அனுப்ப வேண்டும் என்று அமெரிக்கா கடும் உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. இது ஒரு இனம் மீதான பகிரங்கமான உளவியல் தாக்குதல். ஏழை, பணக்காரன், பிஸ்னஸ்காரன் என்றில்லாமல் எல்லோர் மீதான நடவடிக்கை இது. முஸ்லிம்கள் மனதளவில் துவண்டு போய் இருக்கிறார்கள். ஏற்கனவே பல கெடுபிடி விமான நிலையங்களில், இப்பொழுது இதுவேறு வந்திருக்கிறது.

தற்கொலை என்பது இஸ்லாம் மார்க்கத்தில் ஹராமான ஒன்றாகும். அது எந்தச் சந்தர்ப்பத்திலும் அப்படியே. கொலை செய்வது என்பது மிகப்பெரிய பாவம். ஆனால் அந்த இரண்டு எண்ணங்களையும் இளைஞர்கள் மத்தியில் விதைத்து அவர்களைத் திசை திருப்பும் எல்லோரும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவர்கள், தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

என்னைப் போல அடிக்கடி விமானப் பயணம் செய்பவர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. அடுத்த வாரம் நான் ஜேர்மனிக்குப் போக வேண்டும். மனிசி இப்பவே யோசிக்கத் தொடங்கிவிட்டது. போய் விட்டு வரும் வரை நிச்சயமில்லை. என்ன உலகமிது.

# ஐ.பி.எல். கிரிக்கெட் -
# கொட்டும் பண மழை

எங்களது கிராமத்தில் கிட்டிப்புள் விளையாட்டுதான் எனது சின்னக் காலங்களில் தெரிந்த ஒரு விளையாட்டு. பாடசாலையில் கிளித்தட்டு மறிக்கும் விளையாட்டு. நாங்கள் ஆண்களும் பெண்களும் கூடி விளையாடுவோம்.

பள்ளிக்கூடத்தில் ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் ஒன்று சேர்ந்து விளையாடுவது தில்லையம்பலம் வாத்தியாருக்குப் பிடிக்காது. அவர் கண்டால் முறைத்துக் கொண்டுதான் போவார். ஒருமுறை எங்கள் வகுப்பு புவனேஸ்வரியை நான் மறித்து கிளித்தட்டு விளையாடும் போது அவள் என்னை உச்சிக் கொண்டு போக முற்பட்டதால் எட்டி அடிக்கும் பொழுது அவளது வளர் மார்பில் பட்டு வலியால் துடித்து அப்படியே உட்கார்ந்து விட்டாள். பிறகு ஒருவாறு சமாளித்தாகி விட்டது.

இங்கே லண்டனில் சமர் காலங்களில் நாங்கள் பாக்குகளுக்குப் போய் கிரிக்கட் விளையாடுவோம். என்னைத் தொங்கலில் பந்து தூரப் போனால் ஓடிப் பொறுக்குவதற்குத் தான் போடுவார்கள். பந்து பொறுக்குவதில் வின்னன் நான் என்பது நண்பர்களுக்குத் தெரியும்.

நான் மட்டையைத் தூக்கி வைத்திருந்தால், 'இதோ விக்கட்' என்று சொல்லியபடி அடிப்பார்கள். என்ன மாயமோ மந்திரமோ அப்படியே விக்கட்டில் வந்து பந்து விழும். நான் அடிக்க மட்டையைத் தூக்க முதல் எல்லாம் நடந்து முடிந்து விடும்.

எழுதுவது, வாசிப்பது என்றுதான் எனது பொழுது கழிந்து கொண்டிருக்கும். எனது மேசையில் எப்பொழுதும் புத்தகங்கள் முடிய முடிய வருவதை மனிசி ஒரு முறைப்போடு பார்த்து விட்டுப் போகும்.

எப்பொழுது அமீர்கானின் 'லகான்' திரைப்படம் பார்த்தேனோ அதற்குப் பிறகு கொஞ்ச நாள் கிரிக்கட்டின் மீது ஒரு ஆர்வம் இருந்தது. உண்மையில் 'லகான்' பாருங்கள். அமீர்கான் எப்படி கிரிக்கெட்டைக் காண்பித்திருக்கிறார்.

சீற்றின் நுனிக்கு வந்து பார்ப்பது என்ன என்பதை 'லகான்' பார்த்தவர்கள் உணர்ந்திருப்பீர்கள்.

அதற்குப் பிறகு இலங்கையில் எமது வீரர்களின் திறமையினால் கிரிக்கட்டின் மீது தீராக்காதல் கொண்டிருந்ததைப் பார்த்திருக்கிறேன்.

ஆனால் இப்பொழுது இந்தியன் பிரிமியர் லீக் கிரிக்கட்டின் போதை ஏறிய இளைஞர்களைத் தான் உலகம் முழுக்கக் காணுகிறேன்.

இங்கே எனது வீட்டில் 14 வயது மக்ன் இந்தியாவில் விளையாடும் கிரிக்கட்டை கொம்பியூட்டரில் லைவ் ஆகப் பார்த்துவிட்டுத் துள்ளிக் குதிக்கிறான். கத்துகிறான். அமைதியாக இரடா என்றால் கேட்க மாட்டேன் என்கிறான்.

ஆனால் அவனின் குணம் வெல்லும் அணிக்குத்தான் சப்போட் பண்ணிக் கூத்தாடுவான். ஐ.பி.எல். என்பது பந்தின் மூலம் பணம் கொட்டும் ஒரு விளையாட்டாகி விட்டது இந்தியாவில்.

இந்தியாவின் முக்கிய வியாபார நிறுவனங்களுக்கே சவால் விடுகிற சக்தி ஐ.பி.எல். கிரிக்கட்டுக்கு உண்டு.

லலித்மோடி என்ற சாதாரண மனிதரின் மூளைக்குள்தான் இந்த ஐடியா பிறந்தது. அவருடைய மாணவப் பருவத்தில் அவர் எதனையும் சாதிக்கக் கூடியவர் என்று யாரும் நினைத்திருக்கவே இல்லை. ஆனால் இன்று உலகின் முக்கியப் புள்ளியாக லலித்மோடி இருக்கிறார்.

ஐ.பி.எல். என்கின்ற இந்த அதிஸ்ட்ட சக்கரத்தை இயக்குபவர்கள் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி - ஷில்பாஷெட்டியினுடையது, கொல்கத்தா நைட் றைடர்ஸ் - ஷாருக்கான் உடையது, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி - பிரீத்தி ஸிந்தாவுடையது, றோயல் சேலஞ்சர்ஸ் - விஜய் மல்லையாவுடையது, மும்பை இந்தியன்ஸ் - நீத்து அம்பானியுடையது, சென்னை சூப்பர் கிங்ஸ் - என். ஸ்ரீனிவாசன், ஹைதராபாத் டெக்கான் சார்ஜர்ஸ் - வெங்கட்ராம் ரெட்டி, டெல்லி டேர் டெவில்ஸ் - ஜி.எம். ராவ், இவர்களோடு சுப்ரதா ராய் உடைய புதிய அணி ஒன்றும், சைலேந்திர கெய்க்வாட் உடைய புதிய அணி ஒன்றும் இந்தக் களத்தில் குதித்திருக்கின்றன.

தொலைக்காட்சிகளில் இந்தப் போட்டிகள் நடக்கும் பொழுது பிரீத்தி ஸிந்தாவையும், ஷில்பா ஷெட்டியையும்,

ஷாருக்கானையும் அடிக்கடி காட்டி ரசிகர்களைக் குஷிப்படுத்தும் தொலைக்காட்சியின் கமராக்களை ரசிகர்கள் உள்ளம் குளிர்ந்தபடி ஆகர்சிக்கிறார்கள்.

இந்தப்போட்டிகளை வி.ஐ.பி.களோடு அவர்களுக்கு அருகிலிருந்தே பார்க்கும் அரிய வாய்ப்புக்கு 40 ஆயிரம் ரூபாய் இந்திய ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 40 ஆயிரம் என்ன, 40 ஆயிரம் நாள் முழுவதும் வி.ஐ.பி.க்கள் பக்கம் திரும்பும் கமராக்கள் 40 ஆயிரம் ரூபா டிக்கட் எடுத்தவர்களையும் சேர்த்தே காட்டுகின்றன. இதற்கே இந்தப் பெறுமதி அருமையானது என்கிறார்கள் டிக்கட் எடுத்தவர்கள்.

அத்தோடு மைதானமே கொண்டாட்ட குதூகலத்தில் வைத்திருக்க, ஒவ்வொரு நொடியும் குதூகலமே நோக்கமாக இருக்கும் வேறு எந்த விளையாட்டையும் பார்க்க முடியாது. சிவமணியின் அற்புத டிரம்ஸ் இசை. அந்த இசைக்கு ஆட்டம் போடும் கொள்ளை அழகுப் பெண்கள் என்று ஐ.பி.எல். கிரிக்கெட் மைதானமே முழு சந்தோஷமாகத் திளைத்திருக்கக் கூடியதாகச் செய்திருக்கிறார் லலித்மோடி.

லலித்மோடி என்கின்ற இந்தக் கட்டையான மனிதரைச் சுற்றி வியாபாரமும் குதூகலமும் நிறைந்து காணப்படுகின்றன. விளையாட்டு வீரர்களை எப்பொழுதும் குஷிப்படுத்தி உற்சாகமாக வைத்திருக்க அழகுப் பெண்களும் உற்சாக ரசிகர்களும் தயார் நிலையில் இருக்கின்றனர்.

இந்தியாவில் பண முதலைகள் இந்த விளையாட்டுக்கு அள்ளிக் கொட்டிய பணத்தின் மூலம் தங்களையும் மகிழ்வித்துப் பெருமைப்படுத்திக் கொண்டு உலகின் கோடானு கோடி விளையாட்டு ரசிகர்களுக்கும் தீனி போடுகிறார்கள். இந்த கிரிக்கெட்டின் அல்லது இந்த வியாபாரத்தின் மொத்த மதிப்பு எவ்வளவு தெரியுமா? 400 கோடி டொலர். தொலைக்காட்சியில் கிரிக்கட் போட்டிகளின் இடையே காட்டும் விளம்பரங்களுக்கு விலை என்ன தெரியுமா? 10 செக்கண்டுகளுக்கு 5

லட்சம் இந்திய ரூபாய். 10 கோடியே 80 லட்சம் பேர் மூன்றாவது ஐ.பி.எல். கிரிக்கட்டைத் தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கிறார்கள். என்ன பிரமாண்டம் இது? இந்தப் பிரமாண்டங்களுக்கு எல்லாம் லலித்மோடி என்ற தனிமனிதரை நோக்கித்தான் விரல் காட்டுகிறார்கள்.

இங்கு லண்டனின் ஐ.டி.வி. 4 என்ற அலைவரிசையை ஆரம்பித்துவிட்டு அதன் நிர்வாகத்தினர் ஈ ஓட்டிக் கொண்டிருந்தனர்.

ஆனால் இப்பொழுது ஐ.பி.எல்.இன் புண்ணியத்தால் பணம் கொட்டும் ஒரு சேனலாக ஐ.டி.வி. இருக்கிறது.

மில்லியன் கணக்கானவர்கள் ஐ.டி.வி.யின் முன்னால் எழும்ப முடியாமல் உட்கார்ந்திருக்கின்றனர்.

இந்த உயர்வுக்கும் றேட்டிங் வளர்ச்சிக்கும் காரணம், ஐ.பி.எல். என்கின்ற மாயம் என்றுதான் ஐ.டி.வி.4 அலைவரிசை எந்த மறுப்பும் இல்லாமல் சொல்கிறது.

இந்தியாவில் கிரிக்கட் மைதானத்துக்கு வரும் ரசிகர்களின் எண்ணிக்கையும் எகிறிக் கொண்டு போகிறது. ரசிகர்களின் மூலம் கிடைக்கும் பண வருமதியும் 25 வீதம் உயர்ந்து காணப்படுவதாகச் சொல்லி மகிழ்கின்றனர் ஐ.பி.எல். ஏற்பாட்டாளர்கள். இங்கே ஒரு விடயத்தை வல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர். ஒவ்வொரு பெரிய கம்பெனிகளும் ஏன் இந்த ஐ.பி.எல். அணிகளை இவ்வளவு விலை கொடுத்து வாங்குகிறது என்றால் தங்கள் பெரிய கம்பெனிகளுக்கு விளம்பரம் எக்கச்சக்கமாக கிடைக்கிறது என்பதனால்தான்.

உதாரணத்துக்கு விஜய் மல்லையாவை எடுத்துக் கொள்ளுங்கள். அவரின் அணி றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு சம்பாதிக்கும் பணம் அவருக்கு ஒரு பொருட்டல்ல. பணம் கொழிக்கும் மதுபான அதிபர் அவர். அவரின் சொத்து மதிப்பு இன்றைக்கு 1 பில்லியன் டொலர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒரு பில்லியன் டொலர் கணக்கில் வரும் வெள்ளைப் பணம். கணக்கில் வராத கறுப்பு பணத்தை நான் சொல்லவில்லை.

கிங் பிஷர் மதுபானம், கிங் பிஷர் எயார் லைன் என்று பெரும் செல்வந்தர். ஆனால் மதுபான விளம்பரங்கள் இந்தியாவில் தடை. ஐ.பி.எல். கிரிக்கட் ரீமை 42 மில்லியன் டொலர் விலையுள்ளதை தன் வசப்படுத்தினார்.

கிரிக்கட் போட்டி நடக்கும் காலங்களில் 'கிங் பிஷர்' விளம்பரத்தை ரீஷேட்டுகளில், பெனர்களில் பார்க்க வேண்டாம் என்று எவராலும் தடுக்க முடியாததல்லவா.

என்ன உத்தி பாருங்கள். ஐ.பி.எல். மூலமாக கிங் பிஷர் எதிர்பார்த்ததற்கும் அதிகமான விளம்பரத்தைப் பெறுகிறார்கள்.

இன்னொரு வேலைக்கும் திட்டமிடுகிறார் மோடி. பெரும் பெரும் சினிமாக்களில் ஐ.பி.எல். கிரிக்கட் நடைபெறும்பொழுது அதனைப் பெரிய திரையில் காண்பித்து ரசிகர்களைத் தியேட்டருக்கு வரவழைத்துக் காசு பண்ணும் ஒரு திட்டம்.

இது இதுவரை அவருக்கு கைகூடவில்லை. சினிமாக்காரர்கள் அதனைப் பலமாக எதிர்க்கிறார்கள்.

கிரிக்கட் ரசிகர்கள் ஐ.பி.எல். காலத்தில் தியேட்டர்களை ஆக்கிரமித்தால் எல்லா திரைகளிலும் கிறிக்கட்தான் ஆக்கிரமித்துக் கொள்ளும். திரைப்படத்தை யார் பார்ப்பார்கள்.

ஆனால் இந்தத் திட்டம் மட்டும் கைகூடினால் இன்னும் கொட்டும் பணம். அதுமட்டுமா அடுத்த அடுத்த வருடங்களில் 3-டியில் கிரிக்கட் போட்டிகளைக் காட்டவும் யோசிக்கிறாராம் அவர்.

இந்த ட்வென்டி ட்வென்டி கிரிக்கட்டின் போதை 2008-ல் ஆரம்பித்தது. 46 நாட்கள், 59 போட்டிகளில் ராஜஸ்தான் றோயல் கடைசியில் வென்றது. 2009-ல் இரண்டாவது சீசனில் பொதுத் தேர்தலைக் காரணம் காட்டி வீரர்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என்று உள்துறை அமைச்சகம் சொல்ல, தென்னாப்பிரிக்காவுக்குப் போய் விளையாடின குழுக்கள். அதில் டெக்கான் சார்சர்ஜ் வெற்றி பெற்றது. 2010-ல் இப்பொழுது கிரிக்கட் ரசிகர்களைக் கட்டிப் போட்டு வைத்திருக்கிறது ஐ.பி.எல். இது மூன்றாவது சீசன். ஐ.பி.எல்.இன் இன்றைய மதிப்பு 413 கோடி டொலர். என்ன மலைப்பாக இருக்கிறதா?

அடுத்த வருடம் இன்னும் பல ஆச்சரியங்களை ஐ.பி.எல். நிகழ்த்திக் காட்டும். கோடிக்கணக்கான டொலர்களில் புரளும் இந்தப் பணங் கொழிக்கும் விளையாட்டைப் போதையோடு ரசிக்க கிரிக்கட் ரசிகர்கள் உலகம் முழுவதும் கோடிக்கணக்கானவர்கள் தயாராக இருக்க, மோ-ாடியும் அவரது குழுவினரும் இன்னும் இன்னும் புதிதாக யோசித்துக் கொண்டிருப்பார்கள். இரு போட்டிக்கான ஒரு டிக்கட்டின் விலை இந்திய ரூபாயில் 650 ஆகும்.

ஆனால் வெளியில் ஆயிரம் ரூபாவுக்கும் மேல். 12 ஆயிரம் ரூபாவுக்கும் 40 ஆயிரம் ரூபாவுக்கும் கூட அமரும் இடங்களைப் பொறுத்து டிக்கட் இருக்கிறது. இந்தக் கலர்புல் காட்சிக்கு என்ன விலை கொடுக்கவும் ரசிகன் தயார் என்றும் ஒரு நிலை இருக்கிறது.

அதனால்தான், ஐ.பி.எல். கொட்டும் பண மழை என்கிறேன் நான்.

(இது மோடியின் ஊழலுக்கு முன்பு எழுதிய கட்டுரை)

# யாரிடமும் சொல்லக்கூடாத ஒன்பது விடயங்கள்

கடந்த வாரம் எங்கள் வீட்டுக்கு, மனைவிக்கு தெரிந்த பெண்மணி ஒருவர் அவரது கணவனோடு வந்திருந்தார்.

அவரின் வயது பற்றி எங்கள் வீட்டில் உள்ள எல்லோருக்கும் ஒரு சர்ச்சை இருந்து கொண்டுதான் இருந்தது. மனிசி சொன்னது தன்னொத்த வயது இருக்கும் என்று அதாவது 35. மகள் சொன்னாள் அந்த அன்ரிக்கு 34 மட்டில்தான் இருக்கும் என்று. நான் சொன்னேன். அந்த அன்ரி வந்தவுடன் அவவிடமே கேட்டுப் பார்ப்போம்.

புருஷனோடு அந்த சர்ச்சைக்குரிய பெண்மணி எங்கள் வீட்டுக்கு இரவு சாப்பாட்டுக்கு வந்ததும், நாங்கள் மூன்று பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். சிரித்துக் கொண்டோம். வந்திருந்த பெண்மணி ஊர் துளவாரங்களில் அவ்வளவு இன்றஸ்ட் இல்லாத பெண்மணி. எங்களின் சிரிப்பை என்ன என்றும் கேட்கவில்லை.

கடைசியில் புருஷனும் பெண்சாதியும் நாங்களும் ஒரு பிளேன் டீ குடித்ததன் பின்பு மகள் தான் கேட்டாள். அன்ரி உங்களுக்கு என்ன வயது என்று, எங்களுக்குள் சர்ச்சை என்றும் சொன்னாள். எங்களில் யாரும் 35 வயதுக்கு மேல் மதிக்கவில்லை என்பதையும் சொன்னோம்.

அந்த அன்ரி, நான் யாருக்கும் வயது சொல்வதில்லை. நீ கேட்டபடியால் மட்டும் சொல்கிறேன். எனக்கு 41.

மகளும் மனிசியும் ஆச்சரியத்தை முகம், கண், வாய் எல்லாவற்றாலும் வெளிப்படுத்தினார்கள். அவ்வளவு இளமை அந்த பெண்மணியிடம்.

இந்தப் பெண்கள் ஏன் வயதை சொல்வதில் பின்னடிக்கிறார்கள் என்ற கேள்வி எனக்குள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. ஆனால் விடை இல்லை.

"ஸுபரீத ரத்ன பாண்டாகாரம்" என்ற புத்தகத்திலே ஒரு சமஸ்கிருத சுலோகம் ஒன்று வந்திருக்கிறது.

"ஆயுர் விருத்தம், க்ருவர சித்ரம், மந்த்ர மௌஷத மைதுனே தானம் மானாப மா நௌ ச நவ கோப்யானி காரவேத்" சரி இதன் தமிழாக்கம் இப்படிச் சொல்கிறது.

"தனது வயது, சொத்து, வீட்டில் நடந்த சண்டை, சிறந்த மந்திரம், நல்ல மருந்து, கணவன் மனைவியின் பிரியம், தானம், தனக்கேற்பட்ட புகழ், அவமானம் இந்த ஒன்பது விடயங்களையும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒருவரிடமும் கூறக்கூடாது."

உண்மையில் மிக முக்கியமான சுலோகம் இது என்று படித்த பிறகு எனக்கு புரிந்தது. என்னை எல்லோரும் எப்படி இளமையாக இருக்கிறீர்கள் என்று கேட்டால் என்னிடம் பதில் இல்லை.

வீட்டில் நல்ல மனைவி சண்டை சச்சரவு இல்லை, நல்ல இரண்டு பிள்ளைகள் தொந்தரவு இல்லை, பச்சைத் தண்ணீர் குடிக்கிறேன், தினமும் கீரையை உணவில் மனைவி சமைத்துத் தருகிறது. நிறைய வாசிக்கிறேன். இவைகள் சில நேரம் காரணமாக இருக்கலாம் என்றுதான் நினைக்கிறேன். இரத்த அழுத்தம் ஏறுவதற்கு விடமாட்டேன். இவையெல்லாம் காரணமாக இருக்கலாம்.

இலங்கையில் தெளிவத்தை யோசப் எப்ப பார்த்தாலும் அப்படியே இருக்கிறார். மல்லிகை ஆசிரியர், டொமினிக் ஜீவா எப்பவும் உசாராக இருக்கிறார். மனம் வயதுக்கு முக்கிய காரணம் என்றுதான் நான் சொல்லுவேன்.

அடுத்தது உணவு, என்ன கிடைத்தாலும் வயிற்றினுள் தள்ளப்படாது. முஹமது நபிகளாரின் மொழி ஒன்று இருக்கிறது. வயிற்றை மூன்றாகப் பிரியுங்கள். ஒரு பகுதி உணவுக்கு, அடுத்த பகுதி நீருக்கு, மற்ற பகுதியை வெறுமையாக வைத்திருங்கள். அப்பொழுதுதான் உணவு செமிபாடு அடையும். இன்னொன்று பசிக்கும் போது உணவுத் தட்டில் உட்கார்ந்து பசியுடனேயே உணவுத் தட்டில் இருந்து எழுந்து விட வேண்டும். அர்த்தம் வயிற்றை நிரப்பாதீர்கள் என்பதுதான். அப்பொழுதுதான் சாகும்வரை உடல் இலகுவாக இருக்கும். தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும்.

சரி அந்த சுலோகம் சொல்லும் விடயம் வயதை யாருக்கும் சொல்ல வேண்டாம் என்பது.

அந்த வீட்டுக்கு வந்த அன்ரி தனது வயதை சொல்லாமல் இருந்ததால் அவவின் அழகான இளமைத் தோற்றம் உண்மையில் ஆச்சரியப்படுத்திக் கொண்டுதான் இருந்திருக்கும்.

நடிகை ஸ்ரேயாவிடம் ஒரு நிருபர் கேட்டார், “இவ்வளவு அழகுக்கு என்ன செய்கிறீர்கள்” என்று, அவ சொன்னா நிறைய தண்ணீர் குடிக்கிறேன். வீட்டில் நடந்த சண்டையை வேறு யாரிடமும் சொல்லக் கூடாது என்பது உண்மைதான்.

கணவன் மனைவி அல்லது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான சண்டையை வேறு யாருடனும் பகிர்ந்து கொண்டால் பெரும் சிக்கலில் போய் முடிந்து விடும்.

இங்கு ஐரோப்பிய நாடுகளிலும் இந்த விடயம்தான் குடும்பங்கள் பிள்ளைகள் சீரழிய காரணமாகின்றன.

தமிழகத்தில் இருந்த ஒரு கணவன் மனைவியை எனக்குத் தெரியும். அவர்களிடையே அரசல் புரசலான சண்டை இருந்து கொண்டிருந்தது. அதனை அவர்களால் தீர்த்து ஒற்றுமையாக முடியாமல் இருந்தது. அவர்களின் இந்த சண்டை தொடர்பாக லண்டனில் இருந்து தமிழகம் போன கணவனின் ஒரு நண்பரிடம் அந்த மனைவி சண்டையை சொல்லி அழுது கண்ணீர் விட்டிருக்கிறா.

அந்த பெண்மணியின் கண்ணீர் லண்டனில் இருந்து போனவருக்கு இரக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தனது கணவனுக்கு தெரியாமல் லண்டன் நண்பரை அடிக்கடி ஹோட்டல்களில் சந்திக்க அவர்களுக்கிடையேயான அன்னியோன்யம் அதிகமாகி விட்டது.

லண்டன்காரருக்கு இங்கு இரண்டு பிள்ளைகள், மனைவி இருக்கிறார்கள், அந்த அன்னியோன்யம், காதலாகி லண்டனுக்கு அவவை கூப்பிடுகின்ற அளவுக்கு விஸ்தாரமாகிவிட்டது.

இங்கு மனைவிக்கு தெரிந்து அவவும் சன்னதம் ஆட குடும்பம் பிரிந்து விட்டது. இப்பொழுது இரண்டு குடும்பமும் பிரிந்து விட்டது. அவர் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி மன உளைச்சலுக்கு ஆளாகி

இருக்கிறார். அவரின் பிள்ளைகள் அவரை வெறுத்துவிட்டன. அவரின் சொந்தக்காரர்கள் வெறுத்துவிட்டார்கள். அவரின் அம்மா, அப்பா முகம் பார்ப்பதில்லை. பெரும் மன உளைச்சலோடு திரிகிறார். எனக்குத் தெரிந்தவர் அவர் சுலோகம் சொல்வது சரிதான்.

கணவன் மனைவியின் அன்பு, பாசம், பிரியம் என்பவற்றையும் வெளியில் சொல்லக் கூடாது என்று சுலோகம் சொல்கிறது.

கொழும்பில் எனக்குத் தெரிய நடந்தது. இரண்டு தோழிகள் சின்ன வயதில் இருந்து அவர்களைக் கண்டிருக்கிறேன். ஏதோ இரட்டையர்கள் போல இருப்பார்கள். கையில் பிடித்துக் கொண்டு தான் றோட்டில் போவார்கள். பேசிக் கொண்டார்கள். தாங்கள் கலியாணம் செய்தால் ஒரு ஆம்பிளையைத்தான் கலியாணம் செய்வோம் என்று அவ்வளவு ஒட்டுதல்.

தோழிகளில் ஒருத்தி ஒருவரை காதலித்து திருமணம் செய்து விட்டாள். மற்றவள் நாள் போக இரண்டு தோழிகளும் மீண்டும் ஒட்டுதல் கூடி விட்டது. வீட்டுக்காரர்களுக்கும் ஒருவகையில் சந்தோசம். கலியாண நேரத்தில் ஒரு சின்ன மனத்தாங்கல் வந்த பிறகு ஒட்டிவிட்டார்கள். ஆனால் ஆறு மாதங்கள் கடந்திருக்கும். தனது நண்பியின் கணவரை கொத்திக் கொண்டு மற்றவள் வெளிநாட்டுக்குப் போய் விட்டாள். என்ன நடந்தது என்று அரசல் புரசலாக கேள்விப்பட்டது இதுதான்.

கணவன் தன்னோடு செய்யும் எல்லாவற்றையும் தனது தோழிக்கு ஒன்றுவிடாமல் சொல்லி வந்திருக்கிறாள் தோழி, மிக நல்ல ஆண் மகன். செக்ஸில் பெரும் திருப்தி செய்யக் கூடியவர் அவர் என்று கணவரைப் பற்றி தோழியிடம் சொல்ல சொல்ல அவளுக்கு நண்பியின் கணவன் மீது ஈர்ப்பு வந்துவிட்டது. மேலெண்ணம் வர தோழியின் கணவரை தன் வசப்படுத்தி விட்டாள் நண்பி. சுலோகம் சொல்வது நூற்றுக்கு நூறு சரிதானே.

எனக்குத் தெரிந்த ஒரு குடும்பம் இங்கே லண்டனில் இப்பொழுது பெரும் அல்லாட்டத்தில் கிடக்கிறது. லண்டனுக்கு வந்து மூன்று வருடம் தான் ஆகிறது. வேக் பேமிட்டில் இருக்கிறார்கள். எப்பொழுதும் வேக் பேமிட்டில் இருந்தால் கொம்பனிக்காரர்களுக்கு ஒரு வித அடிமை சாசனம் போலத்தான் அது. கொம்பனி என்ன சொல்லுகிறதோ அதுக்கு தலையாட்ட வேண்டும். இல்லாவிடில் கொம்பனிக்கு உரிமை இருக்கிறது வேக் பேமிட்டை கான்சல் பண்ண வேலையும் போய்விடும் விசாவும் அதோகதி.

அதுவும் தமிழ் முதலாளிமார் பாடு பெரும் பாடு. வேக் பேமிட்டில் இங்கு லண்டனுக்கு எடுத்துவிட்டால் தங்களுக்குக் கீழ்படிய வேண்டும் என்று நடப்புக் காட்டுவார்கள், காட்டுகிறார்கள்.

நான் சொன்ன குடும்பத்துக்கு பிரான்ஸ், கனடா என்று அண்ணன் தம்பிமார் இருக்கினம். அவர்கள் தங்களது சகோதரத்துக்கு ஒரு வீடு வாங்க கொஞ்சம் காசு கொடுத்தார்கள். லண்டனில் வீடு வாங்குவது என்பது சாதாரண விடயம் இல்லை. டிப்போசிட் கட்ட வேண்டும். மாதா மாதம் மோர்கேஜ் கட்ட வேண்டும் என்ற அது ஒரு பெரிய விடயம்.

சொந்தக்காரர்கள் 30,000 பவுண்டுகள் கொடுத்து வீடு வாங்க

உற்சாகப்படுத்த இந்த விடயத்தை அந்தப் பெண்மணி வேலை செய்யும் இடத்தில் சொல்லி விட்டாள்.

அதுவே அவளுக்கு வினையாகும் என்று கனவிலும் நினைக்கவில்லை.

பொறாமை, சூது, வஞ்சகம், குழி பறித்தல் என்பவற்றை நான் வெள்ளைக்காரரிடம் பார்க்கவில்லை. இது எமது மண்ணின் குணமோ தெரியாது தமிழரிடம் அதிகமாக இருக்கிறது.

இங்கு லண்டன் வந்தும் அந்தக் குணம் போகிறது இல்லை. தம்மை விடக் கஷ்டப்பட்டு உழைத்து முன்னு வந்து விடுவார்கள் என்று பக்கத்து வீட்டார், நண்பர்கள் என்று யாரையும் பார்த்துப் போறாமைப்படும் ஆட்களைத் தான் தினமும் கண்டு கொண்டிருக்கிறேன் லண்டனில்.

அந்தப் பெண்மணி வேலை செய்யும் அலுவலகத்தில் போய் வீடு வாங்கப் போகிறோம் என்று சொல்ல ஆரம்பமானது பொறாமை வியூகம். அவள் வேலையிடத்தில் ஒரு பெண்மணி உயர் பதவியில் இருக்கிறா. அவ இவர்களை எப்படியாவது வீடு வாங்குவதை நிறுத்த வேண்டும் என்று கங்கணம் கட்டி அவர்களின் வேலை நேரத்தைக் குறைத்து ஓவர் டைம்மை குறைத்து இப்பொழுது வேக் பேமிட்டுக்கே உலை வைக்கும் அளவுக்கு போய் விட்டது விடயம். அவர்கள் முன்னேறி வந்துவிடுவார்களே என்ற பொறாமை வியூகம் சுற்றிச் சூழ்ந்து நிற்கிறது.

கணவனும் மனைவியும் அந்தக் கவலையால் நொந்து நூலாகிப் போய் விட்டார்கள். உண்மையில் இந்தப் பொறாமை கொள்ளும் விடயம் என்பது எங்கள் தமிழர் சமுதாயத்தில் எங்கிருந்து வந்தது என்று நினைத்துப் பார்க்கிறேன், எரிச்சலாக இருக்கிறது.

அவரின் உழைப்பு, அவரின் பணம், அவரின் ஊதியம், அவர் முன்னேற சும்மா உள்ளவர்களுக்கு என்ன பிரச்சனை என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை இந்த சமூகத்தை.

சொத்தைப் பற்றி யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று சுலோகம் சொல்வது சரிதானே. எவ்வளவு சிக்கலில் மாட்டுப்பட்டு இருக்கிறார்கள் அவர்கள்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒருவரிடமும் சொல்லக்கூடாது என்று சொன்ன ஒன்பது விடயங்களையும் பெரிசா போட்டோ கொப்பி எடுத்து எனது டயறியில் ஒட்டி வைத்திருக்கிறேன். நீங்களும் அவ்விதமே செய்யுங்கள். சொன்னால் சிக்கல் படுவீர்கள்.

# சித்திரவதை உண்மையை உரைக்குமா?

**சி**த்திரவதை - என்ற சொல்லைக் கேட்டதுமே பலருக்கு உயிர் உதறிவிடும். ஏனெனில் இலங்கையில் பலர் அதிலும் தமிழர்கள் பலர் சித்திரவதையை அனுபவித்துள்ளனர். இராணுவத்தினர், பொலிசார், இயக்கப் பெடியன்கள், பெட்டைகள், முதலாளிமார் என்று இந்த சித்திரவதை செய்பவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

வீட்டில் கணவனால் சித்திரவதை செய்யப்படும் மனைவிமார் இருக்கின்றனர். மனைவியால் சித்திரவதை செய்யப்படும் கணவர்கள் இருக்கின்றனர்.

அண்மையில் லண்டனுக்கு வந்திருந்த தமிழர் ஒருவரை சந்தித்தேன். அவருக்கு நடந்த சித்திரவதைகளை சொன்னார். அவர் சொல்லச் சொல்ல எனக்கு உடம்பு நடுங்கியது, அதிர்ந்தது. எனது மூளை அதனைக் கிரகிக்கும் சக்தி இல்லாததாக இருந்தது.

எனக்கு இவ்வாறு நடந்திருக்குமானால் நான் தாங்கியிருப்பேனா என்று மனம் முழுக்க பதறிக் கொண்டே இருந்தேன்.

இப்பொழுதும் அவருக்கு நடந்த சித்திரவதையைப் பற்றி நினைக்கும் போது முள்ளந்தண்டில் சில்லிடுகிறது.

வெறுமனே ஒருவருக்கு நடந்த ஏதோ ஒன்றாக என்னால் உணர முடியாமல் இருக்கிறது.

எனக்கு அல்லது உங்களுக்கு நடந்த வேதனையாகவே கருத வேண்டியிருக்கிறது.

ஒரு மனிதனிடமிருந்து உண்மையை வரவழைப்பதற்காக அவருக்கு உடல் ரீதியான துன்பத்தை அதிகபட்சமாகக் கொடுத்து உண்மையைக்கக்குவதற்கான அழுத்தத்தைப்பிரயோகிப்பதுஎன்றுதான் சித்திரவதையை மேற்கொள்கின்ற எல்லோரும் சொல்கின்றனர்.

கையில் கொலை ஆயுதம் இருக்கின்ற எல்லோரும் ஏதோ ஒரு வகையில் ஆயுதமற்ற அப்பாவிகள் மீது சித்திரவதையைச் செய்து அந்த வலியை, அழுகுரலை, முனகலை ரசித்துச் சிரிக்கின்றனர்.

ஒரு மனிதன் வலியில் அவர்கள் சந்தோசத்தைக் காணும் அரக்கர் குணமுள்ளவர்களாக இருக்கின்றனர்.

இராணுவத்தினர், பொலிசார், இயக்கப் பெடியன்கள், விசாரணையாளர்கள் எல்லோரும் ஒட்டுமொத்தமாக சித்திரவதை செய்பவர்கள் என்று சொல்ல முடியாது. சித்திரவதை செய்வதை விரும்பாதவர்களும் இருக்கின்றனர்.

லண்டனில் நான் சந்தித்த தமிழர் படித்தவர், அறிவானவர், சமூக ஆர்வம் கொண்டவர், அவர் புலிகளுக்கு ஆதரவானவர் என்று கொழும்பில் வைத்து வெள்ளை வானில் வந்த விசாரணைப் பிரிவினரால் தூக்கிச் செல்லப்பட்டவர்.

அவர் புலிகளின் முகவராக கொழும்பில் இருந்து செயல்படுகிறார் என்பதுதான் விசாரணையாளருக்கு சந்தேகம்.

உண்மையில் இப்படித்தான் ஆயிரக்கணக்கானவர்கள் அள்ளிக் கொண்டு போகப்பட்டனர். ஆனால் அவர்களைக் கொலை செய்ததற்கான அடையாளமே இல்லாமல் செய்துவிட்டார்கள். வெள்ளை வானில் கொண்டு போன தமிழர்களின் பிரேதங்களைக் காட்டினாலாவது அவர்களின் பெற்றோர், கணவன்மார், மனைவிமார், பிள்ளைகள், சகோதரர்கள் அந்தியட்டியை முடித்துவிட்டு செத்துப்போய்விட்டார்கள் என்று நிம்மதியாக இருப்பார்கள்.

இப்பொழுது இருக்கிறார்களோ? இல்லையோ என்று கூடத் தெரியாமல் அவர்களின் உறவினர்கள் அனுபவிக்கும் சித்திரவதை கொடுமையானது.

ஒரு மனிதனை துன்புறுத்துவதினூடாக அவர் சார்ந்த குடும்பத்தை, சமூகத்தை வேதனைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கும் சித்திரவதைக்காரரின் நோக்கம் தெளிவாகத் தெரிகிறது.

அடுத்தது மிகவும் மோசமான அல்லது கேவலமான ஒரு செயலாக பெரும் வடிவம் எடுத்திருக்கும் சித்திரவதை, பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்.

பெண்களை துன்புறுத்துவதன் மூலமாக ஒரு சமூகத்தை துன்புறுத்தும் அடையாளமாக சித்திரவதை செய்பவர்கள் சாதிக்க நினைப்பது கொடூரம். இந்த வகையில் எமது தமிழ் சமூகத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் சித்திரவதைக்குள்ளாகி தீராத வலியை இன்னும் எங்களுக்கு ஏற்படுத்தித் தந்திருக்கின்றனர்.

சிங்கள ராணுவத்தினரின், பொலிசாரின், இந்தியப் படையின் ஆயுதம் தாங்கிய இயக்கப் பெடியன்களின் கொடூரமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு செத்து அழிந்துபோன பெண்களின் ஆவிகளின் அலறல்கள் இன்னும் எமது வடக்கு கிழக்கு வெளிகளில் ஏன் இலங்கை முழுவதும் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. அதனை உணர முடியாதவர்கள் கடும் மனம் படைத்தவர்கள்.

பாலியல் ரீதியான சித்திரவதை மூலம் சமூகத்தில் பெண்களை ஒதுக்கும் ஒரு நடவடிக்கையை சித்திரவதையாளர்கள் மேற்கொள்கின்றனர்.

"அவவோ, அவ ராணுவத்தால் கற்பழிக்கப்பட்டவவாம்" என்ற இழிபழியுடன் முதுமை வரைக்கும், ஏன் சாகும் வரைக்கும் பெண் அந்த சமூகத்தில் வாழ வேண்டிய அவலம் தான் இலங்கை முழுவதும் காணக் கிடைக்கிறது.

எங்களது தமிழ்க் கிராமங்களில் இவ்வாறான இழி நிலையோடு, கண்ணீரோடு காலத்தைக் கழிக்கும் பெண்கள் உண்மையில் பாவமானவர்கள்.

உலகம் முழுவதும் இராணுவம் அடர்ந்தேறும் இடங்களில் பெண்கள் ரீதியான சித்திரவதைகள் இந்த நிமிடம் வரை நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

கைது செய்யப்படும் பெண்கள் மீதான, ஆண்கள் மீதான சித்திரவதைகள் அமெரிக்க 'குவாண்டனாமோ' சிறை சித்திரவதையை ஒத்தது. இலங்கை சித்திரவதைக் கூடங்கள் என்றே சித்திரவதை

செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களை சோதனை செய்த வைத்தியர்கள் தங்கள் கைப்பட அறிக்கைகள் எழுதியிருக்கின்றனர்.

மண்டையின் பின்பகுதியில் குண்டூசி போன்ற சிறிய ஆணிகளால் அடித்து மூளையின் சவ்வுகளைச் சிதைத்தல், மலத்துவாரத்தில் சிறிய பைப்புக்குள் வைத்து முட்கம்பியை உள்ளே விட்டு பைப்பை இழுத்துவிட்டு முட்கம்பியை தனியே குதவாசல் கிழிந்து வரும்படி இழுத்தல், ஆண் உறுப்பில் படிப்படியாக கூடுதல் மின்சாரம் பாய்ச்சுதல், தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு பெற்றோல் நிரப்பிய பொலித்தீன் பை முகத்தில் கட்டி குதிக்காலில் அடித்தல், பெண் உறுப்பில் காரமான மிளகாய்த் தூளை அடைத்தல்,

பெண்ணின் முலைக்காம்பில் மின்சார வயர்களைப் பொருத்துதல் என்று நீளுகின்ற சித்திரவதைகளில் மிகக் கடுமையானது மின்சார அடுப்பில் உயிரோடு ஒருவரைப் போட்டு கொல்லுவதை அடுத்தவர் பார்க்க வைத்தல் என்று சித்திரவதைகளின் கொடூரத்தைக் கண்ணால் கண்டு, தான் அனுபவித்தவற்றை எனக்கு அவர் சொன்னபோது அவர் உண்மையில் அழவில்லை.

நான்தான் நடுங்கிப் போய் உட்கார்ந்திருந்தேன். அவர் அனுபவித்தவர், நான் கேட்பவன். இந்த சித்திரவதைகளின் கொடூரம் பற்றி அவர் எத்தனை பேரிடம் விரிவாகச் சொல்லி இருப்பார்.

சித்திரவதை செய்பவரும் ஒரு மனிதர்தானே. அவருக்கு எப்படி சித்திரவதை செய்யும்போது மனிதர்கள் கதறும் ஒலியைக் கேட்டு இரவில் தூக்கம் வருகிறது என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

சித்திரவதை செய்யும் கூடத்தின் பொறுப்பாளர் எப்படி வீட்டில் போய் தனது குழந்தைகளுடன், மனைவியுடன் கொஞ்சி மகிழ்கிறார்.

எப்படி அவர் மனைவியுடன் சந்தோசமாக உடலுறவில் ஈடுபடுகிறார்? என்ற கேள்விகளை என்னால் தவிர்க்க முடியாமல் உள்ளது.

உண்மையில் அவர் மனம் மரத்துப் போன ஒருவராக இருக்கிறாரா?

உலகின் எல்லா நாடுகளிலும் சித்திரவதைக்கென்றே இலங்கையில் இருப்பது போன்ற அதிகாரிகள் இருக்கின்றனர்.

அகதி கேஸ் வேக்கரான ஒரு நண்பரிடம் திருகோண மலையில் இருந்து ஒரு பெண் அகதியாக தஞ்சம் கோருகின்ற வழக்கோடு இங்கு லண்டன் வந்திருந்தார்.

அவர் தனது உடலை கேஸ் வேக்கருக்கு காண்பித்தார். பொலிசார் அவரை கைது செய்து விசாரணையின் போது கொழும்பில் வைத்து அவளின் உடல் முழுவதும் சிகரட்டால் சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள்.

தொடை, மார்பகம், வயிறு என்று எல்லா பகுதிகளிலும் ஒரு இடம் விடாமல் சிகரட்டால் சுட்ட தழும்புகள் இருந்திருக்கின்றன.

அவரது உடலில் அவளின் முகத்தைப் பார்த்தால் சொல்ல முடியாது. இவ்வளவு சித்திரவதை தழும்புகள் அவள் உடலில் இருக்கின்றன என்று.

லண்டனில் நான் சந்தித்த (தொடக்கத்தில் குறிப்பிட்ட) அவர் இப்போது எழுந்து நடக்க முடியாமல் அவதிப்படுகிறார். அவரின்

34 வயது வாழ்க்கை சித்திரவதையினால் சீரழிக்கப்பட்டு விட்டது. அவருக்கு ஒரு ஆண் பிள்ளை இருக்கிறான். மனைவி இருக்கிறார். திருமணமாகி 4 வருடம். எதிர்காலம் சந்தோசமாக இருக்க வேண்டிய காலத்தில் ஆணுறுப்பில் அவர்கள் செய்த சித்திரவதையினால் அவருக்கு உடலுறவில் ஈடுபடுவதற்கான வலிமை இல்லாமல் போய்விட்டது.

எண்ணிப் பாருங்கள் அந்த இளம் குடும்பத்தின் எதிர்காலம் என்ன ஆகப் போகிறது?

இவ்வளவு மிகக் கொடூரமான சித்திரவதைகளை அனுபவித்த அவர் மற்றும் ஏற்கனவே நான் குறிப்பிட்ட இளம்பெண் ஆகியோர் புலிகள் என்றும் பயங்கரவாதி என்றும் சொன்னாவர்கள். பிறகு புலி இல்லை என்று சித்திரவதை செய்தவர்களால் விடுவிக்கப்பட்டனர்.

கொடூரம் எப்படி நடக்கிறது பாருங்கள். உடலை சிதறி குதறிவிட்டு பிறகு, "சொறி, நீங்கள் குற்றவாளி இல்லை" என்று தைரியமாக எந்த வருத்தமும் இல்லாமல் சொல்லும் மனித அரக்கர்களை என்ன என்று சொல்வது? இதில் ஒரு மனிதன் மீதான தவறு எத்தனை பேரின் வாழ்வை பாதித்து சீர்குலைக்கிறது. இனி அவர் மீண்டு வருவதற்கு எத்தனை லட்சம் ரூபாவை செலவழிக்க வேண்டும்? அதனை யார் கொடுப்பார்கள்? சொத்துக்கள் உள்ளவர்கள் இந்தியாவில் போய், வெளிநாடு போய் நோயை குணப்படுத்த முனைகின்றனர். பணம் இல்லாத ஏழை எங்கு போய் சித்திரவதையினால் ஏற்பட்ட நோய்க்கு மருந்து தேடுவான்.

எந்தவிதமான மாற்றீடும் இலங்கையில் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்படுவதில்லை. சித்திரவதை முடிந்தவுடன் அவர் மீது குற்றம் இல்லை என்றால் அவரை தூக்கி ஒரு புதருக்குள் வீசி விட்டுப் போய்விடும் நடைமுறைதான் இலங்கையில் இருக்கிறது.

சித்திரவதைக்கு உள்ளான இன்னொரு தமிழரைச் சந்தித்தேன்.

அவருக்கு இலங்கையிலுள்ள சித்திரவதைக் கூடமொன்றில் வைத்து அடித்து முழங்காலைச் சிதைத்து விட்டனர்.

நல்ல திடகாத்திரமாக இருந்தவர் ஊன்றுகோலுடன் வந்தபோது மனைவி அவரை விட்டுப் பிரிந்துவிட்டார்.

இப்பொழுது லண்டன் வந்து அவருக்கு அகதி அந்தஸ்து கிடைத்தவுடன் மனைவி கொழும்பிலிருந்து உறவு கொண்டாடப் பார்க்கிறா. அவவுக்கும் லண்டன் வர வேண்டும் என்று ஆசை வந்துவிட்டதாம்.

இவரை விட்டுப் பிரிந்து போய் வேறொருவருடன் லிவ்-இன்-டு-கெதர் வாழ்க்கை நடாத்தி வந்தவா இப்பொழுது லண்டனுக்கு வரப்போகிறேன் என்று துரத்திவிட்ட கணவனை நச்சரிக்கிறாவாம்.

சீரழிந்து போன குடும்ப வாழ்வு, சீரழிந்து போன சமூக வாழ்வு என்று சித்திரவதைக்கு உட்பட்டவர்கள் படுகின்ற பின் அவஸ்தை சாதாரணமானது அல்ல.

வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் அவஸ்தைப்பட்டு அல்லலுற்ற வாழ்வாக எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்களின்

வாழ்வு அலைக்கழிந்து போய்க் கிடக்கிறது இலங்கையில்.

யுத்தம் முடிந்துவிட்டது இலங்கையில். ஆனால் சித்திரவதைக் கூடங்கள் இன்னமும் மூடப்படவில்லை. சித்திரவதை செய்யும் அதிகாரிகள் இன்னமும் அந்த வேலையினைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

வேதனை, துன்பம், துயரம், வெறுமை மட்டுமே சித்திரவதையினை எதிர்நோக்கிய மனிதரின் எஞ்சிய வாழ்க்கையாக இருக்கிறது. மனிதரின் நுண்ணிய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் ஒரு நல்ல ஆரோக்கியமான தேசமாக இலங்கை எப்போது மிளிரப் போகிறது. உண்மையில் ஏக்கத்தோடும் மன வலிமையோடும் காத்திருக்கிறோம். சித்திரவதை இல்லாத ஒரு இலங்கையைக் காணுவதற்கு.

# புகைப்படம் - மனதின் விம்பம்

புகைப்படங்கள் எப்போதும் எங்களுக்கு எங்கள் வாழ்வின் கடந்த காலங்களை ஞாபகப்படுத்தியே வைத்திருக்கின்றன. புகைப்படங்கள் ஒரு டயரி போலவே இருக்கின்றன. ஞாபகத்தின் பதிவு அவை.

நாங்கள் எங்களது எத்தனையோ புகைப்படங்களைத் தொலைத்து விட்டிருக்கிறோம். கடிதங்கள் போல அவற்றையும் கவனமாகச் சேர்த்து வைக்கவில்லையே என்ற கவலை எனக்கு இன்றுவரை இருக்கிறது.

எங்களில் எத்தனை பேருக்கு முதலாவது புகைப்படம் எடுத்த ஞாபகம் இருக்கிறது. ஞாபகம் வராத காலங்களின் எடுத்த புகைப்படங்கள் கூட எத்தனை விதமான கதைகள் சொல்லும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலங்களை நினைவு படுத்தும்.

அண்மையில் எனது சிறிய கால புகைப்படங்களை எனது தங்கச்சி அனுப்பி வைத்திருந்தாள். அதில் நான் பதினாறு வயதில் "கூட்டுறவுக் கொள்கைகளும் நடைமுறைகளும்" என்ற தலைப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடந்த பேச்சுப் போட்டியில் பேசி முதலாம் இடம் வென்றதற்கான பரிசல்கள் வாங்கிய படமும் ஒன்று. அந்தப் பேச்சுப் போட்டியின் பரிசு எனக்கான ஒரு மன உந்துதலைக் கொடுத்திருந்தது அப்பொழுது.

எங்களது பாடசாலையில் இந்த பேச்சுப் போட்டிக்காக இரண்டு இரண்டே பேரை மட்டும் அதிபரும் ஆசிரியர்களும் தெரிவு செய்தார்கள். உருத்திரகுமாரனும் நானும்தான் தெரிவு செய்யப்பட்டோம். பேச்சுப் போட்டி என்றாலே நெஞ்சில் ஒரு படபடப்பு இருந்து கொண்டே இருக்கும். அன்று தெரிவு செய்வதற்காக எங்களுடைய பாடசாலையில் அசெம்பிளியில் எல்லோரும் ஒன்று சேர்ந்திருந்தார்கள்.

மாணவர்களும் ஆசிரியர்கள் அதிபர் எல்லோரும், அந்த தெரிவு செய்யும் போட்டியில் உருத்திரகுமாரன்தான் தெரிவு செய்யப்படுவான் என்று நினைத்திருந்தேன். ஆனால் அதிகம் கை ஆட்டி ஆட்டி பேசியதற்காக அவன் தெரிவு செய்யப்படாமல் நான் தெரிவு செய்யப்பட்டேன்.

எங்கள் பாடசாலை ஆசிரியர்களதும் அதிபர்களதும் கணிப்பு சரியாகவே இருந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்தான் முதலாம் இடம். அது இன்னமும் மனதில் பெருமையாகவே இருக்கிறது. 28 வருடங்கள் கழித்து அந்தப் புகைப்படத்தைப் போன கிழமைதான் பார்த்தேன். கருப்பு வெள்ளைப் படம் அது.

புகைப்படங்களைப் பார்க்கும்போது எங்களுடன் தொடர்புடைய பின்னால் உள்ள எல்லாச் சம்பவங்களும் நினைவுக்கு வரும். எத்தனையோ புகைப்படங்களோடு எமது சொல்ல முடியாத கதைகள் அடங்கியிருக்கும்.

நாம் நேசிக்கும் எல்லோரிடமும் புகைப்படத்தின் கதையைச் சொல்ல முடியாமல் இருக்கும். உண்மையில் புகைப்படம் ஒரு டயறி போலத்தான். அந்தப் புகைப்படத்தை எடுத்த இடம், எடுத்த நபர், எடுத்த

சந்தர்ப்பம் என்று எல்லாமே எல்லோருக்கும் பகிர்ந்துகொள்ள முடியாத ஒரு மௌனமான ரகசியமானதாக இருக்கும் சில புகைப்படங்கள்.

சில புகைப்படங்களில் எமக்கு அருகில் நிற்பவர்கள் சிலர் பற்றிய எத்தனையோ கதைகள் மௌனமாக பரிமாறிக் கொண்டிருக்கும்.

எனது சிறிய காலத்துப் புகைப்படம் ஒன்று இன்று பார்த்தாலும் சிரிப்பு வருகிறது. அது கதிர்காமத்தில் வைத்து எடுத்தது. "எனக்கு 4 வயதில் எடுத்தது" என்று அம்மா சொல்லுவா. 39 வருடங்கள் முந்தி எடுத்த புகைப்படம் அது. காலையில் தோசைக்கடையை கோவில் வீதியில் கண்டுவிட்டு உடனேயே தோசை வாங்கித் தருமாறு கேட்டு கோபமாக அடம்பிடித்து எடுக்கப்பட்ட புகைப்படம் அது. அதில், அம்மா, ஐயா, அம்மம்மா, நான் எல்லோரும் இருக்கிறோம்.

அந்த புகைப்படம் தான் ஐயாவோடு நான் நின்று எடுத்த கடைசிப் புகைப்படம். அதற்குப் பிறகு ஐயாவுக்கும் அம்மாவிற்கும் சண்டை வந்து ஐயா அம்மாவை விட்டுப் பிரிந்து போய் விட்டார். அதற்குப் பிறகு ஐயாவை இடைக்கிடை சந்தித்தாலும் ஒன்றாக நாங்கள் வாழக் கிடைக்கவில்லை. விவாகரத்து என்று ஒன்று இல்லாமலே ஐயா அம்மாவை விட்டு பிரிந்து போய்விட்டார்.

அது ஒன்றும் பெரிய மனஸ்தாபமான சண்டை இல்லை. ஆனால் அம்மாவின் தமையன்தான். எனது ஐயாவையும் அம்மாவையும் பிரிப்பதற்குச் செய்வினை செய்தாக அம்மா இப்பொழுதும் சொல்லுவா.

அம்மாவை விட்டு ஐயா பிரிந்து போனதன் பிறகு இரண்டு வருடத்தில் ஐயா செத்துப் போனார். நான் அம்மாவினதும் அம்மாவின் அப்பாவினதும் ஆதரவில் தான் வளர்ந்தேன். வாழ்வில் ஐயா ஒன்று ஒருவர் எனக்கு இருந்தார். அவரின் மகன்தான் நான் என்று சொல்வதற்கு இருக்கும் ஒரே ஒரு புகைப்படம் அதுதான். அதுமட்டுந்தான்.

ஐயா பற்றிய வேறு புகைப்படங்களோ அல்லது ஆதாரங்களோ என்னிடம் இல்லை. தகப்பன் இல்லாத பிள்ளையாகவே நான் வளர்ந்து முடித்தேன்.

எங்கள் ஊரில் புகைப்படம் பிடிப்பவர் என்று ஒருவரும் இருக்கவில்லை. முள்ளியவளையில் இருந்து ஒரு மாஸ்ரர்தான் புகைப்படக் கருவியோடு சுத்துவார். அவருக்குப் புகைப்படம் பிடிப்பது ஒரு கலை, விருப்பம், அதற்காக அவர் புகைப்படக் கல்லூரி எதிலும் படித்ததாக நான் அறியவில்லை. சைக்கிளில் முள்ளியவளையில் இருந்து ஒட்டுசுட்டான் வரைக்கும் வருவார். அதற்கு அப்பாலும் போவாரோ எனக்குத் தெரியாது.

வரும் வழியில் ஒவ்வொரு வீடு வீடாக வந்து கேட்பார். புகைப்படம் எடுப்போமா என்று. அவரின் பெயர்கூடத் தெரியாது. 'போட்டோ மாஸ்ரர்' என்றுதான் கூப்பிடுவோம். போட்டோ மாஸ்ரர் வந்தால் நாங்கள் பெடியன்கள் அவருக்குப் பின்னால் திரிவோம். அவரைப் பார்ப்பதும் ஒரு மகிழ்ச்சிதான்.

அவர் புகைப்படம் பிடிப்பதற்கு இப்போதையது மாதிரி டிஜிற்றல் கமெரா எதுவும் எழுபதுகளில் கிடையாது. ஒரு கமரா, அதில் நீல்

போட்டிருப்பார். கமெராவின் லைட்தான் ஒரு புதினமாக இருக்கும். கமெராவில் ஒரு ஸ்ரான்ட் மாதிரி பூட்டியிருக்கும். அதன் றிஃப்ளெக்டர் ஒரு வட்டமான சைசில் விசிறி மாதிரி இருக்கும். அதனைச் சுருட்டி வைத்திருக்கலாம். ஒரு முறை ஃபிளாஸ் அடித்துவிட்டு பல்பை கீழே போட்டுவிடுவார். அவர் பல்ப் உள்ளுக்குள்ளே இருக்கும் கண்ணாடி உடைந்துவிடும். தோல் மட்டும் பிளாஸ்ரிக் மாதிரி இருக்கும். போட்டோ மாஸ்ரர் பல்பைக் கழட்டி எப்போ போடுவார் என்று பார்த்து இருந்துவிட்டு ஓடிப்போய் எடுத்து அதனை வைத்து விளையாடுவோம். எங்கள் சின்ன வயசில் எல்லாம் புதினம் தானே எங்களுக்கு.

அப்படி கமராவையும் லைட்டையும் அதற்குப் பிறகு நான் கண்ணாலும் காணவில்லை. பிரபலங்களோடு நின்று புகைப்படம் எடுக்கும் பழக்கம் பலருக்குப் பெரும் ஆசை.

சிலருக்குத் தீராத ஆசை. சினிமாக் காரருக்குப் பக்கத்தில் நின்று புகைப்படம் எடுப்பது என்பது சிலருக்குப் பைத்தியம் மாதிரி. என்னுடைய நண்பரின் மகள் ஒருத்தி ரஜினிகாந்தைச் சந்திக்க வேண்டும், சந்திக்க வேண்டும் என்று அடம் பிடித்தாள்.

நண்பரும் அவளது ஆசையை நிறைவேற்றுவதற்காக ரஜினிகாந்தை சந்திக்க அழைத்துப் போயிருக்கிறார். ரஜினிகாந்தோடு ஒரு சூட்டிங் நேரத்தில் சந்தித்து வாஞ்சையோடு பேசியிருக்கிறாள். அவரும் அவள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பொறுமையாக பதில் சொல்லியிருக்கிறார்.

“சரி சந்தித்தாகி விட்டது. பேசியாச்சு போவோம்” என்று நண்பரின் மகள் சொல்ல ரஜினிகாந்த் பக்கத்தில் நின்ற போட்டோ கிராபரிடம், “என்னோடு அந்தப் பிள்ளையை வைத்து ஒரு படம் எடப்பா” என்று சொல்லியிருக்கிறார். ஆனால் எனது நண்பரின் மகள் “வேண்டாம் அங்கிள் எனக்குப் புகைப்படம் எடுக்கும் ஆசை இல்லை. வெறுமனே உங்களைச் சந்திக்க வேண்டும். பேசவேண்டும் என்று மட்டும்தான் விருப்பம்” என்றிருக்கிறாள். ரஜினிக்கு ஆச்சரியமாகப் போய்விட்டதாம். அவள் ரஜினியோடு புகைப்படம் எடுக்காமலே வந்துவிட்டாள்.

எல்லோருக்கும் புகைப்படம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை வருவதில்லை. இப்பொழுது வயதானவர்கள் தங்களுடைய சிறிய காலத்தில் முக்கியமானவர்கள் அறிவாளிகளுடன் எடுத்த புகைப்படங்களைக் கையில் வைத்துக் கொண்டு தங்களது கடந்த காலங்களை நினைவூட்டிக் கொண்டு படுத்திருக்கிறார்கள். நான் தொலைக்காட்சி தொகுப்பாளராக, செய்தி வாசிப்பாளராக ஆன கடந்த பத்து வருடங்களில் எத்தனையோ பேர் எமது ஸ்டூடியோவுக்கு வந்து என்னோடு புகைப்படம் எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

இங்கே புகைப்படம் பிடிப்பவர்கள் லண்டனில் புகைப்படம் பிடிப்பவர்கள் நன்றாகவே சம்பாதிக்கிறார்கள். அது ஒரு ரக்ஸ் கட்டாத தொழிலாக வளர்ந்து போயிருக்கிறது. நல்ல துல்லியமான திறமான கமெராக்களை வாங்கக்கூடியதாக இருக்கிறது. எனவே சனி, ஞாயிறு தினங்களில் பகுதி நேரத் தொழிலாளக கலியாண வீடு, சாமத்திய வீடுகளில் படம் பிடிக்கப் போகிறார்கள். ஒரு ஆல்பம் செய்து கொடுக்க 600 பவுண்களில் இருந்து 800 பவுண் வரைக்கும் காசு

வாங்குகிறார்கள். அதில் போட்டோசொப்பில் வேலைசெய்து அழகூட்டி சம்பாதிக்கிறார்கள்.

இங்கு சுப்பர் மார்க்கட்டுகளிலும் புகைப்படங்கள் எடுப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கறுப்பு வெள்ளை பிறவுண் என்று புகைப்படங்களை வெறும் 10 பவுண் முற்பணம் கட்டி எடுக்கச் சொல்வார்கள். யாருக்குத்தான் அழகான புகைப்படங்களில் தங்களைப் பார்க்க ஆசையில்லை. ஒரு கிழமைக்குப் பிறகு புகைப்படம் எடுத்தவரிடம் போனால் மிக அழகான புகைப்படங்களை பிறிண்ட் போட்டுக் கொண்டு வந்து வைத்திருப்பார். ஒரு கொப்பிக்கு 10 பவுண் என்பார். அதனைப் பார்த்துவிட்டு வர மனம் இருக்காது. 50, 60 பவுண் கொடுத்து வாங்கிப் போவார்கள். நல்ல பிஸினஸ் அது.

பாடசாலைக் காலங்களில் புகைப்படங்களை பரிமாறிக் கொள்வதில் தான் சில காதல்கள் முகிழ்த்திருக்கின்றன. எனது எட்டாம் வகுப்பில் எனது பள்ளித் தோழியை காதலித்ததும் ஒரு புகைப்படத்தில்தான். அவளும் அவளது நண்பிகளும் ஒன்று சேர்ந்து புகைப்படம் எடுத்திருந்தார்கள். அதனை நான் வாங்கிப் பார்த்தபோது எனக்கு அவள் மீது அப்பவே அந்த இடத்தில் காதல் வந்துவிட்டது. பிறகு அவளின் தோழிகள் ஒன்றுசேர நிற்கும் புகைப்படத்தை வாங்கிக் கொண்டு போய் ஸ்ரூடியோ ஒன்றில் கொடுத்து அவளை மட்டும் தனியாக எடுத்து அதனைப் பெரிதாக்கி புத்தகத்திற்குள் வைத்துக் கொண்டு அலைந்திருக்கிறேன்.

அப்படி ஒரு இளமைக்காலம் எத்தனை பேருக்கு இருந்திருக்கும். காதலித்த பெண்ணின் புகைப்படத்தை காவிக் கொண்டு திரிந்தவர்கள் எத்தனை பேர் இருந்தார்கள். இப்பொழுது காதலிகளை மொபைல் போனில் படம் படமாகச் சேகரித்து வைத்திருக்கிறார்கள் இளைஞர்கள். எனது பாடசாலையில், ஊரில், எடுத்த பல புகைப்படங்களை தவறவிட்டு விட்டேன். இப்பொழுது நினைக்கும் போதும் கவலையாக இருக்கிறது. இப்படி எத்தனை பேருக்கு இருக்கும். லண்டனில் இருக்கும் போது சில வேளைகளில் புகைப்பட அல்பங்கள்தான் ஊரை நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. வெட்ட வெளிச்சமாக அல்பத்தில் இருக்கும் புகைப்படங்களைப் பார்க்கும் பொழுது அதன் பின்னால் எங்கள் மனதுக்கு மட்டும் தெரிந்த ரகசியங்கள் ஆயிரம் ஆயிரம். மனைவியிடம், மகளிடம், மகனிடம், அம்மாவிடம் பகிர்ந்து கொள்ள முடியாத ரகசியங்கள் பலப்பல. இது ஒவ்வொருவருக்குமுள்ள அவஸ்தைதான். இதனை சொல்லும்பொழுது பலரின் தலைகள் அசைகின்றன. மேலும், கீழும் அத்தனையும் ஆமோதிப்புக்கள்.

# பயம் என்னும் கொடிய நோய்

**வா**ழ்வில் பயப்படாத நாளே கிடையாது நமக்கு. பயம் எங்களை தினமும் துரத்திக் கொண்டே இருக்கிறது. பயத்தினூடாகவே நாம் வளர்ந்திருக்கிறோம். அச்சம் கொள்ளுதல் என்பது எமது உடலோடு மனதோடு கலந்து விட்ட ஒரு விடயமாகவே இருக்கிறது. எல்லோருக்கும் எங்களைப் பயங்கொள்ள வைத்தே வாழப் பழக்கி விட்டிருக்கின்றனர். எனது பயம் அம்மாவின் பிரம்பில் இருந்து ஆரம்பிக்கிறது. குழப்படி செய்தால் அம்மா அடிப்பா என்கின்ற பயம் ஒரு கொடும்பயமாக தொடர்ந்து கொண்டே வந்தது. பயத்தை ஏற்படுத்துவதன் ஊடாக அம்மா என் மீது தன் ஆதிக்கத்தைச் செலுத்தியிருந்தா.

வாத்திமாரின் பிரம்புகளுக்கு இன்னமும் அச்சம் ஊட்டும் தன்மை இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதிலும் மிகவும் அச்சமூட்டுபவராக தில்லையம்பலம் வாத்தியாரும் அவருடைய பிரம்பும் இருந்துகொண்டே இருந்தது. பயம் மனித உணர்ச்சிகளை மேவி நிற்கக்கூடிய ஒன்று. பயத்தின் ஊடாக எங்கள் எதிரிகள் பயம் காட்டியே வைத்திருக்கிறார்கள். ஊரில் உள்ள சண்டியர்கள், கப்பம் வாங்குபவர்கள், தாதாக்கள் எல்லோரும் இந்தப் பயத்தையே மூலதனமாகக் கொண்டுள்ளனர்.

இயக்கப் பெடியன்களும் மக்கள் தங்களைக் கண்டு பயப்பட வேண்டும் என்றுதான் ஏ.கே.47 துப்பாக்கிகளை தோளில் போட்டுக் கொண்டு சைக்கிள்களில் சுற்றி வருவார்கள். சிலர் துப்பாக்கியை வெளியில் தெரியக் கூடியவாறும் வைத்திருந்தார்கள். மக்கள் தங்களைக் கண்டு பயம் கொள்ள வேண்டும் என்ற ஒரே ஒரு விடயம்தான் அவர்களை ஆட்கொண்டிருந்தது. தமிழர்கள் எப்போதும் சிங்களவர்களைக் கண்டு பேரச்சம் கொள்ளும் ஒரு நிலமை தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறது. உண்மையில் நான் இந்த நிலைமையை 'யாழ்தேவி' புகையிரதத்தில் தான் கண்டிருக்கிறேன். யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரைக்கும் நன்றாக தமிழில் பாட்டுப்பாடி சத்தமாகப் பேசிக் கொண்டு வருகின்ற எத்தனையோ பேர், மதவாச்சி வந்தவுடன் பேசாமல் இருப்பார்கள். சிங்களவர்களின் ஊர் வந்துவிட்டது என்ற பயம்.

பயத்தில் கருகி உறைந்து போகின்ற எத்தனையோ மனிதர்களைக் கண்டிருக்கிறேன்.

எமது கிராமங்களை சிங்கள இராணுவத்தினர் சுற்றி வளைத்து ஆண்களையும் பெண்களையும் கைது செய்து கொண்டு போகும்போது பயத்தால் உயிர் பதறிப்போகும். அப்பாவி மக்களைக் கைது செய்து கொண்டு போய் 'தலையாட்டிகள்' என்ற காட்டிக் கொடுக்கும் தமிழர்களுக்கு முன்னால் நிறுத்தும்பொழுது பயம் ஒன்று வந்துபோகுமே அது சொல்லில் எழுதிவிட முடியாத கொடுமை. தலையாட்டிகளின் முன் நின்றவர்களைக் கேட்டுப் பாருங்கள். ஒரு தலையசைவில் அந்த மனிதனின் வாழ்க்கை தீர்மானிக்கப்படும். என்ன பெரிய கொடுமை. அச்சத்தால் இரத்தம் உறையுமே. அது அங்கு நடக்கும்.

இன்னும் ஊர்களில் நிம்மதியாக வாழ முடியாத பயத்தினால் எத்தனையோ பேர் வெளிநாடுகளுக்கு ஓடி வருகின்றனர். கொழும்பில் இருந்தால் வெள்ளை வான் தூக்கிவிடுமோ என்ற பயத்தில் லண்டன் வந்த பலரை எனக்குத் தெரியும். யாழ்ப்பாணத்தில் வாழ முடியாது. மட்டக்களப்பில் வாழ முடியாது. கொழும்பில் வாழ முடியாது.

உயிர் அச்சம், உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இதுவரை பத்து லட்சம் தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறி கனடா, லண்டன், அவுஸ்ரேலியா, இந்தியா, நியூசிலாந்து, நோர்வே, ஜேர்மனி, ஹொலண்ட், பிரான்ஸ், பெல்ஜியம், அமெரிக்கா, டென்மார்க், சுவிட்சர்லாந்து என்று திக்கு திக்காகப் போய் பிரிந்து போய் கிடக்கிறார்கள். எல்லோரும் சுக-போகமாக வாழவில்லை. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இலங்கையை விட்டு ஓடியவர்கள்தான் இதில் 90 வீதமானோர். ஒரு வீதம் தான் படிப்புக்காக வந்தவர்கள்.

இலங்கையில் வாழ முடியாத உயிர் பயம் காரணமாக ஒரு தலைமுறைத் தமிழர்களை விரட்டிவிட்டிருக்கிறது யுத்தமும் சிங்கள தேசமும். மட்டக்களப்பில் ஒரு அரசியல்வாதி மக்களை முட்டாளாக்கும் விதத்தில் பேசிய அச்சப் பேச்சு இன்னும் எனக்கு எரிச்சலை ஏற்படுத்துகிறது. பொதுமக்களைப் பார்த்து சொல்கிறார். "அரசாங்கத்துக்கு வாக்களித்தவர் யார்? வாக்களிக்காதவர் யார்? என்று கண்டுபிடித்து விடுவோம்." வாக்குச் சீட்டில் என்ன புகைப்படமா ஒட்டுகிறார்கள்? இது அச்சப்படுத்துகின்ற ஒரு அடாவடித்தனம் இல்லாமல் வேறென்ன? உண்மையில் உயிர் அச்சம் என்ன என்பதனை நான் 'சுடரொளி' குண்டுவீச்சுக்கு பிறகுதான் உணர்ந்தேன்.

'சுடரொளி' இற்கு ஒரு கட்டுரையை கொடுப்பதற்காக சென்றபொழுது யாரோ இரு இளைஞர்கள் 2 கைக்குண்டை வீசவும் நான் கேற்றடிக்குப் போகவும் நேரம் சரியாக இருந்தது. எனக்குப் பக்கத்தில் கிரனைட் உருண்டு கொண்டு வந்தது. ஒரு 10 செக்கன்தான் ஓடினேன். அது வெடித்தது. காலில் சிறு காயம். எனக்குப் பக்கத்தில் நின்ற செக்கியூரிட்டி ஜோர்ஜ் ஐயா நெஞ்சு வெடித்து செத்துப் போனார்.

அதற்குப் பிறகு பயம் காரணமாக இரவில் எனக்குத் தூக்கமே வருவதில்லை. எங்களது வீட்டுக்கு தகர கேட் போட்டிருந்தோம். அது சும்மா தட்டுப்பட்டால் கூட எழுந்து உட்கார்ந்துவிடுவேன் பயம். இரவு என்பது எனக்கு அச்சத்திற்குரியதாகவே இருந்தது. சிறிய சத்தங்களும் எனக்குப் பயம் கொள்ளும்படியே இருந்தது. வத்தளையில் இருக்கும்வரை எனக்கு இரவு சந்தோசமானதாக இருந்ததில்லை. லண்டன் வந்த பின்னர்தான் பயமில்லாத நித்திரை வந்தது எனக்கு. இப்படி எத்தனைபேர் இன்னும் உயிர் பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நினைக்கும் போது என்னால் உணர முடிகின்ற பயம் இது.

"பயப்படாதீங்கோ. ஒன்றும் நடக்காது" என்ற ஆறுதல் எல்லாம் எடுபடாது. பயம் என்பது மனதை அறுக்கின்ற ஒரு விடயம். அதனை விட்டு மீளவேண்டுமானால், ஒரு மனிதன் தனது மன அமைதியின் ஊடாகவே முடியும். ஆனால் தமிழனாகப் பிறந்து விட்டு சிங்களவனோடு

இந்த அளவுக்கு முரண்பாடு கொண்டுவிட்டு அதனை சுமூகமாகத் தீர்க்காதவரை அச்சம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கப் போகிறது. துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், சர்வாதிகாரம் இருக்கும் வரை தமிழர்கள் உயிர் பயம் இல்லாமல் வாழ முடியும் என நான் நினைக்கவில்லை. லண்டனில் நான் சந்தித்த அகதி ஒருவர் அழுதுகொண்டே இருந்தார். “ஏன்” என்று நான் கேட்டேன். “பயமா இருக்கு” என்று கூறினார். “என்னத்துக்கு” என்றேன். “பொலிஸ் சைரன், அம்புலன்ஸ் வண்டியின் சைரன் ஒலிக்கு” என்றார்.

பாருங்கள் அவர் இந்த உலகத்தில் வாழும் வரை பயந்து கொண்டும், அழுது கொண்டும் இருப்பார். ஏனெனில் இலங்கையில் இராணுவத்தால் துன்புறுத்தப்பட்டவர். லண்டன் வந்த பிறகும் பொலிஸ் காருக்கும், அம்புலன்ஸ் வண்டியின் சத்தத்திற்கும் அச்சப்படுகிறார். லண்டனில் பொலிஸ் காரும், அம்புலன்ஸ் வண்டியும் ஒரு நாளுக்கு பல தடவைகள் றோட்டில் போய்க் கொண்டிருக்கும்.

ஆகவே அந்த தமிழரின் நிலைமையை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

அதே உயிர்பயத்தோடு இங்கு வந்த பலர் மனநோய் பிடித்தவர்களாக இருக்கிறார்கள். பயத்தின் அடுத்த கட்டம் மனநோய் வரைக்கும் கொண்டு போய் விட்டுவிடும். இங்கு டொக்டர் சசிகாந்த் உடன் உரையாடிக் கொண்டிருந்தபொழுது யுத்தம் பலரை மனநோயாளியாக்கியிருக்கிறது என்று சொன்னார். தங்கள் உயிர்களை துப்பாக்கிதாரிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளப் பட்டபாடுதான் இந்த மனநோய்க்குக் காரணம் என்றார் அவர்.

அத்தோடு ஒரு உதாரணமும் சொன்னார். நாயொன்று ஒரு மனிதனைக் கடித்துக் குதறுவதற்காக துரத்துகிறது. அப்பொழுது அச்சத்தின் காரணமாக அவன் ஓடுகிறார். அது பயம். அந்த நேரம் பயம் காரணமாக மூளையின் தூண்டுதல் காரணமாக சுரக்கின்ற சுரப்புக்கள், மனப் பதட்டம் என்பன நாய் மனிதனை விட்டுப் போன பிறகு சாதாரண நிலைமைக்கு வந்து விடும். ஆனால் அதே மனப்பதட்டம், சுரப்பிகள் ஒவ்வொரு நாளும் வேலை செய்தால் மனதின் நிலைமை என்னவாகும். மனம் சிதைந்து போகும். இப்படியான மனிதர்கள் எத்தனையோபேர் நம் மத்தியில் இருக்கின்றனர். காலப்போக்கில் அவர்கள் மனநோயாளிகளாகி விடுகின்றனர்.

இங்கு ஐரோப்பிய நாடுகளில் மனிதர்களுக்கான மதிப்பு இருக்கிறது. ஒருவரை அச்சப்படுத்துவது கிறிமினல் குற்றமாகும். அதிலும் உயிர் தொடர்பான அச்சம் விடுவது பார தூரமான குற்மாகும். இலங்கையில் உயிர் எடுக்கவென்றே மக்கள் திரியும்போது இந்த உயிர் பாதுகாப்பு உண்மையில் தமக்கான பாதுகாப்பாகவே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

ஆனால் இங்கும் சண்டியர்கள் ஆயுதங்கள், வாள்கள், பொல்லுகளுடன் திரிந்து தமிழர்களை அச்சப்படுத்துபவர்கள் லண்டனில் இருக்கிறார்கள்.

இப்பொழுது பொலிசாரின் கெடுபிடி காரணமாக அவர்கள் கொஞ்சம் அடங்கிப் போய் இருக்கிறார்கள்.

ஊரில் துப்பாக்கிகள், வாள்களோடு பழகியவர்கள் லண்டன் வந்தும் அவர்கள் கைவிடுவதாக இல்லை. பொலிசாரின் ஒரு ஒப்பறேசனில் தமிழர்களிடம் பிடிபட்ட ஆயுதங்கள் என லண்டன் தொலைக்காட்சி செய்திகளில் காண்பித்தார்கள்.

என்ன நினைக்கிறார்கள் தமிழ் சண்டியர்கள். ஊரில் போல லண்டனிலும் தங்களிடம் பயந்து வாழ வேண்டும். கப்பம் கொடுக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். இங்கு சண்டியன்களாக 18 வயது பெடியன்கள் இருப்பதுதான் கொடுமையான விடயம்.

அச்சம் எப்பொழுதும் எம்மை தொந்தரவு படுத்திக் கொண்டே இருக்கும் ஒரு விடயம் தான், தைரியம் மட்டுமே அச்சத்தை விரட்டுகின்ற ஒரே ஒரு வழி.

ஆனால் அந்த தைரியத்தையும் மீறி அச்சமூட்டுகின்ற எத்தனை விடயங்கள் மனிதனை துரத்துகின்றன. எத்தனை பேர் உயிர் அச்சத்தினால் தங்களுடைய எல்லாவற்றையும் இழந்துபோய் பரதேசிகளாக மாறிவிட்டனர். உண்மையில் பயம் என்பது எம்மை ஒவ்வொரு நெடியும் தொடர்ந்து கொண்டே இருக்கும் ஒன்று. அதனை வெல்வதற்கான வழிகளைத்தான் ஞானிகள் சொல்கிறார்கள். இந்த உலக வாழ்வில் பணம், புகழ், பூமி இவற்றை தக்கவைத்துக் கொள்ள மற்றவரை அச்சப்படுத்திக் கொண்டே வாழ வேண்டியிருக்கிறது. தன்னிடம் உள்ளவற்றைப் பறித்து விடுவார்களோ என்ற பயத்தின் காரணமாக மற்றவனை இல்லாமலாக்கி விட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அது இலங்கையானாலும் சரி, அமெரிக்காவானாலும் சரி. விதி ஒன்றுதான்.

# லண்டனில் தலைமுடி வெட்டிய நான்

கடந்த முறை எனக்கு முடி வெட்டினவர் சரியாகவே வெட்ட வில்லை என்ற மனிசி புறுபுறுத்துக் கொண்டே இருந்தது. எனது தலைமுடியில் நான் அக்கறைப்படுவது குறைவு என்று மனைவி ஒரே நச்சரிப்பா. அதே போலத்தான் கடந்த முறை முடி வெட்டியவர் மொட்டைக்கும் மொட்டை அல்லாததற்கும் இடையில் ஒரு வெட்டு வெட்டி விட்டார்.

ஒவ்வொரு முறையும் மாதத்தின் கடைசி சனிக்கிழமை முடி வெட்ட வேண்டும் என்பது மனைவியின் கட்டளை. அதற்கு ஐந்து பவுண் ஒதுக்கி வைத்திருக்கும். சிலோன் காசில் 1000 ரூபாய் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

முடி வெட்டி விட்டு வந்து நான் காரை நிறுத்திவிட்டு வாசலுக்கு வரும் வரை குசினியால் பார்க்கும்.

பிறகு வாசல் கதவைத் திறந்தவுடன் தலையைப் பார்த்து விட்டுத்தான் வீட்டுக்குள்ளே வர அனுமதிக்கும்.

இது லண்டன் வந்த காலங்களில் இருந்தே மாதத்தின் கடைசி சனிக்கிழமை நடக்கும் ஒரு விடயம்.

எனது முடிகள் கொஞ்சம் விறைப்பானவை. அவற்றைப் பின்னால் மேவி தலை வாருவது என்பது கொஞ்சம் சிரமமான வேலை. சைற் உச்சி பிரித்து தலையை வாருங்கள் என்பதும் மனைவியின் ஆலோசனை. என்னதான் தலைக்கு கலர் அடித்தாலும் சைற் உச்சி பிரிக்கும்போது வெள்ளை முடிகள் வெளித்தெறியும். ஏனோ தெரியாது தலையில் இருக்கும் வெள்ளை முடிகளைப் பெண்கள் விரும்புவதில்லை.

ஒரு டி.வி. பிறசன்டருக்கு வெள்ளை முடிகள் இருப்பதை தமிழ் நேயர்கள் விரும்ப மாட்டார்கள். ஆகவே டை அடிக்க வேண்டும் என்று தலையைப் பராமரிப்பதற்கே எனக்கு செலவு தனியாக இருக்கிறது. மாதம் அதற்கென்றே ஒரு தொகை பணம் ஒதுக்க வேண்டும்.

எனது அலுவலகத்தில் கணக்குப் பிள்ளை இளம் பெடியன்.

ஆனால் அவனுக்கு இளநரை வந்து விட்டது. அது அவனைச் சுற்றியுள்ள பெண்கள் மத்தியில் ஒரு பிரச்சினைக்குரிய விடயமாகவும் இப்பொழுது எனது ஆலோசனையின் பேரில் டை அடித்துப் பெண்கள் மத்தியில் மாற்றம் தெரிவதாகவும் சொன்னான்.

தலை முடி கறுப்பாக இருந்தால் வடிவாக இருக்கும் என்று பலர் நேரடியாகவே என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

போன முறை எனக்கு முடி வெட்டும் பையன் சலூனில் பிஸி. எனவே அங்கு நின்ற புதியவரொருவர் என்னை அழைத்துக் கதிரையில் இருத்தி முடியை வெட்டினார். அவர் வெட்டியது மனைவிக்குப் பிடிக்கவில்லை. அது மட்டுமல்ல. ஒன்றரை மாதங்களாக முடி தலையில் வளரவே மாட்டேன் என்கிறது. வழமையாக ஒவ்வொரு மாதமும் வெட்டி வருகிற எனக்கு இந்த ஒழுங்கு பிழைத்ததில் கொஞ்சம் சலிப்பாகவே இருந்தது.

அவரிடம் வெட்டக்கூடாது என்பது மனைவியின் கட்டளை. இந்த வாரம் அங்கு போனால் அவர்தான் முன்னால் நிற்கிறார். அவர் என்னைக் கூப்பிட்டார். எனக்கு மனைவியின் கட்டளைதான் முன்னால் நின்றது. போன தடவை தலையைப் பழுதாக்கியதுக்கே மனைவிக்கு முகம் விடியவில்லை.

அவரிடம், 'வேண்டாம், நான் மற்றவரைக் கொண்டு வெட்டுகிறேன்' என்று விட்டு ஒரு ஆள் வெட்டி முடிய நான் வெட்டி விட்டு வந்தேன்.

இருந்தும் வீட்டுக்கு வர மனைவியின் பார்வை சந்தேகக் கண் கொண்டு தான் இருந்தது. சிலவேளை போன முறை வெட்டினவர்தான் இந்த முறையும் வெட்டினாரோ என்று.

பிரச்சினை என்னவென்றால் போன முறை வெட்டிய முடியை இந்த முறை எனக்கு வழமையாக வெட்டுகிறவர் சரி செய்யப் பார்த்தார். முழுசாக சரிவரவில்லை. சூடான காற்று எல்லாம் பிடித்து முள்ளுக் கத்திரிக்கோலால் எல்லாம் வெட்டி சரி பண்ணினார். அனேகமாக மார்ச் மாதம் கடைசிக் கிழமைக்குத்தான் எனது முடி சரி வரும் என்று நினைக்கிறேன்.

எனக்கு இங்கே லண்டனில் முடி வெட்டுகிறவர் என்று தனியே ஒருவரும் இல்லை. பல கடைகளில் முடிவெட்டி ஒருவர்தான் மனத் திருப்தியாக வெட்டுகிறார். அவர் ஈராக்கில் இருந்து இங்கு வந்து அரசியல் தஞ்சம் கோரி இருந்தார்.

சதாம் ஹுஸைன் ஆட்சிக் காலத்தில் தாங்கள் சிறுவர்களாக இருக்கும்பொழுது தங்களுக்கான உரிமைகள் என்று எதுவும் கிடையாது என்று அடிக்கடி சொல்வார். அதுமட்டுமல்ல 'சுன்னி' பிரிவைச் சார்ந்த சதாம் ஹுஸைன் ஆட்கள் தங்களைப் போன்ற 'ஷியா' பிரிவு முஸ்லிம்களை அடக்கி ஆண்ட விதம் கொடுமையானது என்றும் சொல்வார். சாப்பாட்டுக்கே தாங்கள் பெரும் பாடுபட்டதையும் அடிக்கடி சொல்வார். லண்டனில் அவர் இப்பொழுது நிம்மதியாக இருக்கிறார்.

அந்தக் காலத்தில் எமது கிராமத்தில் புளியங்குளத்தில் சலூன் கிடையாது. துணி துவைக்க இரத்தினம் கட்டாடி வீடு வீடாக வந்து ஊத்தை துணிகளை எல்லாம் கொண்டு போய் வெள்ளைத் துணியாக்கிக் கொண்டு வருவார்.

கட்டாடி வீட்டுக்கு வந்தார் என்றாலே எங்களுக்கெல்லாம் சந்தோசம். ஒரு இனம்புரியாத மகிழ்ச்சி. புதிய ஷேட்டுகள் களிசான்கள் போல எனது ஷேட்டுகளும் களிசான்களும் இருக்கும். அவர் வெளுத்துக் கொண்டு வரும் துணிகளில் ஒரு வாசம் இருக்கும். அடுத்த நாள் பள்ளிக்கூடம் போகும்போது வெளுத்த அழகான ஆடைகளை நாங்கள் அணிந்து போவோம். மிக்க மகிழ்ச்சியாய் இருக்கும்.

இரத்தினம் கட்டாடி வீட்டுக்கு வருவதைப் போல முடி வெட்டுவதற்கும் ஒருவர் வீட்டுக்கு வருவார். அவரின் பெயர் மறந்து விட்டது.

அம்மய்யா கிழமைக்கு ஒரு தடவை அவரிடமே 'ஷேவ்' எடுத்துக்

கொள்வார். அவர் முடி வளர்த்துக் குடும்பி கட்டியிருந்தார். ஆகவே அவருக்கு முடி வெட்டும் வேலை இல்லை. எனக்கு மாதத்தில் ஒரு முறை முடி வெட்டிவிடுவார் அவர். எங்கள் வீட்டில் நானும் அம்மய்யாவும் தான் ஆண்கள் என்றதனால் எங்கள் இருவருக்கும் தான் அவர் வேலை செய்வார். அவரிடம் ஒரு பெட்டி இருக்கும். அதற்குள்ளே முடிவெட்டும் மெசின், சீப்பு, கத்திரிக்கோல், ஷேவ் எடுக்கும் கத்தி, அதனைத் தீட்டுவதற்கு ஒரு தோல், ஒரு முள்ளுக் கத்திரி இவ்வளவும் தான் இருக்கும். அதனை வைத்தே அவர் சீவியம் நடக்கும். அந்தக் காலத்தில் எயிட்ஸ் பயம் இல்லாததால் அந்த ஒரே கத்திதான் எல்லோருக்கும் பயன்படும்.

அதற்குப் பிறகு எய்ட்ஸ் பரவுகிறது என்ற பிரச்சாரம் பரவ ஆரம்பித்த பிறகு பிளேட் பாவிக்கும் முறை வந்தது.

சலூன்களில் ஒரு பாதி பிளேடை ஒருவருக்கு பாவிக்கும் முறைக்கு மாற்றினார்கள் முடி வெட்டும் தொழிலாளர்கள்.

மாதத்திற்கு ஒரு தடவை ஒட்டுசுட்டான் போய் முடி வெட்டுவேன். அப்பொழுது முடி வெட்ட சின்னப் பிள்ளைகளுக்கு ஐந்து ரூபாய் காலம்.

அதற்குப் பிறகு ஒவ்வொரு ஊரில் ஒவ்வொரு சலூன். உடுப்பிட்டியில் ஒரு சலூன், வல்வெட்டித்துறையில் ஒன்று, தாளையடி, திருகோணமலை, கொழும்பு, வத்தளை, மாத்தளை, நாவலப்பட்டி என்று ஊர் ஊராக இருந்தபொழுது ஒவ்வொரு சலூன்கள்.

அரபுக் கல்லூரியில் படித்த பொழுது மொட்டை. ஒரு பிரச்சினையும் இல்லை. மாறி மாறி வகுப்பு மாணவர்களே வழித்துக் கொள்வோம். தலை வெட்டப்பட்டு ரத்தம் ஒழுக நிற்போம் பழகிய காலங்களில். அதற்குப் பிறகு நானே தலையில் ரேசரை வைத்து மொட்டை வழிக்க பழகிக் கொண்டேன்.

இங்கு லண்டன் வந்த 98-ம் ஆண்டும் ஈஸ்ட் ஹமில் ஒரு சலூன். அதற்குப் பிறகு நிரந்தரமாக ஹவுன்ஸ் லோ வந்ததன் பிறகு தேடித் தேடி ஒரு சலூனைப் பிடித்தாயிற்று. வந்த ஆரம்பத்தில் 25 பவுனுக்கெல்லாம் முடி வெட்டியிருக்கிறோம். தேடித் தேடி 10 பவுண் கடையைக் கண்டுபிடித்தோம் 2000 ஆண்டுகளில்.

ஆனால் இப்பொழுது முடி திருத்துபவர்கள் அதிகமான நாடுகளில் இருந்து வரத் தொடங்கி விட்டனர்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ், ஆப்கானிஸ்தான், ஈராக், பாலஸ்தீன் போன்ற இடங்களில் இருந்து நல்ல திறமைசாலிகள் வரத் தொடங்கிவிட்டனர்.

இங்கு டிப்ளோமா படித்து பாஸ் பண்ணி சேட்டிபிகட்டை கொழுவி வைத்துக் கொண்டு தான் ஒரு புறோபஸனாலாக முடி வெட்டும் தொழிலைச் செய்கிறார்கள்.

இப்பொழுது சலூன்கள் போட்டி போட்டு திறக்க ஆரம்பித்ததனால் நாங்கள் இருக்கும் பகுதிகளில் 5 பவுணுக்கு ஒரு தலைக்கு அறவிடுகிறார்கள்.

ஆனால் தலையில் கோடு போட, டிசைன் கீற என்றால் தனி

விலை. பேசிக் தான் 5 பவுண் மற்றதெல்லாம் விலை கூட.

யாழ்ப்பாணத்தில் 'அம்பட்டர்' என்று இழிவாகப் பேசப்பட்ட தொழிலாளிகளுக்கு லண்டனில் என்ன மரியாதை. அவர்கள் செல்வம் உழைக்கும் நல்ல தொழிலாளர்கள்.

இடமும் காலமும் எவ்வளவு வேகமாக மாறும் என்பதற்கு இது நல்ல உதாரணம்.

முந்தி என்றால் அம்மா சொல்லி அனுப்புவா. 'பொலிஸ் குறோப்' தான் வெட்டி வர வேண்டும் என்று. சின்னனில் அம்மா முடி வெட்டும் கடைக்கும் வந்து எவ்வளவு கட்டையாக வெட்டுகிறாரோ என்றுதான் பார்ப்பா.

ஆனால் கடந்த வாரம் எனது 13 வயது மகன் முடியை 7 பவுண் கொடுத்து ஸ்டைலாக வெட்டி வந்தான். நானே 5 பவுண் கொடுத்து வெட்டுகிறேன். உவனுக்கு என்ன ஸ்டைல் என்று மனிசியிடம் கேட்க, மகன் சொல்கிறான். ஒழுங்காக கட்டையாக முடியை வெட்டிக் கொண்டு பள்ளிக்கூடம் போனால் நீயென்ன 'கே'யா என்று பள்ளிக்கூடத்தில் கேலி பண்ணுகிறார்களாம். ஸ்டைலாக வெட்டினால்தான் பள்ளிக்கூடத்தில் மதிப்பு. யாரிடம் சொல்ல இதை.

பெண்களுக்கு முடி வெட்டி டை அடிக்க 25 பவுணில் இருந்து செலவு போகும்.

இங்கு சலூனுக்குப் போகாத பெண்கள் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். தலை கழுவ, டை அடிக்க என்று பெண்களும் பிஸி.

இலங்கை, இந்தியாவில் இருந்து வேக் பேமிட்டிலும் முடி வெட்டுகிறவர்களை அழைக்கிறார்கள். அப்படி வந்தவர்களில் பலர் நாடு பிடிபட்டவுடன் தனியாகக் கடை திறந்து விடுவார்கள்.

கைத்தொழிலில் முடி வெட்டும் தொழிலுக்குள்ள மவுசு லண்டனில் அளப்பரியது.

வந்து பாருங்கள் தெரியும்.

# அடிக்குறிப்புகள்






30 வருடமாக தொடர்ந்து எழுதி வரும் இளைய அப்துல்லாஹ்வினது எல்லாக் கட்டுரைகளும் மிகவும் சுவாரஸ்யமானவை. சமூகத்தின் நிஜத்தை துணிவோடு முன்வைக்கும் எழுத்துக்களுக்கு சொந்தக்காரர் இவர். புலம் பெயர்ந்த தமிழரின் வாழ்வினை அச்சொட்டாக பார்க்க வேண்டுமெனில் இளைய அப்துல்லாஹ்வை படித்தால் புரிந்து போகும். புலம் பெயர் தமிழர்களின் பணக்கார போர்வையை விலக்கிவிட்டு நிஜத்தை சொல்கிறார் அவர்.

புலம்பெயர் தேசத்தின் ஒவ்வொரு குறுக்கு சந்திலும் ஒரு சிறந்த எழுத்தாளனாக நின்று கொண்டு சமூகத்தை பார்க்கிறார். ஐரோப்பிய நாடுகளின் விபச்சாரம், வாழ்வு, அகதிகள். சமயம், சாதி, பணக்காரர், ஏழைகள், பெண்கள் அடுத்த தமிழ் இளைய தலைமுறை, கோவில்கள், திருமணம், ஆண்பெண் உறவு, ஊரில் தமிழர் வாழ்வு என்று அவர் தொடாதது எதுவுமேயில்லை.

அவரது உயிரோட்டமுள்ள எழுத்துக்களை வாசித்தால் இளைய அப்துல்லாஹ் எங்களோடு பேசுகிறார் என்றே உணருகிறோம். உண்மையில் புலம் பெயர் தமிழர் வாழ்வை புரிந்து கொள்ள ஒரு முக்கிய தொகுப்பாக இந்த கட்டுரைத்தொகுப்பு அமைந்துள்ளது.